ஹரிதாஸ ஸாஹித்யத்தின்
வரலாறு & சிறப்புகள்

தமிழில்

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
89044 58276. haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

ஹரிதாஸ ஸாஹித்யத்தின்
வரலாறு & சிறப்புகள்

ஸ்ரீஹரிவாயு குருகளின் அருளால்
ஸ்ரீராகவேந்த்ர ஸ்வாமிகளின் வர்த்தந்தி மஹோத்ஸவத்தின் சந்தர்ப்பத்தில், தேதி 06.03.2025 வியாழக்கிழமை, பால்குண சுத்த ஸப்தமியன்று, இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது.

தொடர்புக்கு:
'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
8904458276 haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

இந்தப் புத்தகத்தை வெளியிடவும், இலவசமாக பகிர்ந்தளிக்கவும் பொருளுதவி புரிந்த அனைத்து ஸ்பான்ஸர்களுக்கும் நன்றி.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

பொருளடக்கம்

1.	பின்னணி	4
2.	ஹரிதாஸ ஸாஹித்யத்தின் பொற்காலம்	8
3.	ஹரிதாஸ ஸாஹித்யத்தின் மறுமலர்ச்சி காலம்	24
4.	அபரோக்ஷ அனுபவம்	48
5.	ஹரிதாஸர்களின் ஆராதனா வகைகள்	59
6.	ஸதாசார ஸம்ஹிதெ	120

முன்னுரை

ஹரியே ஸர்வோத்தமன். மற்ற அனைவரும் ஹரியின் தாஸர் என்பதை தெரிவிக்கும் ஸாகித்யமே ஹரிதாஸ ஸாகித்யம். ஸ்ரீஹரி தன் பற்பல ரூபங்களினால் வழங்கிய ஸாகித்யமே ஹரிதாஸ ஸாகித்யம். தாஸர்களெல்லாம் ஸ்ரீஹரியைப் பற்றி வழங்கிய ஸாகித்யம், ஸ்ரீஹரி தாஸர்களுக்கு வழங்கிய ஆணையே ஹரிதாஸ ஸாகித்யம். வியாஸ, மத்வ, ஜயதீர்த்தர் என இவர்களின் அபாரமான கிரந்தங்களை, தத்வங்களை, கன்னடம் என்னும் கண்ணாடியில் வெளிப்படுத்தியதே ஹரிதாஸ ஸாகித்யம். வேத சாஸ்திரங்கள், இதிகாச, புராணங்களின் விஷயங்களை பொது மக்களுக்குப் புரியுமாறு விளக்கிய ஸ்ரீஹரியின் ரூபம் ஹரிதாஸ ஸாகித்யம். சம்ஸ்கிருதம் தெரிந்த மக்களுக்கு மட்டும் என்று இல்லாமல், அனைவரும் பலனடையுமாறு செய்தது இந்த ஹரிதாஸ ஸாகித்யம். சமஸ்கிருதம் அறிந்தவர்களுக்கு மட்டுமே சாதனை செய்ய வாய்ப்பு என்பதை இல்லாமல் செய்தது இந்த ஹரிதாஸ ஸாகித்யம். மக்களின் மனதில் தத்வஞானத்தை என்றும் நின்று, நிலைநாட்டியது ஹரிதாஸ ஸாகித்யம்.

ஹரிதாஸர்கள் தங்களது சாத்விக சாதனை, தொடர்ந்த படிப்பு, உபாசனை, ஆத்யாத்மிக அனுபவம், நற்சிந்தனை ஆகியவற்றை எழுத்து வடிவமாகக் கொடுத்ததே ஹரிதாஸ ஸாகித்யம். ஒரு புதிய ரூபத்தில் மத்வ மதத்தை வளர்த்தனர் இவர்கள். தமது ஆத்யாத்மிக அனுபவங்களை அனைவருக்கும் புரியுமாறு விளக்கினர். தத்வஞானத்தை சங்கீதம், ராகம், தாளம், லயம் ஆகியவற்றின் உதவியுடன் விளக்கினர் ஹரிதாஸர்கள். கத்யமான ஞானத்தை சங்கீதமயமாக்கினர்.

ஹரிதாஸ ஸாகித்தில் ஆர்வம் உள்ளோர் அதன் பின்னணியை அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். ஆகையால், கன்னடத்தில் திரு.வரதராஜ ராவ் அவர்கள் எழுதிய அற்புதமான புத்தகத்திலிருந்து சில தலைப்புகளை மட்டும் மொழிபெயர்த்து இந்தப் புத்தகத்தில் கொடுத்துள்ளோம். ஸ்பான்ஸர்களின் உதவியால் வெளிவரும் இந்தப் புத்தகத்தை நம் குர்வந்தர்கத பாரதிரமண முக்யப்ராணாந்தர்கதனான ஸ்ரீஜகன்னாத கேசவனுக்கு சமர்ப்பணம் செய்கிறோம்.

நன்றி. ஹரே ஸ்ரீனிவாஸா

சத்ய நாராயணன்
89044 58276

24.02.2025

1. பின்னணி

இந்திய ஆன்மிக இதிகாசத்தில் கர்னாடகத்தின் பங்கு முக்கியமானது. வைதிக தர்மத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஸ்ரீ சங்கராசார்யர், ஸ்ரீராமானுஜாசார்யர், ஸ்ரீமத்வாசார்யர் என்னும் மூவரும், வியாக்யானங்கள் எழுதி, தத்தம் ஸித்தாந்தங்களை பரப்புவதற்கு கர்னாடகத்தை தங்களின் முக்கிய கேந்திரமாக ஆக்கிக் கொண்டார்கள் என்பது கவனிக்க வேண்டிய செய்தி.

காலடியில் பிறந்து, நர்மதா நதிக்கரையில் சன்யாசத்தைப் பெற்று, காஷ்மீரில் தமது அத்வைத ஸித்தாந்தத்தை நிலை நாட்டிய ஸ்ரீசங்கராசார்யர் (ஆண்டு 788-820), தமது மடங்களில் ஒன்றை ஸ்ருங்கேரியில் நிறுவியது ஒரு முக்கியமான செயல். தமிழ் நாட்டிலேயே பிறந்து வளர்ந்த ஸ்ரீராமானுஜாசார்யர் (1017-1137), அந்த நாட்டின் சைவ மதத்தினரான சோழர்கள் அவரை துன்புறுத்தத் துவங்க, ஆசார்யர் கர்னாடகத்திற்கு வந்து, இங்கு தங்கியது மட்டுமல்லாமல், அப்போது அரசனாக இருந்த ஹோய்ஸள விஷ்ணுவர்மனின் ஆதரவினைப் பெற்று பல ஆண்டுகள் இங்கேயே இருந்து தமது மதத்தினை பிரசாரம் செய்தார். ஸ்ரீமத்வாசார்யர் (1238-1317) கன்னட நாட்டின் பாஜக க்ஷேத்திரத்தில் பிறந்து, காலந்தரத்தில் தமது ஸர்வமூல கிரந்தங்களின் மூலம் த்வைத ஸித்தாந்தத்தை ஸ்திரமான அஸ்திவாரத்தின் மேல் நிறுத்தி, அதனை வளர்ப்பதற்கு உடுப்பியில் ஸ்ரீ கிருஷ்ணனின் ஆலயத்தை நிறுவி, அதனை பூஜிப்பதற்காக அஷ்ட மடங்களை ஏற்பாடு செய்து, தம் அருமை பெருமையை என்றைக்கும் நினைவில் வைக்குமாறு செய்தார்.

ஆன்மிக வெள்ளத்தை தடுத்து, அதன் போக்கினையே நிறுத்தப் பார்த்த, வட நாட்டில் தோன்றிய நாத்திக மதத்தை எதிர்த்து, ஆன்மிகத்தை மறுபடி வளர்த்த புகழ் இந்த மூவரையே சேரும். கர்னாடகத்தில் ஒரு காலத்தில் பௌத்த மதமும் பரவியிருந்தது என்று இன்றைய ஆராய்ச்சியாளர்கள் சொல்லும் செய்தியாகும். ஜைன மதத்தவரோ, இந்தப் பகுதி மக்களின், அரசர்களின் ஆதரவினைப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம்.

வேத உபநிஷத்களில் அடங்கியிருக்கும் ஞானத்தை, காப்பாற்றிய ஆசார்யர்கள், தமது ஸித்தாந்தத்தை பரப்புவதற்கு சம்ஸ்கிருதத்தையே எடுத்துக் கொண்டனர். பௌத்தர் மற்றும் ஜைனர்கள் மக்களியே பேசுமொழியாக இருந்த பாளி மொழியை தமது ஸித்தாந்தத்தை பரப்புவதற்காக எடுத்துக் கொண்டனர். வேத உபநிஷத்களின் காலங்களிலிருந்தே பக்தியின் மேன்மை அனைவருக்கும் தெரிந்திருந்தாலும், அதையே முக்கிய நோக்கமாக வைத்து பக்தி பரம்பரையை வளர்த்த பெருமை தென்னிந்தியாவையே சேரும். 'உத்பன்னா த்ராவிடே ஸாஹம் பக்தி வ்ருத்திம் கர்ணாடகே கதா க்வசித் க்வசித் மஹாராஷ்ட்ரே குர்ஜரே ஜீர்ணதாம் கதா' என்னும் புகழ்பெற்ற பழமொழியை கவனித்தால் நாம் சொல்ல வந்த விஷயம் புரியும். சுமார் 10ம் நூற்றாண்டில், தமிழ் நாட்டில் சைவ மற்றும் வைஷ்ணவ பக்தர்கள், தமிழில் பக்திக்கு முக்கிய இடத்தைக் கொடுத்தனர். ஜாதி, மத, குல, கோத்திர, பால் வேறுபாடுகள் எதுவும் இல்லாமல், வெறும் தங்களின் அனுபவத்தின் மேல் பாடிய நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்கள், இந்த திசையில் பயணித்தது மிகவும் அற்புதமான விஷயமாகும். விஸிஷ்டாத்வைதத்தை நிறுவிய ஸ்ரீராமானுஜாசார்யர், சம்ஸ்கிருத கிரந்தங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தாரோ, ஆழ்வார்களின் தமிழ் பிரபந்தங்களுக்கும் அவ்வளவே முக்கியத்துவத்தைக் கொடுத்தார். நாதமுனிகளிடமிருந்து துவங்கி அந்த பரம்பரையில் வந்தவர்கள் பாடிய தமிழ் பிரபந்தங்களை, திராவிட வேதம் என்று அழைப்பதற்கு அந்த ஆசார்யர் தயங்கவில்லை.

சுமார் 12ம் நூற்றாண்டின் காலத்தில், கர்னாடகத்தில் தோன்றிய வீரசைவ மதத்தவர், சைவ மதத்து நாயன்மார்களைப் போலவே, தாமும் தாய்மொழியான கன்னடத்தின் மூலம் தம் மடத்தின் தத்வங்களை பிரசாரம் செய்யத் துவங்கினர். அவர்களின் தொடர்ச்சியான முயற்சிகளால், கர்னாடகம், வீரசைவ மதத்தின் முக்கிய கேந்திரமாக ஆனதுடன், கன்னட மொழிக்கு புதிய வகையான 'வசன ஸாஹித்யமும்' கிடைத்தது.

புரட்சிகரரான வசனகாரர்களைப் போலவே, சம்பிரதாயத்தைப் பின்பற்றிய ஹரிதாஸர்கள், 15ம் நூற்றாண்டிலிருந்து துவங்கி, ஸ்ரீமத்வாசார்யர் நிறுவிய த்வைத ஸித்தாந்தத்தை, தமது அபரோக்ஷ அனுபவத்துடன் சேர்த்து, சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டு, கீர்த்தனை, ஸுளாதி, உகாபோக, வ்ருத்த நாம ஆகிய பல வகைகளின் மூலம் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தனர்.

ஆழ்வார்களின் வைஷ்ணவ பக்தியில் வெளிப்பட்ட எவ்வளவோ விஷயங்கள் இத்தகைய கீர்த்தனைகளிலும் நன்கு புலப்படுகின்றன. தமிழ் நாட்டில் ஒரே சமயத்தில் பாய்ந்தோடிய ஹரி-ஹர பக்தியானது, கர்னாடகத்தில் இரு வேறு காலங்களில் அதே வேகத்தில் பாய்ந்தோடியதை கவனிக்கலாம்.

கர்னாடகத்தை அடுத்து மகாராஷ்டிரத்தில் இதே வைஷ்ணவ பக்தியானது, 13ம் நூற்றாண்டின் ஞானதேவ் (1275-1296) அவர்களின் அபங்கங்களில் தொடங்கி, நாமதேவ (1270-1350), குயவனான தோர, தோட்டக்காரரான ஸாமவதா, பொற்கொல்லரான நரஹரி, சோகா, ஜனாபாய், ஸேனா மற்றும் நர்த்தகியான கனோபாத்ர ஆகியோரின் முயற்சியால் வெளிச்சத்திற்கு வந்தது. 16ம் நூற்றாண்டினைச் சேர்ந்த ஏகனாத (1533-1599) மற்றும் துகாராம் (1597-1650) ஆகியோரின் காலத்தில் விட்டல பக்தி தன் உச்சத்தை அடைந்தது எனலாம். இந்த ஸந்தர்களின் பரம்பரையில் 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த ராமதாஸரையே (1608-1681) கடைசியானவர் என்று சொல்லலாம். மகாராஷ்டிரத்தில் இப்படியாக மத்ய காலத்தில் வந்த பழக்கத்தைக் கண்டே, மேலே சொன்ன ஸ்லோகத்தில் 'க்வசித் க்வசித்' என்று சேர்த்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

மகாராஷ்டிரத்தின் வடபகுதியில் இருக்கும் குஜராத்தில் இருந்த பக்தி பரம்பரையில் நரசிம்ம மேஹ்தா என்பவர் புகழ் பெற்றவர். புகழ் பெற்ற கிருஷ்ண பக்தையான மீராபாய் (1492-1546) என்பவர், ராஜஸ்தானில் பிறந்து வளர்ந்து வ்ருந்தாவன மற்றும் த்வாரகையில் வெளிச்சத்திற்கு வந்திருப்பதால், அவரையும் ஸாஹித்ய ஸந்த பரம்பரையில் சேர்த்திருப்பது வழக்கத்தில் இருக்கிறது.

தென்னிந்தியாவின் பக்தி பரம்பரையை பார்த்ததில், தமிழ் நாட்டில் இந்த பரம்பரை மிகவும் பழங்காலத்தில் துவங்கி, கன்னட நாட்டில் தொடர்ந்து, மகாராஷ்டிரத்தில் பின் வளர்ந்து, ராஜஸ்தானில் ஒரு நிறுத்தத்திற்கு வந்ததைப் போல தெரிகிறது. வடநாட்டில் இருக்கும் பக்தி பரம்பரைகள், ஏதோவொரு விதத்தில் தென்னிந்தியாவின் பரம்பரைகளுடன் தொடர்பில் இருந்து வளர்ந்திருக்கிறது என்பதை பார்க்க முடியும்.

புஷ்டி மார்க்கத்தை துவக்கியவரான ஸ்ரீவல்லபாசார்யரின் (1477-1531) பெற்றோர் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பிறகு காசியில் வசித்தனர். வல்லபாசார்யர் வைஷ்ணவ தத்வத்தையே பின்பற்றி தம் பக்தி பரம்பரையை துவக்கினார். வைதிக கர்மானுஷ்டாங்களை பின்பற்றாமல் பகவந்தனின் அருளுக்கு பாத்திரர் ஆகமுடியும் என்றும், ஸ்ரீகிருஷ்ணனுக்கு அனன்ய சரணாகதி அடைவே பக்தியின் பரம இலக்கு என்பதும் வல்லபாசார்யரின் நம்பிக்கை. வல்லபாசார்யர், உணர்ச்சி, அன்பு, காதல், நட்பு, கோபம், பாசம் மற்றும் துக்கம் ஆகிய ஏழு கட்டங்களில் ஸ்ரீகிருஷ்ண பக்தியை அடையமுடியும் என்று சொல்கிறார்.

வட இந்தியாவிற்கு சென்று தங்கிய இந்த ஆந்திர பிராமணரால் துவக்கப்பட்ட புஷ்டி மார்க்கம், அந்தப் பகுதி மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றது. இந்த பரம்பரையில், மனிதன் சன்யாசம் பெறவேண்டும் என்கிற கட்டாயம் இல்லை என்றும், ஸ்ரீகிருஷ்ணனின் தாஸனாக பாகவத தர்மத்தில் நம்பிக்கை வைத்து அதனை பின்பற்றினால் போதும் என்றும் சொல்லப்படுகிறது. ஸ்ரீவல்லபாசார்யரின் மகனான விட்டலநாதனால் இந்த புஷ்டி மார்க்கம் மேலும் வளர்ந்ததோடு மட்டுமல்லாமல், ஸ்ரீகிருஷ்ணனுடன் அவனின் காதலியான ராதையின் ஆராதனை செய்வதும் துவங்கியது.

ஸ்ரீவல்லபாசார்யர் முதலில் துவக்கிய பாசம் என்னும் பக்தியானது, அவரது சமகாலத்தியவரான வங்காளத்தின் சைதன்ய பரம்பரையில் மிகவும் புகழ்பெற்றிருந்தது. மேற்கு வங்காளத்திலேயே பிறந்து வளர்ந்த சைதன்ய பிரபு (1485-1533), முதன்முதலில் வாஸுதேவ ஸார்வபௌம என்பவர் பழக்கத்திற்குக் கொண்டு வந்த நவ்ய நியாய என்னும் தர்க்க பத்ததியில் தேர்ச்சியைப் பெற்றிருந்தாலும், பின்னர் மாதவேந்திர பூரியின் சிஷ்யரான ஈஷ்வர பூரியின் ஆளுமையில் மயங்கி, தன் வைஷ்ணவ பரம்பரையை பலமான அஸ்திவாரத்தின் மேல் நிறுவினார்.

சைதன்யரின் பக்தி பரம்பரையை மெச்சிய பலர் அவரை பின்பற்றத் துவங்கினர். அவரை கௌராங்க என்றும் அழைக்கலாயினர். அவரின் கிருஷ்ண பக்தியின் சிறப்பினைக் கண்ட அந்த கால மக்கள், அவரை கிருஷ்ண அவதாரம் என்றும் கருதினர். ராதே கிருஷ்ணரின் காதலுக்கு முக்கியத்துவம் கொடுத்த இந்த பக்தி பரம்பரை, தானே எந்தவொரு கிரந்தத்தை இயற்றவில்லை எனினும், அவரைப் பின்பற்றியவர்களில் முக்கியமானவரான ரூப கோஸ்வாமி, ஸனாதன கோஸ்வாமி, ஜீவ கோஸ்வாமி ஆகியோர், தம் குருவின் தத்வபோதனையை விளக்கி பல கிரந்தங்களை இயற்றினர். தெய்வபக்தியை ஒரு தனியான உணர்ச்சி என்று சொல்லி, அதில், அமைதி, தாஸ்ய, நட்பு, மதுர மற்றும் வாத்ஸல்ய என்று அதில் ஐந்து வித வித்தியாசங்கள் உள்ளன என்று சாஸ்திரத்திற்கு ஏற்ப விளக்கியிருப்பதை காணலாம்.

ஸ்ரீவியாஸராயர், வங்காளத்தின் நவ்ய நியாய தர்க்க பத்ததியை கண்டித்ததோடு மட்டுமல்லாமல், அவர் சைதன்ய பிரபுவின் மேல் தன் ஆளுமையை செலுத்தினார் என்றும் தெரிய வருகிறது. இதற்கு முன்னரே, வட இந்தியாவில் தமது பயணத்தை செய்து வந்த ஸ்ரீராமானுஜாசார்யரின் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம், சைதன்ய பரம்பரையினரின் மேலும் தனது ஆளுமையை செலுத்தியிருந்தது என்றும், இந்த இருவரும் பூரியின் ஜகன்னாததேவரிடம் காட்டிய பக்தியைப் பார்த்தால் தெரிகிறது.

வட நாட்டின் மற்ற ஸந்த பரம்பரையிரான:
கபீர் (1398-1518)
தாது (1544-1603)
மீரா (1492-1546)
ஸுரதாஸ் (1479-1584)
மற்றும்
துளஸிதாஸ் (1511-1637)

ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றை கவனித்துப் பார்த்தால், இவர்கள் அனைவரும் ஏதோவொரு விதத்தில் தென்னிந்தியாவின் பக்தி பரம்பரையினரால் ஈர்க்கப்பட்டிருக்கின்றனர் என புரியும்.

கபீர் தனது குருவாக ஏற்றுக்கொண்ட ராமானந்தர் (1400-1470), அலகாபாத்தில் பிறந்து, காசியில் விஸிஷ்டாத்வைதத்தைப் பின்பற்றியவர். இவர், சம்பிரதாய பிராமணர்களைப் போல ஜாதி கட்டுப்பாடுகளில் விழாமல் அனைவரையும் சமான பாவத்துடன் கண்டவர். இவரின் சிஷ்யர்களில் கபீர் மற்றும் பீபா என்னும் ராஜபுத் ஆகியோர் முக்கியமானவர்கள். ராமானந்தர் தமது தத்வங்களை தமது தாய்மொழியில் சொல்லியிருப்பது இன்னொரு முக்கியமான விஷயம். அப்படியே இவரது சிஷ்யரான கபீரும், இந்து மற்றும் முஸ்லிம் இருவரின் நன்மதிப்பையும் பெற்றவர் ஆவார். வட இந்தியாவின் ஸந்த பரம்பரையில் கபீரின் இடம் மிகவும் முக்கியமானது.

இந்தி ஸாஹித்யத்தில் புகழ் பெற்றவரும், ராமசரித மானஸ் இயற்றியவரும், மிகச்சிறந்த ராமபக்தருமான துளசிதாஸரும்கூட ராமானந்தர் மூலமாகவே ஈர்க்கப்பட்டார் என்று தெரிய வருகிறது. இவருடைய காவியத்திற்கு மனம் மயங்காதவரே இல்லை. புஷ்டி மார்க்கத்தை துவக்கியவரான வல்லபாசார்யரின் மகனான விட்டல நாதனை பின்பற்றியவர் ஸூர்தாஸ். ஞானம் மற்றும் பக்திக்கு இருக்கும் வித்தியாசத்தை, உத்தவ மற்றும் கோபியர்களின் பக்தி அனுஸந்தானத்தின் வித்தியாசத்தைக் காட்டி விளக்கினார் இவர். சண்டீதாஸ, வித்யாபதி (ஆண்டு 1350-1450) மற்றும் மீராபாய் ஆகியோரில் காணப்படும் ராதா கிருஷ்ண ப்ரேமத்தின் தத்வமானது, ஜயதேவனின் (19ம் நூற்றாண்டு) கீத கோவிந்தத்தில் காணப்பட்டாலும், நிம்பார்க்க (1192) மற்றும் வல்லபாசார்யர் விளக்கிய மதுர பாவத்தின் மகிமையையும் இது விளக்குகிறது என்பதை பார்க்கலாம்.

இந்த அனைத்து விஷயங்களையும் கவனித்தவர்களுக்கு, வைதிக தர்மத்தின் மறுமலர்ச்சிக்குக் காரணர்களான ஆசார்ய த்ரயர்களின் தத்வங்களும் மற்றும் தென் இந்தியாவின் பக்தி பரம்பரைகளும், அந்தந்த காலகட்டங்களில், வட இந்தியாவின் ஆன்மிக இதிகாசத்தின் மேல் எத்தகைய விளைவினை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை அறியலாம்.

ஒட்டு மொத்த இந்தியாவின் பார்வையில், பக்தி பரம்பரைகளின் தோற்றம், வளர்ச்சி மற்றும் சிறப்பினை கவனித்தால், அது தமிழ்நாட்டில் 10ம் நூற்றாண்டிலேயே துவக்கம் கண்டு, 12-15 நூற்றாண்டுகளில் கர்னாடகத்தில் வளர்ந்து, படிப்படியே மகாராஷ்டிரா மற்றும் குஜராத் பகுதிகளில் பரவி, 15ம் நூற்றாண்டின் இறுதியில் அனைத்து இடங்களிலும் மிகச்சிறப்பாக பரவி, சீறும் சிறப்புமாக இருந்தது என்பதை காணலாம்.

கர்னாடகத்தில் காணப்படும் வீரசைவ மதத்தின் பரம்பரைக்கு அத்வைத தத்வமே அடிப்படை என்றால், ஹரிதாஸரின் பக்தி பரம்பரைக்கு, ஸ்ரீமத்வாசார்யரின் த்வைத ஸித்தாந்தமே அடிப்படை. வைஷ்ணவ பக்தியை பரப்பியதில், கர்னாடகத்தின் ஹரிதாஸர்களுக்கும், மகாராஷ்டிரத்தின் ஸந்தர்களுக்கும், பண்டரிபுரத்தின் பாண்டுரங்கனே ஆராத்ய தெய்வன் என்றாலும், கன்னட தாஸர்கள் த்வைதத்தையும்; மகாராஷ்டிரத்தின் ஸந்தர்கள் அத்வைதத்தை பின்பற்றினர் என்பதை அறிகிறோம். ஸ்ரீவைஷ்ணவர்களின் விஸிஷ்டாத்வைதத்தை பின்பற்றிய ராமானந்த, வல்லபாசார்யர், நிம்பார்க்க ஆகியோர் அவற்றில் அங்கங்கு சிறிது மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு, ஷுத்தாத்வைத, பேதாபேத – என்னும் புதிய வழியினை துவக்கி பின்பற்றினர். பாகவத மதத்தவர்களில் உருவ வழிபாடு அதிகமாக காணப்படுகிறது. வட இந்திய பக்தி பரம்பரையில், ராதா கிருஷ்ணர்களின் ப்ரேமத்தின் சிறப்பு மிகவும் போற்றப்படுகிறது.

தமிழ்நாட்டின் ஆழ்வார்களின் பிரபந்தங்கள் ஸ்ரீராமானுஜாசார்யரின் விஸிஷ்டாத்வைத தத்வத்தை விளக்குகின்றன. ஸ்ரீவைஷ்ணவர்கள் அவற்றினை வேத உபநிஷத்களுக்கு சமானமாக பாவித்து, அவற்றை திராவிட ப்ரபந்தங்கள் என்றே அழைத்து கௌரவிக்கின்றனர் என்பது கவனிக்கவேண்டிய செய்தி. வேத உபநிஷத்கள் மற்றும் மற்ற ஆன்மிக

கிரந்தங்களில் வந்திருக்கும் முக்கிய அம்சங்கள் அனைத்தும் கன்னட ஹரிதாஸ கிருதிகளில் வந்திருந்தாலும், அவற்றை த்வைத ஸித்தாந்தத்தின் பிரதிபலிப்பு என்றே சொல்ல வேண்டும்.

ஸ்ரீமதானந்த தீர்த்தர் தம் ஸித்தாந்தத்தில் ஈஶ – தாஸ பாவத்திற்கு முதல் இடம் கொடுத்திருப்பதால், இந்த கன்னடத்தின் கிருதிகளில், பகவந்தனின் ஆராதனையையும், ஹரிதாஸ்யத்தின் சிறப்பினையும் தெளிவாகக் காண்கிறோம். ஸ்ரீசங்கராசார்யரின் அத்வைத தத்வத்தில் பக்தி ஒரு சாதனமாகவே சொல்லப்பட்டிருப்பதால், அந்த மதத்தைப் பின்பற்றிய கன்னடர்கள் யாரும் அந்தக் காலத்தில் பக்தியை வெளிப்படுத்துவதான கிருதிகளை இயற்றியதாக இன்று வரை எனக்கு தகவல்கள் கிடைக்கவில்லை.

ஸ்ரீராமானுஜாசார்யரின் மதத்தைப் பின்பற்றும் கன்னடர்கள், தமிழையே தங்களின் தாய் மொழியாக ஏற்றுக் கொண்டதால், விஸிஷ்டாத்வைத தத்வத்தை கன்னடத்தில் பிரசாரம் செய்யும் வேலையை அவர்கள் செய்யவில்லை. ஸ்ரீமத்வாசார்யர் பக்திக்கு முக்கிய இடம் கொடுத்து, த்வாதஸ ஸ்தோத்திரம் முதலான கிருதிகளில் ஹரியின் மகிமையையும், த்வைத த்ருஷ்டியையும் சம்ஸ்கிருதத்தில் விளக்கினார்.

ஸ்ரீமத்வாசார்யரின் இந்த புதிய ஸித்தாந்தம் பண்டிதர்களால் புகழப்பட்ட காலத்தில், அதாவது இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, கன்னடிகரான ஸ்ரீபாதராஜர் கன்னடத்தில் கீர்த்தனைகளை இயற்றும் செயலை துவக்கினார். அவருடைய முயற்சியினால் ஹரிதாஸ ஸாஹித்யத்தின் தோற்றம் உண்டானது. அவரே இந்த சிறந்த ஸாஹித்யத்தின் பல்வித வகைகளை இயற்றி, அடுத்து வருபவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்தார். ஸ்ரீபாதராஜர் துவக்கி வைத்த இந்த கீர்த்தன கைங்கர்யத்தை ஸ்ரீவியாஸராஜர், ஸ்ரீவாதிராஜர் ஆகிய யதி த்வயரும், புரந்தரதாஸர், கனகதாஸர் முதலான ஹரிதாஸர்களும் தொடர்ந்து வளர்த்தனர்.

15ம் நூற்றாண்டில் மொத்த பாரதத்திலேயே பக்தி பரம்பரை வளரத் துவங்கிவிட்டதால், ஸ்ரீபாதராஜரின் இந்த முயற்சி மிகக் குறுகிய காலத்திலேயே தக்க பலன்களைக் கொடுக்க ஆரம்பித்து விட்டது எனலாம்.

***

2. ஹரிதாஸ ஸாஹித்யத்தின் பொற்காலம்

ஹரிதாஸ ஸாஹித்யத்தை திரு.R.S.பஞ்சமுகி அவர்கள் நான்கு காலகட்டங்களாக பிரிக்க வேண்டும் என்று சொல்கிறார். ஸ்ரீமத்வாசார்யரும், அவரது சிஷ்யரான ஸ்ரீ நரஹரி தீர்த்தர், ஸ்ரீ ஜயதீர்த்தர் 12-13ம் நூற்றாண்டில் ஹரிபக்தி, உபாசனை, ஹரிதாஸ்யம் ஆகியவற்றை பேசு மொழியின் வசனங்களால் மக்களுக்கு உபதேசித்து வந்தனர். இது முதலாம் கட்டம் எனப்படுகிறது. ஸ்ரீபாதராயரிலிருந்து துவங்கி ஸ்ரீகனகதாஸரின் காலம் வரைக்கும் இரண்டாம் கட்டம் எனப்படுகிறது. ஸ்ரீவிஜயதாஸர் மற்றும் அவரின் சிஷ்ய பரம்பரையின் காலத்தை மூன்றாம் கட்டம் என்றும் அறியவேண்டும். ஸ்ரீப்ராணேஷ தாஸரிலிருந்து துவங்கி அடுத்து வந்த ஹரிதாஸர்கள் அனைவரும் நான்காம் கட்டத்தை சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடுகிறார்.

ஸ்ரீமத்வாசார்யர் இயற்றியிருக்கும் 'த்வாதச ஸ்தோத்திரம்' கிரந்தமே கர்னாடகத்தில் தாஸகூடத்தின் விதையை விதைத்திருக்கும் பத்யமாக இருக்கிறது என்றும், அவர் இயற்றியிருக்கும் துளு கீதங்கள் அந்த பரம்பரைக்கு ஆதாரமாக இருந்திருக்கலாம் என்றும்,

ஸ்ரீமத்வரின் சமகாலத்தவரான ஸ்ரீ நரஹரி தீர்த்தர் எழுதியிருக்கலாம் என்று நினைக்க வேண்டிய சில கீர்த்தனைகளே இந்த ஸாஹித்யத்தின் முதல் முயற்சிகள் என்று சொல்ல வேண்டியதாகிறது என்பதாலும், இந்த காலகட்டத்தை முதல் காலகட்டம் என்று திரு.பஞ்சமுகி அவர்கள் சொல்கிறார்.

ஆனால், இதனை ஆராய்ந்தால், ஸ்ரீமத்வாசார்யரின் த்வாதச ஸ்தோத்திரத்தை, அவரது இதயத்தில் இருக்கும் ஹரிபக்தி, ஸ்தோத்திரமாக வெளிப்பட்டு, அதி உத்தமமான சம்ஸ்கிருத ஸ்தோத்திரங்களாக வந்திருக்கின்றன என்று சொல்லலாமே தவிர, அதனை கன்னட ஹரிதாஸ ஸாஹித்யத்தின் ஒரு வகை என்று சொல்ல முடியாது. அவரது இந்த அற்புதமான ஹரிபக்தி, ஹரிதாஸ ஸாஹித்ய இயற்றுதலுக்கு ஒரு முன்னோடி என்று சொல்வதில் எந்தத் தடையும் இல்லை.

இரண்டாவதாக, அவர் இயற்றியிருக்கலாம் என்று சொல்லப்படும் துளு கீதங்கள் இதுவரை வாய்வழியாகவும்கூட வரவில்லை. ஸ்ரீவாதிராஜர் துளு மொழியில் இயற்றியிருக்கும் தசாவதார ஸ்துதியை விட்டால், இதில் இதுவரை வேறு கிரந்தங்கள் இருக்கின்றன என்று நான் பார்த்தவரையில் தெரியவில்லை.

ஸ்ரீ நரஹரி தீர்த்தரின் கன்னட கீர்த்தனைகள் பற்றிய பல்வேறு சந்தேகங்களும் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன. இந்த அனைத்து காரணங்களால், இந்த முதலாம் கட்டத்தை பிரிப்பது தேவையற்றதாக இருக்கிறது.

இதிகாசத்தின் அடிப்படையில் பார்த்தால், ஹரிதாஸ ஸாஹித்யத்தின் துவக்கம் மற்றும் பர்வ-யுகம் ஸ்ரீபாதராஜரிடமிருந்தே துவங்கியது என்று சொல்ல வேண்டும். திரு.R.S.பஞ்சமுகி அவர்கள் எதை இரண்டாவது கட்டம் என்று சொல்கிறாரோ, அதனை ஹரிதாஸ ஸாஹித்யத்தின் முதலாம் கட்டம் என்று சொல்ல வேண்டும். இதன் பிறகு வரும் ஹரிதாஸ ஸாஹித்யத்தின் வளர்ச்சியை, இரு கட்டங்களாக பிரிப்பதற்கு பதில், ஒரே கட்டமாக பார்ப்பதே வரலாற்று ரீதியில் சரியாக இருக்கக்கூடும்.

ஸ்ரீபாதராஜரின் பரம்பரையில் ஹரிதாஸ ஸாஹித்யத்தில் நடந்த மிகப்பெரிய செயல்களால், அது பர்வ யுகம் மட்டுமல்லாமல், ஸுவர்ண யுகம் என்று அழைக்கப்பட வேண்டும். அந்த காலத்தில் இயற்றப்பட்ட கிருதிகளிலிருந்து இந்தப் பெயர் பொருத்தமாக இருக்கும். விஜய நகர சாம்ராஜ்யத்தின் காலத்தில் ஹரிதாஸ ஸாஹித்யம் நன்றாக வளர்ந்து, பிறகு அந்த சாம்ராஜ்யத்தின் இறங்குமுகத்தில் ஹரிதாஸ ஸாஹித்யமும் வளர்ச்சி குன்றியது.
சில ஆண்டுகள் வரை மறைந்திருந்து ஓடிய இந்த ஹரிதாஸ ஸாஹித்ய பெருங்கடல், ஸ்ரீவிஜயதாஸரின் வரவால் மறுபடி ஓடத் துவங்கி, ஒளிரத் துவங்கியது என்பதை நாம் பார்க்கலாம். ஆகையால், இந்த இரண்டாம் காலத்தை ஹரிதாஸ ஸாஹித்யத்தின் மறுமலர்ச்சி காலம் என்று சொல்லலாம். இந்தக் கட்டுரையில் முதலில் வந்த பொற்காலத்தை பார்ப்போம்.

நம:ஸ்ரீபாதராஜாய நமஸ்தே வியாஸயோகினே |
நம: புரந்தரரார்யாய விஜயார்யாய தே நம: ||

என்னும் ஸ்லோகத்தில் ஸ்ரீபாதராஜருக்கு (1404-1502) கொடுக்கப்பட்டிருக்கும் இடத்தைப் பார்த்தால், அவர் ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு எப்படி ஒரு துருவ நட்சத்திரமாக, வழிகாட்டியாக இருக்கிறார் என்பதை, அவரது கிருதிகளின் மூலம் நாம் அறியலாம். ஸ்ரீமத்வாசார்யரின் முக்கிய சிஷ்யரான ஸ்ரீபத்மனாப தீர்த்தரின் பரம்பரையில் வந்த ஸ்ரீபாதராஜரின் வாழ்க்கை மிகவும் அற்புதமானதாகும்.

அவரின் இயற்பெயர் லட்சுமி நாராயண. நற்குலத்தில் பிறந்தவரான இவர், சென்னபட்டண தாலுகா அப்பூரின் ஸ்ரீபுருஷோத்தம தீர்த்தரின் விருப்பத்தில் ஸ்ரீரங்கத்தின் ஸ்ரீ ஸ்வர்ணவர்ண தீர்த்தரின் சிஷ்யராகி, அவரின் அருளால் சன்யாசத்தை ஏற்று, பல ஆண்டுகள் ஸ்ரீரங்கத்திலேயே வசித்தார். இவரது வித்யாகுரு - ஸ்ரீவிபுதேந்திர தீர்த்தர்.

சிறு வயதிலேயே வேதாந்த கல்வியில் சிறந்து விளங்கிய இவரை, உத்தராதி மடத்து பரம்பரையில் வந்த ஸ்ரீரகுநாத தீர்த்தர், புகழ்ந்து மெச்சி 'ஸ்ரீபாதராஜ' என்னும் பட்டத்தைக் கொடுத்தார். அன்றிலிருந்து ஸ்ரீலட்சுமி நாராயண யதிகள், ஸ்ரீபாதராஜர் என்றே அழைக்கப்பட்டார். ஸ்ரீபாதராஜர் தம் ஆசிரம குருகளான ஸ்ரீ ஸ்வர்ணவர்ண தீர்த்தர், ஸ்ரீரங்கத்தில் பிருந்தாவனஸ்தர் ஆனபிறகு, விஜய நகரத்தின் கீழ் வந்த முளபாகிலுக்கு வந்து தங்கினார். அன்றிலிருந்து அவரது மடம் ஸ்ரீபாதராஜ மடம் என்றே பெயர் பெற்றதோடு மட்டுமல்லாமல், மத்வ ஸித்தாந்தத்தை கற்க விரும்புபவர்களுக்கு தக்க ஒரு பாடசாலையாகவே விளங்கியது. அப்பூரின் ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் உத்தராதிகாரிகளான ஸ்ரீவ்யாஸராஜர் போன்ற மகாமேதாவிகள் ஸ்ரீபாதராஜரின் சிஷ்யரில் ஒருவர் என்று சொன்ன பிறகு, இந்த சம்ஸ்தானத்தின் மதிப்பைப் பற்றி சொல்ல வேண்டியதேயில்லை.

ஸ்ரீபாதராஜரின் மகிமை பற்பல விதங்களில் வளர்ந்து வருவதைக் கண்ட, கேட்டறிந்த, ஸாளுவ வம்சத்தின் நரசிம்மன், அப்போது சந்திரகிரியில் விஜய நகரத்தின் அதீனத்தில் இருந்தான். அவனுக்கு ஸ்ரீபாதராஜரிடம் அபாரமான பக்தி, சிரத்தைகள் இருந்தன. ஸாளுவ நரசிம்மனின் காலத்தில் துவங்கிய இந்த ராஜ மரியாதை, ஸ்ரீபாதராஜரின் வாழ்க்கையில் தொடர்ந்து நடந்து வந்தது.

அப்பூரில் பிறந்து வளர்ந்து, ஸ்ரீரங்கத்தில் சன்யாச தீக்ஷையைப் பெற்று, நரசிம்ம தீர்த்த, நரசிம்ம வன போன்ற பவித்ர இடங்களைக் கொண்ட முளபாகிலில் தங்கிய ஸ்ரீபாதராஜரின் புகழ் நாடு முழுவதும் பரவியது. அவரின் ஆன்மீக வாழ்க்கை, தினந்தோறும் படிப்படியாக வளர்ந்தது. இத்தகைய யதிவரேண்யர் தம் பூஜா காலத்தில், விதிப்படி தமது பூஜைகளை செய்து, பகவந்தனிடம் தமது பக்தியை தெரிவிக்கும் விதத்தில், கன்னடத்தில் கீர்த்தனைகளை இயற்றி, அவற்றை ஸ்ரீஹரிக்கு சமர்ப்பிக்கத் துவங்கினார்.

இந்த செயலானது அந்த காலத்திற்கு ஒரு மிகப்பெரிய புரட்சி என்றே சொல்லலாம். காலில் சலங்கை கட்டிக்கொண்டு தம்பூரியை மீட்டியவாறு, நர்த்தன சேவையை செய்தவாறு, கீர்த்தனைகளை பாடிக் கொண்டிருந்தார் என்று கேள்விப்படுகிறோம். சன்யாசியானவர் இப்படியாக தம் பக்தர்களுடன் பஜனை செய்வதென்றால், அது ஒரு மிகவும் அபூர்வமான சம்பவமே ஆகும். தூய்மையான இந்த ஹரிபக்தியின் வெளிப்பாடே, கன்னட ஹரிதாஸ ஸாஹித்ய இயற்றுதலுக்கு துவக்கப் புள்ளி ஆயிற்று.

ஸ்ரீபாதராஜரின் இந்த புதிய செயலுக்கு, அவரது ஹரிபக்தி மிகவும் முக்கியமான காரணம் என்று சொல்வதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால், தமது ஹ்ருதயானுபவத்தை கன்னடத்திலேயே வெளிப்படுத்த வேண்டும் என்னும் அவரது விருப்பத்திற்குப் பின்னால் ஏதேனும் ஒரு காரணம் இருக்கவேண்டுமே என்னும் கேள்வி நம்மில் எழாமல் இல்லை.

15ம் நூற்றாண்டில் இப்படியான செயல் நடைபெறுகிறது என்பது ஒரு வரலாற்று நிகழ்வே ஆகும். 9ம் நூற்றாண்டின் சமயத்திலேயே தமிழ்நாட்டில் வைஷ்ணவ பக்தியை பரப்பிய ஆழ்வார்களின் பிரபந்தங்கள் புகழ் பெற்றிருந்தன. அது மட்டுமல்லாமல், ஸ்ரீராமானுஜாசார்யர் அவற்றை சம்ஸ்கிருத கிரந்தங்களுக்கு சமமாகவே வைத்து கௌரவித்தார். அதே தமிழ்நாட்டில் நாயன்மார்களின் தமிழ் கிருதிகளும் சைவ பக்தியின் முக்கிய பிரசார உத்தியாக இருந்தன.

கன்னட நாட்டிலும் 12ம் நூற்றாண்டில் வசன யுகம் பரவி இருந்தது. இந்த சமயத்தில், ஸ்ரீமத்வாசார்யர் நிறுவிய தத்வவாதமானது, வேரூன்றியதோடு மட்டுமல்லாமல், ஸ்ரீஜயதீர்த்தர் போன்ற ஞானிகளின் மூலம் ஆசார்யரின் கிரந்தங்களுக்கு டீகை, டிப்பணிகள் ஆகியவையும் சம்ஸ்கிருதத்தில் வந்தன.

தமிழ்நாட்டில் பல்லாண்டுகள் வசித்திருந்த ஸ்ரீபாதராஜருக்கு, ஆழ்வார்களின் பிரபந்தங்களில் இருந்த பக்தி, பேசுமொழியின் மேல் அவர்களுக்கு இருந்த ப்ரியம் ஆகியவை பிடித்திருந்தன என்பதை நம்மால் ஊகிக்க முடிகிறது. அப்படியே கன்னட நாட்டில் ஆன்மிக விஷயங்களை கன்னடத்திலேயே விளக்கிய வசனகாரர்களின் திறனும் அவரின் மனதை மகிழ்வித்திருந்தன என்று சொல்ல வேண்டும். இந்த இரண்டுடன், தம் ஆசார்யரின் ஸித்தாந்தத்தை சம்ஸ்கிருதம் அறியாத மாத்வ மக்களுக்கு சொல்ல வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆகையால், அவர் பூஜையின் சமயத்தில் ஆத்ம நிவேதனை செய்வதற்காக அவர் இயற்றிய இந்த கிருதிகளின் கடல், படிப்படியாக வளர்ந்து, மத்வ ஸித்தாந்தத்தின் தத்வங்கள் மற்றும் ஸ்ரீமத் பாகவதத்தின் சாரங்களை அறிந்து சொல்லும் அக்ஷயமாகவும் விளங்கியது.

ஸ்ரீபாதராஜர் கன்னடத்தில் கீர்த்தனைகளை இயற்றிய அதே காலகட்டத்தில், தெலுங்கில் அன்னமாசார்யர் (1424-1503) கீர்த்தனைகளும் வழக்கில் இருந்தன. ஹரிதாஸ ஸாஹித்யத்தில் ஸ்ரீபாதராஜர் பயன்படுத்தியிருக்கும் கீர்த்தனை, ஸுளாதி, உகாபோக, வ்ருத்த நாம, தண்டக ஆகிய பல்வேறு வகைகளுக்கு எந்தெந்த திசைகளிலிருந்து அவருக்கு ப்ரேரணை வந்தது என்று சங்கீதகாரர்கள் ஆராய வேண்டியிருக்கிறது.

ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு துவக்கப்புள்ளி போட்ட மகானுபாவராகையால் அதற்கு ஸ்ரீபாதராஜரின் பங்கு என்ன என்பதை சொல்வதற்கு ஒரு சிறிய உதாரணம் கொடுக்கப்படுகிறது. யதிஸ்ரேஷ்டரான அவர் ஹரிதாஸ்யத்தை எப்படி சாதித்தார் என்பதை அவரது சொந்தக்கதை போன்றே இருக்கும்படியான பல கிருதிகளை காணலாம்.

அன்னந்த காலதல்லி நின்ன நானரியதெ பவகளலி பந்தெனோ
அன்னந்த காலதல்லி நின்னவனெனிஸதெ மூருகனாதெனோ
அன்னந்த காலதல்லி நின்ன சரணரதியில்லதெ நொந்தேனோ
அன்னந்த காலதல்லி அதாவ புண்யதிந்த பந்து இந்து
நின்னவனெனிஸிதெ அதாவ புண்யதிந்தலென்ன மன
நின்னல்லெரகிது நோயதந்தெ
என்ன பொரெது லாலிஸு தீனனாத ஸ்ரீரங்கவிட்டலா

என்னும் பேச்சினைக் கேட்டால், அவரின் இதயக்குரலை யாராக இருந்தாலும் ஊகிக்க முடியும். ‘இட்டாங்கே இருவேனோ ஹரியே என்ன தொரெயே’ ‘பாலொளகத்து நீரொளகத்து ஹரி நா நின்ன நம்பிதேனோ’ ‘நா நினகேனு பேடுவுதில்ல என்ன ஹ்ருதய மண்டபதொளு நெலெஸிரு ஹரியே’ என்னும் ஒவ்வொரு நுடியிலும் ஹரிபக்தனின் கூக்குரல் எப்படி வெளிப்படுகிறது என்பதை நாம் காணமுடிகிறது. ஸ்ரீபாதராஜர் சொல்லும் அந்த ஹரிதாஸனின் நிலையை, அவரின் ஆத்ம நிவேதனத்தை வெளிப்படுத்தும் ஒரு கிருதியாகவே இவற்றை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஹரி நாராயணனெந்து கரதெத்தி முகிதொம்மெ மெய்
மரெது நடிஸலில்ல கிருஷ்ண
ஹரிஸ்மரணெ ஸ்மரிஸி ஸிரிதுளஸி புஷ்பவனு
கரவெத்தி நீடலில்ல கிருஷ்ண
ஸர்வக்ஞராயரு விரசிஸித கிரந்தவனு
தருஷனவெ மாடலில்ல கிருஷ்ண

ஸ்மரிஸலாரத பாப ஸ்மரணெபூர்வகமாடி
ஸ்திரபாரனாதெனல்லோ கிருஷ்ண

ஹரிதாஸர்கள் இவ்வாறு மெய்மறந்து, நடனம் ஆடியவாறு, பகவந்தனிடம் முறையிட வேண்டும் என்பதையே இங்கு சொல்லியிருக்கிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். எந்த பத்ததிக்கு அவர் காரணமோ, அந்த பத்ததியின் ரீதி நீதிகளை இங்கு சொல்லி, தாம் அதனை பின்பற்றமுடியவில்லையே என்று சுயபச்சாதாபம் கொள்கிறார். இத்தகைய ஆத்ம அனுஸந்தானத்தின் பல கிருதிகள், நமக்கு அவருடைய அந்தரங்கதத்தின் அறிமுகத்தினை செய்கிறது. இவை மட்டுமல்லாமல், ஸ்ரீமத்வாசார்யரின் அவதார த்ரயத்தைக் குறித்த மத்வநாம கிருதி மிகவும் புகழ்பெற்றது. 'ரங்கவிட்டல' என்னும் அங்கிதத்தில், ஸ்ரீகிருஷ்ணனின் பாலலீலை, வேணுகீதத்தின் சிறப்பு, கோபியர்களின் அந்தரங்கத்தையே எடுத்துக் காட்டும் ப்ரமரகீதை ஆகியவற்றை விளக்கும்படியாக அவர் இயற்றியிருக்கும் கிருதிகள், ஸ்ரீமத் பாகவதத்தின் சாரத்தையே நமக்கு காட்டுகின்றன.

கண்களித்யாதகோ காவேரி ரங்கன நோடத - என்னும் அற்புத கீர்த்தனை, ஸ்ரீரங்கத்தில் இருக்கும் ரங்கநாதனின் வைபவத்தை விளக்குகிறது என்றால், 'ரங்கநாதன நோடுவ பன்னி, ஸ்ரீரங்கன திவ்ய விமானதல்லிஹன' என்னும் வேறொரு கீர்த்தனை அவர் ஸ்வாமியைக் கண்ட ஆனந்தத்தை பகிர்ந்து கொள்ள அனைவரையும் அழைப்பதாக இருக்கிறது. பற்பல ஆண்டுகள் ஸ்ரீரங்கத்திலேயே இருந்து, அந்த க்ஷேத்திரத்தின் சிறப்பினை அனுபவித்த ஸ்ரீபாதராஜர், இவ்வாறு மெய் மறப்பது என்பது சரியான விஷயமே ஆகும். திருப்பதிக்கு மிக அருகிலேயே தங்கியிருந்த ஸ்ரீபாதராயர் 'ஹரே வெங்கடஷைலவல்லப பொரெயபேகு என்ன' என்று ஆத்ம சமர்ப்பணம் செய்து கொள்ளும் அவருடைய வேண்டுதலும்கூட அற்புதமானது.

ரங்கா மனெகெ பாரோ க்ருபாங்க
ஸ்ரீரங்கரங்க கலுஷ விபங்க கருட துரங்க
நவமோஹனாங்க ஸ்ரீரங்க

என்று தம் அந்தரங்கத்தையே அவனுக்காக திறந்து வைத்து, அவன் வந்தபோது தாம் எப்படி எப்படி உபசாரம் செய்கிறார் என்று சொல்வது மிகச் சிறப்பானதாகும். ஸ்ரீபாதராயரின் கிருதிகளில் தெரிய வரும் பக்தி, சரளம், எளிமை ஆகியவை தாஸ ஸாஹித்யத்தின் சரியான பயன்பாடாக இருக்கிறது. அவருடைய நடை, ஆளுமை, ஆன்மிக அறிவு ஆகியவை கவனிக்கப்பட வேண்டியவை. ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீபாதராஜரைக் குறித்து சொல்லும்போது -

ஹரிபதாம்புஜப்ருங்க, பரமதாஹி விஹங்க
பரமஸுகுணாந்தரங்க, பவதுரித பங்க
ஷரணகீர்த்திதரங்க, ஷத்ருதிமித பதங்க,
ஷரணுஷுப சரிதாங்க, ஷட்சாஸ்திரஸங்க

என்று கொண்டாடியிருக்கும் நுடிகளில் மற்றும் ஸ்ரீவாதிராஜரின்

ஸ்ரீபாதராயர திவ்ய ஸ்ரீபாதவ பஜிஸுவெ
வாக்வஜ்ரகளிந்த மாயாவாதிகளெல்லர பாயி
பீகவிக்கி முத்ரிஸித பிங்ககள பிடிஸுவ
வ்யாஸராயரிகெ வித்யாப்யாஸவ மாடிஸுவ
தாஸர நாமகளிந்த லேஸுலேஸெந்தெனிஸி கொம்ப

என்னும் புகழ் மாலையாகட்டும், அவை எவ்வளவு அர்த்தபூர்ணமாக உள்ளது என்பது, அவருடைய அற்புத கிருதிகளால் தெளிவாகிறது. 98 ஆண்டுகள் வாழ்ந்த ஸ்ரீபாதராஜர், தம் நீண்ட

வாழ்க்கையில் அனேக தார்மிக காரியங்களை நடத்தி, இறுதியில் முளுபாகிலில் இருக்கும் நரசிம்ம வனத்தில் வ்ருந்தாவனஸ்தர் ஆனார்.

ஸ்ரீபாதராஜரின் சிஷ்யஸ்ரேஷ்டரான ஸ்ரீவ்யாஸராஜர் (1447-1539) கூட, தம் குருகள் காட்டிக் கொடுத்த இந்த வழியையே பின்பற்றினார். பன்னூரில் பிறந்து, வளர்ந்து, ஸ்ரீபிரம்மண்ய தீர்த்தரின் தலைமையில் ஸ்ரீவ்யாஸ தீர்த்தர் என்னும் ஆசிரம நாமத்தைப் பெற்று, காஞ்சிபுரத்தில் ஷட்தர்ஷனத்தில் தேர்ந்து, அதன் பிறகு ஸ்ரீபாதராஜர் இருந்த முளுபாகிலிலேயே த்வைத ஸித்தாந்தத்தில் அறிஞர் ஆகி, விஜயநகரத்தின் பரம்பரையிலேயே மிகச்சிறந்தவர் என்று பெயர் பெற்றவரான ஸ்ரீ கிருஷ்ணதேவ ராயரின் ராஜகுரு எனப்பட்ட இந்த மகானின் வாழ்க்கை முழுவதும் மிகவும் போற்றத்தக்கது.

ஸ்ரீவ்யாஸதீர்த்தர் இயற்றியிருக்கும் நியாயாம்ருத, சந்திரிகா மற்றும் தர்க்க தாண்டவ என்னும் ஸித்தாந்த கிரந்தங்கள் வேதாந்த சாம்ராஜ்யத்தில் என்றும் ஒளிர்ந்து கொண்டிருப்பவை. ஸ்ரீவ்யாஸதீர்த்தரின் பிரபாவம், வட இந்தியாவிலும் பரவி, சைதன்ய மார்க்கத்தவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்தது என்பதைப் பார்க்கும்போது, அவருடைய ஆன்மிக திக்விஜயத்தை வர்ணிப்பதற்கு வார்த்தையே இல்லை எனலாம்.

இத்தகைய தத்வஞானிகள், ஸ்ரீபாதராஜரைப் போலவே கன்னடத்தில் கீர்த்தனை, ஸுளாதி மற்றும் உகாபோகங்களை இயற்றி, ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு அபாரமான பெருமையை சேர்த்தார். ஸ்ரீவ்யாஸராஜர் தம் ஆராத்ய தேவதையான ஸ்ரீகோபாலகிருஷ்ணனின் ப்ரீத்யர்த்தமாக 'ஸ்ரீகிருஷ்ண' என்னும் அங்கிதத்தில் தம் கிருதிகளை இயற்றினார். ஸ்ரீவ்யாஸராஜரின் கிருதிகளை நாம் பார்த்தோமேயானால், அவற்றில் ஸ்ரீகிருஷ்ண மற்றும் ஸ்ரீகிருஷ்ணனின் சான்னித்யத்தால் பரம பவித்ரம் எனப்பட்ட கோகுலத்தின் அழகான காட்சி வர்ணிக்கப்பட்டுள்ளதை பார்க்கலாம்.

ஆளித நீனு நின்னாளு நானு
தந்தெ நீனு நின்ன கந்த நானு
ஷரண்ய நீனு நின்ன தயகெ பாதுர நானு
நோவ நோடின்னு காவரில்லெந்து ஸ்ரீகிருஷ்ண
என்னனு காயபேகை தந்தெ

என்று ஹரிதாஸ்யத்தை ஏற்றுக்கொண்ட ஸ்ரீவ்யாஸராஜர், பகவந்தனை பற்பல விதமாக வணங்கியிருக்கிறார். தம் லோப, தோஷங்கள் அனைத்தையும் பகவந்தனிடம் சமர்ப்பித்துக் கொண்டு, பகவந்தனின் காருண்ய மழை தன் மேல் பொழிந்தால், தன் ராஜஸ புத்தி அழியும் என்றும்; பரமாத்மனின் ஸ்ரீமூர்த்தி ஒளிர்ந்தால் தன் தாமஸ புத்தி அடங்கும் என்றும்; பரமாத்மனின் பாத ஸ்பர்ஷத்தினால் தன் மேல் இருக்கும் பிரச்னைகள், அகலிகை சாப விமோசனம் பெற்றதைப் போல, தீரும் என்றும்; சொல்கிறார்.

நின்னிந்த நின்ன தாஸரே மிகிலோ கிருஷ்ணா - என்று ஸ்வாமியின் பக்தபராதீனதையை, தெய்வ பக்தர்களான பீஷ்ம, தர்மராஜ, பார்த்த, பலி, கோபியர் ஆகியோர் எப்படி அவனை தம் வசப்படுத்தினர் என்னும் கதைகளை உதாரணம் கொடுத்து விளக்குகிறார்.

அத்தகைய ஹரிதாஸரின் சௌபாக்கியத்தை சொல்லி, அதன் மூலம் தாமும் எப்படி புனீதர் ஆனார் என்பதை 'என்னல்லி ஹொந்திப்ப நின்னனரியதந்தெ நின்ன தோரிதரெனகெ நின்ன தாஸரு ஸ்ரீகிருஷ்ணா' என்று சொல்லி மகிழ்கிறார். 'ரங்கய்ய மனெகெ பந்தரெ அந்தரங்கதி குடிகட்டி குணிவெ நா' என்று சொல்லி பெருமைப்படும் ஸ்ரீவ்யாஸராயர் தம் இஷ்டார்த்தம் நிறைவேறுவதாக சொல்லி, மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

பாடித மாவு பல்லவிஸிது, பிஸிலு பெளுதிங்களாயிது, ஹாவு ந்யாவளவாயிது, தாவானள தம்பாயிது - என்று விதம்விதமாக வர்ணிக்கிறார். ஸ்வாமியின் க்ருபா கடாக்ஷத்தினால் அப்ரியமான வஸ்துகளும் ப்ரியமானது என்ற பிறகு, அது ஒரு அற்புதமான மாற்றமே ஆகும். ஸ்ரீகிருஷ்ணன் ஓடாடிய வ்ருந்தாவனம் என்றால் ஸ்ரீவ்யாஸராஜருக்கு மிகவும் இஷ்டம். கோப, கோபியர் என்றால் எங்கும் இல்லாத அக்கறை. கோபியர்களின் மகிழ்ச்சி, பக்தி, விருப்பங்களை விதம்விதமாக வர்ணிக்கிறார். வ்ருந்தாவனத்திற்கு முன் வந்திருக்கும் அந்த கோபியர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வதை மிகவும் விளக்கமாக வர்ணிக்கிறார். கிருஷ்ணனின் வேணுகானத்திற்கு செடி, கொடிகள் மயங்கின, திடமான மலையே கரைந்து போனது என்னும் கற்பனை அற்புதமானதாகும்.

ஸ்ரீகிருஷ்ணன் தரித்திருக்கும் வனமாலையின் கிரணங்களின் ஒளி வானவில் எனப்பட்டால், அவனின் பீதாம்பரத்தின் ஒளி மின்னலைப் போல ஒளிர்கிறதாம். மதுரமான குழல் ஓசை, கர்ஜனை போல ஒலிக்கிறதாம். நீலமேகஷ்யாம என்னும் பெயருக்குத் தக்கவாறு, அந்த பரமாத்மனையே மேகம் என்று நினைத்து, ஜாதக பட்சி நடனமாடியது என்பது, ஸ்ரீவ்யாஸராயரின் வர்ணனை ஆகும்.

இப்படியாக ஸ்ரீவ்யாஸராஜரின் கன்னட கிருதிகள் மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்து, ஸாஹித்யத்தின் அற்புத உதாரணங்களாக இருக்கின்றன. தமது சம்ஸ்கிருத கிரந்தங்களால் ஸ்ரீவ்யாஸராஜர், சாஸ்திர உலகில் எவ்வளவு உயரத்தை தொட்டாரோ, கன்னட கிருதிகளால் ஹரிதாஸ ஸாஹித்ய க்ஷேத்திரத்திலும் அவ்வளவே பெருமையைப் பெற்றார் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

ஸ்ரீவ்யாஸராஜர், தாம் மட்டும் மேம்பட்டால் போதும் என்று நினைத்தவர் அல்ல. தம் குருகளான ஸ்ரீபாதராஜர் துவக்கி வைத்த இந்த கீர்த்தன கைங்கர்யத்திற்கு ஒரு தக்க ஏற்பாட்டினை செய்ய வேண்டும் என்று நிச்சயித்து, ஹரிதாஸரின் ஒரு பரம்பரையையே நிர்மாணித்தார். ஏனெனில், ஸ்ரீபுரந்தரதாஸர், ஸ்ரீகனகதாஸர் முதலான புகழ்பெற்ற ஹரிதாஸர்கள், ஸ்ரீவ்யாஸராயரின் அருளுக்கு பாத்திரராகி, இந்த சேவையை மேற்கொண்டனர் என்பதற்கு பிரத்யட்சமான மற்றும் பரோக்ஷமான பிரமாணங்கள் உள்ளன.

ஸ்ரீவ்யாஸராயரிடமிருந்து 'புரந்தரவிட்டலா' என்னும் அங்கிதத்தை தான் பெற்றதாக ஸ்ரீபுரந்தரதாஸர், தமது குருகளைப் பற்றிய ஒரு ஸுளாதியில் தெளிவாக தெரிவித்துள்ளார். ஸ்ரீவ்யாஸராயரின் சரண தரிசனத்தால் தாம் மற்றும் தம் குலமே பவித்ரம் ஆனதோடு மட்டுமல்லாமல், அதன் மூலம் 'ஸ்ரீஷன்ன பஜிஸுவுதகதிகாரி நானாதே' என்று ஆணித்தரமாக கூறியுள்ளார். இந்த ஸுளாதியில் ஸ்ரீதாஸர், ஸ்ரீவ்யாஸராயரின் மகிமையை மனப்பூர்வமாக கொண்டாடி, கடைசியில் 'குருவியாஸராயர சரணவெனகெ கதி, புரந்தர விட்டலன அரிதெ இவரிந்த' என்று சொல்லி, தன்யர் ஆகியிருக்கிறார்.

இதே ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீகனகதாஸரை சிஷ்யராக ஏற்றுக்கொண்டு, அவர்மேல் தம் அபாரமான நம்பிக்கையை வைக்க, அப்போது அதனை சகிக்க முடியாத சில சிஷ்யர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை ஸ்ரீபுரந்தரதாஸர் தமது ஒரு கீர்த்தனையில் சொல்லியிருக்கிறார். ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீபுரந்தரதாஸரின் அபாரமான செயல்களையும், ஹரிதாஸ்யத்தையும் மெச்சி 'தாஸரெந்தரெ புரந்தரதாஸரய்யா' என்னும் அவரை பாராட்டி, மற்ற ஹரிதாஸர்களின் அவகுணங்களை கண்டித்து,

நீதியெல்லவனரிது நிகமவேத்யன நித்ய
வாதஸுதனல்லிஹன வர்ணிஸுதலி
கீத நர்த்தனதிந்த கிருஷ்ணன பூஜிஸுவ
பூதாத்ம புரந்தரதாஸரிவரய்யா

என்று சொல்லியிருப்பதைப் பார்த்தால், அவரது தலைமையில் ஒரு ஹரிதாஸர்களின் குழுவே அப்போது இருந்தனர் என்பதை அறிய முடியும். இந்த சமகாலத்திய பிரமாணங்களால், ஸ்ரீவ்யாஸராஜரே 'ஹரிதாஸ கூட' த்தை துவக்கியவர் என்பதையும் அறியலாம். ஸ்ரீபுரந்தரதாஸர் மற்றும் ஸ்ரீகனகதாஸர் இவர்களின் ஒளியால், மற்ற எந்த ஹரிதாஸர்களின் பெயர்களும் இன்று நமக்கு கிடைக்கவில்லை என்றுதான் ஊகிக்க வேண்டும்.

ஸ்ரீவ்யாஸராஜர், தமது வித்யா குருகளை 'மஹிமெ ஸாலதெ, இஷ்டே மஹிமெ ஸாலதெ' என்று புகழ்ந்து, ஸ்ரீபாதராஜரின் வாழ்க்கையில் நடந்த அற்புத மகிமைகளை வர்ணித்தால், அவர் தம் சிஷ்ய வரேண்யரான ஸ்ரீவ்யாஸராஜரை

ஸாஸிர ஜிஹ்வெகளுள்ள சேஷனெ
கொண்டாடபேகு வியாஸமுனிராயர ஸன்யாஸதிரவ

என்று மனப்பூர்வகமாக புகழ்ந்து, அவர் செய்த புண்ய கார்யங்கள் மற்றும் பக்தி கைங்கர்யங்களை நிரூபித்திருக்கிறார். ஹரிதாஸ ஸாஹித்யத்தின் வளர்ச்சிக்கு இப்படியான குரு சிஷ்யர்களின் பரஸ்பர புகழ்ச்சி, அபிமானங்கள் மிகவும் உறுதுணையாக இருந்தன என்பது மகிழ்ச்சிகரமான செய்தி. ஸ்ரீவ்யாஸராஜருக்குப் பிறகு, அவருடைய சம்ஸ்தானத்திற்கு ஸ்ரீவ்யாஸராயர மடம் என்னும் பெயர் வழக்கில் வந்ததைக் கண்டால், அவருடைய சாதனை, ஸித்திகள் எவ்வளவு என்பதை அறியமுடியும். ஸ்ரீவ்யாஸராயரின் பரம்பரையில் இந்த கீர்த்தனை கைங்கர்யம் எப்படி வளர்ந்து வந்தது என்பதற்கு இப்போது 20ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீவித்யா பிரஸன்ன தீர்த்தர் அனேக கீர்த்தனைகளை இயற்றியிருப்பது ஒரு உதாரணமாக இருக்கிறது.

ஹரிதாஸ ஸாஹித்ய க்ஷேத்திரத்தில் இந்த யதிவர்யரின் பரம்பரையில் காணப்படும் இன்னொரு மகிமர் யாரென்றால், ஸ்ரீவாதிராஜர் (1480-1600). உடுப்பியின் அஷ்ட மடங்களின் அன்றைய யதி பரம்பரையில் வேறு யாரும் இவரைப் போல, கீர்த்தன கைங்கர்யத்தை செய்திருக்கிறார்கள் என்பதற்கு இதுவரை சான்றுகள் இல்லை. இந்த பார்வையில், ஸ்ரீவாதிராஜரின் இந்த சேவா தீக்ஷை மிகச் சிறந்ததே ஆகும்.
ஸ்ரீவாதிராஜர் சில காலம் ஸ்ரீவ்யாஸராயரிடம் இருந்ததால், இது அவர் கண்ட இரு யதிகளின் கீர்த்தனை கைங்கர்யத்தைப் பார்த்து அதிலிருந்து அவர் அடைந்த ஊக்கமாக இருக்கலாம் என்று ஊகிக்கலாம். ஸ்ரீவாதிராஜர் சம்ஸ்கிருதத்தில் இயற்றியிருக்கும் யுக்தி மல்லிகா, சரஸ பாரதிவிலாஸ, ருக்மிணிஷ விஜய, தீர்த்த பிரபந்த மற்றும் பல்வேறு ஸ்தோத்திரங்கள் சாஸ்திர மற்றும் ஸாஹித்யங்களின் பார்வையில் அற்புதமானவை. உடுப்பிக்கு அருகில் இருக்கும் கும்பாஸியில் பிறந்து, வளர்ந்து அன்றைய ஸோதெ மடத்து ஸ்ரீவாகீஷ தீர்த்தரின் அருளுக்குப் பாத்திரராகி, தம் பூர்வாசிரம பெயரான வராக என்னும் பெயருக்கு ஏற்ப, ஸ்ரீவாதிராஜ தீர்த்தர் என்னும் ஆசிரம நாமத்தைப் பெற்று, தம் சிறிய வயதிலேயே வேதாந்த சாம்ராஜ்யத்தில் மிகவும் சிறந்தவர் என்னும் பெயரைப் பெற்றார். ஸ்ரீபாதராஜர், ஸோதெ சம்ஸ்தானத்தின் பீடத்திற்கு வந்த உடனேயே, அனேக சீரமைப்பு காரியங்களை செய்தார்.

உடுப்பியில் இன்றும் நடந்து வந்துகொண்டிருக்கும் இரு ஆண்டுகளின் பர்யாய பத்ததியை இவரே துவக்கியவர். சொந்த மதத்தவர்களின் அபிமான மரியாதைகளைப் பெற்றது மட்டுமல்லாமல், பிற மதத்தவர்களின் கௌரவங்களையும் பெற்றார். ஒதுக்கி வைக்கப்பட்டவர்களான கோடேஷ்வர்களின் பிராமணர்கள், பொற்கொல்லர்கள் ஆகிய பலருக்கு தம் மடத்தின் தீக்ஷையைக் கொடுத்து அருளிய மகான் இவர். இப்படியே சாரஸ்வத மதத்தின் சில பிரிவினரும்கூட இவரிடமிருந்து சக்ராங்கிதத்தைப் பெற்று, மாத்வ சம்பிரதாயத்தினை பின்பற்றுபவர்கள் ஆயினர்.

ஸ்ரீபாதராஜர் மற்றும் ஸ்ரீவ்யாஸராஜர்களைப் போலவே, ஸ்ரீவாதிராஜரும்கூட அன்றைய விஜய நகர அரசரிடமிருந்து மரியாதைகளைப் பெற்று, 'பிரஸங்காபரண தீர்த்தர்' என்னும் விருதினைப் பெற்றார். ஸோதெயின் சிற்றரசனாக இருந்த அரசப்ப நாயகனுக்கு வந்த ஆபத்தினை பரிகரித்தார் ஆகையால், அவன் ஸ்ரீவாதிராஜருக்கு பற்பல விதமான ராஜ மரியாதைகளை வழங்கி கௌரவித்தான். அவன் தானமாகக் கொடுத்த ஸோதெயில் த்ரிவிக்ரம தேவரே முதலான பல தேவதைகளின் கோயிலை கட்டி, பஞ்ச வ்ருந்தாவனங்களை நிர்மாணித்து, என்றைக்கும் அது பவித்ர தீர்த்தக்ஷேத்திரங்களில் ஒன்றாக இருக்குமாறு செய்த பெருமை ஸ்ரீவாதிராஜரையே சேர்ந்தது. தம் 120 ஆண்டுகளின் நீண்ட ஆயுளில், ஐந்து பர்யாயங்களில், கடைசியானதை இந்த பவித்ர க்ஷேத்திரத்தில் நிறைவேற்றி, பின் அங்கேயே வ்ருந்தாவன பிரவேசம் செய்த மகாமகிமர் இவர்.

ஸ்ரீவாதிராஜரின் மொத்த வாழ்க்கையை பார்த்தால் அவர் எப்போதும் மாற்றத்தை விரும்பியவர் என்பது தெரிகிறது. இத்தகைய யதிவரேண்யருக்கு, அவரது சிறிய வயதிலேயே, ஸ்ரீபாதராஜர், ஸ்ரீவ்யாஸராஜர் போன்ற சிறந்தவர்களின் நட்பு, தொடர்புகள் இருந்தது என்பது ஒரு மகாயோகம் என்றே சொல்ல வேண்டும். அத்தகைய ஆளுமைகளால் ஈர்க்கப்பட்டு இவரும் கன்னட கீர்த்தனைகளை இயற்றியது சரியான விஷயமே ஆகும்.

ஸ்ரீவாதிராஜ தீர்த்தர், கன்னட ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு செய்திருக்கும் சேவையானது, அவர் சம்ஸ்மிருத சாஸ்திர ஸாஹித்யத்திற்கு செய்திருக்கும் சேவையைப் போன்றே மிகச் சிறந்ததாகும். சுயசிந்தனை, சுயபரிசோதனைகளைக் குறித்த சில கிருதிகளில், அவருடைய அந்தரங்கத்தின் சிந்தனை நமக்கு தெரிய வருகிறது. தம் இஷ்ட தேவதையான 'ஹயவதன' என்னும் அங்கிதத்தில் கிருதிகளை இயற்றியிருக்கிறார். அனைத்து வித்யைகளையும் கற்றவராக, பிரதிவாதிகளுக்கு சிம்ம சொப்பனமான விளங்கிய ஸ்ரீவாதிராஜர், வித்யா கர்வத்தை கண்டித்து இவ்வாறு எழுதியுள்ளது மிகவும் ருசிகரமாக உள்ளது.

ஓதுவெனு வித்யெகள ஓதனத பயகெயலி
ஸாது ஷாஸ்த்ரகள மரெது தொரெது
காமதேனு தர்க்கவ்யாகரண பலதிந்த
பீதிபீதியலி சரிஸி அரஸி

என்னும் வெளிப்படையான வாக்குகளை பார்த்தால், அவர் பாண்டித்யத்தின் சிறப்பிற்கு மயங்காமல் எப்படி விழிப்புடன் இருந்தார் என்பதை கவனிக்கலாம். பரமாத்மனை ஒரு மனதுடன் அவர் எப்படி வணங்குகிறார் என்பதை இந்த கீழ்க்கண்ட உகாபோகத்தில் பார்க்கலாம்.

நின்ன த்யானத ஷக்திய கொடோ
அன்யரலி விரக்திய கொடோ
நின்ன நோடுவ யுக்திய கொடோ
நின்ன பாடுவ பக்திய கொடோ
நின்ஹத்தெ பருவ ஸம்பத்திய கொடோ
சித்ததி தத்வத க்ருத்யவ கொடோ
மத்தெ துதியலி எனகெ முக்திய கொடோ
அத்தத்த மாடோ பவ கத்தலெயெனகெ
முத்திதெ ஹயவதன

ஸ்ரீவாதிராஜ தீர்த்தரின் ஆளுமையில் விளங்கும் அனைத்து லட்சணங்களுக்கும் இந்த சிறிய உகாபோகம் நல்ல கைவிளக்காக இருக்கிறது எனலாம். பால சன்யாசிகளான அவருக்கு சிறிய வயதிலிருந்தே பகவத் தியானம் என்பது ஸ்வாபாவிகமாக இருந்து, விரக்தியை அடைவதற்கு சாத்தியமானது. அவருடைய கிருதிகளில் முகுடமாக இருக்கிறது என்று சொல்லக்கூடிய 'யுக்தி

மல்லிகா' வை பார்த்தால், 'நின்ன நோடுவ யுக்திய கொடோ' என்னும் அவருடைய பிரார்த்தனை சரியாக பொருந்துகிறது எனலாம்.

அவர் செய்த பக்தியின் பலனே, அவர் நமக்காக விட்டுச் சென்றிருக்கும் நூற்றுக்கணக்கான கன்னட பாடல்கள். தாமாகவே விருந்தாவன பிரவேசம் செய்தவர் ஆகையால், 'நின்ஹத்தெ பருவ சம்பத்திய கொடோ' என்னும் கோரிக்கையும் நிறைவேறியுள்ளது எனலாம். மாத்வ தத்வத்தை சரியாக நிறுவியவர்களில் ஒருவரான அவரில், தத்வஞான என்பது நிரம்பி வழிந்தது.

ஸ்ரீவாதிராஜர் போன்ற யதிகளுக்கு எதிலும் குறை இருந்ததில்லை. ஆனாலும், அவர் தம் ஒரு கீர்த்தனையில் 'ஸகல ஸாதனவெனகெ கைஸேரிது, முகுதிய மாதிகெ பாரத தனவு' என்று சொல்லியிருக்கிறார். இது மற்றவர்களின் பிரச்னைகளுக்காக அவர் பாடியது என்று சொல்ல வேண்டும். கடைசியில் 'ஓதிதெனு எல்லண்ண கல்லண்ண எனுதலி ஸ்வாத்யாயவு எனகெ பகடெ பஞ்சி, ஸாதிஸித பரிய தனவன்னு கூட்ஹ்யாகி மோதி ஹயவதன நா நின்ன மரெதெ' என்று நொந்து கொண்டிருப்பதை கவனித்தால், இது மற்றவர்களுக்காகவே என்பது சரியாக புரிகிறது.

ஸ்ரீவாதிராஜர், தமது நிரந்தரமான ஸாதனையினால், தம் ஆராத்ய தெய்வமான ஹயக்ரீவ ஸ்வாமியின் பூர்ண அனுக்கிரகத்திற்கு பாத்திரர் ஆகியிருந்தார். தினமும், ஹயக்ரீவ ஸ்வாமி, அவருக்கு தரிசனம் அளித்திருந்தார் என்பதை 'குதுரெ பந்திதெ, செலுவ குதிரெ பந்திதெ, வாதிராஜகெ முததி ஞான பகுதி கொடுவ' என்று மகிழ்ச்சியுடன் பாடியிருக்கும் கீர்த்தனையே சாட்சி எனலாம். இந்த அற்புதமான, தெய்வீகமான குதிரைக்கு, கடிவாளங்கள் இல்லை. இது வெல்லம், கடலை மெல்லும் குதிரை. புல் தின்னும் குதிரை இல்லை. இந்த குதிரையை கண்டாலே, ஸ்ரீவாதிராஜருக்கு பயங்கரமான பாசம். அதன் காட்சி தெரியும்போதே 'ஆவ கடெயிந்த பந்தெ வாஜிவதனனெ' என்று தன்னை மறந்து பாடுவார். அதனுடன் பலவிதமான பேச்சுவார்த்தை நடத்தி, 'ப்ருத்ய வாதிராஜ முனிய ஸலஹெ பந்தெய?' என்று நட்புடன் மகிழ்ச்சி அடைவார்.

ஸ்ரீவாதிராஜர் இயற்றியிருக்கும் ஸ்துதிமாலைகள் ஒன்றைவிட ஒன்று அற்புதமானவை. 'ஆர்யன்ன யோகதுர்யன்ன பஜிஸி, வர்யன்ன மத்வாசார்யன்ன' என்று ஸ்ரீமத்வாசார்யரை வாய் நிறைய கொண்டாடி வணங்கினால், டீகாசார்யர் என்று புகழ் பெற்ற ஸ்ரீஜயதீர்த்தரை 'பளிரெ, நிம்மய குண வர்ணிஸளவெ ஜலதிஸம கம்பீர ஜயதீர்த்தவர்ய' என்று மெச்சி, அவர் ஸாதித்த அனைத்து மஹத் காரியங்களையும் நினைவுபடுத்துகிறார். 'மத்வராயரெம்புது மத்தொந்து ரூபதல்லி இத்து நுடிதந்ததலி ஸித்தாந்தவனு நீ உத்தரிஸி லோகதலி அத்வைத மததவர உத்யோகதிந்த பலு முக்தரனு மாடிதெ' என்னும் நுடியில், ஸ்ரீஜயதீர்த்தரை, ஸ்ரீமத்வாசார்யரே இன்னொரு முறை ரூபம் ஏற்று வந்தாரோ என்பதைப் போல சொல்லியிருப்பது கவனிக்க வேண்டிய விஷயம். மற்ற யதிவர்யரில், ஸ்ரீபாதராஜரையும், ஸ்ரீவ்யாஸராஜரையும், அபாரமான பக்தியினால் வணங்கி, தம் நன்றியினை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

தம் சம காலத்து ஹரிதாஸர்களில், ஸ்ரீவாதிராஜர், பேலூர் ஸ்ரீவைகுண்ட தாஸரைக் குறித்து இயற்றியிருக்கும் இரு கீர்த்தனைகள், அவருடைய பரந்த மனப்பான்மையை காட்டுகிறது. 'தாஸோத்தம நீனே, ஸ்ரீவைகுண்ட தாஸோத்தம நீனே' என்று புகழ்ந்து, அவர் பாலகோபாலனை தரிசனம் பெற்றது, தம் அருகில் வரச்செய்து, துடையின் மேல் அமர்த்தி எப்படி கொஞ்சினார் என்பதை விளக்குகிறார். வேத சாஸ்திரங்களை அறிந்த அத்தகையவரின் எச்சில் கூட பவித்ரம் என்று சொல்லி 'எஞ்சலென்னலிபஹுதெ மனுஜரிதனு அகவன தனஞ்சய ஸுவைகுண்டதாஸர வதனத கணவ' என்று புகழ்கிறார். 'வர வைகுண்ட தாஸோத்தம எனகெ ஹரிய தோரிஸி பரமதன்யன மாடித' என்னும் ஸ்ரீவாதிராஜரின் நுடிகளில் அவருடைய பக்தி மட்டுமல்லாமல், ஸ்ரீவைகுண்ட தாஸரின் ஆளுமையும் கூட தெரிகிறது.

ஸ்ரீவாதிராஜரின் கீர்த்தனை சாம்ராஜ்யம் மிகவும் விஸ்தாரமானது. ஸ்ரீகிருஷ்ணனின் மகிமைகளை விதம்விதமாக விளக்கியிருக்கிறார். 'லோகபரிதனோ ரங்கsனேக பரிதனோ' என்று சொல்வதில், அவர் அந்த ஸ்வாமியை எப்படி பக்தி பாவத்துடன் கண்டிருக்கிறார் என்பதை நாம் அறியலாம். ஸ்ரீவிஷ்ணுவின் தசாவதாரங்களையும் பற்பல விதமக வர்ணித்திருக்கிறார். அனைத்து கீர்த்தனைகளிலும் ஸ்ரீவாதிராஜரின் வாக்விலாஸத்தை நாம் கவனிக்கலாம்.

ஸ்ரீபாதராஜர் மற்றும் ஸ்ரீவ்யாஸராயரைப் போலவே, ஸ்ரீவாதிராஜரும், வெறும் ஆத்ம நிவேதனை பக்தியை வெளிப்படுத்துவதில் திருப்தி அடையாமல், சரளமான நுடிகளில் (மெட்டுகள்), ரகசியமான /ஆழமான சாஸ்திர சங்கதிகளை, அனைவரும் அறிவதற்காக எடுத்திருக்கும் முயற்சி மிகவும் சிறப்பானது. ஸ்ரீமன் நாராயணன், ஸ்ருஷ்டியை செய்து, எப்படி தானே அதன் ஸ்திதி, லயங்களுக்கும் காரணன் ஆகிறான் என்னும் தத்வத்தை மிகவும் சுவாரசியமாக நிரூபித்தார். ஸ்ரீகிருஷ்ணனின் மொத்த வாழ்க்கையையும் தீர்க்கமான ஒரு கிருதியில் பாடி கொண்டாடினார். மக்களுக்கு பிடித்ததான த்ரிபதி நுடியில், சாஸ்திர சம்மதமான பல்வேறு விஷயங்களை மிகவும் அனாயாசமாக பாடினார்.

குண்ட க்ரியெ, ஸ்வப்னபத, ஹரிஸர்வோத்தமஸார, முதலான கிருதிகள், வேதாந்த விஷயங்களையே முழுவதுமாக சொல்கிறது. பீமஸேன பாமினியாதனு - என்று கீசக வதையை பாடினார். இந்த க்ருதியில் ஸ்ரீவாதிராஜரின் கவிதை இயற்றும் திறனை நாம் கவனிக்கலாம். ஸ்ரீவாதிராஜரின் இத்தகைய முயற்சிகளால், ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு ஒரு புதிய மலர்ச்சி உண்டானது என்று சொல்லலாம். அவருக்கு தனக்காக மட்டுமே பயன்பட்டிருந்த ஹரிதாஸ ஸாஹித்யத்தின் சிறப்பு, இப்போது மத்வ ஸித்தாந்தத்தை சாஸ்திர ரீதியாக விளக்கும் வழியாகவும் மாறியது ஒரு அபாரமான விஷயம் ஆகும். சாஸ்திர கிரந்தங்கள், புத்தி ப்ரதானமாக இருந்து, மிகவும் கடினமான நடையை கொண்டிருந்தால், ஸ்ரீவாதிராஜரின் இந்த க்ருதிகள், மிகவும் எளிமையான கன்னடம் மற்றும் சரளமான நடை ஆகியவற்றுடன், அனைவரின் மனதைத் தொடுமாறு இருக்கிறது.

ஸ்ரீவாதிராஜர், தம் க்ருதி ரசனையில் இன்னும் ஒரு படி முன்னேறி, 'வைகுண்ட வர்ணனெ' என்பதான ஸ்வதந்த்ரமான, சாஸ்திர விஷயங்களையே உள்ளடக்கிய க்ருதிகளை இயற்றினார். 'லட்சுமி ஷோபானெ' என்னும் இன்னொரு க்ருதியும், சாஸ்திர மற்றும் ஸாஹித்ய அம்சங்களின் இனிமையான இணைப்பாக இருக்கிறது. ஸ்ரீவாதிராஜர் சொல்லிக் கொடுத்த இந்த சிறப்பான பயன்பாடுகளே, அடுத்து ஸ்ரீவிஜயதாஸர் முதலான மற்ற ஹரிதாஸர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டுதலாக இருந்தது.

முக்கியமாக, ஹரிதாஸ ஸாஹித்யத்தின் இந்த துவக்க காலத்தில், ஸ்ரீபாதராஜர், ஸ்ரீவ்யாஸராஜர் மற்றும் ஸ்ரீவாதிராஜர் ஆகிய மூவரும் மேற்கொண்ட இந்த கீர்த்தன கைங்கர்யம், அடுத்து வந்தவர்களுக்கு மிகச்சிறந்த ஆதாரமாக இருந்தது எனலாம். இந்த யதி த்ரயர்களை, ஹரிதாஸ ஸாஹித்யத்தின் வளர்ச்சிக்கான பாதையில் 'ரத்ன-த்ரயர்' என்றே நாம் அழைக்கலாம்.

ஸ்ரீவாதிராஜர் போற்றிப் பாடியிருக்கும் ஸ்ரீவைகுண்ட தாஸர் (ஆண்டு 1560), இதே காலகட்டத்தில் வாழ்ந்த இன்னொரு சிறந்த ஹரிதாஸர் ஆவார். இவரைப் பற்றிய மேலதிக தகவல்களோ, இவர் இயற்றிய கீர்த்தனைகளோ அதிகமாக நமக்குக் கிடைக்கவில்லை. இவர் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தை சேர்ந்தவர் என்றும், பேலூர் சென்னகேஷவனின் பரம பக்தர் என்பது மட்டும் தெரிய வருகிறது. மற்ற ஹரிதாஸர்களைப் போல, இவர் தீர்த்தக்ஷேத்திர யாத்திரைகளை மேற்கொள்ளாமல், பேலூரின் சென்னகேஷவனின் பரமானுக்கிரகத்தைப் பெற்று, எப்போதும் அங்கேயே ஸ்வாமியின் தியானத்தில் ஈடுபட்டிருந்தார். இவருடைய பக்திக்கு மெச்சிய சென்னகேசவன், இவருடைய இஷ்டார்த்தங்களை நிறைவேற்றினான். இவர் அர்ஜுன அம்சர்

ஆகையால், இவர் விரும்பியதைப் போல, ஸ்ரீகிருஷ்ணன், பாலகோபாலனாகி காட்டிக் கொண்டான், என்று ஸ்ரீவாதிராஜரின் கிருதியிலிருந்து தெரிய வருகிறது.

யதிவரேண்யரான ஸ்ரீவாதிராஜர், தாஸ வரேண்யரான ஸ்ரீவைகுண்ட தாஸரை பார்க்க விரும்பி, பேலூக்கு வந்தபோது ஒரு சுவாரசியமான சம்பவம் நடந்தது என்று, ஸ்ரீவைகுண்ட தாஸர் இயற்றிய ஒரு கீர்த்தனையிலிருந்து தெரிய வருகிறது. ஸ்ரீவைகுண்ட தாஸர், குழந்தை கிருஷ்ணனை தன் துடையில் படுக்க வைத்து கொஞ்சிக் கொண்டிருக்கையில், அங்கே நுழைந்த ஸ்ரீவாதிராஜர், அந்தக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். பின்னர், அந்தக் குழந்தை யார் என்று கேட்க, அதற்கு ஸ்ரீவைகுண்ட தாஸர், 'மகுவு காணய்ய மாயத மகுவு காணய்யா, ஸுகுண வாதிராஜனே மூஜகவ தன்ன உதரதொளிட்ட' குழந்தை என்று ஸ்ரீவாதிராஜருக்கு சொல்லி, ஸ்ரீகிருஷ்ணனின் மொத்த பாலலீலையையும் கீர்த்தனை ரூபத்தில் பாடினார். கடைசி நுடியில்:

ஷ்ருதிககோசரனச்யுதன பாவனாதி மூர்த்தி
ரதிபதிபிதனம் சேஷதேவாராத்யனு
க்ஷிதிகதிக வேலாபுரபதி வைகுண்ட கேஷவனு
யதியெ நீ நோடலு ஷரணாகதன தொடெய மேலே குளித

என்று தம் மனோதர்மத்திற்கு ஏற்ப, அனைத்தையும் விளக்கினார். இத்தகையவரின் தரிசனத்தால் மகிழ்ந்த ஸ்ரீவாதிராஜர், ஸ்ரீவைகுண்ட தாஸரைக் குறித்து இயற்றிய இரு கீர்த்தனைகளும் மிகவும் அற்புதமானவையே ஆகும்.

இதைப் போலவே, 'பண்டனாகி பாகில காயுவெ, வைகுண்ட ஸ்ரீஹரிய தாஸர மனெய' என்று ஸ்ரீகனகதாஸர் இயற்றியிருக்கும் கீர்த்தனை, ஸ்ரீவைகுண்ட தாஸரையே சொல்கிறது எனலாம். ஸ்ரீகனகதாஸர் சில காலம், பேலூரில் தங்கியிருந்தார் என்றும், அப்போது ஸ்ரீவைகுண்ட தாஸரின் சம்பந்தம் ஆகி, அவருடைய சேவையை செய்து கொண்டிருந்தார் என்றும், தாம் அங்கு இருந்த நினைவுக்காக, இந்த கீர்த்தனையை இயற்றினார் என்றும் சொல்கிறார்கள். காலத்தின்படி பார்த்தாலும், இருவரும் சமகாலத்தவரே ஆகையால், ஸ்ரீகனகதாஸரின் நடையிலேயே இந்தப் பாடலும் இருப்பதால், இதனை மேற்கூறியவாறே நம்பலாம்.

ஸ்ரீஅச்யுதவிட்டலதாஸர் என்னும் ஒருவர், ஸ்ரீவைகுண்ட தாஸருக்கு அவமானம் செய்தார் என்றும், அதனால் அவருக்கு கண் பார்வை பறிபோனது என்றும், பிறது, ஸ்ரீவைகுண்டதாஸர், தம் ஸ்வாமியை வேண்டி அவருக்கு அருளினார் என்றும், அச்யுதவிட்டலா என்னும் அங்கிதத்தைக் கொண்ட ஒரு தேவர நாமாவிலிருந்து தெரிய வருகிறது. ஆகமொத்தம், ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தை சேர்ந்த ஒருவர், ஹரிதாஸர் எனப்பட்டு, இவ்வாறு அனைவராலும் போற்றப்பட்டிருந்தார் என்னும் செய்தியே அற்புதமாக இருக்கிறது. அவர் இயற்றிய தேவர நாமாக்கள் மேலும் நமக்குக் கிடைத்தால், அவரைப் பற்றிய மேலதிக தகவல்கள் கிடைக்கலாம்.

ஸ்ரீபாதராஜர் நட்ட ஹரிதாஸ ஸாஹித்யத்தின் விதை, ஸ்ரீவ்யாஸராஜரின் முயற்சிகளால் முளை விட்டு, ஸ்ரீவாதிராஜரின் க்ருபா கடாக்ஷத்தினால் பல கிளைகளை விட்டு வளரும் நேரத்தில், சரியாக, ஸ்ரீபுரந்தரதாஸர் மற்றும் ஸ்ரீகனகதாஸர் போன்றவர்களான மஹனீயர்களின் நுழைவும் இருந்தது. விஜய நகரத்தில் ரத்ன வியாபாரியாக இருந்த ஸ்ரீனிவாஸா நாயகர், ஸ்ரீவ்யாஸராஜரிடமிருந்து அங்கிதம் பெற்று, ஸ்ரீபுரந்தரதாஸர் என்று புகழ் பெற்றது அனைவரும் அறிந்ததே. ஸ்ரீபுரந்தரதாஸரின் (ஆண்டு 1484-1564) முந்தைய வாழ்க்கை விவரங்கள், அவரது கீர்த்தனைகள் மூலமே தெரிய வருகின்றன. அவருடைய மனைவி மூலமாகவே அவருக்கு ஞானோதயம் ஆயிற்று என்பதில் சந்தேகமே இல்லை 'ஆதத்தெல்லா ஒளிதே ஆயித்து. நம்ம ஸ்ரீதரன ஸேவெ மாடலு ஸாதன ஸம்பத்தாயித்து' என்று பாடி, தம் கர்வம், மமகாரம் ஆகியவற்றை விலக்கி, தம் மனதினை, வைராக்கியத்தின்பால் நகர்த்திய மனைவியை வாய் நிறைய கொண்டாடியிருப்பதே இதற்கு சாட்சி. மேலும் 'வ்யாபார நமகாயிது, ஸ்ரீபதி பாதாரவிந்த

சேவெயெம்ப வ்யாபார நமகாயிது' என்று இன்னொரு கீர்த்தனையில், தாம் முன்னர் லௌகிகமாக வ்யாபாரங்களை செய்து வந்ததையும், தற்போது, பரமாத்மனின் பரமபக்தராகி, செய்து கொண்டிருக்கும் கீர்த்தனைகள் இயற்றுவது போன்றதான செயலுக்கும் உள்ள ஒப்பீடுகளை தாமே செய்கிறார்.

அவருடைய இந்த ஹரிபக்தி ஸாதனையின் ஒவ்வொரு கட்டங்களையும், அவர் இயற்றியிருக்கும் கீர்த்தனை, உகாபோகங்களில் நாம் விசேஷமாக காணலாம். மேலே பார்த்த யதித்ரயர்கள் போட்ட பாதையானது, ஸ்ரீபுரந்தரதாஸருக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது. அந்தப் பாதையிலேயே சென்ற அவர், தம் மிகச்சிறந்த பக்தியினால் ஹரிதாஸ ஸாஹித்ய ப்ரபஞ்சத்தின் முகுடமணியாக திகழ்ந்தார்.

ஸ்ரீபுரந்தரதாஸரின் இதயத்தில் தோன்றிய கருத்துக்கள், அவருடைய திளிகன்னட (எளிமையான கன்னடத்தில்) நுடிகளில் எப்படி வெளிவந்தன என்பதை ஒன்றிரண்டு உதாரணங்களைக் கொண்டு இங்கே பார்க்கலாம். ஸ்ரீபுரந்தரதாஸர் தம் மனமாற்றம் ஆன அடுத்த நொடியிலேயே, தம் அனைத்து செல்வங்களையும், 'ஸ்ரீகிருஷ்ணார்ப்பண' என்று அர்ப்பணம் செய்து, விரக்தர் ஆனாலும், அவருடைய அந்தரங்கத்தின் அர்ப்பணமோ அவ்வளவு சுலபமாக இல்லை.

மனெயெம்ப ஆஸெயு என்ன முந்துகெடிஸுதிதெ
மனெவாருதியு என்ன பங்கபடிஸுதிதெ
ஸுதராஸெயு என்ன தைன்யபடிஸுதிதெ
இனிதாஸெயுளிது புத்தி நின்னல்லி நிலுவந்தெ
மாடோ ஸ்ரீபுரந்தர விட்டலா

என்று தம் மனதினை தாமே ஆராய்ந்து, அதற்காக, வருந்தி, புலம்பி, பரமாத்மனை முறையிடுகிறார். அவனுடைய அருள் கிடைக்க தாமதம் ஆகையில் 'ஆரு பதுகிதரய்யா ஹரி நின்ன நம்பி, தோரு ஈ ஜகதொளகெ ஒப்பரனு காணே' என்று கெட்டியாக இடிக்கிறார். பக்தனின் இந்த வேண்டுகோளை தாங்காமல், பகவந்தன் அவனுக்கு தன் தரிசனத்தை அளிக்க, அப்போது ஸ்ரீதாஸர் மகிழ்ந்து 'பதுகிதெனு, பதுகிதெனு பவ ஹிங்கிது. பதுமனாபன பாததொலுமெ எனகாய்து' என்று பாடுகிறார்.

நம்பி கெட்டவரில்லவோ ரங்கய்யான, நம்பதெ கெட்டரே கெடலி' என்று முன்னர் பாடியதை மாற்றி பாடினார். இவ்வாறாக, ஸ்ரீபுரந்தரதாஸரின் வாழ்க்கை, பரிபக்குவமாகி, அவருடைய ஹரிதாஸ கைங்கர்யம் சார்த்தகம் ஆயிற்று. ஆத்மஷுத்தி, ஆத்ம உத்தாரங்களை அடைந்த ஸ்ரீதாஸர், லோக கல்யாணத்திற்காக ஆயிரக்கணக்கான கீர்த்தனைகளை இயற்றினார். மத்வ மதத்தின் அருமை பெருமைகளை மட்டுமல்லாமல், வேத உபநிஷத், ராமாயண, மஹாபாரத, ஸ்ரீமத் பாகவதங்களின் ஸாரங்கள் அனைத்தையும் மக்களுக்கு தெளிவான கன்னடத்தில், மிகவும் எளிமையாக போதித்தார்.

ஸ்ரீபுரந்தரதாஸரின் பார்வை, வெறும் தர்மபோதனைக்கு மட்டுமே என்று இல்லாமல், ஸாத்விக ஜீவனத்தின் நடைமுறைகளையெல்லாம் விளக்கி, மனித சமுதாயத்திற்கு அவை எப்படி பொருந்தும் என்பதை, பல்வேறு கீர்த்தனைகள் மூலம் விளக்கினார். இவ்வாறாக அவரது கீர்த்தனைகள், ஹரிதாஸ ஸாஹித்யத்தின் சிறப்பினை மேலும் பல்வேறு இடங்களுக்கு பரப்பியது. ஸ்ரீபுரந்தரதாஸருக்கு அங்கிதத்தை கொடுத்த ஸ்ரீவ்யாஸராஜருக்கும், அவரது இந்த கீர்த்தனை செல்வங்களைப் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சி உண்டாக 'தாஸரெந்தரெ புரந்தரதாஸரய்யா' என்று அவருடைய ஆளுமையை மெச்சி கொண்டாடினார். ஸ்ரீதாஸரின் க்ருதி தொகுப்பினை 'புரந்தரோபனிஷத்' என்று கௌரவித்தார். கர்னாடக சங்கீதத்தின் அத்யயனத்திற்கு, ஸ்ரீபுரந்தரதாஸர் காட்டியிருக்கும் வழியும்கூட மிகவும் முக்கியமானதாகும். மொத்தத்தில் ஹரிதாஸர்களில் ஸ்ரீபுரந்தரதாஸர் மிகவும் முக்கியமானவர் எனப்பட்டார்.

அவருடைய கீர்த்தனைகள், தர்ம, ஸாஹித்ய மற்றும் ஸங்கீதங்களின் த்ரிவேணி சங்கமம் என்று அழைக்கப்பட்டு அனைவராலும் மிகவும் பிரியத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஸ்ரீபுரந்தரதாஸரின் திவ்ய ப்ரபையில் அவருடைய சமகாலத்தவராக இருந்த மற்ற சில ஹரிதாஸர்களின் பெயர்களே மறைந்துவிட, ஸ்ரீவ்யாஸராஜரின் அருளைப் பெற்றவரான ஸ்ரீகனகதாஸரின் பெயர் மட்டும் மறைந்துவிடாமல் இன்று வரை வந்திருக்கிறது. ஆனால், இவர்கள் இருவரிலும் நாம் பார்க்கும் ஒரு வித்தியாசம் என்னவென்றால், ஸ்ரீகனகதாஸர் வெறும் கீர்த்தனைகளை இயற்றுபவராக இருக்காமல், ஒரு கவிஞர் என்று அழைக்கப்படும் முக்கிய இடத்தை பெற்றிருக்கிறார். கீர்த்தனைகளை மட்டுமே கவனித்தால், எண்ணிக்கையில் ஸ்ரீபுரந்தரதாஸருடையதே அதிகமாக இருக்கிறது. ஸ்ரீபுரந்தரதாஸரில் தெரியும் விஷய ஞான, பார்வை, சிறப்புகளை, ஸ்ரீகனகதாஸரின் கீர்த்தனைகளில் நாம் பார்க்க முடிவதில்லை. ஆனால், ஸ்ரீகனகதாஸரின் கீர்த்தனைகளில் நாம் பார்க்கும் துணிச்சல் / தைரியம், அவருடைய நடையில் நமக்குத் தெரியும் கூர்மை / தீவிரம், அவர் இயற்றியிருக்கும் முண்டிகைகளில் நாம் பார்க்கும் ஆழமான அர்த்தங்கள் ஆகிய குணங்கள், ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு சிறப்பான ஒரு இடத்தை அளிக்கிறது. இத்தகைய ஹரிதாஸ ஸ்ரேஷ்டரின் வாழ்க்கையும்கூட நாம் அறிய வேண்டியதாகும்.

தார்வாட ஜில்லாவில் இருக்கும் காகினெலெ என்னும் இடத்தில், ஸ்ரீகனகதாஸர் (1508-1606), ஒரு வசதியான குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தார். இவருடைய தந்தை அந்த காலத்தில் அரசனிடம் போர்வீரராக வேலை பார்த்து வந்தார். இவருக்கு பல காலம் குழந்தைகளே இல்லாததால், குல தெய்வமான திருப்பதி திம்மப்பனை வேண்டினர். ஸ்வாமியின் அருளால் பின்னர் ஒரு ஆண் குழந்தை பிறக்க, அதற்கு திம்மப்பா என்றே பெயர் வைத்தனர். தந்தையைப் போலவே மகனும், மிகவும் தைரியத்துடன் வளர்ந்தார். சில நாட்களில் தந்தை இறந்துவிட, மகன் திம்மப்பா தந்தையின் வேலையை ஏற்றார். தெய்வ அருளால், திம்மப்பனுக்கு ஒரு புதையல் கிடைக்க, அதில் இருந்த தங்க நாணயங்களைக் கொண்டு, தம் ஊரின் கேசவ தேவாலயத்தின் ஜீர்ணோத்தாரத்தினை செய்தார். இதனால் மக்களின் அபிமானத்தைப் பெற்றார்.

இதற்கு நடுவில், திம்மப்பனின் கனவில், திருப்பதி ஸ்ரீனிவாஸன் தோன்றி, தன் சேவைக்காக சங்கல்பம் செய்யுமாறு கூறினான். வேலையில் கவனத்துடன் இருந்த திம்மப்பா, அந்த கனவினை பொருட்படுத்தவில்லை. பின்னர் ஒரு நாள் நடந்த போரில், திம்மப்பன் அடிபட்டி, மயக்கமடைந்து, கீழே விழுந்து கிடந்தார். அப்போது அங்கு ஸ்வாமியே வந்து அவருக்கு உதவியாக அனுபவம் கிடைத்தது. உடனே திம்மப்பாவிற்கு, தைஹிக பலத்தைவிட, தெய்வ பலமே சிறந்தது என்று தோன்றி, உடனே அனைத்தையும் துறந்து, பரம விரக்தர் ஆனார்.

ஸ்ரீகனகதாஸர், பிறப்பில், குருபரா அல்லது வேட்டைக்காரரா என்னும் ஆராய்ச்சி இன்றும் ஆராய்ச்சியாளர்களால் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், ஒரு பிரதேசத்தின் அதிகாரியாக, ராஜனின் சார்பில் போர் புரிந்த சந்தர்ப்பத்தை கண்டால், அவர் போர்வீரராக இருந்தார் என்பதும், அதன் பின், ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தை சேர்ந்தவராக இருண்டஹர் என்றும் தெரிகிறது. கனகதாஸர் தம் 'மோஹன தரங்கிணி' யில் ஸ்ரீராமானுஜாசார்யர் மற்றும் ஸ்ரீதாதாசார்யரை கொண்டாடியிருப்பதே இதற்கு ஆதாரம் ஆகும். கீர்த்தனை ஒன்றில், தமது சமகாலத்தவரான, தாதாசார்யரை, போற்றிப் பாடியிருக்கும் உதாரணம் இருக்கிறது.

திம்மப்ப நாயகர், விரக்தரான சில காலத்திலேயே, வைஷ்ணவ யதிகளான ஸ்ரீவ்யாஸராஜரின் அருளுக்கு பாத்திரர் ஆனது எதுவும் அதிசயமில்லை. சம்ஸ்கார பலத்தினால் ஹரிபக்தராக இருந்த திம்மப்ப நாயகருக்கு, புதையல் பணம் கிடைத்ததிலிருந்து, மக்கள் அவரை கனகப்ப என்று அழைத்து வந்தனர். அவர் ஸ்ரீவ்யாஸராஜரின் அருளைப் பெற்று, ஹரிதாஸரின் கூடத்தில் சேர்ந்தபின், கனகதாஸ என்னும் பெயர் வந்தது. ஸ்ரீகனகதாஸர் பரமஞானி என்பதையும், இதனை ஸ்ரீவ்யாஸராஜர் தமது சிஷ்யர்களுக்கு பல்வேறு விதங்களாக விளக்கினார் என்பதாக பல

கதைகள் உள்ளன. ஸ்ரீகனகதாஸரின் சமகாலத்தவரான ஸ்ரீபுரந்தரதாஸர், தமது ஒரு கீர்த்தனையில் 'கனகதாஸன மேலே தயமாடலு வ்யாஸமுனி மடதவரெல்ல தூரிகொம்புவரோ' என்று பாடியிருப்பதே இதற்கு சாட்சியாகும். இந்த கீர்த்தனையில் சொல்லப்பட்டிருக்கும், வாழைப்பழ சம்பவம், மிகவும் ஆழமான அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது. 'இவகெ நாடெல்ல ஹுடுகிதரு ஈடார காணெ' என்று ஸ்ரீவ்யாஸராஜர் புகழ்ந்திருப்பதும் நாம் பார்க்கிறோம்.

ஸ்ரீகனகதாஸர், தமது கீர்த்தனைகளில், பாடதாதி கேசவ / காகினெலெ ஆதிகேசவ என்னும் அங்கிதங்களை பயன்படுத்தியிருப்பதை பார்த்தால், அவர் ஸ்ரீபுரந்தரதாஸரைப் போல, ஸ்ரீவ்யாஸராஜரிடமிருந்து எந்த அங்கிதத்தையும் பெறாமல், தம் ஆத்யாத்ம தேவதையின் பெயரையே வைத்துக் கொண்டார் என்று தெரிகிறது. எண்ணிக்கையில் அதிகமான கீர்த்தனைகளை ஸ்ரீகனகதாஸர் இயற்றியிருக்கா விட்டாலும், அவரது மனோதர்மத்தை புரிந்துகொள்வதற்கு தக்கதான கிருதிகளை அவர் இயற்றியிருக்கிறார்.

பிறப்பால் வைதிக தர்மத்தை சேராத அவரை, மக்கள் பல்வேறு பிரச்னைக்கு உள்ளாக்கியிருக்க வேண்டும். ஆகவே, குலத்தைப் பற்றி கேள்வி வரும்போது, அவருடைய மனம் மிகவும் சஞ்சலப்படுகிறது. 'குலகுலகுலவெந்து ஹொடெதாடதிரி நிம்ம குலத நெலெயனேனாதரு பல்லிரா' என்று பலமாகக் கேட்டு, 'ஜலவே ஸகல குலக்கெ தாயியல்லதெ, ஆ ஜலத குலவனேனாதரு பல்லிரா' என்று கேட்கிறார். 'ஹரியே ஸர்வோத்தம, ஹரியே ஸர்வேஷ்வர, ஹரிமயவெல்லவெனுத திளிது ஸிரிகாகினெலெ ஆதிகேசவ ராயன சரண கமலவனு கீர்த்திஸுவவனெ குலஜ' என்று தெளிவுபடுத்துகிறார்.

ஸ்ரீகனகதாஸர் ஸ்வபாவத: மிகவும் தைரியமானவர். 'அஹுதாதரஹுதென்னி அல்லவாதரல்லவென்னி பஹுஜனரு நெரெ திளி பேளி மத்திதனு' என்னும் கீர்த்தனையில் மனிதர்களின் அவகுணங்களை ஒரு பட்டியலாக கொடுத்திருக்கிறார்.

ஸ்ரீகனகதாஸரின் கீர்த்தனைகளில் அவரது கோபம் / துணிவு தெரிந்தாலும், அவரது இதயம் மிகவும் அமைதியானது / தூய்மையானது என்பதை பார்க்கிறோம். ஏனெனில், தாம் பின்பற்றும் ஹரிதாஸ வ்ருத்தியில் அவருக்கு அபாரமான கௌரவம் இருக்கிறது. 'தாஸதாஸர மனெய தாஸானுதாஸ நானு' என்று மிகவும் பணிவுடன் சொல்கிறார். 'தாஸனாகு பவ பாஷ நீகு விசேஷனாகு' என்னும் கீர்த்தனையில், தாஸ்யத்தின் பெருமையை தூக்கிப் பிடிக்கிறார். 'பண்டனாகி பாகில காயுவெ - ஹரி வைகுண்ட தாஸர மனெய' என்னும் கீர்த்தனையை பார்த்தால், அதுவே அவரது ஸ்வபாவம் எனலாம். 'தனு நின்னது ஜீவன நின்னது ரங்க அனுதினதலி பாஹ்ய ஸுக துக்க நின்னதய்யா' என்று ஸர்வ அர்ப்பண பாவத்துடன் ஸ்வாமியில் வேண்டிக் கொண்டு 'ந்யாயதி கனகனொடெய ஆதிகேஷவராய நீனல்லதெ நரரு ஸ்வதந்த்ரரெ' என்று தம்முடைய பராதீனத்வத்தை சொல்கிறார்.

ஸ்ரீகனகதாஸர் துவக்கத்தில் மிகவும் கஷ்டப்பட்டு பின்னர் வெற்றியாளர் ஆனதால், அவர், 'தல்லணிஸதிரு கண்ட்யா தாஸு மனவே, எல்லரனு ஸலஹுவனு இதக்கெ ஸம்ஷயவில்லா' என்று அனைவருக்கும் நல்வார்த்தையை சொல்கிறார். சேதனாசேதன வஸ்துக்கள் அனைத்தும் பரமாத்மனின் அருளால் பிறந்து, வாழ்ந்து கொண்டிருப்பதை சொல்லி, நமக்கும் ஒரு நம்பிக்கையை ஊட்டுகிறார்.

ஸ்ரீகனகதாஸரின் முண்டிகைகளோ, அவருடைய ஞானத்தின் உச்சத்தையே காட்டுகின்றன. ஸ்ரீபுரந்தரதாஸர், பகவந்தனின் அருளால் எப்படி ஒரு உன்னத சிறந்த இடத்தை பிடித்தாரோ, அப்படியே, ஸ்ரீகனகதாஸர் கூட, தம் புரட்சி மற்றும் துணிவான வார்த்தைகளால் ஒரு சிறந்த ஆளுமையாக இருக்கிறார். இங்கு அவருடைய கீர்த்தனைகளில் சிலவற்றையே

பார்த்திருக்கிறோம். இவற்றைப் போலவே, அவரது காவியங்களும் மிகவும் சிறப்பானவை மற்றும் ஆழமான அர்த்தங்கள் நிரம்பியவை.

ஹரிதாஸ ஸாஹித்யத்தின் பொற்காலத்தை மொத்தமாக பார்த்தால், அதில் வரும் ஹரிதாஸர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஸ்ரீபாதராஜர், ஸ்ரீவ்யாஸராஜர், ஸ்ரீவாதிராஜர் என்னும் மூவரும், மூன்று ரத்தினங்களைப் போல, இந்த பத்ததிக்கு பலமான அஸ்திவாரத்தினை போட்டிருக்கிறார்கள் எனலாம். பிறகு, பகவத் பக்தரான, பேலூர் ஸ்ரீவைகுண்ட தாஸர் அவருடைய பெயர் மட்டுமே தெரிய வருகிறதே தவிர, அவருடைய கிருதிகள் வெகு சிலது மட்டுமே கிடைத்திருக்கின்றன.
இந்த பொற்காலத்தின் கருவூலத்தை ஒளியூட்டிய புகழ் அனைத்தும் ஸ்ரீபுரந்தரதாஸருக்கே சேர்கிறது. இதன் பிறகு, இந்த யுகத்தின் (பொற்காலத்தின்) இன்னொரு பெருமை மிக்க குரல், ஸ்ரீகனகதாஸருக்கு. ஸ்ரீபாதராஜர் மற்றும் ஸ்ரீவ்யாஸராஜரின் கிருதிகளில், அவர்களது அந்தரங்க ஆசை, விருப்பம் மற்றும் நோக்கங்கள் ஆகியவையே விசேஷமாக வந்திருந்தால், ஸ்ரீவாதிராஜர், இந்த கீர்த்தன ஊடகத்தினை, சாஸ்திர விஷயங்களை எளிமையாக கூறுவதற்காக பயன்படுத்தியது என்பது மிகப்பெரிய ஸாதனை என்று சொல்ல வேண்டும்.

ஹரிதாஸ ஸாஹித்யத்தின் துவக்க காலத்திலேயே, அதன் இரு முகங்களையும் நாம் பார்க்கிறோம். அந்தந்த ஹரிதாஸர்களின் இதய அனுபவத்தின் வெளிப்பாடுகளே அதிகமாக வந்து கொண்டிருந்தாலும்; ஸ்ரீமத்வாசார்யரும் அவருடைய பரம்பரையினரும் தத்தம் கிரந்தங்களில் நிர்ணயம் செய்த, சாஸ்திர ஞானத்தின் விஷயம், இந்த சமயத்திலேயே வெளிவரத் துவங்கியது என்பது மிகவும் அற்புதமான விஷயம் ஆகும். ஸாஹித்ய மற்றும் சாஸ்திரங்கள் இரண்டும் ஒன்றுக்கொன்று சேர்ந்து கொண்டு, அனைவருக்கும் பிடித்தமாக இருந்து, இரண்டுமே வளர்ந்து வந்தது என்பது மிகவும் புகழப்பட வேண்டிய விஷயம் ஆகும்.

***

3. புனருஜ்ஜீவன யுகம்

விஜயநகர சாம்ராஜ்யத்தின் வளர்ச்சியின் காலத்தில் ஹரிதாஸ ஸாஹித்யம் எப்படி வளர்ந்ததோ, அதைப்போலவே சாம்ராஜ்யம் அழிந்த காலத்தில் இதன் வளர்ச்சியும் குறைந்து கொண்டே வந்தது. விஜய நகர அரண்மனையில் இருந்த எவ்வளவோ கலைஞர்கள், வித்வாம்சர்கள் அங்கிருந்து புறப்பட்டு தமிழ் நாட்டின் தஞ்சாவூர் நாயக்கரின் ஆதரவு தேடி வந்தனர். அங்கேயே முசல்மானின் ஆட்சியில் சிக்கிய இந்துக்கள், தங்கள் வாழ்க்கையை மிகவும் கஷ்டத்துடன் வாழ்ந்து வந்தனர்.

இந்த சமயத்தில் பிஜாபுரத்தின் அதில்ஷாஹி அவரின் நம்பிக்கைக்குப் பாத்திரரான மஹிபதி ராயர் என்பவர் (1611-1681AD), தர்மங்களை பின்பற்றியவராக இருந்து, பல்வேறு மொழிகளில் விற்பன்னராக இருந்ததால், சுல்தானின் மதிப்பைப் பெற்றிருந்தார். இவரது வாழ்க்கையில் மிகவும் ஆச்சரியமான விஷயம் ஒன்று நடந்தது. பாஸ்கர ஸ்வாமி என்பவரால் இவருக்கு தமது வேலை முதலானவற்றில் வைராக்கியம் பிறந்து, அவரது அருளால் பகவந்தனின் ஆராதனைகளை செய்யத் துவங்கினார்.

அவரும் அவரது மகனான கிருஷ்ணராயர் என்பவரும் முந்தைய ஹரிதாஸர்களைப் போலவே பல்வேறு கீர்த்தனைகளை இயற்றினர். மிகவும் அற்புத ஆளுமை கொண்டவராகவும், அபரோக்ஷ ஞானியாகவும் இருந்த மஹிபதிதாஸர், தமது யோகானுபவங்களை தமது கீர்த்தனைகளில் மேலோட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

இவர் மிகச் சிறந்ததான, மாத்வ சம்பிரதாயத்தை பின்பற்றக்கூடிய வீட்டில் பிறந்து, உத்தராதி மடத்தை சேர்ந்தவர்களாக இருந்ததால், முந்தைய ஹரிதாஸர்களின் வழியிலேயே நடந்து பல்வேறு கீர்த்தனைகளை இயற்றினார். கன்னடத்தில் மட்டுமல்லாமல், இந்தி, பார்ஸி, மராத்தி முதலான பிற மொழிகளிலும் கிருதிகளை இயற்றினார்.

இவரது மகனான கிருஷ்ணராயரோ, தமது ஒரு கீர்த்தனையில் ஸ்ரீமத்வரின் சிஷ்ய பரம்பரை, உத்தராதி மடத்து யதிபரம்பரை மற்றும் ஹரிதாஸ ஸாஹித்யத்தின் ஆளுமைகளை மனப்பூர்வமாக வணங்கி

னெனெது நமிஸுவெ நானு வாரம் வாரம்,
நெனெது நமிஸுவெ நானனுதின
ஹரிபதவனஜ மதுபராத அனுபவ ஷரணர

என்று தம் நன்றியை சொல்லியிருக்கிறார்.

மஹிபதி தாஸரின் கீர்த்தனைகளிலும் த்வைத தத்வமே பிராதனமாக கண்டு வந்தாலும், அவர் ஏகாந்த பக்தராகி, தமது யோகானுஸந்தானத்தினால் பெற்றார் என்பதை நாம் காணலாம். இந்த மஹனீயர், அவதூதரான பாஸ்கர ஸ்வாமிகளிடமிருந்து தீக்ஷை பெற்று, தமது சாதனைகளை செய்து, ஹரிதாஸராக இருந்து, பிறகு யோகிகளைப் போல வாழ்ந்ததால், அவரது அபரோக் ஷத்திற்கேற்ப அவரது பக்தர்கள் காகண்டிகியையில் அவருக்கு ஒரு வ்ருந்தாவனத்தை கட்டினர். இதை இன்றைக்கும் நாம் காணலாம். தந்தையைப் போலவே மகனுக்கும், அங்கேயே வ்ருந்தாவனத்தை கட்டியிருக்கின்றனர்.

ஹரிதாஸ ஸாஹித்யமே குறைந்து வந்த 15ம் நூற்றாண்டில், இந்த தந்தை - மகனின் பங்களிப்பை நம்மால் ஒதுக்கிவிட முடியாது. ஆனால், அவரது கீர்த்தனைகளின் வகையில் இருந்த வேறுபாடுகளை ஒப்புக்கொள்ள முடியாததாலோ, அல்லது அவரது கீர்த்தனைகள்

அதிகமாக வெளியில் வராமல் இருந்த காரணத்தாலோ என்னவோ, ஹரிதாஸ பரம்பரையில் சம்பிரதாயமாக இவரது பெயரை சொல்வது வழக்கம் இல்லாமல் போயிற்று.

மஹிபதி தாஸர் வாழ்ந்திருந்த காலத்திலேயே அவர் மேல் மக்கள் ஆட்சேபம் கொண்டிருந்தனர் என்பதை அவரது கிருதியான 'த்வைத அத்வைதவெந்து ஹொடெதாடதிரோ ப்ராணி, சேதிஸி ப்யாரிஹ வஸ்துகாணி' ஒன்றே சாட்சி. இந்த வேறுபாட்டின் ரகசியங்களை 'குரு மத்வமுனி பல்ல', அதை 'அர்துஸ்தாபிஸுவுது மனுஜகல்ல' என்று பதில் அளித்ததில் அவருக்கு ஆசார்யரில் இருக்கும் பக்தி நிஷ்டையை காணமுடியும்.

மஹிபதி தாஸரின் குருபக்தி அளவிடமுடியாதது. ஹரிஸர்வோத்தமத்வ, பகவந்தனின் தசாவதார லீலை, ஸ்ரீமத்வாசார்யரின் அவதார த்ரயங்கள் என அவர் பாடியிருப்பதை கவனிக்க வேண்டும். இவை அனைத்தையும்விட, தமது யோகானுஸந்தானத்தால் அவர் பெற்ற அபரோக்ஷானுபவம் மிகவும் அற்புதமானது. இந்த திவ்யானுபவத்தை அவர் 'ஸ்வானந்த' என்று சொல்லி, அதன் மூலம் தமக்கான ஆனந்தத்தை மேலோட்டமாக விவரித்துள்ளார்.

அவரது கீர்த்தனைகளில் நாம் பார்க்கக்கூடிய அத்வைதம் குறித்தான கருத்துகள் மேலோட்டமாகப் பார்த்தால் அவர் அத்வைதத்தை விளக்கியிருக்கிறாரோ என்று நினைத்தால், அதுவும்கூட த்வைத தத்வத்திற்கு எதிராக இல்லை என்று K.T.பாண்டுரங்கி அவர்கள், தமது 'மஹிபதி தாஸரின் கிருதிகளில் ஆத்யாத்மிக த்ருஷ்டி' என்னும் கிரந்தத்தில் மிகவும் அற்புதமாக விளக்கியிருக்கிறார்.

ஸ்ரீமத்வரின் தத்வ விசாரங்கள் இவரது பற்பல கிருதிகளில் அப்படியே வெளிப்பட்டிருக்கின்றன. அவரின் வம்சத்தவரின் கீர்த்தனைகள் மற்றும் பஜனா பரம்பரையும் இதையே நிரூபிக்கின்றன என்னும் பாண்டுரங்கி அவர்களின் கருத்துக்களை, பாரபட்சம் இல்லாத எந்தவொரு மாத்வர் ஆனாலும் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். ஹரிதாஸ ஸாஹித்யத்தின் வரலாற்றினை பார்த்தால், மஹிபதி தாஸரின் மற்றும் கிருஷ்ணராயரின் கிருதிகள், இந்த சம்பிரதாயத்தின் ஒரு பாலத்தைப் போல இருந்து என்றும் அது மிகவும் ரகசியமாக ஓடிக்கொண்டிருந்தது எனலாம்.

விஜய நகர சாம்ராஜ்யம் விழுந்தபிறகு, அந்த அரசவையில் இருந்த பல்வேறு பண்டிதர்கள், வித்வாம்சர்கள் தமிழ் நாட்டின் தஞ்சாவூர் அரசனின் ஆதரவைத் தேடி போகவேண்டியிருந்தது. அத்தகைய ஒரு வித்வத் நிறைந்த வீட்டில் பிறந்த வெங்கடபட்ட என்பவர், வீணைக் கலையில் சிறந்தவரான திம்மண்ண பட்டரின் இரண்டாம் மகன். தந்தையைப் போலவே வெங்கடபட்டனும் வீணை வாசிப்பதில் விற்பன்னராக இருந்தார். கூடவே வேதாந்த கல்வியிலும் சிறந்து விளங்கினார்.

ஸ்ரீசுதீந்திர தீர்த்தர் தமது குருகளான விஜயீந்திர தீர்த்த ஸ்வாமிகளின் ஆராதனையை கும்பகோணத்தில் நடத்தி வந்த சுமுஹூர்த்தத்தில், அவரது பார்வை இந்த வீணை வெங்கடபட்டரின் மேல் விழுந்தது. ஸ்ரீபாதங்களவரின் அருளால் வெங்கடபட்டன், சன்யாச ஆசிரமத்தை ஏற்றுக்கொண்டு ஸ்ரீராகவேந்திர தீர்த்தர் என்னும் (1596-1671) ஆசிரம பெயரால் புகழ் பெற்றார்.

ஸ்ரீசுதீந்திர தீர்த்தருக்குப் பிறகு, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் தமது மடத்தின் பொறுப்பினை ஏற்றார். அந்த காலத்தில் ஆதவானியின் நவாபின் திவானாக இருந்த வெங்கண்ண என்னும் பக்தனின் மூலம் இன்றைய மந்திராலயம் என்னும் இடத்தை தானமாகப் பெற்று, தமது ஆத்யாத்மிக ஜீவனத்தில் அபூர்வமான சித்தியைப் பெற்றார். அவரின் மந்திர சக்தியினால், அவரது சமகாலத்திலேயே அனைத்து மக்களுக்கும் வேண்டப்பட்டவர் ஆனார்.

ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் பாண்டித்யம் அவரது சாஸ்திர கிரந்தங்களை இயற்றுவதற்கு உதவியாக இருந்தாலும், ஸ்ரீகிருஷ்ணனின் அருளுக்காக அவர் இயற்றிய 'இந்து எனகெ கோவிந்தா நின்னய பாதாரவிந்தவ தோரோ முகுந்தனெ' என்னும் ஒரே ஒரு கிருதி, அந்த காலகட்டத்தில் தடைபட்டிருந்த ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு புத்துயிர் கொடுத்தது போலாயிற்று எனலாம்.

ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளுக்கு சமகாலத்தவராகவே, பிஜாபுரில் மஹிபதிதாஸர் மற்றும் கிருஷ்ண ராயர் இருந்தாலும், அவர்களது கவனம் இவரின் பக்கம் வராதிருந்தது சிந்தனைக்குரிய விஷயம். ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் தாம் மடத்து பீடாதிபதியாக இருந்த காலத்தில், உலக மக்களின் நலனுக்காக செயல்களை செய்தாரோ அதைவிட அதிகமாக தாம் பிருந்தாவனஸ்தர் ஆனபிறகு தமது தெய்விக சக்தியினால் பக்தர்களுக்கு மிகப்பெரிய உதவிகளை செய்து வருகிறார் என்பதை அவரது ஜீவன சரித்திரத்தின் மூலம் நாம் அறியலாம்.

ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் பிருந்தாவன பிரதிஷ்டை செய்து, கன்னட நாட்டின் பல பாகங்களில், தெய்விக, தார்மிக காரியங்கள் மறுபடி உயிர்பெற்றன எனலாம். இந்த காலகட்டத்திலேயே, விஜயதாஸர் போன்ற ஹரிதாஸர்கள் ஹரிதாஸ ஸாஹித்யத்தை மறுபடி உயிர்பிழைக்கச் செய்து அதனை தொடர்ச்சியாக வளருமாறு செய்தனர் என்பதையும் காண்கிறோம்.

ராய்ச்சூர் ஜில்லா சிகலபரவியில் பிறந்து வளர்ந்த விஜயதாஸரின் (1682-1755) ஆரம்ப கால வாழ்க்கை மிகவும் ஏழ்மையாக இருந்தது. அந்த ஏழ்மையின் தாக்கத்தை தாங்க முடியாமல் அவர் காசிக்குச் சென்று வசிக்கலானார். ஆனால், வீட்டின் மேல் இருந்த பாசம் அவரை மறுபடி ஊருக்கே வரச் செய்தது. அப்போது அவருக்கு திருமணமும் நடந்தது. சில காலங்களுக்குப் பிறகு அவரது மனம் மறுபடி அலைபாய, அவர் முன்பு தாம் இருந்த வியாஸகாசிக்குத் திரும்பினார்.

அப்போது அவருக்கு கனவில் புரந்தரதாஸர் தரிசனம் அளித்து 'விஜய விட்டலா' என்னும் அங்கிதத்தைக் கொடுத்து அருளினார். கூஸி மக தாஸ என்று அனைவராலும் கேலி செய்யப்பட்ட அவர், அன்றிலிருந்து விஜயதாஸர் என்னும் பெயரால் அனைவருக்கும் வேண்டியவரானார். அவரே ஹரிதாஸ ஸாஹித்யத்தின் புனருஜ்ஜீவனத்திற்கு காரணமானார்.

இவரது ஆளுமையால், ஆதவனியின் நவாபின் மந்திரியாக இருந்த வெங்கண்ணன், 'வேணுகோபால விட்டல' என்னும் அங்கிதத்துடன் வேணுகோபால தாஸர் என்று (1750) பெயரைப் பெற்றார். கல்லூர் சுப்பண்ணாசார்யர் (1720-1815) என்னும் கற்றறிந்த அறிஞர், வேணுகோபாலவிட்டல தாஸரிடமிருந்து 'வியாஸ விட்டல' என்னும் அங்கிதத்தைப் பெற்று கீர்த்தனைகளை இயற்றத் துவங்கினார்.

விஜயதாஸரின் கருணைக்குப் பாத்திரராகி, திக்குதிசை தெரியாமலிருந்து பின், மோஹனவிட்டலா என்னும் அங்கிதத்தின் மூலமாக வெளிச்சத்திற்கு வந்தவர் மோகனதாஸர் (1730-1815). விஜயதாஸரின் சிஷ்யராகி தன்யரானவர்களில் உத்தனூரின் கோபாலதாஸரின் (1722-1762) ஆளுமை அளப்பரியது. அவருடன் அவரது மூன்று சகோதரர்களும் ஹரிதாஸ கைங்கரியத்தை பின்பற்றி, குரு கோபாலவிட்டல, வரத கோபால விட்டல, தந்தெ கோபாலவிட்டல என்னும் அங்கிதங்களில் கீர்த்தனைகளை இயற்றினர்.

இதே காலகட்டத்தில் பண்டிதராக இருந்து, ஹரிதாஸர்களை இகழ்ந்திருந்த ஸ்ரீனிவாசாசார்யருக்கு ஞானோதயம் ஆகி, அவர் கோபாலதாஸரின் அருளால் ஜகன்னாததாஸர் ஆகி (1728-1809), ஹரிதாஸ பரம்பரையிலேயே மிகப்பெரிய இடத்தைப் பெற்ற விஷயம் போற்றக்கூடியதாகும். விஜயதாஸரின் ப்ரியமான சிஷ்யரான கோபாலதாஸரின் மூலம் இந்த

ஹரிதாஸ பரம்பரைக்கு வந்து சேர்ந்தவர்களில் 'வாஸுதேவ விட்டல' என்னும் அங்கிதத்தில் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளை இயற்றிய வியாஸதத்வக்ஞர் (1704-1800) ஒருவர்.

இந்த மஹனீயர், ஸ்ரீகிருஷ்ணனின் பரமபக்தராக இருந்து, தாம் இருந்த வேணிஸோமபுரத்தில் வேணுகோபாலனின் கோயிலைக் கட்டினார். இதை இன்றும் காணலாம். அபரோக்ஷ ஞானத்தின் சாதனைக்காக முதலில் வியாஸதத்வக்ஞர் என்னும் அபிமானத்தைப் பெற்று, யதி ஆசிரமத்தை பின்பற்றியதால், இன்றுவரை, வேணிசோமபுரத்தில் அவரது பிருந்தாவனம் இருப்பதை இன்றும் பார்க்கலாம்.

அதாவது, விஜயதாஸர் ஹரிதாஸ தீக்ஷையை பெற்றதே காரணமாகி, அவர் மூலமாக இந்த ஹரிதாஸ பரம்பரை தடையின்றி இன்று வரை வளர்ந்து வந்திருக்கிறது. ஹரிதாஸ ஸாஹித்யத்தின் இந்த கட்டத்தை சேர்ந்த சில ஹரிதாஸர்களின் சாதனைகளை இங்கு சுருக்கமாக பார்க்கலாம்.

17 மற்றும் 18ம் நூற்றாண்டில் (1682-1755) வாழ்ந்த விஜயதாஸரின் வாழ்க்கை மிகவும் அற்புதங்கள் நிறைந்தது. அவர் தமது தாஸ வாழ்க்கைக்கு முன்னர் ஏழ்மையில் வாடியிருந்தார். ஹரிதாஸர் ஆனபிறகு அவரது வாழ்க்கையில் நடந்த மாற்றத்தை தமது ஒரு கீர்த்தனையில் மிகவும் தெளிவாக சொல்லியிருக்கிறார்.

நின்ன ஒலுமெயிந்த நிகிள ஜனரு பந்து
மன்னிஸுவரோ மஹராயா ||ப

என்ன புண்யகளிந்த ஈ பரியுண்டேனோ
நின்னதெ சகல சம்பத்து ||அப

ஒப்ப ஹெங்கஸின ஹொட்டெகெ ஹாகுவுதகின்னு
தப்பிப்பகொண்டெனோ ஹிந்தெ
நிப்பரதிந்தலி சர்வர கூடும்போ
ஹப்பவனுணிஸுவி ஹரியே

ஸஞ்செதனகவித்து ஸண்ண ஸௌடின
கஞ்சி காணதெ பளலிதேனோ
வ்யஞ்சன மொதலாத நானா ரஸங்களூ
புஞ்சிசுவுது மத்தேனோ

நீசோச்ச திளியதெ சர்வர சரணக்கெ
சாசிதே நோசல ஹஸ்தகள
யோசிஸி நோடலு சோஜிகவாகிதெ
வாசக்கெ நிலுகது ஹரியே
மனெ மனெ திரிதரு காசு புட்டதெ சு
ம்மனெ கால்வரிது பளலிதேனோ
ஹண ஹொன்ன த்ரவ்யங்களித்தலிகெ தனகெ
தானே ப்ராப்தி நோடோ ஜீய

தமது முந்தைய ஏழ்மை வாழ்க்கையையும், தெய்வ அருளால் தமக்குக் கிடைத்த செல்வ நிலையையும் இந்த கீர்த்தனையில் மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார் விஜயதாஸர். ஒரு காலத்தில் ஒரு பெண்ணின் வயிற்றை நிரப்ப முடியாமல் இருந்தவர், பின்னர் நூற்றுக்கணக்கான மக்களுடன் விரத, பண்டிகைகளை கொண்டாடியது என்றால் அது சாதாரணமான விஷயமா?

முழு நாளும் ஒரு லோட்டா கஞ்சியை பார்க்க முடியாமல் இருந்தவர், தற்போது விதவிதமான பக்ஷ்ய போஜ்யங்களை உண்ணும்படியான வாய்ப்பு கிடைத்தது சாதாரணமானதா? ஆக, ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று உணவு கேட்டு வாங்கித் தின்றவர் இன்று தாம் இருந்த இடத்திலேயே பணம் கிடைக்கிறது என்பது சாமான்யமான செயலா? என்று ஸ்ரீஹரியின் கருணையையும், கிருபையையும் நினைக்கும் விஜயதாஸரின் வாணியை பார்த்தால், இந்த பாடல் அவரது வாழ்க்கையின் மொத்த வரலாறையும் நமக்கு தெரியப்படுத்துகிறது.

விஜயதாஸர் தமது ஹரிதாஸ கைங்கர்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக, அந்த க்ஷேத்திரத்தில் இருந்த தமது பரோக்ஷ குருகளான புரந்தரதாஸரை திரும்பத்திரும்ப நினைத்து வணங்குவது மிகவும் அற்புதமான விஷயமாக இருக்கிறது. புரந்தரதாஸரின் வாழ்க்கை, மஹாத்ம்யங்களை முதன்முதலில் பாடிய புகழ் விஜயதாஸரையே சேர்கிறது. அப்படியே, ஸ்ரீமத்வர், ஸ்ரீஜயதீர்த்தர், ஸ்ரீவியாஸராயர், ஸ்ரீராகவேந்திர தீர்த்தர் முதலான யதிவரேண்யர்கள் அனைவரையும் கொண்டாடியிருக்கும் விதத்தில், இவருக்கு முந்தைய பரம்பரையை இவர் கொண்டாடிய விதத்தை அறியலாம்.

16ம் நூற்றாண்டில் தோன்றி வளர்ந்த ஹரிதாஸ ஸாஹித்யத்தின் பெருமை, மறுபடி விஜயதாஸரின் மூலம் உயிர்பெற்றதை கவனித்தால், ஹரிதாஸ ஸாஹித்ய பிரபஞ்சத்தில் அவரின் ஸ்தானம் எவ்வளவு முக்கியமானது என்பது புரிகிறது. அவரை ப்ருகு முனிவரின் அம்சம் என்று மக்கள் சொல்வதுண்டு. புரந்தரதாஸரின் நான்காவது மகனாக இருந்த மத்வபதிதாஸரே மறுபடி பிறந்து, விஜயதாஸர் என்று சொல்லிக் கொண்டு, தம் தந்தை முடிக்கமுடியாமல் வைத்திருந்த செயல்களை முடித்துவைத்தார் என்று சொல்வதும் வழக்கத்தில் இருக்கிறது.

புரந்தரதாஸர் 5 லட்ச கிருதிகளை இயற்றவேண்டும் என்று சங்கல்பம் செய்து, பின்னர் 4.75 லட்ச கிருதிகளை மட்டுமே இயற்ற, மிச்ச 25,000 கிருதிகளை விஜயதாஸர் இயற்றி முடித்தார் என்று வழிவழியாக சொல்லப்படுவது உண்டு. இந்த விஷயங்கள் அனைத்தையும் கவனமாக பார்த்தால், இடைவெளி விட்டிருந்த ஹரிதாஸ ஸாஹித்யத்தை மறுபடி பிழைக்க வைத்த விஜயதாஸரின் முயற்சிகளை மிகவும் மனமுவந்து கொண்டாடுகின்றனர் என்பதை பார்க்கலாம்.

விஜயதாஸர் ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு மறுவாழ்வு கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அதற்கு ஒரு புதிய வடிவையும் கொடுப்பதற்கும் முயன்றிருக்கிறார். அவர் இயற்றியிருக்கும் கீர்த்தனைகளில் அவரது பக்தியின் தன்மையைக் கண்டால், அவர் இயற்றியிருக்கும் ஸுளாதிகளில் அவரது சாஸ்திர அபிமானத்தைக் காண முடியும். த்வைத ஸித்தாந்தத்தின் முக்கிய கோட்பாடுகள் அனைத்தையும் இதில் சொல்லியிருப்பதால் இவற்றின் அர்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்பவர்களுக்கு, சம்ஸ்கிருதத்தில் இருக்கும் சாஸ்திர கிரந்தங்களின் அறிமுகம் தேவையாகிறது.

ஸுளாதிகளின் நடை சரளமாக இருந்தாலும், அவற்றில் அடங்கியிருக்கும் விஷயங்கள் மிகவும் ஆழமாகவும், கடினமாகவும் இருக்கிறது. ஹரிதாஸ ஸாஹித்யத்தின் துவக்கத்தில் ஸ்ரீவாதிராஜர் எந்த வேலையை துவக்கினாரோ, அதனை விஜயதாஸர் முன்னெடுத்து வளர்த்தார் என்று சொல்லலாம். விஜயதாஸரின் ஆளுமையால் கவரப்பட்ட கோபாலதாஸர், ஜகன்னாததாஸர் அனைவரும் அவரைப் போலவே, தங்களது கிருதிகளில் சாஸ்திர விஷயங்களை நிரூபித்திருப்பதை காணலாம்.

விஜயதாஸரின் ஸுளாதிகளில் அடங்கியிருக்கும் த்வைத ஸித்தாந்தத்தின் விஷயங்கள், ஜகன்னாததாஸரின் 'ஹரிகதாம்ருதசார' கிரந்தத்தில், ஒரே இடத்தில் அடங்கியிருப்பதை நாம் காணமுடியும். ஹரிதாஸ ஸாஹித்யத்தின் முக்கிய ஹரிதாஸர்களின் கிருதிகளில் இந்த

சாஸ்திர அபிமானமானது முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை அவற்றை படித்து அறிந்து கொள்ளலாம்.

விஜயதாஸர், தமது கீர்த்தனைகள் மற்றும் உகாபோகங்களில் ஹரிபக்தியின் சிறப்பு மற்றும் மஹாத்ம்யங்களை மனப்பூர்வமாக நிரூபித்திருப்பதை நாம் காணமுடிகிறது. 'காதனு வத்ஸவ ஹரி காவனு, வேதவேத்ய ஸாது வினுத ராதிகாரமண கிருஷ்ண' என்று தொடங்கும் கீர்த்தனை ஒன்றில் ராதாகிருஷ்ணன் பசுக்களை மேய்த்த விதத்தை மிகவும் அற்புதமாக விவரித்துள்ளார்.

ஸ்ரீகிருஷ்ணனை அழைத்திருப்பதில் அவனை 'ராதிகாரமண' என்று சொல்லியிருப்பதே ஒரு புதிய பார்வையாக இருக்கிறது. கனகதாஸர் ஒரு இடத்தில் ராதையின் பெயர் குறிப்பாக சொல்லியிருந்தால், விஜயதாஸர் இன்னும் ஒரு படி மேலே போய் ராதிகாரமண என்றூ சொல்லியிருப்பதை கவனிக்கலாம்.

ஸ்ரீகிருஷ்ணன் பசுக்களை எவ்வளவு நட்புடன் மேய்த்தான் என்பதை ஒன்றிரண்டு வாக்கியங்களிலேயே விஜயதாஸர் குறிப்பால் உணர்த்துகிறார். அவனது மேற்பார்வையில் 'ஒந்து திங்கள கருகளூ, ஒந்து வருஷத கருகளந்தெ ஆனந்ததிந்த பெளெதவு' என்கிறார். அது மட்டுமல்ல, 'அஜகளந்த கருகளூ கஜகளந்தெ ஆதவு' என்றதில் ஸ்ரீகிருஷ்ணனின் மேய்ச்சலின் திறமையை நாம் உணரமுடியும்.

'நின்ன தருஷனகெ பந்தவனல்லவோ மஹாபுண்யவந்தர திவ்ய சரண நோடலி பந்தெ' என்று திருப்பதியின் திருமலராயனை நிந்தா ஸ்துதியின் மூலம் கொண்டாடியிருப்பதில் விஜயதாஸருக்கு ஹரிபக்தர்களின் மேலிருக்கும் அன்பையும், ஸ்ரீஹரியிடம் இருக்கும் பக்தியையும் ஒரே நேரத்தில் பார்க்கலாம்.

'பகுத ஜன முந்தெ நீனவர ஹிந்தெ, முகுதி கைகொள்ளது கயா கதாதரனெ' என்னும் வேறொரு கீர்த்தனையில், பல லௌகிக உவமைகளை வைத்து பகவந்தனின் பக்த வாத்ஸல்யத்தை விவரிக்கும் விதமும் மிகவும் அற்புதமானது. விஜயதாஸரின் அபரோக்ஷ அனுபவத்தை விவரிக்கும் 'அந்தரங்கத கதவு தெரெயிதிந்து, எந்து புண்யத பலவு ப்ராப்தி தொரகிது எனகெ' கிருதியோ மிகவும் பக்திமயமானது. 'யாசகரு பரர ஸங்கட பல்லரெ, பூசக்ரதலி காளியந்தெ திருகலு பிடரு' என்று சொல்வதில் அவர் குறிக்கும் யாசகரின் நிலையை எவ்வளவு சிந்தித்தாலும் போதாது.

விஜயதாஸரின் பார்வை நித்ய ஜீவனத்தின் பக்கமும் விழுந்திருக்கிறது என்பதற்கு இது ஒரு அற்புதமான உதாரணம். விஜயதாஸர் இயற்றியுள்ள உகாபோகங்கள் எண்ணிக்கையில் குறைவேயானாலும், அதில் சொல்லப்பட்டிருக்கும் பக்தி பாவஸ்மரணை போற்றக்கத்தக்கது ஆகும்.

குலிஷவ நம்பித நரகெ ஷைலத பயவுண்டே
ஜலத நெலெ பல்லவகெ கொளசெ நீரின சிந்தெயெ பலதங்க
விஜயவிட்டல சரணவிரலு காவராரெந்தின்யாகெ மருகுவெ ப்ராணி

விஜயதாஸரின் வாணியின் சிறப்பினை மெச்சவேண்டுமெனில், அவரின் ஸுளாதிகளின் ஆழ அகலங்களை பார்க்க வேண்டும். தத்வங்களால் நிறைந்த இந்த ஸுளாதியின் சுழலில் ஒரு முறை சிக்கிவிட்டால் அங்கிருந்து தப்பி வெளிவருவது கடினம். மனிதன் தெய்வத்தின் கையில் சிக்கிய பொம்மையே தவிர, அவன் ஸ்வதந்த்ரன் அல்ல என்னும் தத்வத்தை எவ்வளவு அழகாக விளக்குகிறார் என்பதை, இந்த கீழ்க்கண்ட உகாபோகத்தின் மூலம் அறியலாம்.

ஹரியெ நின்னாதீன ஞானேந்திரியங்களு
ஹரியெ நின்னாதீன கர்மேந்திரியங்களு
ஹரியெ நின்னாதீன பஞ்சபூதாத்மகளு
ஹரியெ நின்னாதீன மனசித்தாதிகளு
ஹரியெ நின்னாதீன ஸகல சேதனவு
ஹரியெ நின்னாதீன ஸகல சேஷ்டெகளு

என்று தனது பராதீனத்தை நினைத்துக் கொண்டு, இறுதியில் :

ஹரியெ நீ நேமிஸித காரண
என்ன ஷரீரதொளகெ பரிதவாகிவெ
ஹொரகித்த ஸரகு பெலெ மாடித்தந்தெ
ஈ ஸரகு தனவித்து தும்பலில்ல

என்று தெளிவு படுத்துகிறார். தமது தேகத்தில் நடைபெறும் அனைத்து செய்கைகளுக்கும் ஸ்ரீஹரியே காரணம் என்றும், இந்த அபூர்வமான விஷயம், சந்தையில் விலைக்குக் கிடைக்கக்கூடிய சரக்கு இல்லை என்றும், அதன் அற்புத குணத்தை தினப்படி பொருளை வைத்து உதாரணம் காட்டுகிறார். 'நாஹம் கர்த்தா ஹரி: கர்த்தா' என்று ஆசார்யர் சொல்லியிருக்கும் தத்வத்தையே விஜயதாஸர் இங்கு பகுதி பகுதியாக விளக்கியிருக்கிறார்.

எல்லையற்ற இந்த பிறவிக்கடலின் விராட்ரூபத்தை வர்ணிப்பதில் விஜயதாஸரின் வாக்கு இப்படியாக இருக்கிறது.

ஏளு ஸாகரகதிக பவஸாகரெம்போத
ஆளதகலு நோடெ பரிமிதி தோரிது
கேளுவுதல்லதெ கண்ணிகெ காணிஸது
ஹேளுவுதல்லதெ தாடுவுதரிது
பீளுவுதக்கெ கிஞ்சிது தடவாகது
ஏளுவுதகெ பஹள திவஸ பேகு

சம்சார சாகரம் அல்லது பவ சாகரம் என்பது ஏழு கடல்களைவிட அதிகமான பரவலைக் கொண்டது என்பதில் அதன் விஸ்தாரத்தை நாம் கணிக்க முடியும். அதன் ஆழத்தை அளப்பது சாத்தியமில்லை. ஒரு முறை இந்த சம்சாரத்தின் சுழியில் வீழ்வது சுலபம். ஆனால், பிறகு அதிலிருந்து வெளிவருவது கடினமான விஷயம். அதில் விழுந்தவர்களின் பேச்சைக் கேட்டு தீராது. 'தேளின கத்திகெயொளகணாலயதந்தெ' மிகவும் பயங்கரமானது.

இது எப்படியோ இருக்கட்டும். ஸ்ரீஹரியின் தயை மட்டும் இருந்தால் 'சரண ஹொளெயாகதெ பவவெம்பொ வாரிதி' என்று விஜயதாஸர் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கிறார். எத்தகைய ஆழமான விஷயமோ ஆகட்டும், அதை மிகவும் அழகாக நிரூபிப்பதில் விஜயதாஸர் வல்லவர் என்று சொல்ல வேண்டும்.

விஜயதாஸரின் ஸுளாதிகளில் நாம் காண்பது, நம்மை அது எவ்வளவு சிந்திக்க வைக்கிறதோ அவ்வளவுக்கு சாஸ்திர சம்பந்தமானதும் ஆகும். ஒன்றிரண்டை மட்டும் இங்கு உதாரணம் பார்க்கலாம்.

ஹரியே ஸர்வோத்தம ஹரி பரதேவதெ
ஹரி குணபரிபூர்ணாந்தர பஹிரவ்யாப்தா
ஹரி பரதத்வஸிரியரஸா பரமேஷ்டி ஜனகா
ஹரி ஸுர முக்ய பூஸுரர பரிபாலா

என்று ஹரியின் சர்வவியாப்தத்தை விளக்குவதில் ஸ்ருதியின் ஆதாரத்தின்படி இருக்கும் இந்த கீழ்க்கண்ட வரிகளை பார்க்கலாம்.

ஏகோ தேவ: ஸர்வ பூதேஷு கூட:
ஸர்வவியாபீ ஸர்வ பூதாந்தராத்மா
கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ:
ஸாக்ஷி சேதா கேவலோ நிர்குணஸ்ச

ஹரியே ஜகக்கெ கர்த்தா
ஹரியே ஜகக்கெ பர்த்தா

என்று சொல்வதோ, ஸ்ரீமத்வாசார்யரின் நாஹம் கர்த்தா ஹரி: கர்த்தா என்று செய்தியையே சொல்கிறது.

ஜீவனின் லட்சணத்தை விஜயதாஸர் இவ்வாறு விளக்குகிறார்.

ஜீவ அச்சேத்யா பேத்ய தோய கரள ஷஸ்த்ர
பாவக மிகிலாத உபஹதியிந்த
ஸாவில்ல ஸாவில்ல ஆவாவ காலக்கெ
பாவன்னவாகிப்புது பரம ஸூக்ஷ்ம
ஆவிரானந்த பாவபரிதவல்லத இதகெ
நோவாகது காணே நிஜரூபதி

இந்த பத்யத்தை படித்தவுடன், கீழ்க்கண்ட பகவத் கீதையில் வரும் ஜீவனைக் குறித்தான ஸ்லோகங்கள் நினைவுக்கு வரவேண்டும்.

நைனம் சிந்தந்தி ஷஸ்த்ராணி நைனம் தஹதி பாவக:
ந சைனம் க்லேதயந்த்யாஸோ ந ஷோஷயதி மாருத:
அச்சேத்யோ‌ऽ யமதாஹ்யோ‌ऽ யமக்லேத்யோ‌ऽ ஷோஷ்ய ஏவ ச
நித்ய: ஸர்வகத: ஸ்தாணுரசலோ‌ऽயம் ஸனாதன:
(கீதை 2-13&14)

வேத, உபநிஷத், பகவத்கீதை மற்றும் இதர தார்மிக கிரந்தங்களில் அடங்கியிருக்கும் முக்கிய அம்சங்களையும், ஸ்ரீமதாசார்யர் நிறுவிய த்வைத ஸித்தாந்தத்தின் சாரத்தையும், விஜயதாஸர் தமது ஸுளாதிகளில் திரும்பத்திரும்ப வலியுறுத்துகிறார். ஹரிதாஸ ஸாஹித்யத்தில் இருக்கும் தத்வங்களின் மதிப்பினை கூட்டுவதில், விஜயதாஸரின் பங்கு மகத்தானது.

இவரின் சிஷ்யர் மற்றும் பிரசிஷ்யர் என அனைவரும் இதே மகத்தான செயலை முன்னெடுத்துச் சென்றனர். ஹரிதாஸ ஸாஹித்யத்தின் முதல் பகுதியில் சற்று குறைந்திருந்த இந்த சாஸ்திர த்ருஷ்டி, விஜயதாஸருக்குப் பிறகான காலத்தில் வளர்ச்சியைப் பெற்று, ஹரிதாஸ ஸாஹித்யம் வைதிக ஸித்தாந்தத்தின் அத்யயனத்தை செய்வதில் ஒரு சிறப்பான இடத்தை பிடித்தது. ஹரிதாஸ ஸாஹித்யத்தின் மறுமலர்ச்சி மற்றும் அதன் மேன்மைகள் இந்த இரண்டிற்கும் விஜயதாஸர் காரணமாகிறார் என்னும் வரலாற்று சங்கதியை நாம் மறக்கக்கூடாது.

விஜயதாஸரின் சமகாலத்தவர் என்று சொல்லக்கூடிய பாகிலகோடெயின் பிரசன்ன வெங்கட தாஸர் (1680-1752), திருப்பதியின் ஸ்ரீனிவாசனின் அருளால் 'ப்ரசன்ன வெங்கட' என்னும்

அங்கிதத்தைப் பெற்று, அனேக கீர்த்தனைகளை இயற்றியதோடு மட்டுமல்லாமல் ஸ்ரீமத் பாகவதத்தின் 10ம் ஸ்கந்தத்தின் பூர்வார்த்தத்தை பல்வேறு நுடிகளில் மொழிபெயர்த்தார்.

பிரசன்ன வெங்கடதாஸருக்கு அந்த காலத்து செல்வந்தர்கள் கொடுத்திருக்கும் செல்வம், மானியம் ஆகியவற்றைக் கண்டால், ஹரிதாஸர் ஆகி, அவர் மக்களின் ப்ரியமானவராக எப்படி திகழ்ந்தார் என்பதை அறியலாம். பிரசன்ன வெங்கடதாஸரின் கீர்த்தனைகளில் மிகவும் சிறப்பான விஷயம் என்னவென்றால், பால பாஷையிலேயே அவர் இயற்றியிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனின் பால லீலைகள்.

மத்தோதெயம்மா நங்கன்னெத்திகோ அம்மா
எத்தி பலு அத்து பந்தீனி நா இத்தெ அம்மி திந்தேனே

என்று தொடங்கும் கீர்த்தனையானது முழுவதுமே பால பாஷையிலேயே இருக்கிறது. 200க்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியுள்ள பிரசன்னவெங்கட தாஸர், நாரத கொரவஞ்சி, நாராயண பஞ்சர, சமஸ்த நாம மணிகண ஷட்சரண பத்யமாலெ முதலான தீர்க்க கிருதிகளையும் இயற்றியிருக்கிறார் என்று டாக்டர். ஏ.டி. பாடில் அவரின் தொகுப்பிலிருந்து தெரிய வருகிறது.

பிரசன்னவெங்கட தாஸர் இயற்றியிருக்கும் பாகவதத்தின் 10ம் ஸ்கந்தத்தின் பூர்வார்த்தமானது, ஹரிதாஸ ஸாஹித்யத்திற்கு ஒரு அபூர்வமான பரிசே ஆகும். இதில் நமக்குத் தெரியவரும் தாஸரின் புலமை, ஸ்ரீமத் பாகவதத்தின் கதையை, அதன் ஸாரத்தை அப்படியே எளிமையாக சொல்லியிருப்பது புகழப்பட வேண்டிய செயலாகும். இது ஒரு ஸ்வதந்த்ரமான கிருதியா என்று சொல்லும் வண்ணம் அவ்வளவு அற்புதமாக இருக்கிறது. ஸ்ரீமத் பாகவதத்தின் 10ம் ஸ்கந்தத்தின் பூர்வார்த்தத்தின் 48 அத்தியாயங்களில், 43 அத்தியாயங்களின் ஸாரம் இங்கு இருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனின் பால லீலைகளின் வர்ணனையே இந்த கிருதியின் முக்கிய நோக்கம். மொத்தம் 67 கீர்த்தனைகளும் 1028 நுடிகளும் கொண்ட இந்த கிருதியை முடிக்கும் முன்னர், ஸ்ரீப்ரஸன்ன வெங்கடதாஸர் 'ப்ரஸன்ன சாரித்ர ப்ரஸன்ன ஷோபனவக்த்ர ப்ரஸன்னாபாங்க நேத்ர, ப்ரஸன்ன காத்ர ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ண ப்ரஸன்ननாதரெ நித்ய ப்ரஸன்னதரோக்தி பாஹவு பக்தஜனகெ' என்று சொல்லியிருப்பதை கவனித்தால், தம் கிருதியின் மூலம் பக்தர்களுக்கு எந்த விதமான மகிழ்ச்சியை கொடுக்க அவர் விரும்பியிருக்கிறார் என்பது புரிகிறது. ஸ்ரீப்ரஸன்ன வெங்கடதாஸரைக் குறித்து புத்தகங்களை எழுதியிருக்கும் டாக்டர். ஏ.டி. பாடீல் அவர்கள், இந்த கிருதியின் சிறப்பினை சுருக்கமாக இவ்வாறு சொல்கிறார்.

மொத்த கிருதியை, மூல பாகவதத்துடன் ஒப்பிட்டு பார்த்து, அந்த பாகவதத்தின் ஸாரத்தை ஸ்ரீதாஸர் எப்படி இங்கு கொண்டு வந்திருக்கிறார் என்பதையே ஒரு தனி ஆராய்ச்சி செய்யும் அளவிற்கு அதில் விஷயம் இருக்கிறது. ஸ்ரீப்ரஸன்ன வெங்கடதாஸரின் கிருதிகளை அன்றைய மற்ற ஹரிதாஸர்கள் 'காகம்பி' (வெல்லப்பாகு) என்று அழைத்தார்கள். அதாவது, அவரது கிருதிகள் மிகவும் இனிமையாகவும், சுவையாகவும் இருந்தன என்று சொல்கிறார்கள். பாகல்கோடெயில் வாழ்ந்து வந்த ஸ்ரீப்ரஸன்ன வெங்கட தாஸர், பாதாமியில் தெய்வாதீனம் ஆனார் என்று அறிகிறோம். அவருடைய 'கட்டெ' பாதாமியில் இருக்கிறது.

உத்தரார்த்தத்தின் ஹரிதாஸர்களின் பரம்பரையில் ஸ்ரீகோபாலதாஸரின் (ஆண்டு 1722-1762) இடம் மிகவும் முக்கியமானது. மொத்த ஹரிதாஸ ஸாஹித்யத்தின் பெருமையை நிர்ணயிக்கும்போது, ஸ்ரீபுரந்தரதாஸர், ஸ்ரீவிஜயதாஸர், ஸ்ரீகோபாலதாஸர் மற்றும் ஸ்ரீஜகன்னாததாஸர் ஆகியோரை 'தாஸ சதுர்ஷ்டர்' என்று அழைப்பது உண்டு. இன்றைய கத்வால் ஜில்லாவிற்கு சேர்ந்த உத்தனூரு ஸ்ரீகோபாலதாஸரின் காரிய க்ஷேத்திரமாக இருந்தது. சிறிய வயதில் மிகவும் ஏழ்மையில் இருந்த இவர், காயத்ரி மந்திர உபாஸனையினால் மேம்பாடு அடைந்தார். எதிர்காலத்தை சொல்வதில் வல்லவராக இருந்த இவரைப் பற்றி, மக்கள் நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தனர்.

ஒரு முறை, ஆதோனியின் பங்கநாமத திம்மண்ண தாஸரின் வீட்டில், விஜயதாஸர் இவரை பார்த்தபோது, அவரில் இருந்த விசேஷ லட்சணங்களைக் கண்டு, அவரை தம் சிஷ்யராக ஏற்றுக் கொண்டு, 'கோபாலவிட்டல' என்னும் அங்கிதத்தை அருளினார். அந்த சமயத்திலிருந்து, கோபாலதாஸரின் வாழ்க்கையே மாறிவிட்டது. தெய்வ அருள் மற்றும் குருவின் அருள் இரண்டு சேர்ந்து, கோபாலதாஸர் கீர்த்தனைகளை இயற்றத் துவங்கினார். அவரின் தம்பிகளும்கூட அண்ணனையே தொடர்ந்து, ஹரிதாஸ கைங்கர்யத்தினை செய்யத் தொடங்கினர்.

பக்தியலி பாகண்ண, யுக்தியலி மோஹன்ன, ஷக்தியலி திம்மண்ண - என்று சொல்வது வழக்கமாக இருக்கிறது. இதன்படி பாகண்ணா என்னும் கோபாலதாஸரின் பக்தியின் சிறப்பினை நாம் காண்கிறோம். பக்தனின் பகவத் அனுஸந்தானம் மற்றும் பகவந்தனின் பக்தவாத்ஸல்யம் ஆகிய இரண்டையும் நிரூபிக்கும் கோபாலதாஸரின் கீர்த்தனைகளையும், அவருடைய ஸுளாதிகளையும் பார்த்தால், பக்தியலி பாகண்ணா என்று சொல்வதில் எவ்வித பிரச்னையும் இல்லை என்பதை உணரலாம். ஸ்ரீகோபாலதாஸரின் கீர்த்தனைகளில் அவர் தன்வந்திரியிடம் வேண்டிக் கொள்ளும் வகை மிகவும் புகழ்பெற்றதாக இருக்கிறது. 'ஆவ ரோகவோ எனகெ தேவ தன்வந்த்ரி, ஸாவதானதி கைய்ய பிடிது நீ நோடய்யா' என்று துவங்கும் இந்த கீர்த்தனையில் தம் இந்திரியாதிகள் எப்படி பாரமார்த்திக த்ருஷ்டியினால் எப்படி பகவந்தனிடமிருந்து விலகியிருக்கிறது என்பதை மிகவும் அற்புதமாக விளக்கியிருக்கிறார்.

ஹரிமூர்த்திகளு காணிஸவு என்ன கங்களிகெ
ஹரிய கீர்த்தனெயு கேளிஸதென்ன கிவிகெ
ஹரிமந்த்ர ஸ்தோத்ர பாரது என்ன நாலிகெகெ
ஹரி ப்ரஸாதவு ஜிஹ்வெகெ ஸவியாகதய்யா

ஹரிபாதஸேவெகென ஹஸ்தகளு சலிஸவு
குருஹிரியரங்க்ரி ஷிரபாகது
ஹரிய நிர்மால்யவாக்ராணிஸது நாஸிகவு
ஹரியாத்ரெகளிகென்ன காலேளதய்யா

அனாதபந்து கோபால விட்டலரேயா
என்ன பாகத வைத்ய நீயேயாகி
அனாதி காலத பவரோக களெயய்யா
நானெந்திகு மரெயெ நீ மாடித உபகார

சம்சார சாகரத்தில் நொந்து வெந்திருக்கும் பக்தர்களை உத்தரிப்பவன், பகவந்தனைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆகையால், அவன் தன் இஷ்ட தெய்வத்திடம் முறையிடுவது சரியே ஆகும். இந்த கீர்த்தனை பார்ப்பதற்கு எவ்வளவு சுலபமாக இருக்கிறதோ, அர்த்தத்தை உணர்த்தால் அவ்வளவு ஆழமானது. மனிதனின் நடவடிக்கைகளுக்கு அவனின் பஞ்சேந்திரியங்கள் மிகவும் முக்கியமானவை. மற்ற அவயவங்களின் செயல்கள் அனைத்தும் இவற்றையே நம்பியிருக்கின்றன. ஆகையால், இந்த இந்திரியங்களின் ஒருங்கிணைப்பு மிகவும் முக்கியம். இந்த ஒருங்கிணைப்பு இல்லையெனில், பக்தனுக்கு ஆகும் பிரச்னைகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஸ்ரீகோபாலதாஸர் தம் மனதின் வேண்டுதல்களை இந்த கீர்த்தனையில் மிகவும் அற்புதமாக விளக்கியிருக்கிறார். பக்தனின் சித்த ஏகாக்ரதைக்கு தடையாக இருக்கும் இன்னொரு விஷயம் என்றால் அது - கர்வம். அந்த சிறையில் சிக்கியிருக்கும் தம் நிலையை எண்ணி ஸ்ரீகோபால்தாஸர் - 'ஏகே மமதெ கொட்டு தணிஸுவி ரங்க நீ கருணதி என்ன பாலிஸோ கிருஷ்ணா' என்று வேண்டிக் கொள்கிறார். 'இந்திரெ அரஸ பிரம்மாதிவந்தித நின்ன பந்தக ஷகுதிகெ நமோ நமோ' என்பதில் வெளிப்படும் ஸ்ரீதாஸரின் மனவோட்டம் மிகவும் ஸ்வாரஸ்யமாக இருக்கிறது.

சேதனத்தை கட்டிப் போடுபவன் பரமாத்மனே. ஆகையால், அவனின் பக்தக சக்தியைக் குறித்து, ஸ்ரீதாஸர் இங்கு சொல்லியவாறு, தம் அஸ்வாதந்த்ர்யத்தை ஸ்ரீதாஸர் இங்கு வெளிப்படுத்துகிறார். இதே கீர்த்தனையின் கடைசி நுடியில் 'எந்திகெ நின்ன சித்தகெ பருவுதோ ஸ்வாமி அந்தே உத்தரிஸய்ய கருணியெ, ஸுந்தர விக்ரஹ கோபாலவிட்டல ஸுகஸாந்த்ர பவமோசக நமோ நமோ' என்று சொல்வதில், ஸ்வாமியின் மகிமையைப் போற்றுகிறார். மொத்தத்தில், மனிதனுக்கு ஆசையை கொடுப்பவனும் பகவந்தனே. அதனை நிவாரணம் செய்பவனும் பகவந்தனே. தெய்வ அருளால் கிடைத்த தம் சரீரத்தையே ஒரு கோட்டை என்று நினைத்து, அது எப்படி தம்மை காப்பதற்கு பதில், ஒரு சிறையாக மாறி தன்னையே சிறை வைத்து விட்டது என்று மிகவும் அர்த்தத்துடன் பாடியிருக்கிறார். இப்படியான சிறையில் இந்த இந்திரியங்கள் இருந்தாலும் ஒன்றே, இல்லையென்றாலும் ஒன்றே என்று நொந்து சொல்கிறார்.

'க்ஷணக்கெ நூருபடள ஈ கோடகெலு ராய அனுவாத திவஸ ஒந்தாதரில்ல, மொனெகார பலவில்ல, இத்தவரு வஷவில்ல கொனெகொண்டு க்ராம காபாடுவ பகெ எந்தோ' என்று கவலைப்பட்டவாறு, 'ஈ பரிய அதிகார ஒல்லெ நானு' 'இனிதனாயகத கொம்பெ ஒளகின வாஸவனு பிடிஸி நின்ன நிஜபட்டணதொளு மனெமாடிகொடலு நின்ன ஹொந்திகொண்டு அனுகால பதுகுவெனோ கோபாலவிட்டலா' என்று ஸ்வாமியிடம் முறையிடுகிறார். ஸ்ரீகோபாலதாஸரின் இந்த முறையீடுகள், வேண்டுதல்கள் மற்ற ஹரிதாஸர்களின் வரிகளைவிட சிறிது வேறாகவே இருக்கிறது.

ஸ்ரீகோபாலதாஸர் இயற்றியிருக்கும் ஸுளாதியில் வெளிப்படும் பகவந்தனின் பக்தவாத்ஸல்யம் மிகவும் அற்புதமாக வந்திருக்கிறது.

வாஸுதேவனெ நினகெ வாசி ஒந்தே கேளோ
ஈஶனெம்போ பெஸரு நினகெ எந்திகு இல்ல
தாஸத்வதனவெல்ல நம்மதய்ய
தாஸரு இல்லத ஈஶத்வ ப்ரகடிஸது
ஈஶனு இல்லத தாஸதனவ்யாகெ

என்று ஈஶ-தாஸரின் ஸம்பந்தத்தை தர்க்கரீதியாக நிறுவும் ஸ்ரீகோபாலதாஸர், மேலும் தொடர்ந்து, இந்த பகவந்த - பக்தரின் பாந்தவ்யம் எத்தகையது என்பதை இவ்வாறு விவரிக்கிறார்.

தந்திந்த நண்டரு கெலவு எனகின்னு
தனுவிந்த நண்டரு கெலவரு எனகின்னு
மனதிந்த நண்டரு கெலவரு எனகின்னு
தினதிந்த நண்டரு கெலவரு எனகின்னு
குணதிந்த நண்டரு கெலவரு எனகின்னு
இனிது நண்டரொளு எனகெ ஒப்பர காணெ
அனுவாகி இத்தரெ அஷ்டு நம்மவரெல்ல
அனுவு தப்பிதரின்னு ஆரு நம்மவரல்ல
நினகெ எனகெ நண்டதனவின்னு ஹீகல்ல அ
ரெனிமிஷவகலத அனிமித்த பாந்தவனாகி
க்ஷண பிடதலெ காய்வ கோபாலவிட்டல
நினகெ மாடுவுதேனோ நமோ நமோ என்னிந்த

பகவந்தனே பக்தனின் நண்பனாக இருந்து பேசுவது, இந்த பதத்தில் மிகவும் அழகாக வெளிப்பட்டுள்ளது. இதனை ஸ்ரீகோபாலதாஸர் லீலை என்று அழைத்து, பகவந்தனின் அந்த அற்புத லட்சணத்தை உதாரணங்களுடன் இவ்வாறு விவரிக்கிறார்.

ஆவாவ பரி நின்ன லீலெகள தோரிதி
தேவ நீ பண்டிய போவனாதெ அர்ஜுனகெ
அவுகள காதெ ஸனகாதிகள பாலிஸலு
ஆ உக்ரஸேனன ஸேவெயனு மாடிதெ
தேவ கோபிய கையலி கட்டிஹாகிஸிகொண்டெ
நீ வடு விப்ரனாகி யக்ஞதலி போகி
தேவ பிக்ஷவ பேடி பக்தன்ன பாலிஸிதெ
காவலு காதெ ஆதன்ன மனெ த்வாரதல்லி
ஆவ அபேக்ஷெயு நினகெ ஒந்து இல்ல
தாவதிபடுவெ நின்ன பகுதரிகாகி
நோவாகுவெ, நின்ன பக்தரு தணிதரெ
ஆவ நின்ன கார்ய பக்தர பாலனெ
ஆவ நின்ன க்ரிய தனுஜர மர்த்தனெ
ஆவ வ்யாபாரவு நினகெ மாடெம்பரு பேளுவருண்டே தேவ
காவ கருணெ நம்ம கோபாலவிட்டல
ஸேவகன பாலிஸுவ பகெயெந்தோ தேவ

பகவந்தனின் இந்த பக்த வாத்ஸல்யத்தை ஸ்ரீகோபாலதாஸர் விதம்விதமாக நிரூபிக்கிறார். கடைசியில், பகவந்தனின் கீர்த்தி, புகழ் ஆகியவை பக்தனை எப்படி ஆட்கொள்கிறது என்பதை மிகவும் அற்புதமாக விளக்கியிருக்க்கிறார்.

பகுதரிகாகி நீ ஜகவ ஸ்ருஷ்டிஸிதய்ய
பகுதரிகாகி நீ அவதார மாடிதய்ய
பகுதரு நின்னன்னு பஜிஸதித்தரெ தேவ
ஸகல லோகரு நின்ன அரியவரெந்தோ
முகுதிதாயக மூல தெய்வனெந்தெம்போது
ஸகலலோகக்கெ கரிராஜ தோரிஸிதனு
உகுதிகளிந்தலி துதிஸலு பாஹோது
ப்ரகட மாடிதளய்ய ஷகுதளு த்ரௌபதி
ஸகலரல்லி நீனு வ்யாபகனெம்போது
பகுத ப்ரஹ்லாத இரவ தோரிஸிதனு
பகுதரிந்தலி நீனு பகுதராதீன தேவ
பகுதவத்ஸல நம்ம லகுமிய ரமணனெ
விகனஸபதி நம்ம கோபாலவிட்டல ரேய
பகுதர முந்தெ நின்ன யுகுதி நடெயதோ

பகவந்தனின் கருணைக்காக ஏங்கும் பக்தனுக்கு, சில முறை பக்தி அதிகம் ஆகி, பகவந்தனை திட்டுவதைப் போல வணங்குவது எப்படி என்பதை ஸ்ரீகோபாலதாஸர் இப்படியாக பாடியிருக்கிறார்.

ஒடெய நினகெ மொரெயிடுதலித்தரெ என்ன
கடெகெ நோடலொல்லெ படிவார நினகெஷ்டோ
தடெயதெ நானொந்து நுடிய நுடிவெனய்ய
கடுகுஷ்டு நாருத மடுவினொளகெ ஸேரு
பிடதெ பெட்டவ பொத்து கடலொளகிரு நீனு
அடவி ஸுகர ஜன்ம பிடதெ பரலி நினகெ
கெடலி நின்ன ரூப கடுகோரனாகெலோ

ஒடலிகில்லதெ நீனு திருபெயனு பேடோ
கொடலிய பிடிது நீனடவி ஸஞ்சாரனாகோ
மடதிய களகொண்டு ஜடெயதரிஸோ நீனு
துடுக தனகாவனெந்து நுடியலி ஜனரெல்ல
உடுவஸ்த்ரவில்லதெ பத்தலாகி நில்லோ
கடு வேகதலி நீனு கல்கிரூபனாகோ
தடெயதெ வரகள கொடுவவனெந்தெந்து
நுடிதெனோ நானிந்த பிடிய மாதுகள
கடு தயாஸாகர கோபாலவிட்டலரேய
ஹிடிது பிடெனோ நின்ன படவராதாரி

இந்த நிந்தாஸ்துதியில் பகவந்தனின் தசாவதாரங்களின் சிறப்புகள் இருக்கின்றவே தவிர, அவற்றை திட்டுவதைப் போல இல்லை. ஸ்ரீதாஸரே கடைசியில் வேண்டிக் கொள்வதைப் போல, இப்படியாக உரிமையான பேச்சுக்களின் மூலம் ஸ்வாமியை மகிழ்ச்சிப்படுத்துவதே முக்கிய நோக்கம் ஆகும். 'கடு தயாஸாகர கோபாலவிட்டலரேய' என்று சொல்வதில், பரமாத்மனின் கருணையை அபாரமாக மெச்சிக் கொள்கிறார்.

ஸ்ரீகோபாலதாஸரின் ஸுளாதியில் இப்படியாக பக்தியின் மேன்மைகள் மிகச் சிறப்பாக சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால், அவருடைய இந்த மிக உயர்ந்ததான பக்தியின் ஸ்வரூபத்தைக் கண்டு, அவரை 'பக்தியலி பாகண்ணா' என்று அழைக்கும் பத்ததி வந்திருக்கிறது என்று நினைக்கலாம்.

ஸ்ரீகோபாலதாஸரின் வாழ்க்கையில் இது ஒரு முகம் என்றால், அவர் ஒரு தெய்வ பக்தனுக்காக தன் வாழ்க்கையையே (ஆயுளையே) தானம் அளித்த இன்னொரு சம்பவம் மிகவும் விசேஷமானது. ஸ்ரீவிஜயதாஸரின் மகிமையை அறியாமல், அவரை புறக்கணித்த, ஸ்ரீனிவாஸாசார்யர், ஸ்ரீகோபாலதாஸரின் கருணையால், உத்தாரம் அடைந்து, ஸ்ரீஜகன்னாததாஸராக ஆனது, ஹரிதாஸர்களின் சரித்திரத்திலேயே ஒரு அபூர்வமான சம்பவம் எனலாம். தனக்காக ஒரு முறை தன்வந்திரியிடம் வேண்டிக் கொண்ட ஸ்ரீகோபாலதாஸர், தம் குருகளான ஸ்ரீவிஜயதாஸரின் ஆணையின்படி, தம்மிடம் வந்த ஸ்ரீனிவாஸாசார்யரின் வயிற்று வலியை போக்குவதற்காக இன்னொரு முறை தன்வந்திரியிடம் வேண்டிக் கொண்ட சம்பவம், நம் மனதை கரைப்பதாக இருக்கிறது.

என்ன பின்னப கேளு தன்வந்த்ரி தயமாடு ஸன்னவனு இவ கேவல
பன்னபடிஸுவ ரோகவன்னு மோசனெ மாடி சென்னாகி பாலிஸுவுது கருணி

என்று அந்த தேவ-வைத்யனிடம் முறையிட்டுக் கொண்டார். தெய்வ பக்தியை செய்வதற்காக, ஆரோக்ய, ஆயுஷ்ய, ஐஸ்வர்ய என்னும் இந்த மூன்று வித வஸ்துகள் மிகவும் அவசியம் என்று சொல்லி, 'ஆதிவ்யாதி உன்மாத விப்ரம நானா பாதெ' களின் நிவாரகனான அவனை அற்புதமாக கொண்டாடி 'ஆதரிஸி இவகெ தவ பாதத்யானவனித்து, ஸாதுகளொளகிட்டு மோதகொடு ஸர்வதா' என்று வேண்டினார். கடைசி நுடியில் 'என்ன மாதல்லவிது என்ன ஹிரியர மாது, மன்னிஸபேகு கருணி' என்று சொல்லியிருப்பதோ மிகவும் கவனிக்கப்பட வேண்டியது. குருவின் ஆணையை நிறைவேற்ற வேண்டும் என்று சிஷ்யன் பரமாத்மனிடம் வேண்டிக் கொண்டார் என்பதை பார்த்தால், ஸ்ரீகோபாலதாஸரின் ஆளுமை எவ்வளவு உயர்ந்தது என்பதை புரிந்து கொள்ளலாம்.

ஸ்ரீனிவாஸாசார்யரின் வயிற்றுவலியை தன்வந்திரியின் கருணையால் பரிகரித்ததோடு மட்டுமல்லாமல், அந்த ஸாத்விக ஜீவி அல்பாயு கொண்டவர் என்பதை அறிந்து, தம் ஆயுர்பாகத்தில் 40 ஆண்டுகளை அவருக்கே அளித்து காத்தார் என்று அறிகிறோம்.

ஸ்ரீகோபாலதாஸரின் ஆணைக்கேற்ப, ஸ்ரீனிவாஸாசார்யர், பண்டரிபுர விட்டலனின் அருளால் ஜகன்னாத விட்டலா என்னும் அங்கிதத்தைப் பெற்று, அன்றிலிருந்து ஸ்ரீஜகன்னாததாஸர் என்று புகழ் பெற்றார். ஸ்ரீஜகன்னாததாஸருக்கு, ஸ்ரீவிஜயதாஸர் 'திவ்ய ரத்ன' மாக தெரிந்தால், ஸ்ரீகோபாலதாஸரோ, கருணைக்கடலாகவே தெரிந்தார். 'அபம்ருத்யுவனு தொடெதெ என்னொளகிப்ப அபராதகள மரெதெ, சபல சித்தனிகொலிது விபுளமதியனித்து நிபுணனெந்தெனிஸிதெ தபஸிகளிந்தலி' என்னும் ஸ்ரீஜகன்னாததாஸரின் நுடிகளில், அவருக்கு ஸ்ரீகோபாலதாஸரிடம் இருந்த நன்றி உணர்ச்சி எவ்வளவு அபாரமானது என்பது தெளிவாகிறது.

ஜஜி வெங்கடரமணாசார்யரின் ஞானத்திற்கு ஸ்ரீகோபாலதாஸர் தன்னையே மறந்தார் என்றால், ஸ்ரீவ்யாஸ தத்வக்ஞர் என்று புகழ் பெற்றவரான அந்த மஹானுபாவர், ஸ்ரீகோபாலதாஸரின் அபரோக்ஷ அனுபவத்தைக் கண்டு, அதனை தானும் பெற வேண்டும் என்று சங்கல்பம் செய்தார். இந்த இருவரின் நட்பு, பந்தம் என்பது நம்மால் சொல்லி முடியாது. ஸ்ரீகோபாலதாஸரின் அருகிலேயே வாழ்ந்து ஒளிர்ந்த ஸ்ரீவ்யாஸதத்வக்ஞர், மடாதிபத்யத்தை துறந்து, ஹரிதாஸர் ஆகி, 'வாஸுதேவ விட்டலா' என்னும் அங்கிதத்தினால் கீர்த்தன கைங்கர்யத்தினை மேற்கொண்டு, தம் ஆராத்ய தெய்வமான, ஸ்ரீவேணுகோபாலனின் பரமானுக்கிரகத்திற்கு பாத்திரர் ஆனார். உத்தனூரின் ஸ்ரீவெங்கடேஸ்வரனின் தேவாலயம், ஸ்ரீகோபாலதாஸரின் ஸாதன க்ஷேத்திரம் எனப்பட்டால், அங்கிருந்து மிக அருகில் இருப்பதான, துங்கபத்ரா நதி தீரத்தில் இருப்பதான, வேணிஸோமபுர என்பது, ஸ்ரீவாஸுதேவ விட்டலரின் பவித்ர க்ஷேத்திரம் ஆனது.

ஸ்ரீகோபாலதாஸரின் அன்பினைப் பெற்றவர்களில், ஹொளவனகட்டெ கிரியம்மா அவர்களும் ஒருவர். ஸ்வபாவத்திலேயே தெய்வ பக்தியை கொண்டிருந்த அவர், ஸ்ரீரங்கநாதனின் சேவையை, தாம் அறிந்திருந்த ரங்கோலி கலை மூலமாகவே செய்து வந்தார். திருமணம் ஆகியிருந்த அவரின் விரக்தியைக் கண்டு, உற்றார் உறவினர் அனைவரும் அவரை தூற்ற, அவளுடைய அந்தரங்கத்தின் ஆழத்தை அறிந்திருந்த ஸ்ரீகோபாலதாஸர், தம் பூர்ணானுக்கிரகத்தை அவளுக்கு அருளினார். அன்றிலிருந்து அவர், ஹொளவனகட்டேரங்கா என்னும் அங்கிதத்தில் கீர்த்தனை மற்றும் சரளமான பாடல்களை இயற்றி, தெய்வ அனுக்கிரகத்திற்கும், மக்களின் அன்பிற்கும் பாத்திரம் ஆனார். ஸ்ரீகோபாலதாஸர் வாழ்ந்தது வெறும் 40 ஆண்டுகளே ஆனாலும், அவர் செய்த செயல்கள் அபாரமானவை. தம் சகோதர்கள் உட்பட பலருக்கும் ஹரிதாஸ தீக்ஷையை அருளிய அவருடைய ஆளுமை, நம்மால் என்றைக்கும் மறக்க முடியாது. அவர் நமக்காக விட்டுச் சென்றிருக்கும் பத பத்யங்களின் செல்வம், ஹரிதாஸ வாங்மயத்தின் அக்ஷய நிதி என்றே சொல்லலாம்.

ஹரிதாஸ சதுஷ்டயர்களில் ஸ்ரீஜகன்னாததாஸர் (1728 - 1809), வயதில் சிறியவராக இருந்தாலும், தம் கிருதிகளால் மிகப் பெரியவரே ஆகிறார். இவர் அன்றைய மந்திராலயத்தின் மடாதிபதிகளாக இருந்த, ஸ்ரீவரதேந்த்ர தீர்த்தரிடம் சாஸ்திர கிரந்தங்களை படித்து, த்வைத ஸித்தாந்தத்தில் புகழ்பெற்ற பண்டிதர் ஆனார். திருப்பதி ஸ்ரீனிவாஸனின் அருளால் பிறந்ததால், அவர் ஸ்ரீனிவாஸன் என்றே பெயர் பெற்றார். தம் குருகளின் ஆசியால் ஸ்ரீனிவாஸாசார்யர் எனப்பட்டார். மான்வியில் நிலைத்திருந்த ஸ்ரீனிவாஸாசார்யரின் புகழ் அனைத்து இடங்களிலும் பரவியது. இத்தகையவர், ஸ்ரீவிஜயதாஸரின் ஆளுமைக்கு கட்டுப்பட்டு, ஹரிதாஸ தீக்ஷையை பெற்றுக் கொண்டார் என்றால், இது ஒரு வியக்கத்தக்க செயலே ஆகும். இந்த அற்புதமான மாற்றத்தைக் குறித்து, மக்களிடம் ஒரு கதையே பரவியிருக்கிறது.

ஸ்ரீனிவாஸாசார்யர், ஸ்ரீவிஜயதாஸர் ஏற்பாடு செய்திருந்த பூஜைக்கு, தீர்த்த ப்ரஸாதத்திற்கு செல்லாமல் விட்டதால், அவருக்கு வயிற்றுவலி வந்தது என்றும், பிறகு ஸ்ரீவிஜயதாஸரையே சரணடைந்து, அவர் தம் சிஷ்யரான ஸ்ரீகோபாலதாஸர் மூலமாக அந்த சங்கடத்தை பரிகரித்தார்

என்றும், அப்போது ஸ்ரீனிவாஸாசார்யர், ஹரிதாஸ தீக்ஷையை ஏற்றுக் கொண்டார் என்றும் தெரியவருகிறது.

இந்த சம்பவம் எப்படி நடந்திருந்தாலும் சரி, ஸ்ரீஜகன்னாததாஸர், ஸ்ரீகோபாலதாஸரை வணங்கும் கீர்த்தனையோ, அல்லது ஸ்ரீவிஜயதாஸரை கொண்டாடும் க்ருதிகளையோ பார்த்தால், அவர்கள் இருவர் மூலமாகவும் ஸ்ரீஜகன்னாததாஸர் அபாரமான உதவிகளை பெற்றிருக்கிறார் என்று தெரிய வருகிறது. ஸ்ரீஜகன்னாததாஸரின் வாழ்க்கையில் நடந்ததான இந்த சம்பவத்தை, ஸ்ரீதாஸரே விளக்கி சொல்லியிருக்கும் இந்த கீழ்க்கண்ட இந்த வரிகளை நாம் கவனிக்க வேண்டும்.

கோரவ்யாதியனெ நோடி, விஜயராய
பூரி கருணவ மாடி
தோரிதரிவரெ உத்தாரகரெந்தந்தி
நாரப்ய தவபாத ஸாரிதெ ஸலஹெந்து

அபம்ருத்யுவனு தொடெதெ என்னொளகித்த
அபராதகள மரெதெ
சபலசித்தனிகொலிது விபுல மதியனித்து
நிபுணனெந்தெனிஸிதெ தபஸிகளிந்தலி

என்று பாடுகிறார். ஸ்ரீஜகன்னாததாஸரின் வாழ்க்கையில் ஸ்ரீவிஜயதாஸர் ரத்னத்தைப் போல என்றால், ஸ்ரீகோபாலதாஸர், சாட்சாத் தன்வந்திரியே ஆகிறார்.

பண்டரிபுரத்து பாண்டுரங்கனிடமிருந்து அங்கிதத்தைப் பெற்ற இந்த அபரோக்ஷ ஞானிகள், அந்த ஸ்வாமியிடம் வேண்டிக் கொண்டிருக்கும் தம் நன்றி, மிகவும் அர்த்தபூர்ணமானது.

விட்டலய்யா விட்டலய்யா ||ப
தடத்கோடி நிபகாய ஜகன்னாத விட்டலய்யா ||அப

பஜிஸுவெ நின்னனு அஜ பவ ஸுரனுத
பஜகாமரதரு குஜனகுடாரி

நீ கருணிஸதெ நிராகரிஸலு என்ன
ஸாகுவராரோ தயாகர மூருதி

ஷரணாகதரனு பொரெவெனெம்ப தவ
பிருது காயோ கரிவரத ஜகன்னாத

பரமாத்மனின் சரீரம், கோடி மின்னல்களைப் போல ஒளிமயமாக இருக்கிறது என்றால், அந்த ஒளியில் நீந்தி, புனீதர் ஆன ஸ்ரீஜகன்னாததாஸரின் ஜீவனமும், ஸ்வாமியிடமிருந்து அங்கிதத்தைப் பெற்ற அந்த நொடியிலிருந்து அபாரமாக ஒளிரத் துவங்கியது. ஷரணாகத ரக்ஷகனிடம் முறையிட்டு, அவனை பஜித்து, கல்பதருவைப் போன்றதான பகவந்தனின் கருணைக்கு பாத்திரரான அவர் இயற்றிய கிருதிகள் அனைத்தும் அற்புத பலன்களைக் கொடுப்பதாக இருக்கின்றன. மற்ற ஹரிதாஸர்களைப் போல, அவர் கீர்த்தனை, ஸுளாதி மற்றும் உகாபோகங்களை இயற்றியதோடு மட்டுமல்லாமல் 'ஹரிகதாம்ருதஸார' என்னும் முக்கியமான மஹாகிருதியை இயற்றி, அத்துடன் 'தத்வ ஸுவ்வாலி' ஆகியவற்றையும் இயற்றியிருப்பது மிகச் சிறந்த விஷயம் ஆகும்.

'தாஸோஹம் தவ தாஸோஹம்' என்று தம்முடைய ஹரிதாஸ்யத்தை போற்றிப் பாடும் கீர்த்தனையிலும், அவருடைய பாண்டித்யத்தின் மேன்மையே அபாரமாக வெளிப்படுகிறது.

ஹரிதாஸர் என்றால் ஒரு காலத்தில் ஏளனமாக பார்த்த அவர், ரங்க நின்ன கொண்டாடுவ மங்களாத்மர ஸங்கஸுகவித்து காயோ கருணா ஸாகரா - என்று பாடினார். அந்த பகவத்பக்தரின் செயல்களை வர்ணிப்பதில், ஸ்ரீமத் பாகவதத்தின் அர்த்தத்தையே சொல்கிறாரோ என்பதைப் போல இதிலிருந்து தெரிகிறது. ஸ்ரீஹரியை கொண்டாடியிருக்கும் ஹரிதாஸர்கள் பலர் இருக்கின்றனர். அந்த பகவந்தனின் சயனத்தைக் கண்டு, 'பலு ரம்யவாகிதெ ஹரிய மஞ்ச எலருணிகுல ராஜராஜேஷ்வரன மஞ்ச' என்று ஆதிசேஷனை ஸ்ரீஜகன்னாததாஸரைப் போல பாடியவர்கள் மிகக் குறைவே. இதே நுடியில் 'அதிஷோபிஸுதிதெ ஸ்ரீபதி வாஹன சதுரதஷ லோகதலி அப்ரதிவாஹன' என்று ஸ்ரீமன் நாராயணனின் வாகனத்தை பாடுவதிலும், ஸ்ரீஜகன்னாததாஸரின் பாண்டித்யம் அற்புதமாக வெளிப்படுகிறது.

ஸ்ரீஜகன்னாததாஸரின் கிருதிகளில், ஸ்துதி கீதங்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். ஸ்ரீகோபாலதாஸர், ஸ்ரீவிஜயதாஸர் மற்றும் ஸ்ரீவாஸுதேவ விட்டலரை கொண்டாடி தன்யர் ஆகியிருப்பதைப் போலவே, த்வைத ஸித்தாந்தத்தில் ஆளுமைகளான பல யதிவரேண்யர்களைப் பற்றி பாடி கொண்டாடியிருக்கிறார். தம் வித்யா குருகளான ஸ்ரீவரதேந்த்ர தீர்த்தரை மிகவும் தழுதழுத்த குரலில் பாடியிருக்கிறார். 'ஸ்மரிஸு குரு ஸந்ததியனு மனவே' என்னும் ஒரு கீர்த்தனையில் பரமஹம்ஸாக்யனான ஸ்ரீஹரியில் துவங்கி, ஸ்ரீபுவனேந்த்ர தீர்த்தர் வரை முக்கியமான யதிகளை பாடியிருக்கும் கிரமத்தை பார்த்தால், ஸ்ரீஜகன்னாத தாஸரின் யதிபக்தி எவ்வளவு சிறப்பானது என்பது தெளிவாகிறது. உத்தராதி மடத்தின் யதிபரம்பரையை ஸ்ரீதாஸர் புகழ்ந்திருப்பதும் மிகவும் சிறப்பு. ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளை கொண்டாடுவதில், அவரது நாக்கிற்கு சோர்வு இல்லவேயில்லை என்று தோன்றுகிறது. பம்பா க்ஷேத்திரத்தில் வீற்றிருக்கும், நவ வ்ருந்தவனங்களின் யதிகளின் ஸ்மரணைக்காக, ஸ்ரீஜகன்னாத தாஸர், இயற்றியிருக்கும் கீர்த்தனைகளை நினைத்துக் கொண்டாலே போதும். ஸ்ரீஜகன்னாத தாஸர் இயற்றியிருக்கும் நதி தாரதம்ய ஸ்தோத்ர மற்றும் தீர்த்த க்ஷேத்ர ஸ்துதிகள் ஆத்திகர்களுக்கு ஒரு அகராதியாகவே இருக்கிறது என்று சொல்லலாம். 'ஸுரபனாலயதந்தெ மந்த்ராலய கரெஸுவுது கங்கொளிஸுவுது நோள்பஜனகெ' என்னும் கீர்த்தனையில் ஸ்ரீஜகன்னாத தாஸர் மந்திராலயத்தின் மகிமையை, வெறும் மூன்று நுடியில் விளக்கியிருக்கிறார். ஸ்ரீராகவேந்திரர், காமதேனு ஸ்வரூபர் என்றும், கல்பதரு போன்றவர் என்றும் அழகாக விளக்கியுள்ளார். ஸ்ரீஜகன்னாததாஸர் தம்முடைய இளமைப் பருவதத்தை மந்திராலயத்திலேயே கழித்து, வளர்ந்தவர் என்பதை சிந்தித்தால், இந்த சிறிய கீர்த்தனையில் இருக்கும் மகிமைகள் மேலும் புரிகின்றன. ஒரு விதத்தில், ஸ்ரீஜகன்னாத தாஸருக்கு இந்த மந்திராலயம் என்பது ஸாதனா க்ஷேத்திரம் எனலாம். அவர், தமது அங்கிதத்தைப் பெற்ற பண்டராபுர மற்றும் பாண்டுரங்களை கொண்டாடியிருக்கும் கீர்த்தனைகளில், பாண்டுரங்காஷ்டக (பாண்டுரங்க பாரிஜாத) என்னும் வ்ருத்த நாம, அவருடைய மனோதர்மத்திற்கு மிகவும் தக்கதாக இருக்கிறது. 'பாலிஸோ பண்டரிபுர ராயா பாவனகாயா பீமரதிகூல நிலயா' என்னும் பல்லவியில் துவங்கும் அவருடைய அமிர்தவாணி, அடுத்தடுத்த நுடிகளில் அவருடைய அந்த:கரணத்தை புரிந்து கொள்வதற்கு அனைவரும் அதிக முயற்சி எடுக்க வேண்டியிருக்கிறது. இந்த அஷ்டகத்தின் முடிவு மிகவும் அற்புதமாக இருக்கிறது.

இட்டிகெ[3] பீட[2] ஸம்ஸ்தி[2]த பாதா[3] | மங்க[3]ள ப்ரதா[3] |
ஶாஶ்வத மோத[3] ஸுபதா[3] |
கொட்டு பாலிஸோ அனிமிஷ தரு | நின்னய சாரு |
மூருதியன்ன தோரோ |

புட்டலாரெனு ஜக[3]தொ[3]ளு தா[3]தா | என்னய மாதா |
லாலிஸு ஜக[3]ன்னாதா[2] |
விட்டல வ்ருந்தா[3]ரகரரஸா | ஸந்தத லேஸா |
நின்னவரிகெ[3] ஸ்ரீஷா ||9

ஶ்ரீஜகன்னாத தாஸரின் கீர்த்தனைகளில், ஸாஹித்யத்தின் அழகு மற்றும் சாஸ்திரத்தின் காம்பீர்யங்களை நாம் மேலோட்டமாக பார்க்கலாம். அவர் வர்ணித்திருக்கும் பகவந்தனின் வ்யாப்தோபாஸனை, இதற்கு ஒரு உத்தம உதாரணமாக இருக்கிறது.

அரிதவரிகதி ஸுலப ஹரியபூஜெ
அரியதவ நிர்பாக்யதர லோகதொளகெ

என்று முன்னுரை சொல்லி, மொத்த உலகத்தையும் பரமாத்மனின் நிலய என்று வர்ணித்து, அங்கு நடக்கும் சிறப்பு செயல்கள் அவனுடைய பூஜை என்று சிந்தித்தால் போதும் என்று சமர்த்தனம் செய்வது மிகச் சிறந்தது. ஏழு நுடிகளில் இருக்கும் இந்த கீர்த்தனையின் சில நுடிகளை பார்த்தால், ஶ்ரீஜகன்னாத தாஸரின் எண்ணம் என்னவென்று நமக்கு தெளிவாகிறது.

ஹெமாண்ட மண்டபவு பூமண்டலவெ பீட
ஸோமஸூர்யரே தீப, பூருஹகளு
சாமரகளதி விமல வ்யோமமண்டல சத்ர
யாமாஷ்டககளஷ்டதளத பத்மவுயெந்து
மளெயெ மஜ்ஜனவு திக்வலயங்களே வஸன
மலயஜானிலவே ஶ்ரீகந்த தூபா
இளெயொளகெ பெளெத தான்யகளெல்ல நைவேத்ய
தளதளிப மிஞ்சு கர்பூரதாரதிகளெந்து

நக்ஷத்ர மண்டலவே லக்ஷதீபாவளியு
தக்ஷிணோத்தர ஆயனகளே பலவு
வ்ருக்ஷ வல்லிஜ ஸுபல புஷ்பகளொளகெ லக்ஷ்மி
வக்ஷவ்யாபகனாகி தானெ போகிபனெந்து

குடுகு ஸப்த ஸமுத்ர சிடிலு கோஷவே வாத்ய
பொடவிபரிகீவ கப்பவே காணிகெகளு
உடுப பாஸ்கரர மண்டலகளாதர்ஷகளு
நடெவ நடெகளு ஹரிகெ பிடதெ நர்த்தனவெந்து

இத்தகைய வ்யாப்த உபாஸனையை பார்க்கும்போதெல்லாம், நமக்கு மேற்கு உலகத்தினர் விளக்கும் ப்ரக்ருதி உபாஸனை (Pantheism) நினைவுக்கு வருகிறது. அதுமட்டுமல்லாமல், நம் ரிஷிகள், பிரம்மாண்டத்திலேயே பகவந்தனை எப்படி பார்த்தனர் என்னும் சிந்தனையும் நமக்கு வருகிறது.

ஶ்ரீஜகன்னாததாஸரின் ஆளுமையின் சிறப்பினை விளக்கும் இன்னொரு கிருதி என்னவென்றால் அது 'பலவிது பாள்துதக்கெ' என்னும் ஒரு அற்புத கிருதி. இதில் 27 நுடிகள் உள்ளன. அனைவருக்கும் தம் வாழ்க்கையின் ஸார்த்தகத்வத்தின் கேள்வி, ஏதோவொரு சந்தர்ப்பத்தில் வராமல் இருப்பதில்லை. அதைப் போல, ஶ்ரீஜகன்னாத தாஸருக்கும் இந்த கேள்வி வந்தபோது, அவர் கொடுத்திருக்கும் பதிலே இந்த கீர்த்தனை. இதில் தத்வங்களின் சாரம் இருக்கிறது என்று கூற முடிந்தாலும், ஶ்ரீஜகன்னாத தாஸர் தமது வாழ்க்கையில் எந்த ஆதர்ஷத்தை வைத்துக் கொண்டிருந்தார் என்பதை இதில் காணலாம். ஹரிதாஸரான அவருக்கு

ஹருத^{3}யதி^{3} ரூபவு வத^{3}னதி^{3} நாமவு
உத^{3}ரதி^{3} நைவேத்^{3}யவு ஷிரதி^{3}
பத^{3}ஜல நிர்மால்யவனே த^{4}ரிஸி
கோ^{1}வித^{3}ர ஸதன ஹெக்க^{3}த^{3}வ கா^{1}யுவுதே^{3} |7|

என்பது ஒரு பாக்கியமாக இருந்தது.

பி[3]கித[3] க[1]ண்ட[2]தி[3]ம் த்[3]ருக்[1]பா[4]ஷ்பக[1]ளிம்
நகெ[3]மொக[3]தி[3]ம் ரோமக[3]ளொகெ[3]து[3]
மிகெ[3] ஸந்தோ[1]ஷதி[3]ம் நெகெ[3]தா[3]டுத[1]
நான்மொக[3]னய்யன கு[3]ண பொ[1]க[3]ளி ஹிக்கு[3]வுதே[3] ||11||

ஒரு புண்ணியமாகவே கருதினார். ஹரிதாஸர்கள், யதிகளைப் போல விரக்தர் அல்ல. அவர் ஸம்ஸாரத்தில் இருந்து, ஸம்யம தாரணையினால் தம் வாழ்க்கையை கழிக்கின்றனர். ஆகையால், ஸ்ரீஜகன்னாததாஸர்

க்[3]ருஹக[1]ர்மவ பே[3]ஸரத[3]லெ
ப[1]ரமோத்ஸஹத[3]லி மாடுத[1] மூர்ஜக[3]த[3]
மஹித[1]ன ஸேவேயிதெ[3]யெனுத[1]லி மோத[3]தி[3]
அஹரஹர்மனதி[3] சமர்ப்பிசுதி[1]ப்புதே[3] |12|

இது தம் கடமை என்று கருதினார்.

ஸ்ரீஜகன்னாத தாஸரின் கீர்த்தனைகளில் நிரம்பி வழியும் தத்வஞானத்தை பார்த்தவர்களுக்கு சிலமுறை, அவர் எப்படி இவ்வாறு சிறந்த ஆளுமையாக திகழ்ந்தார் என்னும் கேள்வி வரலாம். அதற்கு இந்த சிறிய கீர்த்தனையை பார்த்தால் புரியும்.

கொளலேனு புண்யவ மாடி கிருஷ்ணன கரவனைதிதெ ||ப
பஹளுக்ரதபவ மாடிதந்த போகவாதிதெ ||அப

தரிஸல்ஹரியு ஜகத மோஹிப ஷகுதி பந்திதெ
ஸ்மரன பாதெயு ஆதன நுடிகெ ஸ்மரணெகெய்திதெ ||1

வாரிஜாக்ஷன முககிரிந்தா ஸாஹஸ பந்திதே
ஸ்ரீரமெயரிங்கெ பலவாதஸுயெ தொரெகிதே ||2

புவன ஸதன ஜீவரிகெ பாதபவாளீதே
ஜகன்னாத விட்டலன முகரிகெ ஷப்தவில்லத்ஹோயிதே ||3

இந்த அபூர்வமான கீர்த்தனையில் சில விஷயங்கள் தெளிவாக இல்லாதிருந்தாலும், இதில் உள்ள சுவாரசியமான விஷயத்தை கண்டு மகிழ அது தடையாக இல்லை. கோபியர்கள் தமக்குள்ளேயே பேசிக் கொள்வதைப் போல இந்த கீர்த்தனை இயற்றப்பட்டிருப்பதால், இதன் பாவம் மிகவும் சிறப்பாக வந்திருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனின் உதட்டின் ஸ்பர்ஷம் பெற்ற குழலின் புண்ணியத்தைக் கண்டு அவர்கள் வருத்தம் கொள்கிறார்கள். அந்த பாக்கியத்தை பெறுவதற்கு, அந்தக் குழல் எவ்வளவு புண்ணியம் / தவம் செய்திருக்கிறதோ என்னும் கற்பனை இங்கு வந்திருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனின் கை பட்ட உடனேயே, அதற்கு உலகத்தையே மயக்கும் சக்தி வந்துவிடுகிறது. அல்லது, மன்மதனின் தவமே, ஸ்ரீஹரியின் நுடிகளின் மூலம் பரவி வருகிறதோ என்னும் கற்பனையும் அழகாக இருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனின் பேச்சுக்களே குழலின் மூலம் சக்தியைக் கொடுக்கிறது. உலகத்தின் மக்களை ஆளும் சக்தியை அந்த குழல் பெற்றிருக்கலாம் என்று இருப்பதான வரிகள் இந்த கீர்த்தனையின் சிறப்பினை அழகாக விளக்குகின்றன. இந்த கிருதி மிகவும் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், இதன் மேல் மேலும் ஆராய்ச்சிகள் செய்யப்பட உள்ளன.

ஶ்ரீஜகன்னாத தாஸர் இயற்றியிருக்கும் தத்வ ஸுவ்வாலிகளின் எண்ணிக்கை இன்றும் தெளிவாக சொல்ல முடியாமல் இருக்கிறது. அனைத்து ஸுவ்வாலிகளிலும் அங்கிதம் இல்லையென்றாலும், அந்தந்த விஷயத்தை முடிக்கும் ஸுவ்வாலியில் இருக்கும் அவரது அங்கிதத்தை கவனித்தால், ஶ்ரீஜகன்னாத தாஸர், அந்தந்த விஷயங்களுக்காகவே அந்த ஸுவ்வாலிகளை இயற்றியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. கன்னடத்தில் மக்களுக்குப் பிடித்தமான, த்ரிபதியின் சந்தஸ்ஸிலேயே இயற்றப்பட்டிருக்கும் இந்த கீர்த்தனையில் சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தின் நடை மற்றும் விஷயத்தின் ஆழங்கள் மிகவும் கவனிக்கப்பட வேண்டியவை. அவருக்கு சகஜமாகவே இருக்கும் தத்வஞானமே முக்கியமான விஷயமாக இருப்பதால், இவற்றை தத்வ ஸுவ்வாலி என்று அழைத்திருப்பது சரியானதே ஆகும். த்ரிபதிகளை 'ஸுவ்வாலி' என்றே நம் கவிகள் அழைப்பதால், இதற்கு பிறர் கூறும் வேறு சில பெயர்கள் சரியில்லை என்றே சொல்லத் தோன்றுகிறது. வசன ஸாஹித்யத்தில் த்ரிவிதிகள் என்று வழக்கத்தில் இருப்பதைக் கண்டால், நம் பத்யங்களையும் அப்படியே அழைத்திருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது. ஆனால் இங்கு ஶ்ரீஜகன்னாததாஸர், மிகவும் ஆழமான விஷயங்களை எவ்வளவு சுலபமாக இந்த ஸுவ்வாலிகளில் அடக்கி கொடுத்திருக்கிறார் என்பதை நாம் மிகவும் வியப்புடன் பார்க்கிறோம்.

ஹனும பீ[4]மானந்த[3] முனிராய என்ன து[3]
ர்கு[3]ணக[3]ளெணிஸித[3]லெ ஸலஹெந்து[3] | ஸலஹெந்து[3]
பி[3]ன்னயிபெ விக்ஞானரூப விஜிதாத்ம ||1-(52)

என்னும் ஸுவ்வாலியில் அவதார த்ரயங்களை மிகவும் சரளமாக நிரூபித்திருப்பது மட்டுமல்லாமல், 'விக்ஞான ரூப விஜிதாத்மர்' என்னும் சிறப்பு குறிப்பினால் அந்த மூவரின் சிறப்பினை தெளிவுபடுத்தியிருக்கிறார்.

நடெ[3]னுடிக[3]ளபராத[4] ஒடெʒய நீனெணிஸித[3]ரெ
ப[3]ட[3]வ நானெந்து[3] ப[3]து[3]க-லோ | ப[3]த[3]கலோ கருணாளு
கடெ[3]பீ[3]ள்வதெ[3]ந்தோ[1] ப[4]வதி[3]ந்த[3] ||11-(227)

என்னும் ஸுவ்வாலியில் அடங்கியிருக்கும் அர்த்த பாவத்தை யாராலும் எளிமையாக புரிந்து கொள்ளமுடியும்.

பூ[4]மண்டலவே பீட[2] வ்யோம மண்ட[3]ல ச[2]த்ர
ஸோம ஸூர்யருக[3]ளே மஹதீ[3]ப | மஹதீ[3]ப நக்ஷத்ர
ஸ்தோமகளே நினகெ[3] உபதீ[3]ப ||56-(272)

என்னும் விவரணையில், ஶ்ரீஜகன்னாத தாஸருக்கு மிகவும் ப்ரியமான வ்யாப்த உபாஸனையின் விஷயமே வெளிவந்திருக்கிறது.

மாயவாதி[3] மதவு ஹேயவெம்பு[3]து[3] ஸித்த[3]
தாயிதந்தெ[3]க[3]ளு ஸதி புத்ர | ஸதிபுத்ரகலித[3]ரெ
பா[3]யி பி[3]ட்யாகே அளுதித்தி[3] ||8-(361)

என்னும் ஸுவ்வாலியில் அத்வைத மதத்தினை மிகவும் புத்திசாலித்தனத்துடன் புறக்கணித்திருக்கிறார்.

ஶ்ரீஜகன்னாத தாஸரின் இந்த 'தத்வஸுவ்வாலி' யில் ஒவ்வொன்றும் மணியைப் போல ஒளிர்வது மட்டுமல்லாமல், மொத்தமாக இந்த கிருதியை பார்த்தால், அது அவர் நமக்காக கோர்த்த தத்வஸாரத்தின் தவநிதியைப் போலவே இருக்கிறது எனலாம்.

ஶ்ரீஜகன்னாததாஸர் தாம் கற்றறிந்த ஞானத்தின் ஸாரமே 'ஹரிகதாம்ருதஸார' என்னும் கிருதியாக பொங்கி வெளிவந்தது எனலாம். ஒரு புறம், அவர் ஶ்ரீனிவாஸாசார்யராக இருந்தபோதே எதை சம்ஸ்கிருதத்தில் எழுதியிருக்கலாமோ, அதனையே, அவர் ஹரிதாஸர் ஆனபிறகு, கன்னடத்தில் கிருதியாக மாறி, மாத்வ மதத்தின் மணிமகுடமாக ஆகி, பண்டித பாமரர்களின் மரியாதைக்கு பாத்திரம் ஆகியிருக்கிறது. அவரே சொல்லிக் கொள்வதைப் போல, அவருடைய வாழ்க்கையின் அமிர்த பலனாக இன்றைக்கும் சிறிதும் களை குன்றாலும் அது வழிவழியாக வந்திருக்கிறது. ப்ரமேயங்கள் நிறைந்த, 32 சந்திகளை கொண்டதான, இந்த கிருதியை, பற்பல கீர்த்தனைகள், ஸுளாதிகள், ஸுவ்வாலிகளின் வரிசையில், வைப்பதைவிட, இதனை தனியாக ஒரு கிரந்தம் என்று நினைப்பதே சரியாக இருக்கும். இதில் ஸாஹித்யம் ஒரு மாத்யமமாக (medium) இருக்கிறதே தவிர, அதுவே கிரந்தத்தின் முக்கிய நோக்கம் இல்லை எனலாம். இந்த விலை மதிப்பற்ற க்ருதிக்கு கன்னடத்தில் மட்டுமல்லாமல், சம்ஸ்கிருதத்திலும் பண்டிதர்கள் வ்யாக்யானம் எழுதியிருக்கிறார்கள் என்னும்போது, இதன் மகிமையை என்னவென்று சொல்வது?. இந்த கிரந்தத்திற்கு பல-ஸ்துதியை எழுதியிருக்கும் ஶ்ரீதவிட்டல தாஸர் சொல்வதைப் போல :

ஶ்ரீக்ருதீபதியமல குணகளு
ஈ க்ருதியொளுண்டாத பளிகிது
ப்ராக்ருதவெ சம்ஸ்க்ருதத சடகரவேனு சுகுணரிகெ ||5

என்னும் புகழ்ச்சி, மிகவும் சரியாகப் பொருந்துகிறது. ஶ்ரீஜகன்னாததாஸர் தம் இந்த கிருதியினால் பேசுமொழியான கன்னடத்திற்கு சம்ஸ்கிருதத்தின் பட்டியையே கட்டினார் என்றபிறகு, இதன் மேன்மையை மேலும் பேசும் அவசியம் இல்லை.

ஶ்ரீஜகன்னாததாஸர் இத்தகைய சிறந்த கிரந்தத்தை இயற்றியதோடு மட்டுமல்லாமல், பலருக்கு ஹரிதாஸ தீக்ஷையை அளித்தது, இன்னொரு சிறப்பான விஷயம். அவருடைய சிஷ்யர்களின் எண்ணிக்கை 20க்கும் மேலாக இருக்கிறது. அவர்களில் ப்ராணேஷ தாஸர், ஶ்ரீத விட்டல தாஸர், அபினவ ஜனார்த்தன விட்டல தாஸர் ஆகியோர் முக்கியமானவர்கள். ஶ்ரீகிருஷ்ணதாஸரிடமிருந்து அங்கிதத்தைப் பெற்ற ஶ்ரீகுருஜகன்னாத தாஸரின் (கோஸகி ஸ்வாமிராயாச்சார்) பெயரும் இங்கு சொல்லப்பட வேண்டியது.

ஶ்ரீகோபாலதாஸரின் ப்ரபாவத்தினால் ஹரிதாஸ தீக்ஷையை ஏற்றுக்கொண்ட ஶ்ரீவ்யாஸ தத்வக்ஞரின் (பொயு. 1704-1800) ஆளுமையும் ஹரிதாஸ பரம்பரையில் கவனிக்க வேண்டியதாகும். ஜஜியின் வெங்கட ரமணாசார்யரின் மகனான ஜஜி வெங்கட ராமாசார்யர் சில வயது வரை மிகவும் சாதாரணமாகவே இருந்தார். பிறகு ஶ்ரீகோபாலதாஸர் கூறியதைப் போல, பிறகு அவர் தம்முடைய தந்தையைப் போலவே, பெரிய பண்டிதர் ஆனார். ஆனாலும், அவருக்கு த்ருப்தி ஆகவில்லை. ஶ்ரீகோபாலதாஸரைப் போலவே அபரோக்ஷ ஞானிகளாகி, கன்னடத்தில் கிருதிகளை இயற்ற வேண்டும் என்னும் விருப்பம் வந்தது. அப்போது அவர் அன்றைய மந்திராலய மடாதிபதிகளாக இருந்த ஶ்ரீபுவனேந்திர தீர்த்தரிடமிருந்து ஸன்யாச ஆசிரமத்தை பெற்று, 'ஶ்ரீவ்யாஸ தத்வக்ஞ தீர்த்தர்' என்று ஆனார். அதன்பின், பகவந்தனிடமிருந்து பெற்ற 'வாஸுதேவ விட்டல' என்னும் அங்கிதத்தினால் கன்னடத்தில் கீர்த்தனைகளை இயற்றினார். சம்ஸ்கிருதத்தில் அனேக கிரந்தங்களை இயற்றிய ஶ்ரீவ்யாஸ தத்வக்ஞருக்கு கன்னடத்திலும் கீர்த்தனைகளை இயற்ற வேண்டும் என்னும் ஆசை இருந்ததைப் பார்த்தால், இது அன்றைய சூழ்நிலையின் வெளிப்பாடே ஆகும் என்று எண்ணத் தோன்றுகிறது. வேணிஸோமபுரத்தில் கோபாலகிருஷ்ண தேவரை பிரதிஷ்டை செய்த, வாஸுதேவ விட்டலருக்கு, மதுர பாவத்தில் இருக்கும் விருப்பம், நம்மையும் மிகவும் ஈர்க்கிறது.

தங்கி நோடுவ பாரெ என்ன மனெயொள
அங்கணதொளகொப்ப ஷ்யாமல புருஷ

திங்களமொகதவ ஐதானெ தன்ன பா
தங்களல்லெ என்ன ப்ராண முக்ய
அங்கஸோகலு தானிதர விஷயங்கள
ஸங்கவ பிடிஸுவ எம்ம புண்ய ஆ
தங்கெ ஸமர்ப்பிஸி ஸுகிஸுவ நம்மன்னு
ஹ்றயாங்கதரு மாடலி வாஸுதேவ விட்டல

ஸ்ரீகிருஷ்ணனை தம் வீட்டில் அங்களத்திலேயே காணும் நற்பேறை பெற்ற தாஸருக்கு கோகுலத்தின் கோபியர்களின் அந்தரங்கத்தின் நினைப்பே ஆகியிருக்க வேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணனுக்காக காத்திருக்கும் கோபிகை ஒருவருக்கு அவளுடைய தோழி ஒருத்தி சமாதானம் செய்யும் ஸுளாதி ஒன்றின் ஒரு நுடி இவ்வாறு இருக்கிறது.

த்வனி கேளிஸுதிதெ கேளி கொளலின ஹரிய
மனெ ஸேருதலிவெ கோவுகளு நிஸ்சித
மன நிஸ்சித மாடி எதுரிகெ தெரளுவெ
மனமெச்சலிஹனெ ஹரியனு நீனு
பினுகு விஷய பிடு மனஸு ஏகவ மாடு
வனஜாக்ஷ வாஸுதேவ விட்டல பந்தா

இன்னொரு ஸுளாதியில் இதைப் போலவே தம்மை ஆத்ம ஸமர்ப்பணம் செய்து கொள்ளும் விவரம் இருக்கிறது.

ஏனு பிட்டரெ பிடோ ஏனு கொட்டரெ கொடோ
ஆனெ நம்புவுதில்ல மனதொளு இனிதன்ன
நீனெவெ கேள் காந்தா மனஸின பயகிதெ
மானதொடெய வாஸுதேவ விட்டலரேயா
தீனவத்ஸல தேவ முனிஸின்னு பிடோ கிருஷ்ணா

கீர்த்தனை ஒன்றில், கிருஷ்ணனுக்காக முறையிடும் தாஸர வாணியை கேட்ட உடனேயே, அவருடைய முறையிடல் எவ்வளவு ஆழமானது என்பது தெரிகிறது.

பாரோ பாரோ ப்ராணகாந்த, தோரோ முகவ நோடுவெ
தோரி தோரி நின்ன பதவாரிஜவ நம்பிதெ ||ப

பாரிபாரிகு மார என்ன கோரிசுதிருவனு
காருமாடபேட என்ன ஸேரி ஆனந்த நீடோ

பந்தமாடபேட என்ன கந்துஜனக லாலிஸோ
அந்தரங்கத பாதெகெ நா, சிந்தெ படுதிருவெ

வாஸுதேவவிட்டல நின்ன தாஸியல்லவெ நானு
ஆஸெயிந்த பந்தெ பரிஹாஸ மாடபேட

ஸ்ரீபாதராஜர் மற்றும் ஸ்ரீவ்யாஸராஜருக்குப் பிறகு, மிகவும் இனிமையான வரிகளில், பல கிருதிகளை இயற்றியவர்களில், வாஸுதேவ விட்டலர் நமது மனதினை கவர்கிறார்.

அவர் இயற்றிய மற்ற கீர்த்தனைகளில், யஷோதெ கிருஷ்ணர்களின் பேச்சுவார்த்தை என்னும் ஒரு கீர்த்தனை மிகவும் சுவாரசியமாக உள்ளது. ஏழு நுடிகளில் இருக்கும் இந்த கீர்த்தனையில், தாய் மக்களின் பேச்சுவார்த்தையின் தொகுப்பு மிகவும் இனிமையாக இருக்கிறது.

தம்ம கேளித்யா பரபொம்ம நீனந்து
ஸும்மானெ புஸிதுத்யாரம்ம பேளிதரெ? ||ப

நித்யத்ருபிதனு நீனந்தல்லொ கிருஷ்ணய்யா
ஸுத்தி பந்தினெ நாலிகாரதெ அம்மா
ஹத்து ஸாவிர பானுப்ரபெயுள்ளவனந்தோ
கத்தல மனெ போகலொப்பனஞ்சுவெனெ
...
மூடதைத்யரிகெதெதல்லண நீனந்தோ
ஜாடமையன நோடி அஞ்சுவெனெ
பேடித புருஷார்த்த கொடுவனு நீனந்தோ
பேடிதெ நம்மம்ம அம்மெ கொடெந்து

பெட்டவ நீனெத்திதந்தல்லோ கிருஷ்ணய்யா
பெட்டு நின்னது நோடெ எத்தலாரெ
ஏஸு லக்ஷணவிவெ நோடபேகெந்தரெ
புஸித்யாகுஸுரானு நோடெந்தனு
வாஸுதேவவிட்டலா ஈ பரி கோபிய
மோஹகொளிப கிருஷ்ண நம்ம ஸலஹலி

இங்கு நடந்த பேச்சுவார்த்தையில் சகஜமாக வரும் யசோதையின் வியப்பு கலந்த பேச்சு, அவள் பேசும் ஒவ்வொரு நுடிக்கும் பாலகிருஷ்ணன் கொடுக்கும் இனிமையான பதில்கள் நம்மை மயக்குகின்றன. கிருஷ்ணனின் பால லீலையை நிரூபிக்கும் இந்த கீர்த்தனை அழகாக இருக்கிறது.

ஸ்ரீவ்யாஸ தத்வக்ஞர், ஸம்ஸ்கிருத மற்றும் கன்னட இரண்டிலும் காட்டியிருக்கும் அபிமானத்தை கண்டால், ஸ்ரீவ்யாஸராயரின் மற்றும் ஸ்ரீவாதிராஜரின் நினைவு வருகிறது. இத்தகைய ஹரிதாஸர்களை நாம் 'உபயபாஷாவிதர்' (இரு மொழி வித்தகர்) என்று சொல்லலாம்.

நம் ஹரிதாஸர்களின் பரம்பரையில் ஹரிபக்தையாக அனைவரின் இதயத்தையும் கவர்ந்த பெண்களில், ஹொளவனகட்டெ கிரியம்மாவிற்கு (பொயு 1750) முதன்மை இடம் இருக்கிறது. ஸ்வபாவத்திலேயே இருந்ததான தன் தெய்வ பக்திக்கு எவ்வளவு தடைகள் வந்தாலும், அவை அனைத்தையும் தன் ஸௌம்ய குணத்தினாலேயே பரிகரித்துக்கொண்டு, ஹொளவனகட்டெயின் ரங்கனின் சேவையில் தன் வாழ்க்கையை சார்த்தகம் ஆக்கிக் கொண்ட இந்த ஹரிதாஸினியின் பாடல்கள் இதயத்தை தொடுமாறு இருக்கிறது. கோலங்களை இடுவதில் நிபுணியான இந்த ஹரிதாஸினியின் பக்திக்கு ஸ்ரீகோபாலதாஸர் மட்டுமல்லாமல், மந்திராலயத்தின் பீடாதிபதிகளும் மனம் இரங்கினார் என்றால், அதைப் பற்றி அதிகமாக சொல்லத் தேவையில்லை. இவருடைய கீர்த்தனைகளில் இருக்கும் அற்புத நடை மற்றும் எளிமையான குணங்கள் கவனிக்கத்தக்கவை. ஹரிஹர க்ஷேத்திரத்தின் அருகில் வாழ்ந்த இவருக்கு ஹரி-ஹரர்களில் இருந்த பக்தி இந்த ஒரு சிறிய கீர்த்தனையில் தெரிய வருகிறது.

ஈத லிங்க தேவ ஷிவனு ஆத ரங்கதாம விஷ்ணு
மாதனாடோ மங்குமனுஜா மனதஹங்கார பிட்டு ||ப

வேதக்கெ ஸிலுகதாதனீதா வேதனால்கு தந்தனாதா
பூதி மையொளு தரிஸிதனீதா இத்த கிரிய பொத்தனாதா ||1

வ்யாதனாகி ஒலிதனீத, மாதவ மதுஸூதனனாதா
மதனன்னு உருஹிதனீதா, மதனபுத்ரன படெதாதனாதா ||2

கங்கெய பொத்தாதனீதா ஹாங்கெ கருடகமனனாதா
துங்க ஹொளவனகட்டெ லிங்கனீதா ரங்கநாதா ||3

ஹரிஹரர்களில் இருக்கும் பொதுவான தர்மங்களை குறிப்பதான இந்த பாடல், கிரியம்மாவின் கருணைப் பார்வைக்கு ஒரு சாட்சி எனலாம்.

கடெகண்ணினலி நீ நோடிதரென்னய்ய
பிடபேடவோ கையா
படவர பந்து பஹு க்ருபாஸிந்து
ஒடெய நீனல்லதெ நமகெ ப்யாரில்லவோ ||ப

ஷத அபராதவ மாடிதெனய்யா
ஸேரிதெ நா நின்ன பென்ன
அதி பாதகி அஜமிளன உத்தரிஸிதெ
ப்ருதிவியொளகெ பிருதாந்த ஸ்ரீகாந்த ||1

நெலெகாணதெ நானா பரி சிந்திஸி
ஒளகாதெனோ ஹீகெ
பளலிஸப்யாடவோ பக்த குடும்பி
நளனதளாம்பக நீ ஸலஹென்னனு ||2

ஸாரி ஹேளுவெ என்னய பளகத
ஆராபார நின்னது
ஹேரோப்பிஸித ம்யால்யாதர ஸுங்கவு
காருண்யநிதி ஹொளவனகட்டெ ரங்கய்யா ||3

சம்சார சுறழ்சியில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த கிரியம்மா அவர்களுக்கு, அதிலிருந்து விடுதலை பெற்று, பரமாத்மனில் சரணாகதி அடைவதை குறிக்கும் இந்தப் பாடல் குறிப்பிடத்தக்கது. தன் உற்றார் உறவினர்களின் பாரங்கள் அனைத்தும், பகவந்தனிடம் விட்டு, ஸர்வ அர்ப்பண சித்தத்தினால் தேவரை முறையிடும் அவளுடைய மனோதர்மம், இங்கு மிகவும் எளிமையாக சொல்லப்பட்டுள்ளது. கிரியம்மா கொடுத்திருக்கும் உவமை புதியதாக இருந்தாலும், அதனை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இங்கு கொடுத்திருக்கும் அவருடைய மகிமையை நாம் இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

கிரியம்மாவின் பாடல்கள் அனைத்தும் மிகவும் மகிமை பொருந்தியதாக இருக்கிறது ஏன் என்றால், அவர் மக்கள் சார்பாக பகவந்தனிடம் அவர்களின் குறைகளை முறையிடுகிறார் என்பதற்காகவே.

மளெய தயமாடோ ஸ்ரீரங்கா நிம்ம
கருண தப்பிதரெ உளியதீ லோக ||ப

பஷுஜாதி ஹுல்லெ ஸாரங்க ம்ருகளு பஹள
ஹஸிது பாயாரி பத்தித கெரெகெ பந்து

த்ருஷெயடகதெ தல்லணிஸி மூர்ச்செயகொண்டு
தெஸெதெஸெகெ பாயிபிடுதிஹுவய்ய ஹரியெ ||1

தரெயாகி இன்னு த்ரவகுந்தித பாவிய நீரு
மகிமகிது பாத்ரெயலி நாரியரு
ஹகலெல்ல தருதிஹரு யோசனெய மாடுத்த
பேகதிந்தலி தரிஸோ வ்ருஷ்டியனு ஹரியெ ||1

ஸந்து ஹோதுவு ஜ்யேஷ்ட ஆஷாட ஷ்ராவண
பந்திதெ பாத்ரபதமாஸவீக
இந்து புரந்தரகெ ஹோளி வ்ருஷ்டிய தரிஸோ
ஸந்தேஹவின்யாகெ ஹொளவனகட்டெ ரங்க ||1

இந்த கீர்த்தனையில் வரும் விளக்கங்கள் மிகவும் போற்றப்பட வேண்டியவை. ஒவ்வொரு நுடியிலும் மழைக்காக வேண்டுகோள் வைக்கிறார். மழை இல்லாததால் விலங்குகளுக்கு ஏற்படும் பிரச்னைகள், கிணறிலிருந்து தண்ணீர் பிடிக்கும் பெண்களுக்கு உண்டாகும் தொந்தரவுகள், மழைக்காலம் ஆகிவிட்டாலும், மக்களுக்கு பஞ்சத்தினால் உண்டாகும் தொந்தரவுகள் ஆகிய வர்ணனைகளைப் பார்த்து நம் கண்கள் கலங்குகின்றன. கிரியம்மாவின் இந்த வேண்டுகோளால், தாராளமாக மழை பெய்தது என்பது வரலாறு. பஞ்ச / வறட்சி காலத்தின் நிலையோ இதயத்தை துளைக்கிறது.

கிரியம்மாவின் மனதில் இருக்கும் இந்த கருணை பாவமே, அவரது அனைத்து பாடல்களிலும் தானாக வெளிவந்திருக்கிறது. அவர் இயற்றியிருக்கும் 'சந்த்ரஹாஸன கதெ' - கன்னடிகர்களின் விசேஷ மரியாதையை பெற்றிருக்கிறது. இவற்றைத் தவிர, அவர் இயற்றியிருக்கும் கிருஷ்ண கொரவஞ்சி, பிரம்ம கொரவஞ்சி, உத்தாளிகன கதெ, லவ-குஷட காளக, ஸீதா கல்யாண, ஷங்கர கண்டன ஹாடு - ஆகிய மற்ற கிருதிகள், அதிகமாக வெளியில் தெரியாவிட்டாலும், அவருடைய மனதின் எண்ணத்தை பிரதிபலிப்பதாக இருக்கின்றன.

ஹரிதாஸ ஸாஹித்யத்தின் இந்த பகுதி (காலகட்டம்), இதற்கு முன்னரான கட்டத்தைப் போல இல்லாமல், மேலும் அனேக ஹரிதாஸர்களின் கைங்கர்யத்தால் நிறைந்திருக்கிறது. ஸ்ரீவிஜயதாஸரின் சிஷ்ய பரம்பரையினால் படிப்படியாக வளர்ந்த இந்த ஹரிதாஸர்களின் பரம்பரை, இன்றைக்கும் வரை வளர்ந்து வந்திருப்பதை கண்டால், வியப்பாக இருக்கிறது. ஸ்ரீகோபாலதாஸர், ஸ்ரீமோகனதாஸர், ஸ்ரீஜகன்னாத தாஸர் - இந்த மூவரின் சிஷ்யர்களின் எண்ணிக்கையே தொடர்ந்து சில நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்திருக்கிறது. இந்த பகுதியில், சில முக்கியமானவர்களை மட்டும் அறிந்து, ஹரிதாஸர்களின் பரம்பரை எப்படி வளர்ந்திருக்கிறது என்பதை ஊகிக்கலாம். ஸ்ரீவிஜயதாஸரின் காலத்திலிருந்து வளர்ந்து வந்ததான இந்த ஹரிதாஸ பரம்பரையில், த்வைத ஸித்தாந்தத்தின் ப்ரமேயங்களின் விளக்கங்கள் / ஸாரம் ஆகியவற்றை அனைவரும் பாடியிருப்பதை கவனிக்கலாம்.

ஸ்ரீவிஜயதாஸரின் ஸுளாதியில் நாம் காணும் இந்த சாஸ்திர குறிப்புகள், ஸ்ரீகோபால்தாஸரின் கீர்த்தைகளில் மேலும் வளர்ந்து, ஸ்ரீஜகன்னாத தாஸரின் கிருதிகளில் அது மேலும் வளர்ந்து 'ஹரிகதாம்ருதஸார' எனப்பட்டு, வானத்தையே தொட்டது. ஸ்ரீமோகனதாஸரின் 'கோலு ஹாடு' இதனை பார்த்தால், சாஸ்திர த்ருஷ்டி என்பது அவர்களில் எப்படி வேரூன்றி இருந்தது என்பதை பார்க்கலாம்.

விஜய நகர சாம்ராஜ்யம் விழுந்தபின், எப்படி ஹிந்து தர்மம் மறுபடி புத்துணர்ச்சி பெற்று ஒளிர்விட்டு வளரத் துவங்கியதோ, அதே போல, ஹரிதாஸ ஸாஹித்யத்தின் இந்த காலகட்டமும் கூட, நம் ஹரிதாஸர்களின் முயற்சியால், இன்றைய ராய்ச்சூரின் சுற்று

வட்டாரங்களில் ஒளிர்ந்து வளரத் துவங்கியது. மந்த்ராலயத்தின் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள், ஆதோனியின் நவாப்பிடமிருந்து தமக்கு வேண்டிய நிலத்தை தானமாக பெற்றபின், அவருடைய ஆளுமை எப்படிப்பட்டது என்பதை நாம் அறியலாம். கத்வாலின் அரசனுக்கு வந்த ஆபத்தினை பரிகரித்த ஸ்ரீவ்யாஸ தத்வக்ஞர் அவனிடமிருந்து பற்பல கிராமங்களை பெற்றார். இத்தகைய அபரோக்ஷ ஞானிகளின் மகிமைகள் எப்படிப்பட்டது என்பதை நாம் அறியலாம்.

***

4. அபரோக்ஷ அனுபவம்

ஹரிதாஸர்களை அபரோக்ஷ ஞானிகள் என்று அழைப்பது வழக்கம். ஆனால், இந்த அபரோக்ஷ அனுபவம் அப்படியென்றால் என்ன என்பதை விளக்குவது கடினம். அதை ஒருவர் அனுபவித்தே உணரவேண்டியிருப்பதால், மற்றவர்களுக்கு விளக்குவது சாத்தியமில்லை. ஆனால், யாராக இருந்தாலும் அத்தகைய அபரோக்ஷ அனுபவத்தை தன் வார்த்தைகளில் விளக்கும்போது, அதைப் பற்றிய ஒரு சிறு அறிமுகமாவது நமக்குக் கிடைக்கிறது. 'அபரோக்ஷம்' என்ற சொல்லைக் கேட்டவுடனேயே, 'பரோக்ஷம்' என்றும் ஒன்று இருக்கவேண்டும் என்று நமக்குத் தோன்றுகிறது. இந்த இரண்டின் வேறுபாடு என்னவென்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியதாகிறது.

த்வைத ஸித்தாந்தத்தில் சிறந்த அறிஞர் என்று கருதப்படுபவரான திரு. தாவணகெரெ பீமராவ் அவர்கள், 'ஞானம் என்றால் முக்கியமாக பிரம்மதரிசனம் என்றே அர்த்தமானாலும், அதற்கு முன், ஸ்ரவண மனனாதிகளால் கிடைக்கப்பெறும் ஸ்ரீஹரியின் மஹாத்ம்ய ஞானமும், ஞானம் என்றே அறியப்படுகிறது. முதலாவது அபரோக்ஷ ஞானம் என்றும், இரண்டாவது பரோக்ஷ ஞானம் என்றும் சொல்லப்படுகிறது' என்கிறார். அதாவது, ஸ்ரவண, மனன, த்யானங்களால் அபரோக்ஷ ஞானத்தை சம்பாதித்து, அதன் மூலம், பிரம்மதரிசனத்தைப் பெறுவதே, பரோக்ஷ ஞானம் என்று பொருள் வருகிறது.

ஹரிதாஸர்கள் ஸ்ரீஹரியின் அருளுக்காக வேண்டி, தம்முடைய சுக துக்கங்கள் அனைத்தையும் அவனிடமே சமர்ப்பித்து, அந்த திவ்ய அனுபவத்தைப் (Mystical experience) பெறுவதை அபரோக்ஷ ஞானம் என்று சொல்லலாம். மற்றவர்களுக்கு, பிரம்மஞானம் என்றால் பரோக்ஷ ஞானம் என்று சொல்வதே, தாஸர்களுக்கும் பொருந்துகிறது என்பதால், அவர்களை அபரோக்ஷ ஞானிகள் என்று சொன்னால், அதில் தவறில்லை.

ஷிவசரணர்களில் 'அனுபாவ' என்னும் சொல்லுக்கு எவ்வளவு ஆழமான, விசாலமான அர்த்தம் இருக்கிறதோ, ஹரிதாஸர்களில் 'அபரோக்ஷ ஞானம்' என்பதற்கு அவ்வளவே ஆழமான அர்த்தம் இருக்கிறது. இத்தகைய அபரோக்ஷ ஞானத்தைப் பெறுவதற்காக, நாம் செய்யவேண்டிய சாதனைகளைப் பற்றி நம் முன்னோர்கள் விளக்கமாக சொல்லியிருக்கிறார்களே தவிர, அபரோக்ஷ அனுபவம், அதன் சுவாரசியங்கள் ஆகியவற்றை விளக்குவதற்கு யாரும் முயலவில்லை.

ஸ்ரீசங்கராசார்யர் இயற்றியிருக்கும் 'அபரோக்ஷானுபூதி' என்னும் கிரந்தத்தில், அந்த நிலையை அடைவதற்குத் தேவையான சாதனைகளை சொல்லியிருக்கிறாரே தவிர, தெய்வ சாக்ஷாத்காரத்தினால் சாதகனுக்குக் கிடைக்கும் மகிழ்ச்சியின் விவரணை சொல்லப்படவில்லை. இதைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகள் மற்றும் ஸ்வ-அனுபவ நிரூபணங்களும் ஆங்கிலத்தில் கிடைக்கின்றன.

திவ்யானுபவத்தைப் (Mystical experience) பற்றி மேற்குலக ஆராய்ச்சியாளர்கள் மிகவும் ஆழமாக சிந்தித்திருக்கிறார்கள். இது உளவியல் (மனத் தத்துவ) துறைக்கு சம்பந்தப்பட்டிருப்பதால், அவர்கள் பலரின் அனுபவங்களைப் பெற்று, தொகுத்து, தகுந்த ஆதாரங்களுடன் வெளியிட்டிருக்கிறார்கள். வில்லியம் ஜேம்ஸ் என்பவர் எழுதியிருக்கும் 'The Varieties of Religious

Experience' (ஆன்மிக திவ்ய அனுபவத்தின் பல வகைகள்) என்னும் புத்தகம் இதைப் பற்றி மிகவும் விரிவாக அலசியிருக்கிறது. அவர் சொல்லியிருக்கும் சில விஷயங்களைப் பற்றி மட்டும் இங்கே பார்க்கலாம். திவ்ய அனுபவத்தின் முக்கிய லட்சணங்களைக் குறித்து, அவர் சொல்லியிருக்கும் அவரது அபிப்பிராயங்கள் இவையே.

அ. வர்ணிக்க முடியாத / விளக்க முடியாத (Ineffability): அதை விளக்கமுடியாது. அந்த அனுபவத்தை சொற்களில் கொண்டு வருவதற்கு சாத்தியமில்லை. (It defies expression that no adequate report of its contents can be given in words).
ஆ. அறிவு சார்ந்த (Noetic quality): திவ்யானுபவங்கள் என்பவை விமர்சிக்கப்படும் மனதினால் புரிந்துகொள்ள முடியாத உண்மையின் நிலைகளை, உள் நோக்கி பார்க்கும் ஒரு நிகழ்வு ஆகும். (They are states of insight into depths of truth unplumbed by the discursive intellect).

இ. தாற்காலிக (Transiency): திவ்யானுபவங்கள் குறுகிய காலத்திற்கே உட்பட்டவை. (Mystical states cannot be sustained for long).

ஈ. பற்றற்ற (Passivity): விசித்திரமான இந்த பற்றற்ற நிலையானது முதலில் உண்டாவதே கடினம். திவ்ய அனுபவத்தைப் பெற்றவன், தன் மனம் பற்றற்று (ஒதுங்கி இருப்பது) இருப்பதைப் போல உணர்வான். பல முறைகள், ஏதோ ஒரு உன்னத சக்தியினால் இழுக்கப்பட்டு, அதற்கு கட்டுப்பட்டவனைப் போல அனுபவத்தைப் பெறுவான் (.. when the characteristic sort of consciousness once has set in, the mystic feels as if his own will were in abeyance and indeed sometimes as if he were grasped and held by a superior power).

இவைகளே திவ்யானுபவத்தின் கோட்பாடுகள் எனலாம். மேலும் அவர் பற்பல அத்தகைய அனுபவங்களைப் பெற்றவர்களின் பேச்சு / கட்டுரைகளையும் மேற்கோள் காட்டி அவற்றையும் வெளியிட்டுள்ளார். அவர்கள் கொடுத்திருக்கும் பிரத்யட்ச- அனுபவங்களைப் படித்தால், நம் நாட்டு மகான்களின் ஸ்வ-அனுபவங்களும் நினைவுக்கு வருகின்றன.

திவ்யானுபவத்தின் ருசியை உணர்ந்த ஒருவர் அபரோக்ஷ ஞானியாகவே இருந்தாலும், ஏதோ ஒரு சமயத்தில், ஏதோ ஒரு வகையில், பைத்தியம் பிடித்ததைப் போல காணப்படுவார். ஆகையால், அது வார்த்தையால் வெளிப்படுத்த முடியாத உணர்வு என்று சொல்வதைவிட, ஆனந்த அதிசய லட்சணங்களைக் கொண்டது என்று வேண்டுமானாலும் சொல்லலாம். இப்படி சொல்வதால், நம் மகான்களின், கவிகளின் படைப்புகளை நாம் குறைத்து மதிப்பிடுகிறோம் என்று இல்லை. மேற்சொன்ன ஆங்கில எழுத்தாளர் சொல்லியிருக்கும் மற்ற லட்சணங்களில், இந்த தெளிவற்றதன்மை இல்லாததால், அவற்றை இங்கு வெளியிடவில்லை.

ஹரிதாஸர்களின் படைப்புகளில் சாதாரணமாக வெளிப்படும் அவர்களது ஆத்ம நிவேதனம், அபரோக்ஷானுபவம் என்பவை முதல் கட்டம் என்றால், அதன் மூலம் அவர்கள் அடைந்த நிலையே, திவ்யானுபவம் என்று சொல்லப்படுகிறது. அவர்களின் வாழ்க்கையில், அவர்கள் செய்த சாதனைகளே படிக்கட்டுகள் என்றால், அதன் மூலம் அவர்கள் அடைந்த இடத்தின் சிறப்பை நாம் அறிந்து கொள்ளலாம். சில உதாரணங்களால் நாம் இதை ஆராய்ந்து புரிந்து கொள்வோம்.

1. சாதனை

தெய்வ சாட்சாத்காரத்திற்காக ஹரிதாஸர்கள் செய்யும் முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல. முதன்முதலில் அவர்கள் தமது அபராதங்களை, சுகதுக்கங்களை பரமாத்மனிடம் சமர்ப்பிக்கிறார்கள். ஹரிதாஸர்களில் முதன்மையானவரான ஸ்ரீபாதராயர், ஸ்ரீஹரியிடம் சரணடைந்திருக்கும் கிரமம் கவனிக்கத்தக்கது.

தயமாடி ஸலஹய்ய பய நிவாரணனே

ஹயவதன நின்ன சரண நம்பிதெனோ ஜீயா

என்னும் பல்லவியைக் கொண்டு துவங்கும் கீர்த்தனையில் தமது தவறுகளை, பரமாத்மனிடம் ஒப்பிக்கிறார்.

க்ஷணக்ஷணக்கெ நா மாடித பாபகளனு
எணிஸலளவல்ல அஷ்டிஷ்டுயெந்து
பணிஷாயி நீனென்ன அவகுணகளெஸதெ
நெனிஹினாதுர கொட்டு தாஸனெந்தெனிஸய்யா

என்னும் சொற்கள் அவரது இதயத்தின் விருப்பங்களை அப்படியே பிரதிபலிக்கின்றன.

இதனாதரு கொடதித்தரே நின்ன
பதகமலவ நம்பி பஜிஸுவுதெந்தோ

என்று முறையிடுகிறார். அவர் எதைதான் வேண்டுகிறார் என்று பார்த்தால், அவரது வலிகள் வரிசையாக புலப்படுகின்றன.

கிராஸவாஸகளிகெ இல்லவெந்து
நின்ன பேஸரிஸி பேட பந்துதில்ல
வாஸுதேவனெ நின்ன தாஸர தாஸர
தாஸ்யவ கொடு ஸாகெந்தரெ

என்று சொல்லி, தமது லௌகிக விருப்பங்களை தாம் விரும்புவதில்லை என்பதை நிரூபிக்கிறார். இறுதியில் :

ஆகபேகு ராஜ்யபோககளெனகெந்து
ஈக நானு பேட பந்துதில்ல
நாகஷயன ரங்கவிட்டல நா நின்ன
பாகில காயுவ பாக்ய ஸாகெந்தரெ

என்று சொல்லி, ஸ்ரீஹரியிடம் முறையிடுகிறார்.

ஸ்ரீவியாஸராயரின் வாக்கியங்களோ இன்னும் அழகானவை.

பாரய்யா என்ன மனமந்திரகெ
பேரொந்து யோசனெ மாடதெ ஸிரிபதி

என்று நேரடியாகவே கோரிக்கை வைக்கிறார். ஒரு பக்கத்தில், தம்மிடம் இருக்கும் துர்குணங்களுக்காக ஸ்ரீஹரி வராமல் இருந்துவிடுவானோ என்று புலம்பி, அப்படி இருந்தால், அவனது வருகையால் அவை அழிந்து விடுமே என்று சொல்லிக் கொள்கிறார். ஸ்ரீஹரியிடம் அவர் முறையிடும் வழிமுறை மிகவும் அற்புதமாக இருக்கிறது.

நா ராஜஸ புத்தியெம்பெய, நின்ன
காருண்யத ஸொனெ ஸொரகுவுதெ
வாரவாரக்கெ மேகவாரிய கரெதரெ
தாருணிகெ க்ஷாம பருவுதெ கிருஷ்ண

என்று, ஒரு முறை வேண்டினால், இன்னொரு முறை :

தாமஸ புத்தியெம்பெய நின்ன
ஸ்ரீமூர்த்தி ஹொளெதரெ தமவடகதெ
ஸ்ரீமனோஹரனெ பானு உதிஸிதெ
தாமஸவடகதெ ஜகதொளு கிருஷ்ணா

என்று அதற்கு பரிகாரமும் சொல்கிறார். இறுதியில்:

நா தோஷி கடிணனெந்தெம்பெய
நின்ன பாதபதும பாபஹரவல்லவெ?
ஆ துஷ்டஷிலெ ஸொங்கெ ரிஷிபத்னியாதளு
நீ தயமாடெ நா நீசனெ ஸிரி கிருஷ்ணா

என்று ஸ்ரீஹரியின் மேலேயே தம் தோஷங்களின் நிவாரணத்தின் பொறுப்பையும் சுமத்துகிறார். ஸ்ரீவியாஸராயரின் பேச்சுகளில் தெரியவரும் ஆத்ம நிவேதனையின் திறன் நம்மை மெய் மறக்கச் செய்கிறது. ஸ்ரீவாதிராஜரிடமும் இதே வழிமுறை அப்படியே வந்திருக்கிறது என்பதை பார்க்கலாம். தமது ஒரு உகாபோகத்தில்:

நின்ன த்யானத ஷக்திய கொடு
அன்யரலி விரக்திய கொடு
நின்ன நோடுவ யுக்திய கொடு
நின்ன பாடுவ க்ருத்யவ கொடு
மத்தெ துதியலி எனகெ முக்திய கொடு
அத்தத்த மாடு பவகத்தலெயெனகெ
முத்திதெ ஹயவதன

என்று பகவந்தனிடம் எப்படி தம் மனதை படிப்படியாக சமர்ப்பிக்க வேண்டும் என்பதையும், இறுதியில் தமக்கு எப்படி முக்தி பதவியை கொடுக்க வேண்டும் என்பதையும் வேண்டிக் கொள்கிறார்.
எவ்வித சுகதுக்கங்களிலும் ஈடுபடாத யதிகளின் மனோபாவங்களைவிட, சம்சாரத்திலேயே இருந்துகொண்டு, ஹரிதாஸ கைங்கர்யத்தை மேற்கொண்ட ஹரிதாஸர்களின் மனதின் குரல்களை சொல்லி முடிக்க முடியாது. அதிலும் புரந்தரதாஸர் மற்றும் கனகதாஸர் இருவரும் எவ்வித குறைகளோ பிரச்னைகளோ இல்லாமல் வாழ்ந்து வந்தவர்கள். அவர்களது செல்வ செழிப்பான வாழ்க்கையிலேயே மாறுதல் உண்டாகி, அவர்கள் அனைத்தையும் பகவந்தனிடம் அர்ப்பித்து ஹரிதாஸர் ஆனார்கள். இத்தகைய மஹிமர்களின் போராட்டம், நம் மனதையே கலக்குவதாக இருக்கிறது.

செல்வந்தராக இருந்த ஸ்ரீனிவாச நாயகர், ஒரே நொடியில் மனைவியின் மூலம் மாறுதல் அடைந்து ஹரிதாஸர் ஆனதை தெரிவிக்கும் கீர்த்தனையே அவரது ஹரிதாஸ வாழ்க்கையில் முதலாவதாகும்.

ஆதத்தெல்ல ஒளிதே ஆயிது
நம்ம ஸ்ரீதரன ஸேவெ மாடலு
ஸாதன ஸம்பத்தாயித்து

என்னும் பல்லவி கேட்ட உடனேயே நாம் திகைப்படைகிறோம்.

தண்டிகெ பெத்த ஹிடியுவுதக்கெ
மண்டெ பாகி நசுதலித்தெ
ஹெண்டதி ஸந்தத ஸாவிரவாகலி

தண்டிகெ பெத்த ஹிடிஸிதளய்யா

என்னும் முதல் நுடியிலேயே, அவரின் வந்த மாற்றத்தை நாம் உணர்கிறோம்.

கோபாள புட்டி ஹிடியுவுதக்கெ
பூபதியெந்து கருவிஸுதித்தெ
ஆ பத்னிகுல ஸாவிரவாகலி
கோபாள புட்டி ஹிடிஸிதரய்யா

என்னும் இரண்டாம் நுடியில் தம்மில் ஆன அகங்கார பங்கத்தினை சொல்லி தாமே திருப்திப்பட்டுக் கொள்ளும் விதம் அதிசயமானது.

துளஸிமாலே ஹாகுவுதக்கெ
அரஸனெந்து திருகுதலித்தெ
ஸரஸிஜாக்ஷ புரந்தரவிட்டலனு
துளஸிமாலே ஹாகிஸிதனு

என்னும் கடைசி நுடியில், அனைத்தும் தெய்வ சங்கல்பம் என்று புரிய வைக்கிறார். ஸ்ரீவியாஸராயரிடமிருந்து 'புரந்தரவிட்டலா' என்னும் அங்கிதத்தை பெற்ற புரந்தரதாஸருக்கு பரமாத்மனின் சாட்சாத்காரம் ஆகும் வரைக்கும் அமைதியே இல்லை. அதுவரை அவர் பாடிய ஒவ்வொரு நுடியும் அவரின் மனதின் ஆழத்தை நமக்கு சொல்கிறது. ஒவ்வொரு கீர்த்தனையும் அவரது ஆன்மீக வாழ்க்கையின் உருவகமாகவே இருக்கிறது.

தாஸன மாடிகோ என்ன - இஷ்டு
காஸிமாடுவரேனோ கருணாஸம்பன்ன

என்னும் சரணாகதியாகட்டும்,

பின்னஹகெ பாயில்லவய்ய அனந்த
அபராத என்னல்லி இரலாகி

என்னும் பச்சாதாபத்தின் குரலாகட்டும்,

நின்னனெ நம்பிதேனு நீனென்ன ஸலஹய்ய
என்னகுண தோஷகள எணிஸ பேடய்யா

என்னும் அவரது அசைக்கமுடியாத நம்பிக்கையாகட்டும்

கண்டு கண்டு என்ன கைபிடுவரே
புண்டரீகாக்ஷ ஸர்வோத்தமனே தேவ

என்னும் இதயத்தின் வேதனையாகட்டும், இவற்றை ஆராய்ந்தால் அவரது தவிப்பு எவ்வளவு தீவிரமாக இருந்தது என்பதை அறியலாம்.

மனெயெம்ப ஆஸெயு என்ன முந்துகெடிஸுதிதெ
மனெவாருதியு என்ன பங்கபடிஸுதிதெ
ஸுதராஸெயு என்ன தைன்யபடிஸுதிதெ
இனிதாஸெயளிது புத்தி நின்னலி நிலுவந்தெ
மாடு ஸிரிபுரந்தர விட்டலா

என்னும் உகாபோகம் அவரது மனக்குமுறலை யதார்த்தமாக சொல்கிறது. தெய்வானுக்கிரகம் கிடைக்காத போதெல்லாம், மனதில் கவலைகள் பிரச்னைகள் அதிகமானபோதெல்லாம், அவரின் விரக்தி / வெறுப்பு அதிகமாகி 'ஆரு பதுகிதரய்யா ஹரி நின்ன நம்பி தோரு ஈ ஜகதொளகெ ஒப்பரனு காணெ' என்று கேட்டுக் கொள்கிறார். இத்தகைய நிலையைக் கடந்த ஹரிதாஸரின் மனதை மேலும் நோகடிக்கக்கூடாதென்று பகவந்தன் புரந்தரதாஸருக்கு தனது திவ்ய தரிசனத்தைக் கொடுக்கிறான். அந்த ஆனந்தத்தின் அனுபவத்தை அவர் விவரிக்கும் விதமே அற்புதமானது.

போர்வீரனைப் போல கையில் வாள், கேடயம் ஆகியவற்றை பிடித்து உடல் வலிமையாலேயே வாழ்ந்திருந்த கனகதாஸருக்கு, ஒரு போரில் தோல்வி வந்துவிட, பின் அவர் ஹரிதாஸ தீக்ஷையைப் பிடித்தார். வைராகியத்தைக் கொண்ட அவர்

ஸாகு ஸாகு மனுஜ ஸேவெயு ரங்கய்யா
இன்னு ஸாகு ஸாகு மனுஜஸேவெ மாடி
தணிது நொந்தே நானு

என்று ஸ்ரீஹரியை வேண்டிக் கொள்வது அவரது மனோதர்மத்தை நமக்குக் காட்டுகிறது. பிறருக்கு சேவை செய்து நொந்த அவர்,

ஒளலினாஸெகாகி நொணனு துடுகிபித்து
ஜேனினொளகெ மிடுகுவந்தெ பாயிபிடுவெ
பிஸருஹாக்ஷனெ பிடிஸு பாஷபந்தவ

என்று புலம்புவதில், அவரது அந்தரங்க மனோபாவம் தெளிவாக தெரிகிறது.

பாகிலனு தெரெது ஸேவெயனு கொடு ஹரியே
கூகிதரு த்வனி கேளலில்லவெ நரஹரியே

என்னும் புகழ்பெற்ற கீர்த்தனையில் அவர் பகவந்தன் அருளிய கஜேந்திரன், பிரகலாதன், திரௌபதி ஆகியோரின் கதைகளை உதாரணங்களாக சொல்லி, தம் பிரார்த்தனைகளை வைக்கிறார்.

எந்த ஹரிதாஸரின் வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட துன்பங்கள் வராமல் இல்லை.

எந்திகாகோதோ நின்ன தர்ஷன
அந்திகல்லதெ பந்த நீகதோ

என்று விஜயதாஸர் தம் பிரார்த்தனையை பகவந்தனில் சமர்ப்பிக்கிறார்.

ஆவரோகவே எனகெ தேவ தன்வந்த்ரி
ஸாவதானதி கைய பிடிது, நீ நோடய்யா

என்று கோபாலதாஸர் தம் சித்த குழப்பங்களை ஸ்ரீஹரியிடம் எடுத்து வைக்கிறார்.

ஜகன்னாததாஸரோ:

ஸர்வாந்தர்யாமி ஸலஹோ என்ன
துர்வார்த்தி கேளி மன பிடதெ சிந்திஸுதிதெ

என்று சொல்லி,

ஜீவர்களுக்கு குண கால கர்ம ப்ரக்ருதிகளின் ஸ்வபாவங்களை அனுசரித்து,

ஸுக துக்கவ ஈவ தொரெ
நிலல்லதின்னுண்டே ஜகக்கெ
மத்தாவனை பக்தரனு பாலிஸுவ தாத

என்று தர்க்கத்துடன் ஸ்வாமியையே முறையிடுகிறார். ஸ்ரீப்ரஸன்ன வெங்கட தாஸரோ, 'தந்தெ தாயி புத்ர நீனெ, பாந்தவ நீனெ, நின்னிந்த பளகில்லெனகெ இந்திராதவனெ காயோ' என்று, பகவந்தனின் அனைத்து உறவுகளையும் சொல்லி, மற்றவர்கள் 'ஸிரியு போகெ நில்லரு ஷரீர ஸம்பந்திகளு' என்று தெளிவாக்கி, 'நின்ன நாமஸ்மரணெ என்ன ஜிஹ்வெ மரெயதிரலி கண்ட்ய' என்று வேண்டிக் கொள்கிறார். ஹரிதாஸினிகளில் ஒருவரான ஹொளவனகட்டெ கிரியம்மா, மற்ற ஹரிதாஸர்களின் வழியிலேயே நடந்து 'பக்தவத்ஸலனெம்போ பிரிது பிடதிரு தேவ பஹு பராகெலோ முராரி' என்று ஸ்வாமியின் கருணையையே கேட்டு, தன் தர்மஸங்கடத்தை இந்த ஒரு நுடியில் மிகவும் அழகாக சொல்லிக் கொண்டிருக்கிறார்.

நிந்த நெல முனிவிதிதெ, நிபுணதனவடகிது
மந்தமதி வெக்களிஸி நெலெகாணெ முந்தெ
தந்தெ நீனல்லதின்யாரு ரக்ஷிபரய்யா
பந்தன பரிஹரிஸோ பய நிவாரண ஹரியே

என்று கேட்டு, கடைசியில்

நின்னனெ பூஜிபெனு, நின்னனெ பாடிபொகளுவெனு
நின்னனெ நம்பித்தவளிகிந்த உன்னதவாத கண்டகவு
பந்திதெ காயோபன்னங்கஷயன ஹொளவனகட்டெ ரங்கய்யா
என்று, அவரின் ஸர்வஸமர்ப்பண பாவம், மிகவும் சகஜமாக வந்திருக்கிறது.

வாஸுதேவ விட்டலாங்கிதரான, ஸ்ரீவ்யாஸ தத்வக்ஞ தீர்த்தர், காமிதார்த்த ப்ரதனான பகவந்தனின் நற்குணத்தினை சொல்லியவாறு

தாளலாரெ ஈ கலிய பாதெய
பீளுவெ நின்ன காலிகெ ஸ்வாமி
ஆலஸ மாடதெ அர்த்திகளோடிஸி
பாலிபுதெனனு பாவன மூர்த்தி
மாடித பாபகளோடிஸி ஸுகதிந்தாடிஸு
கண்ணிகெ காணிஸிகொண்டு வாஸுதேவ விட்டலா,
நீ எனகின்னு வாஸிமாடிஸி கீர்த்திய படெயோ
என்று முறையிடுகிறார்.

பக்தர்களின் இந்த குரல், முறையிடுதல், வேண்டுதல், கூக்குரல் ஆகியவற்றிற்கு எல்லையே இல்லை. அந்தந்த பக்தர்களின் இதயத்தின் வெளிப்பாடுகளுக்கு ஏற்ப, அவர்களுடைய வாக்குகள், அந்தரங்கத்தின் ஆழத்திலிருந்து வெளிப்பட்டிருக்கின்றன. தெய்வ அருள், திவ்ய அனுபவத்தினால் மட்டுமே, இத்தகைய கிருதிகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன என்று சொல்லலாம்.

2. ஸித்தி

ஹரிதாஸர்களின் எண்ணிக்கை, மிகவும் அதிகமானது. ஆனால், அபரோக்ஷ அனுபவத்தின் சுவையை வாய்விட்டு சொல்லியிருப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. முதலிலேயே பார்த்ததைப் போல, அதனை அனுபவித்து வெளிப்படுத்தும் புண்ணியம் வெறும் சிலருக்கு மட்டுமே கிடைத்திருக்கிறது. ஆகையால், ஹரிதாஸ ஸாஹித்யத்தில், உத்தமமாக இருக்கிறது என்று நாம் கண்ட சில உதாரணங்களை மட்டும் இங்கு பார்த்து அவற்றின் சுவாரசியங்கள் என்ன என்பதை பார்க்கலாம்.

ரங்கவிட்டலனின் அருளுக்கு பாத்திரரான ஸ்ரீபாதராஜர், தம் இஷ்ட தேவதையை கண் நிறைய கண்டு, அடி முதல் தலை வரை புகழ்ந்து மகிழ்ந்திருக்கிறார். அவருடைய திவ்ய அனுபவத்தின் நடை சிறப்பானது. 'ஸ்ரீரங்க விட்டலனின் ஸ்ரீ மகுடக்கெ ஷரணு, ஷிரதல்லொப்புவ நீலகுந்தளகெ ஷரணு' என்று பல்லவி பாடி, அனுபல்லவிகளால் வரும் இந்த கிருதி, அடுத்தடுத்து பகவந்தனின் ஒவ்வொரு அவயவங்கள் மற்றும் ஆபரணங்களின் வர்ணனையினால் மிகவும் அழகாக வந்திருக்கிறது. பகவந்தனின் கண், மூக்கு, கர்ணகுண்டல, நெற்றி, பல்வரிசை, சங்கு கழுத்து, மார்பு, தோள்கள், நாபி, இடுப்பு, துடை, முழங்கால், பாதங்கள், கைகள், விரல்கள் ஆகிய ஒவ்வொரு அவயவத்தின் அழகினையும் மிகச் சிறப்பாக புகழ்ந்து, ஒவ்வொரு வரிகளின் கடைசியிலும் ஷரணு என்று பாடியிருப்பதால், இந்த கீர்த்தனை மிகவும் அழகாக இருக்கிறது. ஸ்ரீஹரிபக்தர்களின் இதயம், பகவந்தனின் தரிசனத்தால் எவ்வளவு வகையாக மகிழ்ந்திருக்கிறது என்பதை ஒவ்வொரு வரியிலும் நாம் பார்க்கலாம். இந்த கீர்த்தனையின் துவக்கத்தில் ஸ்ரீரங்கவிட்டல என்று இருப்பதைப் போலவே, கடைசி வரியிலும் 'ரங்க விட்டலா' என்னும் அங்கிதம் இருக்கிறது.

ஸ்ரீபாதராஜருக்கு பண்டரிபுரத்தில் இருக்கும் பீமா நதியில் இரு சம்புடங்கள் கிடைத்தன என்றும், அவற்றில் ஒரு சம்புடத்தின் மூடியை திறக்க, ரங்கவிட்டலனின் தரிசனம் ஆனது என்றும், இன்னொரு சம்புடத்தின் மூடியை ஸ்ரீவ்யாஸராஜர் திறந்தபோது, அவருக்கு ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனம் ஆயிற்று என்றும் சொல்லப்படுகிறது. இந்த இரு யதிகளுக்கும், பகவந்தன் மூலமாகவே அங்கித அருள் ஆனதால், அவர்கள் தம் இஷ்டதேவதையின் நாமாங்கிதத்தையே வைத்துக்கொண்டு, கீர்த்தனைகளை இயற்றியிருப்பதை பார்க்கிறோம். ஆகையால், ஸ்ரீபாதராஜர், மேற்கண்ட கீர்த்தனையை தமக்கு ஸ்ரீரங்கவிட்டலனின் அருள் ஆன சந்தர்ப்பத்தில் இயற்றியிருக்கலாம் என்று ஊகிக்கலாம். மொத்த கீர்த்தனையின் விஷயம் மற்றும் வடிவத்தை கண்டால், இதனை ஸ்ரீபாதராஜர் தமது அந்தரங்க ஆனந்தத்தினால் அதன் வெளிப்பாடாகவே இயற்றியிருக்க வேண்டும் என்றும் தோன்றுகிறது.

ஸ்ரீவ்யாஸராயரின் திவ்ய அனுபவத்தின் தரிசனம் ஆனதோ மேலும் சுவாரசியமான விஷயம். 'ரங்கய்யா மனெகெ பந்தரெ அந்தரங்கதி குடிகட்டி குணிவெ நா' என்று துவங்கும் கீர்த்தனையின் ஒவ்வொரு நுடியும், அவருடைய அபரோக்ஷ அனுபவத்தின் வெளிப்பாடாகவே இருக்கிறது. பரமாத்மன், அவருடைய அந்தரங்க என்னும் மண்டபத்தில் தெரிந்தவுடன், அவர் மிகவும் மகிழ்ந்து, நர்த்தனம் ஆடுகிறாராம். நீல சரீரத்தின் ஒளியை சுற்றிலும் வீசியவாறு, கையில் குழலை பிடித்துக் கொண்டு, தம்முடைய அந்தரங்க என்னும் வீட்டிற்கு நுழைந்ததை, மிகவும் அற்புதமாக அனுபவித்து மெய் மறந்திருக்கிறார். அந்த நொடியிலேயே 'பாடித மாவு பல்லவிஸிது' , 'ஹரி நோடலு ஜகவு புல்லவிஸிது' . அவருடைய மனதின் தாபங்கள் அனைத்தும் தூர விலகிப் போயின. 'பிஸிலு பௌதிங்களாயிது, தாமஸ ஹோகி ஞானோதயவாயிது' . பத்மனாபனின் தரிசனத்தால் விஷமும் அமிர்தம் ஆனதைப் போல. 'ஹாவு ந்யாவளவாயிது - அல்லி தாவானள தம்பாயிது, பேவு ஸக்கரெ ஆயிது' என்கிறார். ஸ்ரீகிருஷ்ணன், தமது இஷ்ட தேவதை ஆனதால், அவனுடைய வருகையாலேயே மொத்த ப்ரக்ருதியே, தன்னில் இருக்கும் துஷ்ட குணங்கள் அனைத்தையும் போக்கிக் கொண்டு,

அனைத்தும் இனிமையாக காட்டிக் கொண்டதாம். பாம்பு, மாலை ஆனது. தாவாக்னி குளிர்ந்தது. வேப்பிலையும்கூட சர்க்கரை ஆனது. பரமாத்மனின் அருளால் அவருடைய அந்தரங்கம் நிரம்பி வழியும் பாற்கடல் போல ஆயிற்று என்றும் சொல்லலாம். இத்தகைய ஆழமான திவ்ய அனுபவத்தை உள்ளதை உள்ளபடியே நிரூபிக்கும் அற்புத கிருதியே இது ஆகிறது.

ஸ்ரீவ்யாஸராஜர் இன்னொரு கீர்த்தனையில் தமக்கு ஆன திவ்ய அனுபவத்தின் இன்னொரு முகத்தை சொல்லியிருக்கிறார். 'ஸேரிதெனு ஸேரிதெனு ஜகதீஷன, நரக ஜன்மத பயவு எனகினிதில்ல' என்று மகிழ்ந்தவாறு, தம் அவயவங்களில் ஆன மாற்றங்களையும் அதிசயங்களையும் மிகவும் அருமையாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

நேத்ரகளு கிருஷ்ணன மூதி நோடுதலிவெ
ஷ்ரோத்ரகளு ஹரிகதெய கேளுதலிவெ
ராத்ரி ஹகலு என்ன மனஸ்ஸு ஸ்ரீரங்கனல்லி
பாத்ரவாடுதிதென்ன காத்ர கிருஷ்ணன முந்தெ

என்னும் சரணத்தில் இருக்கும் ஒவ்வொரு சொற்களும், பகவந்தனின் சாட்சாத்காரத்தினால் தனக்கு தானாகவே வெளிப்படுத்திக் கொண்ட சொற்களே ஆகும். இதே வரிசையில், மேலும் சென்ற யதிவர்யர், தம் கைகள், தலை, மூக்கு, பரமாத்மனின் ஆராதனையில் எவ்வாறு பங்கு பெற்றிருக்கின்றன என்பதை விவரிக்கிறார். நாக்கிற்கு ஹரிநாமஸ்மரணையின் சுகத்தினால் திருப்தி ஆகிறது என்கிறார். இவ்வாறு தன் அனைத்து அவயவங்களும் மகிழ்ச்சியினால் நீந்தி புனிதம் ஆயிற்று. அவருடைய தேகமே ஹரி ப்ரீதி ஆனது என்று சொல்லிக் கொள்கிறார். கீர்த்தனையின் கடைசி வரியில் 'ஸிரிகிருஷ்ணராயன்ன மனமந்திரதி கண்டெ' என்று சொல்லிக் கொண்டிருப்பது அவருடைய அபரோக்ஷ அனுபவத்திற்கு ஒரு சான்றாக இருக்கிறது.

தமக்கு ஆன, திவ்ய அனுபவத்தை வெளிப்படுத்துவதில் ஸ்ரீவாதிராஜரின் வாணியும்கூட அற்புதமானதே ஆகும்.

கண்டெ கண்டெனு கிருஷ்ண
நின்னய திவ்ய மங்கள விக்ரஹ,
கண்டு பதுகிதெ இந்து நானு
கருணிஸோ என்னொடெயனெ

என்னும் வரிகளில், அவருடைய மகிழ்ச்சியை நாம் பார்க்கலாம். ஸ்வாமியின் ஆபரணங்கள், ஆடைகள், அலங்காரம் ஆகிய அனைத்தையும் தனித்தனியாக வர்ணித்து, கடைசியில்:

என்ன பந்தன தரிஸிதனெ
என்ன பாபவு ஓடிது
அன்ய தெய்வவ பஜிஸல்யாதகெ
மன்னிஸோ ஹயவதனனெ

என்று சொல்லி மகிழ்கிறார். அவருடைய இஷ்ட தெய்வமான ஹயவதனனைக் குறித்து இயற்றியிருக்கும் கிருதிகள் ஏராளமானவை. 'குதுரெ பந்திதெ செலுவ குதுரெ பந்திதெ' என்னும் கீர்த்தனை, ஸ்ரீவாதிராஜரின் ரசனைகளில் கிரீடமாக இருக்கிறது. 'குதுரெ பந்திதெ வாதிராஜகெ, முததி ஞான பகுதி கொடுவ குதுரெ பந்திதெ' என்னும் அனுபல்லவியில், ஹயவதனன் அவருக்கு எப்படிப்பட்ட பிரஸாதத்தை அளித்தான் என்னும் விவரம் இருக்கிறது.

இந்த குதிரையோ மிகவும் சிறப்பானது. அது தன் பின்னங்கால்களால் அசுரர்களை மிதித்து, முன்னங்கால்களை மடக்கி, வால் வீசியவாறு, தலை குனிந்து, ஒவ்வொரு நிமிடமும் பாய்ந்தவாறு, ஆடியவாறு, கனைத்தவாறு திரிகிறது. அந்த குதிரையின் மார்பில் இருக்கும்

ஸ்ரீவத்ஸ, கௌஸ்துபங்களை காணும் மஹாலட்சுமி, அது தன் தலைவன் என்று அறிந்து வருகிறாள் என்றபின், அந்த குதிரையின் மகிமை என்ன என்று சொல்லத் தேவையில்லை. இது மற்ற குதிரைகளைப் போல இல்லை. வெல்லம், கடலையை தின்று வளர்ந்த குதிரை. இத்தகைய அபூர்வ லட்சணங்களால் கூடிய குதிரை, அடி மேல் அடி வைத்து வருவதைக் கண்ட யதிகள், அதனுடன் நடத்தும் சம்பாஷணை மிகவும் சுவாரசியமாக இருக்கிறது. 'ஆவ கடெயிந்த பந்தெ வாஜிவதனனெ' என்று வியப்புடன் கேட்டு, அதற்கு தம் நன்றியை தெரிவித்து, பக்தி என்னும் கடலை, ஞான வைராக்ய என்னும் வெல்லம், முகுதி என்னும் பால், ஆகியவற்றை சமர்ப்பணம் செய்து, நீ அனைத்து பேச்சுக்களிலும் ஷக்தி ஸந்தோஷ மகிமையை காட்ட வந்தாயா' என்று கேட்கிறார். இதே பாடலில் 'ப்ருத்ய வாதிராஜ முனிய ஸலஹ பந்தெய' 'செலுவ சின்மயமூர்த்தி நம்ம ஸலஹ பந்தெய' என்று கேட்பதன் மூலம், தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஸ்ரீபுரந்தரதாஸரின் கீர்த்தனையில், இந்த அபரோக்ஷ ஞான அனுபவத்தின் ஸ்வரூபத்தை பல இடங்களில் பார்க்கலாம். ஒரு முறை அவருக்கு பகவந்தன் கனவில் வந்த அனுபவத்தை 'கண்டெ நா கனஸினல்லி கோவிந்தன, கண்டெ நா கனஸினலி கனகரத்னத கணிய, நந்தனகந்த முகுந்தன சரணவ' என்று கூறுகிறார். கனவில் கண்ட ஸ்வாமி, மனம் முழுக்க வ்யாபித்து கடைசியில் கண் எதிரே தெரிய, 'கண்டே நா கோவிந்தன, புண்டரீகாக்ஷன பாண்டவ பக்ஷ கிருஷ்ணன' என்று மேலும் மகிழ்ச்சியுடன் குதிக்கிறார். வேறு ஒரு கீர்த்தனையில், தம் ஆத்யாத்மிக வாழ்க்கையின் ஸார்த்தக வாழ்க்கையையே முதலிலிருந்து கடைசி வரை, படிப்படியாக விவரித்து, தம் நன்றியை தெரிவிக்கிறார். 'வரகுரு உபதேஷ நெரவாயிதெனகீக இன்னேனின்னேனு' என்று தொடங்கும் இந்த கீர்த்தனையில் அவருக்கு கிடைத்த, ஹரிதாஸர்களின் ஸங்கம், மாயா ஸம்ஸாரத்தின் நிலை, ஹரி நாம பாக்கியம், நிஷ்டை ஆகிய விஷயங்களை ஒரு பட்டியலாக கொடுத்திருக்கிறார்.

தந்தெ தாயி முசுகுந்த வரதனாத இன்னேனின்னேனு
ஸந்தேஹவில்ல முகுந்த தயமாட்த இன்னேனின்னேனு

ஏனெந்து ஹேளலி ஆனந்த ஸம்ப்ரம இன்னேனின்னேனு
ஆ நந்தகோபன கந்தன மஹிமெய இன்னேனின்னேனு

எல்ல வம்ஷகளெல்ல பாவனவாதுவு இன்னேனின்னேனு
சின்மய புரந்தரவிட்டலய்ய தொரகித இன்னேனின்னேனு

என்று தம் பகவத் அனுபவத்தை தழுதழுத்த குரலில் பாடுகிறார்.

இந்த திவ்ய அனுபவத்தின் வெளிப்பாட்டினை, நாம் ஸ்ரீவிஜயதாஸரின் கீர்த்தனை ஒன்றில் மிகத் தெளிவாக காண்கிறோம். 'அந்தரங்கத கதவு தெரெயிதிந்து' என்று பல்லவி காதில் விழுந்த உடனேயே, ஒரு வித பரவச மனநிலை வந்துவிடுகிறது. 'எந்த புண்யத பலவு ப்ராப்தி தொரகிது எனகெ' என்னும் அவருடைய ஆத்ம சிந்தனையின் அனுபல்லவி, அந்த மஹானுபாவரின் இதயத்தின் வாயிலையே திறந்து காட்டுகிறது. அதன் பின், கூறியிருக்கும் ஒவ்வொரு சரணமும் அவருடைய அந்தரங்கத்தின் அருகில் நம்மை அழைத்துச் செல்கிறது. அவருக்கு அவருடைய அந்தரங்கத்தின் கதவு மூடியிருந்ததும், அங்கு இருட்டு நிரம்பியிருந்ததால், எதுவும் தெரியவில்லை.

ஹரிகருணவெம்பந்த கீலிகை தொரகிது
குருகருணவெம்பத ஷக்தியிந்த
பரம பாகவதர ஸஹவாஸதலி போகி
ஹரிஸ்மரணெயிந்தல்லி பீகமுத்ரெய தெரெதெ

என்று சொல்லி, தம் சாதனையின் ஒவ்வொரு படிக்கட்டையும் சொல்கிறார். ஒரு முறை கதவை திறந்த உடனேயே,

ஸுத்தலித்தவரெல்ல பலாயனவாதரு
பக்திக்ககடவெம்ப ஞானதீப ஜத்தாகி
ஹிதகொண்டு த்வாரதொளகெ பொக்கெ
எத்த நோடிதரத்த ஷ்ருங்கார ஸதன

என்னும் வர்ணனையில் தம் அந்தரங்கத்தில் ஆன புதிய மாற்றத்தை குறிக்கிறார். ஸ்ரீவிஜயதாஸர், ஷாஸ்த்ரக்ஞரும் ஆகியிருப்பதால், பகவந்தனின் இருப்பிடமான இதயக்கோயிலை, அவர் சாஸ்திரத்திற்கு ஏற்பவே விவரிக்கத் தொடங்குகிறார்.

ஹொரகெ த்வாரவு நால்கு ஒளகைது த்வாரகளு
பரதாரிகெ ப்ராண ஜய விஜயரு
மிருகுவா மத்யமண்டபத கோடி ரவியந்தெ
ஸரஸிஜனாபன அரமனெய ஸொபகு

உள்ளே இருக்கும் இதயக்கோயிலில் அவர் கண்டது, இன்னொரு அற்புதமான சித்திரம்.

ஸ்வமூர்த்திகண மத்யெ ஸச்சிதானந்தைக
ரமெ தரெயரிந்தலாலிங்கத்வதி
கமலஜாதிகளிந்த துதிஸிகொள்ளுத
ஹ்ருதய கமலதொளகிருவ
ஸ்ரீவிஜயவிட்டலன கண்டெ
என்று சொல்லியிருப்பதைக் கேட்டால், ஸ்ரீவிஜயதாஸருக்கு ஆன திவ்ய அனுபவத்தின் மேன்மை எத்தகையது என்று தெளிவாகிறது. கன்னட தாஸ ஸாஹித்யத்திலேயே மிகவும் அபூர்வமான கீர்த்தனை இது. அபரோக்ஷ அனுபவம் என்றால், அது நம் அந்தரங்கத்தில் ஆகும் பரமாத்மனின் தரிசனமே ஆகும் என்னும் பாவனை தெளிவாகிறது.

காகண்டியின் மஹிபதி தாஸர், இதையே 'ஸ்வானந்த' என்று வெளிப்படுத்துகிறார். அவருடைய அபிப்பிராயத்தில் அது 'அனிர்வசனம்' (வார்த்தைகளால் விவரிக்கப்பட முடியாதது) என்று ஆகிறது. ஆகையால்,

ஒடெய ஹேளுவுதல்ல ஹிடிது தா கொடலிக்கில்ல
படெதுகொண்டவனெ பல்ல கூடின ஸொல்ல

என்று ரகசியமாகவே அவருடைய அனுபவத்தை சொல்கிறார்.

பங்கநாமத திம்மண்ண தாஸர், 'கிருஷ்ணன நோடிதெ ஸர்வோத்கிருஷ்டன பாடிதெ, கிருஷ்ண நோடி ஸாஷ்டாங்கவ மாடிதெ' என்று தமக்கு ஆன ஸ்வாமியின் தரிசனத்தை பற்பல நுடிகளில் பாடி மகிழ்ச்சி கொள்கிறார்.

ஸ்ரீஜகன்னாததாஸரும்

தன்யனாதெ விட்டலன கண்டு
தன்யனாதெ காமன்ன பிதன
லாவண்யமூருதிய கண்ணிலி கண்டு
என்று ஆனந்த பரவசம் அடைந்து, தம் இஷ்ட தேவதையான ஸ்ரீகிருஷ்ணனின் லீலாவினோதத்தை நிரூபிக்கிறார்.

கண்டெனீக, ரங்கநாதன காருண்யநிதிய
கண்டெனீக ரங்கனாதன

மண்டலதொளுத்தண்ட மூருதி
ஹிண்டு ஹிண்டு தைத்யர தண்ட தண்டதி
துண்டு துண்டுமாடித ஸ்வாமியா
...
தந்தெயடிய ஹொந்திதெனு
இந்து ஹெளவனகட்டெ ரங்க
ஆனந்தபடிஸோ ராமலிங்க
ஹொந்திதெனு நின்ன சரண

என்று ஹரிதாஸினியான ஹெளவனகட்டெ கிரியம்மா அவர்களுக்கும் ரங்கநாதன், தமக்கு ஆன அனுபவத்தை பாடி, மகிழ்ந்திருக்கிறார்.

***

5 ஹரிதாஸர்களின் ஆராதனா வகைகள்

அபரோக்ஷ ஞானிகளான ஹரிதாஸர்கள், தங்களின் திவ்யஞானத்தினால் பரமாத்மனின் க்ருபைக்கு பாத்திரராவது அவரது ஆத்யாத்மிக ஜீவனத்தில் ஒரு கட்டம் என்று நினைத்தால், அதன் பிறகு அவர்கள் பகவந்தனின் கைங்கர்யத்தை எப்படி விஸ்தாரமாக செய்தனர் என்பதை அறிவது மிகவும் சுவாரசியமான விஷயமே ஆகும். இந்த ஸ்வ-அனுபவத்தை ஆராய்வதன் மூலம், அவர்களின் பக்தியின் வகைகளையும், சிறப்பினையும் நாம் அறியமுடியும்.

பக்தியின் வரலாறு மிகவும் பெரியது. பகவத் கீதையில், பக்தியை, ஞான மற்றும் கர்ம ஆகியவற்றுடன் ஒரு யோகம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது. பக்தனின் லட்சணத்தைக் குறித்து சொல்லப்பட்டிருக்கும், பக்தியோகத்தின் இந்த ஸ்லோகங்கள் நாம் கவனிக்கத் தக்கதாகும்.

மய்யாவேஷ்யமனோ யே மாம் நித்யயுக்தா உபாஸதே |
ஸ்ரத்தயா பரமோபேதாஸ்தே மே யுக்ததயா மதா: ||
(கீதை 12-2)

யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸன்யஸ்ய மத்ஸரா: |
அனன்யேன்யைவ யோகேன மாம் த்யாயந்த உபாஸதே ||
தேஷாம் அஹம் ஸமுத்தார்த்தா மைத்யுஸம்ஸார ஸாகராத் |
பவாமி ந சிராத்பார்த்த மய்யாவேஷித சேதஸாம் ||
(கீதை 12-6,7)

அத்வேஷ்டா சர்வபூதானாம் மைத்ர: கருண ஏவ ச |
நிர்மமோ நிரஹங்கார ஸ்ஸமதுக்க ஸுக:க்ஷமே |
சந்துஷ்டஸ்ஸததம் யோகீ யதாத்மா த்ருடனிஸ்சய: |
மய்யர்ப்பித மனோபுத்திர்யோ மத்புக்தஸ்ஸமே ப்ரிய: ||
(கீதை 12-13,14)

யஸ்மான்னோத்விஜதே லோகோ லோகான்னோத்விஜதே ச ய: |
ஹர்ஷாமர்ஷ பயோத்வேகைர் முக்தோ யஸ்ய ச மே ப்ரிய: ||
(கீதை 12-15)

பகவந்தனிடம் அனைத்தையும் சமர்ப்பித்து, சுகதுக்கங்களை சரிசமானமாக பார்த்து, யார் எப்போதும் திருப்தியாக இருந்து, உலகிற்கு எப்போதும் கெடுதலை விளைவிக்காமல் இருக்கிறாரோ; மற்றும் மக்களால் தமக்கு உண்டாகும் எவ்வித பிரச்னைகளையும் லட்சியம் செய்யாமல் என்னிடமே அன்பு செலுத்துகிறாரோ, அவரே என் பக்தர் ஆவார். அத்தகையவர்களை நான் புறக்கணிக்காமல், சம்சார சாகரத்திலிருந்து அவர்களை நான் விடுவிக்கிறேன். -- என்று ஸ்ரீகிருஷ்ணன் சொல்லியிருக்கும் வாக்கியங்களை கவனித்தால், தன் பக்தர்களைப் பற்றி ஸ்ரீஹரிக்கு இருக்கும் பெருமை, அன்பு ஆகியவை புரிகிறது.

வேதங்களில் இந்த பக்தி, இஷ்ட தேவதைகளைக் குறித்த பிரார்த்தனைகளில் தெரிய வந்தால், உபநிஷத்களில் ஜிக்ஞாஸைகளின் ரூபத்தில் வெளிப்படுகிறது. ஷாண்டில்யர் தம் பக்திஸூத்ரங்களில், 'நா பரானுரக்திரீஷ்வரே' (ஸூ. 2) என்று கூறினால், நாரதர் தமது பக்தி ஸூத்திரத்தில், 'ஸாத்வஸ்மின் பரம ப்ரேமரூபா' (ஸூ.2) என்கிறார். ஆகையால், பக்தி என்பது பக்தர்கள் பகவந்தனிடம் வைத்திருக்கும் அன்பு என்று இருவரும் ஒருமனதுடன் சொல்கிறார்கள்.

இந்த ஸூத்திரகாரர்கள் பக்தியைப் பற்றி நடத்தியிருக்கும் ஆராய்ச்சி மிகவும் ஆழமானது. விசாலம் ஆனது. பகவந்தனின் ஆராதனைக்கு சம்பந்தப்பட்டதைப் போல, நாரதர் தனது பக்தி ஸூத்ரத்தில் 11 விதானங்களை சொல்லியிருக்கிறார். அதில் 'ஆஸ்திக' என்னும் சொல்லை மிகவும் அர்த்தபூர்வகமாக பயன்படுத்தியிருக்கிறார். பக்தன் ஆனவனுக்கு பகவந்தனின் அருள், அனுஸந்தானங்களை விட்டால் வேறு எந்த ஆசையும் இருப்பதில்லை. பக்தர்கள் தத்தம் மனோதர்மத்திற்கு ஏற்ப, பகவந்தனின் குணங்களில் மனதை வைத்து ஆராதனை செய்யலாம் என்று நாரதர் சொல்கிறார். அவை எவை என்றால்:

குணமாஹாத்ம்யஸக்தி ரூபாஸக்தி பூஜாஸக்தி ஸ்மரணாஸக்தி
தாஸ்யாஸக்தி ஸக்யாஸக்தி வாத்ஸல்யாஸக்தி காந்த்யாஸக்தி ஆத்ம
நிவேதனாஸக்தி தன்மயாஸக்தி பரமவிரஹாஸக்தி ரூபா
ஏகதாபி ஏகாதஷதா பவதி (ஸூத்ர 82)

இந்த பக்தியை பாகவதத்தில் இன்னும் சுருக்கி ஒன்பது விதங்களாக சொல்லியிருக்கின்றனர்.

ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம்
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் சக்யம் ஆத்ம நிவேதனம்
இதி பும்ஸார்ப்பிதா விஷ்ணௌ பக்திஸ்சேன்னவலக்ஷணா
க்ரியதே பகவத்யத்தா தன்மன்யேऽதீதமுக்தமம் ||
(பாகவத 7, 5-13/14)

இந்த ஒன்பது வகைகளை பக்தி மார்க்கங்கள் என்று சொல்வதுண்டு. இந்த மார்க்கங்களை அனுசரித்து தன்யர்களான பக்தர்களை குறித்தான சம்ஸ்கிருத வ்ருத்தம் ஒன்று இருக்கிறது.

விஷ்ணோஸ்து ஸ்ரவணே பரீக்ஷிதபவத் வ்ருயாஸகி: கீர்த்தனே
ப்ரஹ்லாத: ஸ்மரணே ததங்க்ரி பஜனே லக்ஷ்மீ ப்ருது: பூஜனே
அக்ரோரஸ்தபிவந்தனே ச ஹனூமான் தாஸ்யே ஸகேசார்ஜுன:
ஸர்வஸ்யாத்ம நிவேதனே பலிரபூத் கைவல்யமேஷா: ஸம: ||

பரிக்ஷித் ராஜன் ஸ்ரவணத்தினாலும்,
நாரதர் கீர்த்தனையினாலும்,

பிரகலாதன் ஸ்மரணையினாலும்,
லக்ஷ்மிதேவி பாத பஜனையினாலும்,
ப்ருது மஹாராஜன் பூஜையினாலும்,
அக்ரூரர் அபிவந்தனைகளாலும்,
ஹனுமந்தன் தாஸ்யத்தினாலும்,
அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணனின் நட்பினாலும்
பலிசக்ரவர்த்தி சர்வார்ப்பணத்தாலும்
ஒரே விதமான கைவல்ய பதவியை பெற்றனர் என்று நவ வித பக்தி மார்க்கங்களின் மேன்மையை உதாரணங்களுடன் இங்கு விளக்கியிருக்கின்றனர்.

மேற்கூறிய உதாரணங்களில் பக்தியின் சாதனை மற்றும் விதம் இந்த இரண்டும் தெரிய வருகின்றன. பாகவதத்தில் சொல்லப்பட்ட விதங்களான இந்த நவவித பக்தி மார்க்கங்களை விளக்கும்போது அந்த ஸ்லோகத்தில் முதலில் வரும் ஆறு அம்சங்களும் சாதனை க்ரியைகள் என்றும் மற்ற மூன்றும் பக்தி பாவங்கள் என்றும் கூறியிருக்கிறார்.

முதலாம் ஆறு விதங்களும் சாதனை க்ரியைகள். முதலில், பக்தியை அனுஸந்தானம் செய்பவனின் பார்வையில் அவை துவக்க நிலைகள் என்று சொல்லலாம். அடுத்த மூன்று பக்திகள் அதாவது தாஸ்ய, சக்ய மற்றும் ஆத்ம நிவேதனம் ஆகியவை பக்தி பாவங்கள் ஆகும். பக்தனின் வாழ்க்கையின் பக்குவ நிலையில் ஒரு பகுதியாக ஆகி, அங்கு நிலைகளாக வருகின்றன.

இதையே சொல்வதைப் போல, நவவித பக்தி மார்க்கங்களில் ஸ்ரவண, கீர்த்தன, ஸ்மரண ஆகியவை தியானத்திற்கும்; பாதஸேவன, அர்ச்சன மற்றும் வந்தன ஆகியவை பகவத் ப்ரீத்யர்த்தமாக செய்யப்படும் செயல்கள் என்றும்; தாஸ்ய, சக்ய, ஆத்ம நிவேதனே ஆகியவை சரணாகதிக்கு உதாரணமாக சொல்லலாம் -- என்று மற்றொரு வித்வாம்சர் சொல்கிறார்.

இந்த நவவித பக்தியை படிக்கட்டுகளாக நினைக்க வேண்டுமா அல்லது ஒவ்வொன்றையும் தனித்தனியாக நினைக்க வேண்டுமா என்னும் சந்தேகம் வித்வாம்சர்களை விட்டுவைக்கவில்லை. அந்தந்த சாதனைகளின் மூலமே பகவந்தனின் அருளுக்கு பாத்திரர் ஆகவேண்டும் என்பதை உதாரணங்களின் மூலம் இப்போதுதான் பார்த்தோம்.

பக்திகளில் மிகச்சிறந்தது ஆத்ம நிவேதனம் என்று சொல்வதானால், மற்ற பக்திகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நிலைகள் என்று சொல்லலாம். சாதாரணமான பக்தன் ஒருவன், ஸ்ரீஹரி கீர்த்தனைகளை கேட்டு அதில் ஈர்க்கப்பட்டு, அவனின் நாமஸ்மரணையில் துவங்கி, பகவந்தனின் ஸ்மரணையில் எப்போதும் திளைத்திருந்து தன் இஷ்ட தேவதையின் பாதசேவனம், அர்ச்சனை மற்றும் வந்தனை ஆகியவற்றின் மூலம் ஸ்ரீஹரியின் தாஸ்யத்தை பின்பற்றி, பரமாத்மனிடம் நட்பினை வளர்த்து, இறுதியில் சர்வ சமர்ப்பணையின் மூலமாக சித்தியைப் பெறலாம் என்று எண்ணினால், அப்போது இந்த நவவித பக்தி மார்க்கங்களும் ஒன்றுக்கொன்று உதவியாக (அடுத்தடுத்த நிலைகளாக) வருகின்றன என்று சொல்லலாம்.

இந்த உதாரணத்தில் அந்தந்த விதங்களில் தாரதம்யம் வருவதால், சிலர் இந்த த்ருஷ்டியை விரும்பாமல் இருப்பதற்கும் சாத்தியம் இருக்கிறது. வீர சைவர்களில் பழக்கத்தில் இருக்கும் ஷட்ஸ்தலங்களில் இந்த வகை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பக்த, மாஹேஸ்வர, ப்ரஸாதி, ப்ராணலிங்க, ஷரண மற்றும் ஐக்ய என்னும் ஆறு ஸ்தலங்கள் பக்தியின் படிக்கட்டுகள் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

இதுவரை நாம் பார்த்ததில் பக்தியின் பல வகைகளின் வழிமுறைகள், பல்வேறு காலங்களில் எப்படி மாறுபட்டு வந்திருக்கிறது என்பதை அறிந்தோம். ஆனால், ஷாண்டில்யர் கூறியதைப்

போல அது 'பரமாத்மனிடம் நாம் சமர்ப்பிக்கும் பக்தி' என்பதைப் போல இல்லாமல், நாரதர் கூறுவதைப் போல 'அன்பு மார்க்கம்' என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. பக்தன், பகவந்தனிடம் காட்டும் இந்த அன்பு வெறும் ஒரு வெளிப்பாடு என்று நினைக்காமல், அது ஒரு தனியான உணர்ச்சி என்றே சிந்தித்து, அதைப் போலவே தனது கிருஷ்ண ப்ரேமையை செய்து காட்டிய பெருமை, கௌட நாட்டின் ஸ்ரீசைதன்யரையே சாரும்.

அவரைப் பின்பற்றியவர்களில் ஒருவரான ரூபகோஸ்வாமி அவர்கள் தன் 'பக்தி ரஸாம்ருத ஸிந்து' என்னும் கிரந்தத்தில் பக்தியை உணர்ச்சி என்றே சொல்லி, அதில் அமைதி, அன்பு, காதல், வாத்ஸல்யம், மதுர என்னும் ஐந்து விதங்கள் இருக்கின்றன என்று சாஸ்திதோக்தமாக எடுத்து சொல்லியிருக்கிறார்.

இந்த ஒவ்வொரு விதங்களும் படிப்படியாக எப்படி வளர்கின்றன என்பதை உதாரணங்களுடன் விளக்கியிருக்கிறார். நம் மூதாதையர்கள், காவ்யானந்தத்தை பிரம்மானந்தத்தை தரக்கூடியது என்று சொன்னால், பக்தனின் திவ்யானுபவத்தை உணர்ச்சி- அனுபவம் என்று சொல்வதில் என்ன பிரச்னை இருக்கப்போகிறது?

பக்தியை ஐந்தாவது புருஷார்த்தம் என்றும் சொல்வதுண்டு. அவர்கள், பக்தியை தனியான உணர்ச்சி என்று சொல்லாமல், அவற்றை ஸ்ருங்காரத்திலோ, ஷாந்தத்திலோ அடக்கிவிடுகிறார்கள். இங்கு நாம் பார்த்த ஐந்து நிலைகளும், பக்தனுக்கும், பகவந்தனுக்கும் இடையே இருக்கும் சம்பந்தத்தின் மேல் நிற்கிறது. பகவந்தனின் அருளே இலக்காக இருப்பதால், இங்கு சொல்லப்பட்டிருக்கும் அந்த சம்பந்தங்கள், வெறும் ஐஹிகமாக இல்லாமல், பாரமார்த்திக சம்பந்தத்தை சொல்வதுடன், ராதா கிருஷ்ணரின் பிரேமையால் உந்தப்பட்ட ஸ்ரீசைதன்யரின் அனுபவத்தை கண்ணாரக் கண்ட ரூபா கோஸ்வாமி அவர்கள் சொல்லியிருக்கும் பக்தி ரசங்களின் விதங்களில் நாம் ஷாந்த, தாஸ்ய, சக்ய, வாத்ஸல்ய மற்றும் மதுர என்னும் ஐந்து லட்சணங்களை மட்டும் கண்டுகொள்ள முடியும்.

இந்த ஐந்து விதங்களை ஐந்து உணர்ச்சிகள் என்று சிந்தித்தால், இதைப் போல இருக்கும் பிற அங்கங்களின் விவரணைக்கு நாம் செல்ல வேண்டிய அவசியமே இல்லை. நம்முடைய ஹரிதாஸர்களின் கீர்த்தனைகளில், இந்த நோக்கத்துடன் பார்த்தால், அவர்கள் பகவந்தனை ஆராதிக்கும் விதங்களில், இந்த உணர்ச்சிகளில், சில முக்கியமானதாகவோ, அல்லது அனைத்தும் தொகுப்பாகவோ இருப்பதால், சைதன்ய பந்தத்தின் பக்தி முறைகளில், சிறிது அங்கும் இங்குமாக வேறுபாடுகளை காண்பது தவிர்க்க முடியாதது. அபரோக்ஷ ஞானிகளான ஹரிதாஸர்கள், பரமாத்மனின் ப்ரஸாதத்தினால் புனிதர் ஆனதால், அவர்கள் பகவந்தனை, சந்தர்ப்பத்திற்கேற்ப, மேற்கூறிய ஐந்து பாவங்களில் ஆராதனை செய்கின்றனர் என்பதை உதாரணங்களும் இங்கே பார்க்கலாம்.

முதலாதவாக இருப்பதான 'ஷாந்த' என்னும் பாவம், பக்தன் மற்றும் பகவந்தனின் நட்பினை விடவும், தெய்வ பக்தனானவன், பரமாத்மனின் அற்புத லீலைகளைக் கண்டு, வியப்படைந்து, அவனை புகழ்ந்து, மகிழ்ச்சியடைவதில் அடங்கியிருக்கிறது. ஞான மூலகமான இந்த பக்தியின் ஸ்வரூபத்தை பார்த்தால், பகவந்தனின் திவ்ய வைபவத்தை பார்ப்பதன் / அனுபவிப்பதன் மூலம், பக்தனுக்கு பகவந்தனில் பூஜ்யபாவனை உதிக்கிறது.

அவனுடைய லீலா வினோதங்களைக் கண்டு வியப்படைந்து, மகிழ்ந்து, தத்வஞானத்தை அடைந்து, அதன் மூலம் பரமாத்மனின் மஹாத்ம்யத்தை அறிந்து, அந்த ஸ்வாமியிடமே முறையிடுகிறான். பரம ஞானி போன்றே இருக்கும் இந்த பக்தன், தன் தூய்மையான மனதினால், பகவந்தனின் திவ்ய சக்திகளால் மகிழ்ந்து, அவனில் முழுமையாக சரணாகதி அடைகிறான். இதன் மூலமே தத்வஞானத்தை அடைந்து, அதன் காரணத்தால், அவனுடைய பக்தி, அபாரமான அன்பாக மாறுகிறது என்றும் ஒரு வாதம் இருக்கிறது.

இத்தகைய பாகவதோத்தமன், அனைத்து சராசர வஸ்துக்களிலும், பகவந்தனின் மஹாத்ம்யத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறான். ஸ்ரீமத்வாசார்யர் பக்தியை விவரிக்கும்போது 'மாஹாத்ம்யஞான பூர்வஸ்து ஸுத்ருட: ஸர்வதோऽதிக: ஸ்னேஹோபக்திரிதி ப்ரோக்த:' (பா. தாத். 1-86) என்று சொல்லியிருப்பதை பார்த்தால், ஷாந்தமான சித்தம் கொண்ட அந்த பக்தனின் பாவம், மேலும் நமக்கு தெளிவாக தெரிகிறது. இத்தகைய பக்தனின் வாணியில் நாம் அவனின் ஆனந்த பூர்ணமான, மெய்மறந்ததான பற்பல முகங்களை நாம் பார்க்கலாம்.

பக்தபராதீனனும், பக்தவாத்ஸல்ய பராயணனும் ஆன, ஹரியின் கருணையை கண்டவரான ஸ்ரீவ்யாஸராயர், அவனின் கருணையைக் குறித்து, புகழ்வதான கீர்த்தனையில் இந்த ப்ரஷாந்த பாவம் வெளிப்பட்டிருக்கிறது.

எந்தாத்தோ ஹரிய கருண ||ப
எந்தாத்தோ ஹரிய மஹிமெ ||அப

அந்த்யவில்லத நிஜானந்த த்ருப்தனு கட
ஸந்தரொக்குடிதெய ஜலகெ ஹிக்குவ கட

ஸனகாதி முனிமனகெ ஸிலுகதகம்யனு கட
நெனெவர மனதணியெ தன்ன தோருவ கட

ஷ்ருதிததிகெ மைதோரததி மஹிமனு கட
மதியுள்ளவன பக்திஸ்துதிகெ ஹிக்குவ கட

லோகபதிகளிகெல்ல ஒடெய தானெ கட
பாகுளிகனாகி பகுதர வஷதல்லிப்ப கட

ஆரரொளூ ஸட்டெயில்லத நிஸ்ஸங்கனு கட
ஸாரிதவரிகெ தந்தெ தாயி ஸிரிகிருஷ்ண கட

இந்த கீர்த்தனையை இயற்றிய ஸ்ரீவ்யாஸராயர், அவர் யதிகளும் ஆகியிருப்பதால், அவரில் ஞான மற்றும் பக்திகள் சரிசமமாக இருக்கிறது என்று சொல்லலாம். ஒவ்வொரு நுடியிலும் பயன்படுத்தியிருக்கும் 'கட' என்னும் வியப்பினை குறிக்கும் சொல், ஸ்வபாவத: அவரில் இருக்கும் பக்தியை வெளிப்படுத்துகிறது. ஸ்ரீவ்யாஸராயர் ஒவ்வொரு நுடியிலும் சொல்லியிருக்கும் செய்தி, மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. எப்போதும் ஆனந்தத்ருப்தனான ஸ்ரீகிருஷ்ணன், விதுரனின் குடிலில் பாலுக்கும், பக்த மக்கள் அர்ப்பிக்கும் ஒரு சொட்டு தண்ணீருக்கும் மகிழ்கிறான் என்றால், யாராக இருந்தாலும் வியப்படைய வேண்டும் அல்லவா?. ஸனகாதி முனிகள் செய்த தவத்திற்கும் வராதவன். மனப்பூர்வகமாம நினைத்த பக்தனுக்கு மகிழ்கிறான் என்பது சாதாரணமான விஷயமா?. வேதாதிகளுக்கும் புலப்படாதவன், பக்தர்களின் துதிக்கு ஓடி வருகிறான், மிகவும் அற்புதமான விஷயம் அல்லவா?. ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரனான ஸ்வாமி, தன் பக்தர்களின் சேவகனாக இருந்திருக்கிறான் என்றான், இதைக் கண்டு மெய்மறக்காமல் இருக்கமுடியுமா?. இவ்வாறு யாரொருவரின் சம்பந்தமும் இல்லாமல், நிர்லிப்தனான பகவந்தன், தன் பக்தர்களுக்கு தந்தை தாய்களைப் போல நடக்கும் முறை, உண்மையிலேயே அபாரமான மகிமை ஆகும். ஸ்ரீவ்யாஸராயரின் இந்த கீர்த்தனையில், தத்வஞான மற்றும் பக்திகள் எவ்வளவு அற்புதமாக வந்திருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

இதே ஸ்ரீவ்யாஸராயர், பரமாத்மன் ப்ரளய காலத்தில் ஆல இலையில் மேல் ஒரு சிறிய குழந்தையைப் போல படுத்து, தன் லீலையை செய்கிறான் என்பதை நினைத்து வர்ணிக்கும் ஸுளாதி ஒன்றின் ஒரு நுடி இவ்வாறு இருக்கிறது.

ஆலதெயெயலி மலகிதந்து நீ
லாலி லாலியெந்து பாடிதராரய்யா
மத்தெ க்ஷீராப்தியொளு மலகிதந்து நின்ன
த்ருவ்வி த்ருவ்வியெந்து தூகிதராரய்யா
ஆ ஜலதிய தர்ப்பஷயனதி நின்னனு
ஜோ ஜோ ஜோ ஜோயெந்து பாடிதராரய்யா
ஆ ரம்மெ ஷ்ருதிகூடி ஹொகளுவந்தெ
நாரந்த மஹதிய மீடுவந்தெ
ஸமீரஜ ஸ்வரவெத்தி பாடுவந்தெ
ஸ்ரீரமண நின்ன பொகளபல்லெனெ நானு
கண்ணு முச்சி நகுதிந்தென்ன ஸதெகெ
கண்ணுமுச்சி கிருஷ்ண கிவியந்தித்த

பகவந்தனுக்கு ஏற்றாற்போல, லாலி பாடி தூங்கச் செய்வது என்பது, லட்சுமி, நாரத, ஹனுமந்த ஆகியோரால் மட்டுமே சாத்தியமே தவிர, தன்னால் சாத்தியம் இல்லை என்னும் இந்த வரிகளில், பக்தனின் அசாமர்த்தியத்தை வெளிப்படுத்துவதிலேயே, ஸ்வாமியின் மகிமை, அருமை, பெருமைகளை சொல்லிவிடுகிறார்.
ஸ்ரீபுரந்தரதாஸரின் கிருதிகளில் கூட, இந்த பக்தி வகைக்கு அளவே இல்லை. ஸ்வாமியின் அபாரமான செயல்களைக் கண்டு

பொக்குளல்லி கண்டு படெதவருண்டெ.
உங்குடதல்லி ஹெண்ணு படெதவருண்டெ
மிக்காத தேவரிகெ ஈ ஸொபகுண்டெ
மரெஹொக்கெ மரெஹொக்கெ புரந்தர விட்டலா

என்னும் உகாபோகத்தில் ஸ்ரீமன் நாராயணனின் மகிமையைக் கண்டு வியக்கிறார். தம்முடைய தேவதையின் அழகு, மிகவும் அலௌகிகமானது என்று சொல்லும் அவரது வாக்கு இவ்வாறு இருக்கிறது.

ஸ்த்ரீயரிகெ புருஷரு மோஹிஸுவரல்லதெ
புருஷரிகெ புருஷரு மோஹிஸுவருண்டெ?
ஹரி பரமபுருஷோத்தம பிரம்மாதிகளு நினகெ
மோஹிஸுவரு, திருவெங்களப்பா ஸிரி புரந்தரவிட்டல
தரெயொளு மோஹனரூப காணோ.

சாஸ்திர ஞானத்தினைக் கொண்டு இவ்வாறு பாடுகிறார்.

அணுவாக பல்ல மஹத்தாக பல்ல
அணுமஹத்தெரடொந்தாக பல்ல
ரூபவாகபல்ல அரூபவாகபல்ல
ரூப அரூப எரடொந்தாகபல்ல
வ்யக்தனாகபல்ல அவ்யக்தனாகபல்ல
அகடனகடனாஷக்த அசிந்தாத்புத
மஹிமெ ஸ்வர்கதபேத விவர்ஜித
புரந்தரவிட்டலா -- என்று ஒரு நுடியில், பகவந்தனின் அப்ராக்ருத ஆக்ருதியின் மகிமையை போற்றிப் புகழ்வதைப் போலவே, இதே ஸுளாதியின் இன்னொரு நுடியில்:

கண்ணல்லி கேளுவ காம்புவனரிவ
ஆக்ராணிஸுவ ஆஸ்வாதிஸுவ
ஷ்ரவணதி கேளுவ காம்புவனரிவ
ஆக்ராணிஸுவ ஆஸ்வாதிஸுவ

என்று புகழ்வதில், அவருக்கு உண்டான ஆனந்தத்தின் எல்லை புரிகிறது. தெய்வ ஸ்ருஷ்டியின் பால் அவரது கவனம் சென்றபோது,

சந்திரகொந்து க்ஷணனிந்திரலிக்கிம்பில்ல
இந்த்ராதிகளிகெ குள்ளிரலிக்ஹொத்தில்ல
ஒந்து க்ஷணவாதரு ஸூர்யாதிகளிகெ
நிந்து துரிஸிகொள்ளலு ஹொத்தில்ல
புரந்தர விட்டலராய கட்டரஸு காணிரோ

என்று ஒரு இடத்திலும்,

தரெ அஞ்சுதலிதெ கிரி அஞ்சுதலிவெ
ஸரித்ஸமுத்ரகளஞ்சி பெச்சாகுதலிவெ
புரந்தரவிட்டல நீனெந்த அரஸோ

என்று இன்னொரு இடத்திலும் சொல்லி, பகவந்தனின் ஆணையின் எல்லையை வெளிப்படுத்துகிறார்.

ஸ்ரீகனகதாஸர், நீ மாயெயொளகோ, நின்னொளு மாயையோ - என்று குரல் எடுத்து, பகவந்தனின் நிலையை விளக்க முற்படுகையில், அவனின் அந்தர்யாமித்வத்தின் ஆழத்தை மிகவும் ஸ்வாரஸ்யமாக நிரூபித்திருக்கிறார். நமக்கு நன்கு புரிந்ததான உதாரணங்களை கொடுத்து, கடைசியில் 'அஸமபவ காகினெலெயாதி கேஷவராய உஸுரலென்னளவல்ல எல்ல நின்னொளகெ - என்று முடிப்பது மிகவும் அருமையாக இருக்கிறது.

சாஸ்திர ஞானத்தை கொண்டவரான ஸ்ரீவிஜயதாஸர், விஷ்ணு எப்படி ஸர்வாந்தர்யாமியாக இருக்கிறான் என்பதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளும் கீர்த்தனை ஒன்று இவ்வாறு இருக்கிறது.

ஆனந்த ஆனந்த மத்தெ பரமானந்த ||ப
ஆ நந்தன கந்தனொலியெ ஏனந்தத்தெ வேதவ்ருந்த ||அப

அ மொதலு க்ஷ காராந்த ஈ மஹாவர்ணகளெல்ல
ஸ்வாமியாத விஷ்ணுவின நாமவெந்து திளிதவகெ

ஜல காஷ்ட ஷைல ககன நெல பாவக வாயு தரு
பல புஷ்ப பள்ளிகள ஒளகெ ஹரிவ்யாப்தனெம்புவகெ

தாரோ பாரோ பீரோ ஸாரோ ஹாகோ ஹீரோ
யாரோ தோரோ எம்புத்ஹரிய ப்ரேரணெ எந்தரிதவகெ

போபுது பருதிப்புது மத்தெ கோப ஷாந்தவாகுவுது
ரூபு லாவண்ய ஹரிய வ்யாபாரவெந்தரிதவகெ

மத்வஷாஸ்த்ர ப்ரவசன முத்து கிருஷ்ணன தருஷன
ஷுத்த விஜயவிட்டலன்ன பொத்தி கொண்டாடுவகெ ||

பகவந்தன் அனைத்து எழுத்துக்களிலும், அனைத்து ஸ்ருஷ்டிகளிலும், நாம் பேசும் அனைத்து வார்த்தைகளிலும் எப்படி அடங்கியிருக்கிறான் என்பதை அறிந்து, அவனை கொண்டாடினால் எத்தகைய மகிழ்ச்சி கிடைக்கிறது என்பதை ஸ்ரீவிஜயதாஸர் மிகவும் அற்புதமாக விளக்குகிறார்.

ஸ்ரீஜகன்னாததாஸர் மேலோட்டமாக வர்ணித்திருக்கும் வ்யாப்த பூஜை கூட, ஷாந்த பாவத்திற்கு ஒரு சிறந்த உதாரணமாக இருக்கிறது. இந்த விஷயத்தை குறித்து, அவர் இயற்றியிருக்கும் தத்வ ஸுவ்வாலிகள் அற்புதமாக இருக்கின்றன.

பூ[4]மண்டலவே பீட[2] வ்யோம மண்ட[3]ல ச[2]த்ர
ஸோம ஸூர்யருக[3]ளே மஹதீ[3]ப | மஹதீ[3]ப நக்ஷத்ர
ஸ்தோமகளே நினகெ[3] உபதீ[3]ப ||56-(272)

மளெயே மஜ்ஜனவு திக்[3]வலயங்க[3]ளே வஸன
பெ[3]ளெவ பெ[3]ளஸுக[3]ளே நைவேத்[3]ய | நைவேத்[3]ய ஜனர கங்
க[3]ள கா[1]ந்தி[1] நினகெ[3] ஆரார்த்தி ||57-(27[3])

தருக[3]ளே சாமரக[3]ளாகி[3]ர்ப்பவு நினகே[3]
ஶரதி[2] க[3]ர்ஜனேயே மஹவாத்[3]ய | மஹவாத்[3]ய ஜீவர
ஸ்வரக[3]ளே நினகே[3] ஸங்கீ[3]த ||58-(274)

பாதாள பாது[3]க விதா[3]த்ரு லோகவே முகு[1]ட
ஶ்வேதத்[3]வீபவே நினகே[3] ஒட்[3]யாண | ஒட்[3]யாண வைகுண்ட[2]
ஆதப[1]த்ரவே நினகீ[3]வே ||59-(275)

நடெ[3]வுதே ஹரியாத்ரே நுடி[3]வுதே[3] ஹரிநாம
குடி[3]வ நீருக[3]ளே அபி[4]ஷேக | அபி[4]ஷேக தி[3]னதி[3]னதி[3]
ஒட[3]லிகு[3]ம்ப[3]ன்ன நைவேத்[3]ய ||60-(276)

முன்னாவ ஜன்மத[3] புண்ய தா ப[2]லிஸிதோ[1]
நின்னந்த[2] ஸ்வாமி எனகா[3]தி[3] | எனகா[3]தி[3] அதரிந்த
த[4]ன்யரோ நம்ம ஹிரியரு ||19-(235)

ஸ்வர்க்க பூமி பாதாளங்களைப் பற்றி சொல்வதான இந்த ஸுவ்வாலிகள், ஸ்வரூபத்தில் சிறியதானலும், ஸ்வாரஸ்யத்தில் மிகப் பெரியதானவை.

இதைப் போலவே, மற்ற ஹரிதாஸர்களின் கிருதிகளிலும் ஷாந்த பாவத்தின் பல்வேறு உதாரணங்களை நாம் பார்க்கலாம். ஷாந்த பாவம் என்பது, ப்ரேம (அன்பு) மூலமாக வந்து, ஞானத்துடன் கூடியதாக இருக்கிறது. பரமாத்மனின் ஸர்வவ்யாப்தித்வ, ஸர்வ ஷக்தித்வ, அசிந்த்யத்வ, ஐஷ்வர்யாதிகளின் ஞானத்தினால் பக்தன், ஒரு விதமான கம்பீர பாவத்தினால் ஸ்வாமியை கொண்டாடுகிறான். அப்படி ஷாந்த பாவத்தில், ஹரி ப்ரேமம் ஆழமாகி, பின் ஞானமும் அதனுடன் சேர்ந்து, வேறு குழப்பங்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்காமல், கம்பீரமாக மாறுகிறது.

எந்த ஸந்தர்களின் ஸாஹித்யத்தை எடுத்துக் கொண்டாலும், அங்கு தாஸ்ய பாவமே முக்கியமாக வெளிப்பட்டிருக்கிறது. ஹரிதாஸர்களின் ரசனைகளும் இப்படியே இருக்கின்றன. ஹரிதாஸ கைங்கர்யத்தை பின்பற்றுபவர்கள் அவர்கள் யதிகளோ, ஹரிதாஸர்களோ, அவர் பரமாத்மனில் அவனின் பாத ஸேவையை கொடுக்குமாறு வேண்டிக் கொள்கிறார். 'நா நினகேனு பேடுவதில்ல, என்ன ஹ்ருதய கமலதொளு நெலஸிரு ஹரியே' என்று ஸ்ரீபாதராஜர் ரங்கவிட்டலனிடம் கேட்டுக் கொள்கிறார். தம் ஸர்வேந்த்ரியங்களையும், அவனுக்கு

சமர்ப்பிப்பதையே விரும்புகிறார். தம் செயல்கள் அனைத்தையும் பகவந்தனுக்கு அர்ப்பித்த ஸ்ரீபாதராஜர், அவன் வைத்திருப்பதைப் போலவே, தாம் இருப்பதாக ஒப்புக் கொள்ளும் இந்த பத்யம் மிகவும் புகழ்பெற்றிருக்கிறது.

இட்டாங்கெ இருவேனோ ஹரியே என்ன தொரெயெ
ஸ்ருஷ்டிவந்தித பாத பதும ஸ்ரீஹரியே
என்னும் பல்லவி, அனுபல்லவிகளால் வரும் இந்த கிருதி, மனிதனின் வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளை மிகவும் அழகாக தெரிவிக்கிறது. இவை அனைத்திற்கும் தெய்வ சங்கல்பனே காரணம் என்று திடமாக நம்பியிருக்கும் ஸ்ரீபாதராஜர், இதற்கு சில உதாரணங்களையும் கொடுத்திருக்கிறார்.

ஸண்ண ஷால்யோதன பெண்ணெ காஸித துப்ப
சின்னத ஹரிவாணதலி போஜன
கன்ன மஹிமெ நின்ன கருண தப்பித ம்யாலெ க
தன்ன காணதெ பாயிபிடுஸுவி ஹரியே ||

கெம்பிலி பொளெவ் பீதாம்பர உடிஸுவி
ஸொம்பினஞ்சின காலு ஹொதிஸுவியோ
கபில ஹரெ நின்ன க்ருபெயு தப்பித ம்யாலெ
கபர்தக கௌபீனவு தொரெயதூ ஹரியே ||

சந்த்ரஷாலெலி சந்த்ர கிரணதந்தொப்புவ
சந்தத மஞ்சதொள்மலகிஸுவி
மந்தரோத்தர நின்ன மமதெ தப்பலு, தர்ம
மந்திரதொளு தோள்தலெதிம்பு ஹரியே ||

நரயானதொளு க்ஷண நரவரனெனிஸுவி
வர சத்ர சாமர ஹாகிஸுவி
கருணாநிதே நின்ன கருண தப்பித ம்யாலெ
சரண ரக்ஷெய தொரெயது ஸ்ரீஹரியே ||

இந்த ஒவ்வொரு நுடியிலும் நம் மனதினை இழுக்கும் முக்கிய வாக்கியம் என்னவென்றால் ‘நின்ன கருண தப்பித ம்யாலெ’ , ‘நின்ன க்ருபெயு தப்பித ம்யாலெ’ , ‘நின்ன மமதெ தப்பலு’ ஆகியவை. நம் மொத்த வாழ்க்கையே பரமாத்மனின் கருணையை பெற வேண்டும் என்னும் தத்வ தாஸ்ய பாவத்தின் வெளிப்பாடாகவே இருக்கிறது. அவன் மகிழ்ந்தால் நம்மை பாலில் மூழ்கடிக்கலாம். அவன் மகிழவில்லையெனில் நம்மை தண்ணீரில் மூழ்கடிக்கலாம். ஒரு முறை, பகவந்தனின் அருளால் பஞ்சபக்ஷ பரமான்னம் கிடைக்கலாம். அவனுடைய கருணை தவறினால், வேகாத அரிசிகூட நமக்கு கிடைக்காமல் போகலாம். ஒரு முறை அவன் கருணை காட்டி, பீதாம்பர ஷால்களை போர்த்தி நம்மை ஊர்வலமாக போகச் செய்யலாம். அப்படியில்லை எனில், உள்ளங்கை அளவு கௌபீனமும்கூட கிடைக்காமல் போகும் வாய்ப்பு உள்ளது. அவன் கருணை காட்டினால், மென்மையான சிறகுகளைப் போன்றதான படுக்கையில் படுக்கும் பாக்கியம் நமக்கு கிடைக்கலாம். இல்லையெனில், ஏதோவொரு தர்ம சத்திரத்தில், தோள்களையே தலையணையாக வைத்து படுக்கும் நிலை வரலாம். பரமாத்மனின் ப்ரஸாதத்தினால் பல்லக்கியில் அமர்ந்து, பாராட்டினை பெறலாம். அவனுடைய அருள் நின்றுவிடும் அதே நொடியில், செருப்பு கூட இல்லாமல் வெறும் காலில் நடக்க வேண்டியிருக்கும். ஸ்ரீபாதராஜரின் இந்த வர்ணனையில், எந்தவொரு மன வேறுபாடும் இன்றி, அவர் இந்த இரண்டு நிலைக்கும் கவலைப்படுவதில்லை. சுக துக்கங்கள் இரண்டினையும் சமானமாக ஏற்றுகொள்ள அவர் தயாராக இருக்கிறார். பகவத்கீதையில்

சொல்லப்பட்டிருப்பதைப் போல, பரமாத்மனின் பக்தன் ஆனவன் 'துக்கேஷ்வனுத்விக்ன மனா: ஸுகேஷு விகதஸ்ப்ருஹ:'.

ஸ்ரீவ்யாஸராஜர் தம் ஒரு ஸுளாதியில் இந்த ஸ்வாமி - ஸேவக சம்பந்தத்தினை மிகவும் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

ஆளித நீனு நின்னாளு நானு
தந்தெ நீனு நின்ன கந்த நானு
ஷரண்ய நீனு நின்ன ஷரணாகத நானு
தயாளு நீனு நின்ன தயகெ பாதுர நானு
நோவனோடின்னு காவராரில்லெந்து
ஸ்ரீகிருஷ்ண என்னனு காயபேகை தந்தெ
ஆளித நீனு நின்னாளு நானு

இவ்வாறே இன்னொரு யதிவரேண்யரான ஸ்ரீவாதிராஜர்,
பிடெனோ பிடெனோ நின்ன சரண கமலவ
என்ன ஹ்ருதயமத்யதொளிட்டு பஜிஸுவெ அனுதின

என்று ஸ்வாமியிடம் தம் அசலமான நம்பிக்கையை வெளிப்படுத்தி, அந்த ஸ்வாமி அகலிகையை காத்த சம்பவத்தை உதாரணம் காட்டுகிறார். பகவந்தனின் பாத மகிமையை விளக்குவதில், அவனின் 'உகுர கொனெயிந்த உதிஸிதளா கங்கெ - ஹரிபாத தீர்த்தவெந்து ஹர தரிஸிதனாக' என்றும், அது 'வஜ்ராங்குஷ த்வஜ பத்ம ரேகெகளிந்த ஒப்புவ ஸிரி பாதபதும' என்றும் கொண்டாடியிருக்கிறார். வேறொரு கீர்த்தனையில் 'என்னனுத்தரிஸலாகதெ சென்னராய, பின்னயிஸுவெ இன்னு பெரெ கதிய காணெ நின்ன சரண கமலதாணெ' என்று மேலும் பலமாக கூறியவாறு, பல்வேறு விதமாக வேண்டியவாறு, கடைசியில்

என்ன துர்குணவன்னு மரெது
நின்ன ஸத்குணதி பொரெது
மன்னிஸிதரெ லோகதொளகெ
தன்யனஹெனு ஜனுமவெத்தி
உன்னதாஹுது நின்ன கீருதி
நாஷவஹுது என்ன பவத பஹள தாவதி
ஸலஹோ சின்ன ஹயவதன மூருதி
என்று தம் இஷ்டதெய்வத்தை சரணாகதி அடைகிறார்.

இன்னும் தாஸ தீக்ஷையை பெற்ற ஹரிதாஸர்களின் ப்ரபஞ்சத்திற்கு வந்தால், இந்த பாவம் நிரம்பி வழிவதை பார்க்கலாம். முதன்மையாக, ஸ்ரீபுரந்தரதாஸர் 'தாஸன மாடிகோ என்ன, இஷ்டு காஸிமாடுவரேனோ கருணா ஸம்பன்ன' என்று ஸ்வாமியிடம் முறையிடுவதை கண்டால், அவருடைய பிரார்த்தனை எப்படிப்பட்டது என்பதை பார்க்கலாம். 'தாஸனாகுவுதக்கெ ஏஸு ஜன்மத ஸுக்ருத, பாஸுர ரவி கோடி ஸ்ரீஷகுணவந்த நாஷரஹித நின்ன தாஸர தாஸ்யவ லேஸாகி கொடு கண்ட்ய புரந்தரவிட்டலா' என்று தாஸத்வத்தின் மகிமையை விளக்கும் அவர், தாம் தாஸன் ஆனது மட்டுமல்லாமல், தாஸரின் தாஸனாக இருக்கவும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது என்பதை கண்டால், இந்த தாஸ்யபாவத்தின் மகிமை எப்படிப்பட்டது என்பதை அறியலாம். ஸ்ரீபுரந்தரதாஸர், ஒரு ஸுளாதியில் :

ஒடெய ஒந்தடி இடெ ஹாவுகெயவ நானு
ஒடெய மெல்லடி இடெ சடி பெத்ததவ நானு
ஒடெய தாம்பூலவனுகுளுவெடெகளல்லி பண்டலெயவ நானு

காளாஞ்சியவ நானு
ஒடெய தாம்பூலவனுகுளுவெடெகளல்லி
பண்டலெயவ நானு காளாஞ்சியவ நானு
ஒடெய ஒட்டோலகதி ஒப்புதலிரெ
கன்னடி சத்ர சாமர பிடியுவவ நானு
ஒடெய புரந்தரவிட்டலராயன
உகுரு பித்தல்லி என்ன ஷிரவ கொடுவெனு

என்று மிகவும் மனப்பூர்வகமாக தன் கைங்கர்யத்தின் வகைகளை சொல்கிறார்.

மாதாபிதரு நினகந்தெ மாரிதரென்ன
நாதனெ நீனென்ன ஸலஹுதித்தரெ தேவ
யாதகெ பக்தவத்ஸலனெனிஸிகொண்டெ
நா தடெயெனோ நின்ன பிருதிகஞ்சுவனல்ல
ஸாத்விக தெய்வவெ ஸலஹோ என்ன
ப்ரக்யாத புருஷ ஸ்ரீபுரந்தர விட்டல.

நின்ன தாஸனாகி நின்னெஞ்சலுண்டவன
நீனுதாஷீன மாடிதரெ லோகரு நகரெ
நின்ன சரணகமலவன்னு கொரளல்லி
கட்டிகொம்புவெ புரந்தரவிட்டலா

என்னும் உகாபோகத்தில் தெரியவரும் ஸ்ரீபுரந்தரதாஸரின் சேவா பாவம் மற்றும் ஹரிஸேவா தீக்ஷை எவ்வளவு ஆழமானது என்பதை அறியலாம். ஸ்வாமியிடம் முறையிடும் தாஸருக்கு அவனின் அருளே கதி ஆகையால், அவனிடம் சரணாகதி அடையும் விதத்தை குறித்து இந்த கீர்த்தனையில் பார்க்கலாம்.

தேலிஸோ என முளுகிஸோ - நின்ன
காலிகெ பித்தெனோ பரம க்ருபாளோ ||ப

ஸதி ஸுத தனதாஸெ எந்தெம்ப மோஹதி
ஹிததிந்த அதினொந்து பெண்டாதெனோ
கதி கொடுவர காணெ மதிய பாலிஸோ லக்ஷ்மி
பதி நின்ன சரணவ ஸ்மரணெயித்தனகே ||1

ஜரெ ரோக தாரித்ர்ய கஷ்மலவெந்தெம்ப
ஷரதியொளகெ பித்து முளுகிதெனோ
ஸ்திரவல்ல ஈ தேஹவு நெரெ நம்பிதெ நின்ன
கருணாபயவித்து பாலிஸோ ஹரியே ||

தோஷவுள்ளவ நானு பாஷெ உள்ளவ நீனு
மோஸ ஹோதேனு பக்திரஸவ பிட்டு
சேஷஷயன ஸ்ரீபுரந்தரவிட்டலனெ
தாஸர ஸங்கவித்து பாலிஸோ ஹரியே ||

ஸ்ரீபுரந்தரதாஸரின் பக்தி வாழ்க்கையின் ஆசை, ஆதங்கம், தவிப்பு, சமாதானம் ஆகிய பற்பல பாவங்களை பிரதிபலிக்கும் கீர்த்தனைகளை ஆராய்ந்தால், அவருடைய தாஸ்ய பாவத்தின் சிறப்புகளை கவனிக்கலாம். ஏதாவது ஒரு வகையில், தெய்வ அருள், ஸ்வாமியின் கருணையை

பெற்றால் போதும் என்னும் பிரார்த்தனை அவருடைய உகாபோகங்களில் மிகவும் அற்புதமாக வெளிவந்திருக்கிறது.

நின்ன நாம பண்டார கத்த கள்ளனு நானு
நின்ன பகுதியெம்ப ஸங்கோலெயிக்கி
நின்ன தாஸர கயலி ஒப்பிஸிகொட்டு
நின்ன முத்ரிகெயிந்த காஸி படிஸு தேவ
நின்ன வைகுண்ட துர்கதொளு
என்ன ஸெரெயனிட்டு ஸலஹோ புரந்தரவிட்டலா

தாஸ்ய பாவத்திற்கு குறியீடான, ஹனுமந்தனின் தாஸ்ய பாவத்தை மெச்சி, ஸ்ரீபுரந்தர தாஸர் இயற்றியிருக்கும் கீர்த்தனைகளை கவனித்தால், அவருக்கு இதைப் பற்றி இருக்கும் உயர்ந்த அபிப்பிராயம் தானாக தெரிய வருகிறது.

ஸேவகதனத ருசியேனளெத்யோ ||ப
தேவ ஹனுமராய வைராக்ய பேடி ||அப

உததிய தாடி ஸீதெய கண்டு பந்தாக
மதுவெய மாடென்னபாரதித்தெ?
பததி பாஷாண பெண்ணமாடிதவனிகெ
இது ஏனாஷ்சர்யவோ நீ பயஸலொல்லதெ

க்ஷணதொளு ஸஞ்சீவனகிரி தந்தாக
ஹண ஹொன்னு பேடலு கொடதிஹெனெ
வினயத விபீஷணகெ ராஜ்யவித்த
மனிகேனாஷ்சர்யவோ ஹனும நீனொல்லதெ ||

ஸார்வபௌமனு தானெ மெச்சி பந்தாகலெ
ஊர்மிய பேடலு கொடதிஹனெ
ஸர்வவ தொரெது ஸ்ரீ புரந்தரவிட்டலன
நிர்வ்யாஜ பகுதிய பேடிகொண்ட்யல்லதெ

பொதுவாக பகவந்தனிடம் வேண்டிக் கொள்ளும் ஐஹிக சுக போகங்களை வேண்டாமல், ஹனுமந்தன் பகவந்தனிடம் தாஸ்ய பாவத்தை வேண்டியதன் மூலம், ஹரிதாஸ்யத்தின் சிறப்பினை புரந்தரதாஸர் எப்படி விளக்குகிறார் என்பதை பார்த்தோம். அவருடைய பற்பல கீர்த்தனைகளில், இன்னும் இத்தகைய உதாரணங்கள் பல்வேறு கிடைக்கின்றன.

ஸ்ரீகனக்தாஸரோ இன்னும் ஒரு அடி மேல் சென்றிருப்பதாக தோன்றுகிறது. ஏனெனில், தாஸ்யத்வத்தை விதம்விதமாக வேண்டிக் கொண்டு திருப்தி அடைகிறார்.

தாஸதாஸர மனெய தாஸியர மக நானு
ஸாஸிர நாமதொடெய ரங்கய்யன மனெய

என்று சொல்லி,

* ஷங்குதாஸர மனெய மங்குதாஸனு நானு
* காளிதாஸர மனெய கேளுதாஸ நானய்யா
* அளினாளின தாஸ அடிதாஸ நானய்ய
* ஹலவு தாஸர மனெய ஹொலெதாஸ நானய்ய

* குலவில்லத தாஸ குருப தாஸ
* சலதி நின்ன பஜிஸுவர மனெய மாதிக தாஸ ஸலெ முக்தி பாலிஸோ ஆதி கேஷவராய

என்று தம் தாஸ்ய பாவத்தை விவரிக்கிறார். ஸ்ரீகனகதாஸர் பேலூருக்கு சென்று, அங்கு இருந்த வைகுண்ட தாஸரின் சேவையில் தன்யர் ஆனார் என்பது நம்பிக்கை. அந்த ஸேவாவின் சிறப்பினை குறித்து ஒரு கீர்த்தனையை இயற்றியிருக்கிறார். 'பண்டனாகி பாகிலு காயுவெ, ஹரிய வைகுண்டத ஸொம்பின தாஸர மனெய' என்று பாடுகிறார். 5 நுடிகளில் இருக்கும் இந்த கீர்த்தனையில் :

வேளெவேளெகெ நா ஊளிகெ மாடுவெ
ஆலவடிகெ சாமரவ பீஸுவெ
தாளதண்டிக ப்ருங்கி மேளகளிந்த கூடி
ஸ்ரீலோலன கொண்டாடி பாடுவெனு

எஞ்சல ஹரிவாணங்கள பெளகுவெ
கஞ்சனாபன பாதகமலவ தொளெவெ
ரஞ்சிப குஸுமத மாலெ தந்திடுவெ
ஸஞ்செகெ பஞ்சின தாஸனாகுவெ

என்னும் நுடிகளோ மிகவும் அற்புதமானவை. ஸ்ரீகனகதாஸர் அந்த தெய்வ பக்தரின் வீட்டின் வாயிலை காப்பதாக சொல்லிக் கொண்டு,

மீஸலூ உளிகவ மாடி கொண்டிருவே
சேஷ ப்ரஸாதவ உண்டு கொண்டிருவெ

என்று சொல்ல வேண்டுமெனில், ஸ்ரீகனகதாஸரின் சேவாதீக்ஷை மட்டும் அல்லாமல், வைகுண்ட தாஸரின் மகிமையும்கூட நமக்கு புரிகிறது.

ஸ்ரீவிஜயதாஸரின் ஸேவா தீக்ஷையோ, சாதாரணமானதல்ல. ஸ்ரீகனகதாஸரின் தாஸ வரிசையையே புகழுமாறு, 'தாஸ தாஸ தாஸர தாஸ்யவ கொடொ தோஷராஷி யளிது' என்று துவங்கி, தம் பிரார்த்தனையை செய்கிறார்.

சித்த நின்ன பதஸேவெயொளிரலி - சிந்தெ இதர பிடலி
அந்தரங்கதல்லா நந்திஸலி - அஹங்க்ருதியனு பிடலி
ஸந்தத நின்ன பதபங்கஜ பக்தர - பந்தவ பாலிஸோ பரமபுருஷ ஹரி

அரிஷட்வர்க்களடவிய கண்டிஸு - ஆனந்ததலிரிஸு
துருளர ஸங்கவ தூர மாடிஸு - துர்மதியனெ பிடிஸு
ஸரஸ ஸம்ப்ரம ஸன்னுத பகுதரொள் - நிருதவு நில்லிஸோ நீரஜாக்ஷ ஹரி

ஸ்ரீ ஜகன்மோஹனாகார த்ரிகுணாதீத தீர்த்தபாத
பஜகர பாவன பவனுத சரண - ருஜுகுணனுதாபரண
விஜயவிட்டலாதீஷ விஷ்வேஷ்வர
குஜன விதாரண கோவிதனுத ஹரி

ஸ்ரீவிஜயதாஸர், பகவந்தனின் பாத சேவையை விரும்புவதைப் போலவே, 'பகுதிய பாலிஸு ஜீய - முந்தெ முக்குதி கொடுவெ யாகெ நீனொலித மேலெ' என்று சொல்வதில் அவருக்கு பரமாத்மனின் சேவையில் இருக்கும் அபாரமான மகிழ்ச்சி தெரிகிறது. ஆகையால்

தனுவெ நின்னாதீனவென்னிஸு
இது அனுதின கொடு ஏக ப்ரகார மனஸு
தன ஒடவியு கண்டு கனஸு
எந்து எனகெ தோரலி நித்ய நித்யங்க்ரினெனஸு

என்று வேண்டிக் கொள்வதில், அவருடைய மனதின் ஆசை என்ன என்பது திடமாகிறது.

ப்ரஸன்ன வெங்கடதாஸரோ 'பண்டனிந்த வேளெ வேளெகெ ஊளிகவ கொண்டு உண்டுமாடு நின்ன தயவ' என்று ஸ்வாமியிடம் வேண்டிக் கொண்டு

நீனிட்டித்தல்லிகெ கரெதரோடிபஹெ
நீனுண்டுளிதுதனுணுவெ
நீனாராதீன மாள்பெ அவராக்ஞெயலி நடதெ
நீனுட்ட மைலிகுடுவெ தொடுவெ

என்று வேண்டிக் கொள்ளும் பிரார்த்தனையில் அவருடைய பக்தி தெளிவாக புரிகிறது.

பக்தியில் பாகண்ண என்று அழைக்கப்படுபவரான ஸ்ரீகோபாலதாஸர், 'பருவுதெல்ல பரலி ஸிரி ஹரிய கருணவிரலி' என்று சொல்லி, மனுஷ்யன் ஆனவனுக்கு வருவதான ஆபத்துகளை ஒரு பட்டியலாக கொடுத்திருக்கிறார். என்ன பிரச்னை வந்தாலும் தம் மனதினை 'குருகள சரணஸரோருஹமதுரஸ தரதர தபதி மைமரெதிரலி' என்னும் கோரிக்கையை முன்வைக்கிறார். ஸ்ரீகோபாலதாஸரின் சிஷ்யரான ஸ்ரீஜகன்னாத தாஸரோ 'தாஸோஹம், தவ தாஸோஹம், தவ தாஸோஹம், வாஸுதேவ விகதாகஸங்க' என்று பெருமையுடன் பாடியவாறு, பகவந்தனின் சிறப்பான லட்சணங்கள் அனைத்தையும் விவரிக்கிறர். வேறு ஒரு கீர்த்தனையில் 'நின்ன ஸங்கல்பானுஸார மாடோ, என்ன ஸாகுவ தொரெயெ மான்ய மானத நீனு' என்று தம் சுக துக்கங்களின் பொறுப்பு அனைத்தையும் பகவந்தனின் பக்கமே தள்ளிவிடுகிறார்.

ஹரிதாஸினியான ஹெளவனகட்டெ கிரியம்மா அவர்களின் வாக்கு, அவரது ஸ்வபாவத்தைப் போலவே நமக்கு படிப்பதற்கும் இதத்தை தருகிறது.

கடெகண்ணினலி நீ நோடதிரென்னய்ய
பிடபேடவோ கையா
படவர பந்து பஹு க்ருபாளிந்து
ஒடெய நீனல்லதெ நமகெ ப்யாரில்லவோ ||ப

ஷத அபராதவ மாடிதெனய்ய
ஸோரிதெ நா நின்ன பென்ன
அதிபாதகி அஜாமிளன உத்தரிஸிதெ
ப்ருதிவியொளகெ பிருதாந்த ஸ்ரீகாந்த

நெலெகாணதெ நானா பரி சிந்திஸி
ஒளகாதெனோ ஹரீகெ
பளலிஸப்யாடவோ, பக்தர குடும்பி
நளினதளாம்பக நீ ஸலஹென்னனு

ஸாரி ஹோளுவெ என்னய பளகத
ஆராபார நின்னது
ஹேரொப்பிஸித ம்யால்யாதர ஸுங்கவு
காருண்ய நிதி ஹெளவனகட்டெ ரங்கய்யா

தமக்கு இருக்கும் பிரச்னைகளை அனைத்தையும் மறைத்து / மறந்து, அவரது இதயம் எப்படி பக்தியில் திளைத்திருக்கிறது என்பதை இந்த சிறிய கீர்த்தனை தெரிவிக்கிறது.

எந்த பக்தனின் வாழ்க்கையிலும், தாஸ்ய பாவமே அவர் கடைப்பிடிக்க வேண்டிய முதலாம் வழியாகும். இந்த ஸேவ்ய ஸேவக சம்பந்தத்தை அனைவரும் அறிவார்கள். தாஸன் ஆனவனில், முக்கியமாக இருக்க வேண்டிய குணங்களில், சித்த ஷுத்தி, ஸமாதான ஸ்வபாவ, ஸேவை மனப்பான்மை போன்றதான சில குணங்களையே நாம் இதுவரை பார்த்த கீர்த்தனைகளில் பார்த்தோம்.

பக்தன், பகவந்தனின் சேவையை செய்து, அவனின் பிரஸாதத்தை பெற்று, பின் அந்த பகவந்தனிடம் உரிமையாக பேசுவது என்பதும் சகஜமே ஆகும். பகவந்தனும்கூட, தன் பக்தனின் சேவையினால் த்ருப்தி அடைந்து, அவனுடைய ஆராதீனனாகி நடக்கும் உதாரணங்களும் பல இருக்கின்றன. அர்ஜுனனின் தேரோட்டியாக ஸ்ரீகிருஷ்ணன் இருந்தது, மிகவும் புகழ்பெற்ற விஷயம். பலியின் வீட்டின் வாயிலை காத்தான் என்பது இன்னொரு உதாரணம். இந்த நட்பினால் ஆன உரிமையே முக்கியமான இன்னொரு பாவம். ஸ்ரீபாதராஜர், ஸ்ரீகிருஷ்ணனிடம் மிகவும் உரிமையுடன் அழைப்பதான, ஒரு கீர்த்தனையை பார்ப்போம்.

மரெதெயேனோ ரங்க மங்களாங்க
தரு கரு காய்தல்லி தொண்டனாகித்தென்ன ||ப

கோலு கையலி கொளலு ஜோலுகம்பளி ஹெகல
ம்யாலெ கல்லிசீல கொங்களல்லி
கால்கடகவனிட்டு காடோளிஹ பஷுஹிண்ட
லாலிஸுவ பாலகர ம்யாளதொளகித்தென்ன

கல்லு மணி கவடெயனு காடோளிஹ குலகஞ்சி
ஸல்லதொடவெய நீனு ஸர்வாங்ககெ
அல்லல்லெஸெயெ தரிஸி நவிலு கரிகள கொண்டெ
அல்லி கொல்லர கூட சல்லாட மாடுதலி

ஸிரிதேவி பந்து ஸேரித பளிக லோகதலி
ஸிரி அரஸனெந்து ஸேவகரரிவரோ
ஷரணாகதர பொரெவ ஸ்ரீரங்கவிட்டலய்ய
நரஸிம்ஹ நீனிருவ பரியு முந்தின ஸிரியு

ஸ்ரீகிருஷ்ணன், கோபாலகிருஷ்ணனாக இருந்ததைப் போல, ஸ்ரீஸ்ரீபாதராஜரும் தம்முடைய பால்யத்தில் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்தார் என்பதாக அறிகிறோம். ஆகவே அவர் தமது பால்யத்தை நினைத்தே இந்த கீர்த்தனையை இயற்றியிருக்கலாம். ஏனெனில், ஸ்வாமியை அழைக்கும்போது, 'தரு கரு காய்வல்லி தொண்டனாகித்தென்ன மரெதெயா' என்று சொல்வதில், அந்த உரிமையை பார்க்கிறோம். அப்போது கோபாலகனான ஸ்வாமி, இடையனைப் போலவே குச்சி, கம்பளி, போர்வை, கால் சலங்கை, குழல் ஆகிய அனைத்தையும் வைத்திருக்கிறான் என்னும் சித்திரத்தை தருகிறார். இவ்வாறாக இடையர்களில் ஒருவராகி, கோலாட்டம் ஆடிக் கொண்டிருந்த கிருஷ்ணன், லட்சுமியை கைபிடித்தபின், தன், தோழர்களிடமிருந்து விலகிவிட்டான் என்றும், அவனுடைய தோழர்கள், அடுத்து ஸ்வாமியின் சேவகர்கள் ஆயினர் என்று ஸ்ரீபாதராஜர் வர்ணிப்பது மிகவும் அற்புதமாக இருக்கிறது.

ஸக்ய பாவத்தை விளக்கும்படியான, ஹரிதாஸர்கள் இயற்றியிருக்கும் நிந்தா ஸ்துதி கீர்த்தனைகள், ஹரிதாஸ ஸாஹித்யத்தில் மிகவும் முக்கியமான இடத்தை பெற்றிருக்கின்றன.

ஶ்ரீவ்யாஸராஜர் 'ஏன பேடலோ நின்ன தேவாதிதேவ ஏனஹுதோ நின்னொளகெ மஹானுபாவ' என்று திடமான மொழியில், இதனை நிரூபிக்கிறார். உதாரணமாக சில வாக்கியங்களை பார்க்கலாம்.

மனெய பேடலெ வனதி, ஹாஸிகெயு வடபத்ர..
தின்னுவுதக்கெ கேளுவெனெ நவனீத சோர
ஒடவெகள பயஸெ ஷிகிபிஞ்ச துளஸி பத்ர
உடுவுதக்கெ கேளுவெனெ ஸ்த்ரீ வஸனசோர

என்று பற்பலவிதமாக துதிக்கிறார். ஆனால், ஶ்ரீவ்யாஸராஜர், ஸ்வாமியிடம் இருக்கும் தன் பக்திக்கு எவ்வித குறைவும் வராதவாறு, 'பக்தரனு வஞ்சிஸுத நீனு பச்சிடிருவ முக்திகாந்தெய கொடு, ஸுகிபெனோ கிருஷ்ண' என்று கேட்பதில் அவருடைய விருப்பங்களே ஸ்துதிகளாக வந்திருக்கின்றன.

ஶ்ரீவாதிராஜர் ஶ்ரீஹரியின் தசாவதாரங்களையே மனதில் வைத்து, பகவந்தனை இவ்வாறு நிந்தா ஸ்துதியில் சொல்கிறார்.

ஹயாஙெ கொட்டனு ஹெண்ண ஸாரகனு ஈ வரகெ ||ப
ஷ்ருங்கார புருஷரு பஹுமந்தியிரலு ||அப

என்று மெய்மறந்து வர்ணித்து, தம் நிந்தையின் பட்டியலை ஸ்வாமியிடம் சொல்கிறார்.

தேவரதோ குஷ்டு நாருவ மையி | பிட்டித்த பிருகண்ணு | (மத்ஸ்யாவதார)
முட்டி நோடிதரெ மைய்யதி கடினவு | (கூர்மாவதார)
சுட்ட மொரெய இவகெ எஷ்டுத்த ஹல்லுகளு | (வராஹாவதார)
இஷ்டுகோர முகதளியனெல்லி தொரகிதனோ | (பரசுராம அவதார)
நோடிதரெ ஜடியு கட்டிஹுது | (ராமாவதார)
பெடகு நுடிகார ஜார சோர | (கிருஷ்ணாவதார)
பண்டனாகிருவனு | (பௌத்தாவதார)
கண்டவரொடனெ காளகவ கொண்டுபஹ பலு உத்தண்டனிவனு (கல்கி அவதார)

என இவ்வளவு வகையான வேடம் தரித்திருப்பவனுக்கு, ஸமுத்ரராஜ, தன் மகளான லக்ஷ்மியை எப்படி கொடுத்தானோ எனக்குத் தெரியாது என்பதாகவே ஶ்ரீவாதிராஜரின் உரிமையின் ஸ்வருபத்தை நாம் பார்க்கிறோம். ஆனால், இவை அனைத்தும் பகவந்தனின் அவதாரங்கள் என்றும், அந்தந்த அவதாரங்களில் அவன் எத்தகைய துஷ்டர்களை கொன்று, லோகோபகார செய்திருக்கிறான் என்றும் நினைத்தால், ஶ்ரீவிஷ்ணுவின் மகிமைகள் மற்றும் அற்புத சாமர்த்தியங்கள் நமக்கு தெரியவருகின்றன.

ஶ்ரீபுரந்தரதாஸரோ, இந்த ஸக்ய பாவத்தை அற்புதமாக வர்ணித்திருக்கிறார். 'எனகு ஆணெ ரங்க நினகு ஆணெ. எனகு நினகு இப்பரிகு நின்ன பக்தராணெ' என்று சொல்வதே போதும். நண்பர்களிடம் இருக்கும் உரிமையின் குரல் இந்த பாடலில் அருமையாக வெளிப்பட்டிருக்கிறது. பக்தன் மற்றும் பகவந்தனின் ஒப்பந்தத்தின் விவரத்தை பார்த்தால், மேலும் அது நம்மை ஈர்க்கிறது. மொத்த கீர்த்தனையும் பகவந்தனுடன் பக்தன், உரிமை எடுத்து பேசும் அந்த குரல் தெரிகிறது.

நின்ன பிட்டு அன்யர பஜிஸிதரெனகெ ஆணெ
ரங்க என்ன நீ கைபிட்டு போதரெ நினகெ ஆணெ
தனு மன தனதலி வஞ்சகனாதரெ எனகெ ஆணெ
ரங்க லௌகிகவ பிடிஸதித்தரெ நினகெ ஆணெ

சிஷ்டர ஸங்கவ மாடதித்தரெ எனகெ ஆணெ
ரங்க துஷ்டர ஸங்கவ பிடிஸதித்தரெ நினகெ ஆணெ
ஹரி நின்னாஸ்ரய மாடதித்தரெ எனகெ ஆணெ
ரங்க புரந்தர விட்டல நீ ஒலியதித்தரெ நினகெ ஆணெ

என்னும் நுடிகளில், பக்தனுக்கும் பகவந்தனுக்கும், நட்பு எப்படி வளர்கிறது என்னும் சிந்தனை நமக்கு தெரிகிறது. ஸ்ரீபுரந்தரதாஸர் தமது உகாபோகம் ஒன்றில், பகவந்தனுடன் எப்படி சரளமாக பேசுகிறார் என்பதை இங்கு பார்க்கலாம்.

நின்னந்த ஸ்வாமி எனகுண்டு நினகில்ல
நின்னந்த தந்தெ எனகுண்டு நினகில்ல
நின்னந்த தொரெ எனகுண்டு நினகில்ல
நீனெ பரதேஷி நானே ஸ்வதேஷி
நின்னரஸி லகுமி என்ன தாயி
நின்ன தாய தோரோ புரந்தரவிட்டலா

இந்த உகாபோகத்தை பார்த்தால், ஸ்வாமியை ஒரு பக்தன் திட்டுவதைப் போல இருந்தாலும், ஹரி ஸர்வோத்தம என்பதான கருத்து வந்திருப்பதையே முக்கியமாக பார்க்க வேண்டும்.

ஸ்ரீகனகதாஸரின் கீர்த்தனை ஒன்றில் வெளிப்படும் ஸக்ய பாவத்தின் ஸ்வரூபமோ மிகவும் அற்புதமானது.

நினகிந்த குந்தேனோ நம்மம்ம ஜயலக்ஷ்மி
நினகிந்த குந்தேனோ ஸனகாதிகள ஸ்வாமி
மனஸிஜனொடெயனே கனககர்ப்பன ஜனக

என்னும் கேள்வியே விஷ்ணுவை ஆச்சரியப்படுத்தும் விதமாக இருக்கிறது. த்வைத ஸித்தாந்தத்தின்படி, லட்சுமிதேவி, நாராயணனின் மிகவும் அருகில் இருந்து, சம்பந்தம் உள்ளவளாக இருந்தாலும், அவனைவிட அவள் எப்போதும் கீழானவளே தவிர, எப்போதும் சமம் அல்ல. ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தில் லட்சுமிதேவி நாராயணனின் அருகில் இருப்பது மட்டுமல்லாமல், அவளின் முலமே பக்தர்கள், ஸ்ரீமன் நாராயணனை பார்க்க வேண்டியதாகிறது. இது எப்படியோ இருக்கட்டும், புரட்சிகரமான கருத்துக்களை மனதினைக் கொண்ட ஸ்ரீகனகதாஸர், தம் இந்த வாதத்தை எப்படி விளக்குகிறார் என்பதை பார்ப்போம்.

மச்சாவதாரனாதரெ - ஆகெ மச்சகங்களு தானாதளு
ஹெச்சன ஷங்கத பிடிதரெ - ஆகெ ஸ்வச்ச ஷங்ககண்டளாதளய்யா
பெட்ட நீனொந்து பொத்தரெ - ஆகெ பெட்டதந்த குசவெரடு தா பொத்தளு
மெட்டி சேஷன நீ துளிதரெ - ஆகெ கட்டி பாஸெகெ சேஷன நிலிஸிஹளய்யா
கஜதரஸ நீனாதரெ - ஆகெ கஜகாமினி தானாதளு
நிஜனரஸிம்ஹ நீனாதரெ - ஆகெ பஜிஸி ஸிம்ஹமத்யளாதளய்யா
நீலவர்ண நீனாதரெ - ஆகெ நீலகுந்தளெ தானாதளு
லோல கமலனாபனாதரெ - ஆகெ பாலகமல முகியாதளய்யா
ஈ பரியலி நீனு ஜனிஸிதெயோ - நம்ம கோபியர மோஹ ஸலிஸிதெயோ
அபார மஹிமனெ எனிஸிதெயோ - நம்ம ஸ்ரீபதினெயெயாதி கேஷவராயனெ

இந்த கீர்த்தனையின் ஸ்வாரஸ்யத்திற்கு இங்கு தெரியும் சாதுர்யமே முக்கியம். ஸ்ரீமன் நாராயணன் மத்ஸ்யாவதாரம் எடுத்தால், லட்சுமி, சங்கு கழுத்தினை கொண்டவள். ஸ்ரீகிருஷ்ணன், கோவர்த்தன தாரியாக ஆனால், லட்சுமி சிறந்த தனங்களைக் கொண்டு அழகாக

இருக்கிறாள். ஸ்ரீகிருஷ்ணன் காளிங்கனை மிதித்து துவைத்தால், லட்சுமி, சேஷனையே கட்டி நிறுத்துமாறு தெரிகிறது. ஸ்ரீவிஷ்ணு கஜேந்திரனுக்கு அருளினால், லட்சுமிதேவி மந்தகஜகமனை ஆகிறாள். ஸ்ரீவிஷ்ணு நரஸிம்ஹ அவதாரத்தை எடுத்தால், அவனின் மனைவி சிம்மத்தைப் போன்ற இடுப்பு கொண்டவள். ஸ்ரீவிஷ்ணு நீல வர்ணன் ஆனால், அவனின் மனைவி நீல குந்தளத்தில் அமர்ந்திருக்கிறாள். ஸ்ரீவிஷ்ணு பத்மனாபன் எனும் பெயரை கொண்டிருந்தால், லட்சுமி, தன் கமல வதனத்தால், கமனீயள் என்று அழைக்கப்படுகிறாள். ஸ்ரீவிஷ்ணு மற்றும் லட்சுமிதேவியரில் இந்த சம குணங்களை கண்டு, கனகதாஸருக்கு தம் மாத்ரு ஸ்வரூபிணியான லட்சுமி எப்படி தானே குறைவாகிறாள் என்னும் கேள்வி வராமால் போகாது. ஸ்வாமியுடன் இவ்வாறு தர்க்கம் செய்யும் தாஸரின் போக்கு, நம மனதினை கொள்ளை கொள்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை.

ஸ்வாமியை கேலி செய்யும் விதங்களிலும், நட்பின் பாவத்தை பார்க்கலாம். ஸ்ரீவிஜயதாஸர், திருப்பதியின் ஸ்ரீனிவாஸ தேவரை கேலி செய்யும் கீர்த்தனை மிகவும் புகழ்பெற்றது. இது ஒரு மங்கள கீதை ஆனாலும், ஸ்ரீதாஸர் மிகவும் உரிமை எடுத்துக் கொண்டு, ஸ்வாமியை விதம்விதமாக நிந்தை செய்கிறார். இந்த கீர்த்தனை 'ஜயமங்களம் நித்ய ஷுப மங்களம்' என்னும் பல்லவியில் தொடங்குகிறது.

ஜயமங்களம் நித்ய ஷுப மங்களம்

தொளஸதக்கிய திம்ப கிலுபு தளிகெயலும்ப
கொளகதலி ஹணகளனு அளெதுகொம்ப
இல்ல காஸு எம்ப ஸுள்ளு மாதாடிதரெ
எல்லவனு கஸுகொம்ப கள்ளதொரெகெ

தன்ன நோடெனெந்து முன்னாரு காவுத பரெ
தன்ன குடிய பொக்க ஜனரிகெல்ல
ஹொன்ன ஹணகள கொண்டு தன்ன தருஷன கொடதெ
பென்னொடெய ஹோயிஸுவ அன்யாயகாரிகெ

கிட்ட ஹாருவனாகி ஒட்டி தானவ பேடி
துட்டு காஸுகளிகெ கைய நீடி
அட்ட பித்த ஜனர விட்டொரகள களெது
தொட்டவர மாள்ப ஸிரி விஜயவிட்டலகெ

பக்தி மார்க்கத்தில் த்வேஷபக்தி என்னும் ஒரு வகை உண்டு. ஹிரண்யாக்ஷ, ஹிரண்யகசிபு, ராவண, கும்பகர்ண, சிசுபால, தந்தவக்ர ஆகியோர் இந்த வகையை சேர்ந்தவர்கள். முன்னர் ஜயவிஜயர்களாக இருந்த இவர்கள், பிராயச்சித்தத்திற்காக மூன்று பிறவிகளை எடுத்து, ஸ்வாமியின் அருளை பெற்றனர். பக்தியில் ஸ்வாமியை அடக்கி, அவனின் அருளைப் பெற்றனர். கன்னட வரகவியான ஹரிஹரன் என்பவர், பக்தன் ஒருவன் எவ்வளவு வணங்கினாலும் பகவான் வராததைக் கண்டு 'அம்பிகானைதம்ப பிம்பலம்பட ஹஸ்த' என்று கேலி பேசியதும், அடுத்து மேலும் தன் மானம் எப்படி போய்விடுமோ என்று பயந்து பகவந்தன் வந்து தரிசனம் அளித்ததாக வரலாறு சொல்கிறது. அதைப் போலவே இந்த கீர்த்தனையிலும், ஸ்ரீவிஜயதாஸர், நிந்தா ஸ்துதியின் மூலம் பகவந்தனை முதலில் திட்டியவாறு, கடைசியில் அவனை புகழ்வதின் மூலம் தன்னை அவனிடம் சமர்ப்பணம் செய்து கொள்கிறார். இதுவும் பக்தியில் ஒரு வகை ஆகும்.

தாயானவள் தன் குழந்தையிடம் காட்டும் அக்கறை, பாசங்களே, வாத்ஸல்ய பாவம் என்று அழைக்கப்படுகிறது. பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனின் பாலலீலை இதற்கு

ஒரு தக்க உதாரணம். சிறைச்சாலையில் ஸ்ரீகிருஷ்ணனை பெற்ற பாக்கியம் தேவகிக்கு இருந்தாலும், அவனை தூக்கி, கொஞ்சி அவனுடன் விளையாடிய பாக்கியம் அனைத்தும் யசோதைக்கானது. நம் ஹரிதாஸருக்கு, பாகவதம் என்பது பிரமாண கிரந்தத்தில் ஒன்றாக இருப்பதால், அதில் உள்ள தஷம ஸ்கந்தத்தில் கதைகள் முழுவதும் இவர்களுடைய கிருதிகளாக வந்திருப்பதோடு மட்டுமல்லாமல், ஸ்வானுபாவத்தினாலும் இந்த ஆராதனை மிகவும் அழகாக இருக்கிறது என்பதை காண்கிறோம்.

ஸ்ரீமதாசார்யர், உடுப்பியில் பிரதிஷ்டாபனை செய்திருக்கும் மூர்த்தியும், கடைகோலு கிருஷ்ணனே ஆகியிருப்பதால், அந்த சிறிய விக்ரகத்தை பார்த்த உடனேயே நம் பக்தர்களின் இதயம் வாத்ஸல்யத்தினால் கரைகிறது. மற்ற அனைத்து பாவங்களைவிட இந்த பாவமானது கபடம் இல்லாதது, எதையும் விரும்பாதது ஆகும். எந்த தாய்தான், குழந்தையிடம் தான் காட்டும் வாத்ஸல்யத்திற்கு எதிராக எதையாவது எதிர்பார்க்கிறாள்?. குழந்தையை கொஞ்சி மெய் மறக்கும் புண்ணியமே புண்ணியம். அது தன் சின்னஞ்சிறு கால்களை வைத்து நடப்பதை கண்டு மகிழ்ந்தது, மகிழ்ந்ததே. ஸ்ரீபாதராஜர் துவங்கி, அனைத்து ஹரிதாஸர்களும் இந்த வாத்ஸல்யத்தின் மகிமையை தங்களின் பார்வையில் பாடி மகிழ்ந்திருப்பதை பார்க்கிறோம்.

குறும்புக்கார கிருஷ்ணன், விளையாடிவிட்டு வீட்டிற்கு வந்தால், கோபி அவனிடம் இவ்வாறெல்லாம் கேட்கிறாள். 'எல்யாடி பந்த்யோ என்ன ரங்கய்யா - நீ எல்யாடி பந்த்யோ என்ன கண்ணமுந்தாடதெ' என்று கேட்டு, கிருஷ்ணனின் அங்கங்களை வர்ணித்து, கடைசியில் :

அஷ்டதிக்கலி அரஸி காணதெ
பஹள த்ருஷ்டிகெட்டெனு நின்ன நோடதெ
இன்னெஷ்டு பேளலி கேளபாரதெ
ரங்கவிட்டல நீ எல்ல கண்ண முந்தாடதெ

என்று தன் ஆதங்கத்தை தெரியப்படுத்துகிறார். இந்த வாத்ஸல்ய பாவத்தில் இன்னொரு அம்சத்தையும் நாம் நினைக்க வேண்டும். ஹரிதாஸர்கள் சின்ன கிருஷ்ணனை நேரடியாக புகழ்வதுண்டு. அல்லது, தாம் யசோதையாகவோ, கோபியராகவோ, நினைத்துக் கொண்டு, அவர்களுடைய அந்தரங்கத்தின் அனந்த செயல்களை வெளிப்படுத்துவதுண்டு. இந்த இருவித பாவங்களால் ஹரிதாஸர்கள் இயற்றியிருக்கும் கிருதிகள் ஏராளமாக உள்ளன.

ஸ்ரீபாதராஜர் 'போபு ஹோகோண பாரோ ரங்க, போபு ஹோகோண பாரோ' என்னும் கீர்த்தனை மிகவும் அருமையானது. பல்லவியில் பாலகனான ஸ்ரீகிருஷ்ணனை அழைப்பதாக சொல்லும் 'போபு' என்னும் பால-பாஷை, இந்த கிருதிக்கு மிகவும் அபூர்வமான சிறப்பினை கொடுக்கிறது. அடுத்து வரும் நுடிகளில், ஜானகியின் திருமணம், கிருஷ்ண ருக்மிணி ஹரண, மற்றும் பாண்டவர்களை காத்த விதங்கள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. ஹரிதாஸர்களுக்கு ஸ்ரீகிருஷ்ணனோ, ஸ்ரீராமனோ, வெறும் லௌகிகமான ஒரு குழந்தை அல்ல. அவர்கள் பிறந்ததிலிருந்தே தெய்வாம்சம் பொருந்தியவர்கள். அவர்களுடைய விளையாட்டுகள், பகவந்தன் அவனின் பக்தர்களுக்காக காட்டிய லீலைகள் ஆகும். ஆகையால், இந்த தேவானுதேவதைகளின் பால்யத்தை விளக்கும் நோக்கத்தில் அவர்களுடைய அலௌகிக செயல்கள் அனைத்தையும் பட்டியல் இடுகின்றனர். இவ்வாறு, ஹரிதாஸர்கள் வெளிப்படுத்தும் வாத்ஸல்ய பாவத்தில் லௌகிக மற்றும் அலௌகிக பாவங்கள் இரண்டும் சேர்ந்து வந்திருக்கின்றன.

ஸ்ரீவ்யாஸராஜர் மற்றும் ஸ்ரீவாதிராஜர் இருவரும் ஸ்ரீகிருஷ்ணனின் பாலலீலைகளை கண்டு, தங்களை மறந்து பாடி மகிழ்ந்திருக்கின்றனர். ஸ்ரீகிருஷ்ணன், யசோதை தயிர் கடைந்த மத்தினையே வைத்துக் கொண்டு, அவள் அதனை கேட்டாலும் கொடுக்காமல் இருக்க, அந்த

சம்பவத்தின் அழகினை, ஸ்ரீவ்யாஸராஜர் தம் ஒரு கீர்த்தனையில் விளக்கியிருக்கிறார். யசோதை தன் குழந்தையிடம் கேட்கும் விவரம் இவ்வாறு உள்ளது.

கடெகோல தாரென்ன சென்ன
மொஸரொடெதரெ பெண்ணெ பாரது முத்து ரங்க

அண்ணன ஒடகொண்டு பாரய்யா - ஸவி
பெண்ணெய முத்தெய மெலுவிரந்தெ
பண்ணத ஸரவன்னு கொரளல்லி ஹாகுவெ
சிண்ணரொடனெ ஆட களுஹுவெ ரங்க

புட்ட பச்சிய தந்து நின்னய சின்னத
தொட்டில காலிகெ கட்டிஸுவெ
பட்டலு தும்பித ஸக்கரெ நினகீவெ
கட்டாணி முத்தின ஸரவனீவெ

படவர பாக்யத நிதியெ, கோகுல
தொடெயனெ மாணிக்யத ஹரளெ
கடு முட்து உடுபின பாலகிருஷ்ணய்ய
துடுகு மாடுவரேனோ பெங்களொளு ரங்க

யதிகளான ஸ்ரீவ்யாஸராஜர், மாத்ரு ஹ்ருதயத்தின் பெருமையை உணர்ந்து, எவ்வித மேற்பூச்சும் இல்லாமல், இருந்ததை இருந்தாற்போலவே வர்ணித்து, அனைவரையும் மெய் மறக்கச் செய்கிறார். உடுப்பியின் கிருஷ்ணன் தரிசன காலத்தில், இந்த கிருதியினை இயற்றியிருக்கலாம் என்னும் சிந்தனை, இந்த கடைசி நுடியில் வெளிப்பட்டிருப்பதால், அவருடைய மனம், கடெகோல கிருஷ்ணனிடம் பாய்ந்திருப்பது, அவருடைய இயல்பே ஆகும்.

ஹயவதன அங்கிதத்தைக் கொண்டவரான ஸ்ரீவாதிராஜருமம்கூட, ஸ்ரீகிருஷ்ணனின் பால்யத்தை விதம்விதமாக வர்ணித்திருக்கிறார்.

குணிதாடோ ரங்க நலிதாடோ
குணிதாடோ குந்தணத ஸரளெ
நலிதாடோ மாணிகத ஹரளெ

என்று ஸ்ரீகிருஷ்ணனின் நாட்டிய வைபவத்திற்கு மயங்கி, அவன் தன் பாதத்தினால் மட்டுமே எப்படி பக்தர்களை உத்தாரம் செய்கிறான் என்பதை புகழ்கிறார். ஸ்ரீராமாவதாரத்தில் அகலிகையை உத்தாரம் செய்தது, ஸ்வாமியின் ஸ்ரீபாதம் அல்லவா?. ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் ஷகடாசுரனை கொன்றது பகவந்தனின் பாதம் அல்லவா?. காளிங்கனை மிதித்து துவைத்தது அதே பாதங்கள்தானே?. ஆகையால், ஸ்வாமி, தன் பாத மகிமைகளை இன்னொரு முறை எனக்கு காட்டக்கூடாதா என்பதே அவருடைய விருப்பம்.

ஸ்ரீகிருஷ்ணனின் குறும்புகளைக் கேட்டு, அதனை சகித்துக் கொள்ள முடியாத கோபியர்கள், யசோதையிடம் தம்முடைய புகார்களை சொல்லிக் கொள்ள, அப்போது யசோதை தன் மகனுக்கு புத்திமதிகளை சொல்லும் சந்தர்ப்பத்தை, ஸ்ரீவாதிராஜர் மிகவும் அற்புதமாக வர்ணித்துள்ளார். யசோதை கிருஷ்ணனிடம், 'என்னாணெ ப்யாடப்யாடவோ ரங்க நினகிது சென்னகித்தேர மனெ கோவிந்த' என்று சொல்கிறாள். யசோதை சொல்லும் ஒவ்வொரு புகாருக்கும், ஸ்ரீகிருஷ்ணனிடம் அதற்கான பதில் தயாராகவே இருக்கிறது. இந்த இருவரின் பேச்சுவார்த்தையின் அழகு, இந்த கீர்த்தனையில் அருமையாக வெளிவந்திருக்கிறது.

யசோதை : என்னப்ப கந்தனெ சிண்ண கோபேரு பந்து நின்ன தூருதலித்தாரோ கோவிந்த
கிருஷ்ணன்: கன்னேரு கொப்பிந்த அன்யாய நுடிதாரெ. இன்னேனு மாடலம்ம கோபம்மா
யசோதை: ததி துக்தபாண்ட ஒடெது கோபியரன்னு ஸதர மாடுவரெ கந்த கோவிந்த
கிருஷ்ணன்: உதயதி குத்யாடி மார்ஜாலங்களு பீளெ ததி பாண்ட ஜாரிதம்ம கோபம்மா
யசோதை: பஸவன ஆடதி ஷிஷுகளெல்லர கூடி மஸிமண்ணு மையாதவோ கோவிந்த
கிருஷ்ணன்: பிஸஜாக்ஷியரு தம்ம மனெகெலஸத கைய மஸிமண்ணு ஒரஸிதரெ கோபம்ம
யசோதை: ஒரகித்த ஹஸுகளெப்பிஸி கருகள பிட்டு துருளு தனவ மாடோரே கோவிந்த
கிருஷ்ணன்: நெரெதித்த ஷிஷுகளாடுவ குல்ல தாவ் கேளி துருஷிஷு பெதரிதம்ம கோபம்ம
யசோதை: அண்ண பலராம நின்ன பன்னணெ ஸுத்திய சென்னாகி பேளிதனோ கோவிந்த
கிருஷ்ணன்: உன்னந்த தாயாதிய மாதுகள நீனு மன்னிஸபேடம்ம கோபம்ம

என்று நடக்கும் பேச்சுவார்த்தையின் கடைசியில், யசோதை:
பாயென்ன ரன்னவெ பாயென்ன சின்னவெ
பாயென்ன மோஹத கிளியெ கோவிந்த
பாயெந்து யஷோதெ கரெதளு பிகிதப்பி
பாயென்ன ஹயவதன கோவிந்த
என்று கூறி அவனை கொஞ்சுகிறாள்.

ஸ்ரீபாதராஜர், ஸ்ரீவ்யாஸராஜர் மற்றும் ஸ்ரீவாதிராஜர் முதலானோர் அவர்களுடைய கிருதிகளால் வளர்த்த ஹரிதாஸ ஸாஹித்ய க்ஷேத்திரத்தில், ஸ்ரீபுரந்தரதாஸர் நுழைந்ததுமே ஒரு புதிய உலகமே பிறந்தது எனலாம். ஸ்ரீபுரந்தரதாஸர் புனைந்த வாத்ஸல்ய ப்ரபஞ்சமோ மிகவும் விசாலமாகவும், சிறப்பாகவும் இருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனின் பாலலீலையின் மொத்த கதையினை அவர் மிகவும் விவரமாக பாடியிருக்கிறார்.

பகவந்தன் குழந்தையாக அவதரித்ததை நினைத்து, ஸ்ரீபுரந்தரதாஸர், அந்த குழந்தையின் அலௌகிக குணங்கள் அனைத்தையும் ஒரு கீர்த்தனையில் அடக்கியிருக்கிறார். இந்த கீர்த்தனையில் கிருஷ்ணனின் பெயரை தெளிவாக கூறியிருக்காவிட்டாலும், அங்கு சொல்லப்பட்டுள்ள வர்ணனைகளை அவனுக்கே பொருத்திப் பார்த்தால், அதில் எவ்வித தவறும் இல்லை. 'கூஸனு கண்டீரா, ஞானிகளெல்ல கூஸனு கண்டிரா' என்று, கேள்வி ரூபமாக உள்ள இந்த பல்லவியிலேயே, இந்த குழந்தை, ஞானிகளுக்கு மட்டும் தெரிகிறது என்று சொல்லியிருப்பது கவனிக்க வேண்டிய விஷயம் ஆகும். சாதாரண குழந்தைகளைப் போல இல்லாமல், அந்தக் குழந்தை 'ஸாஸிர நாம' உள்ளது 'ஷதகோடி தேஜ' த்தினால் ஒளிமயமாக இருந்தது. 'ஸுஸுவ ஸுகமய ஞானத கூஸு' . முதலாம் நுடியில் ஸ்ரீதாஸர், அது ஞானிகளுக்கும் பக்தர்களுக்கும் எப்படி தெரிகிறது என்பதை கூறுகிறார்.

ஞான ஸமுத்ரதொளாடுவ கூஸு
ஞானிகள ஹருதயதி ஹொளெயுவ கூஸு
தீனதாஸரிகெ காணுவ கூஸு
தானெ பல்லது தன்ன மஹிமெய கூஸு

என்றதில், குழந்தையின் மகிமை என்ன என்பது புரிகிறது. இந்த மஹிமாதிஷயங்களின் பட்டியலில் 'பேகாத பக்ததொளாடுவ கூஸு' என்னும் பத்தி மிகவும் முக்கியமானது. ஸ்ரீபுரந்தரதாஸருக்கு கிருஷ்ணனிடம் இருக்கும் அதிக அன்பினை கவனிக்க வேண்டும். இந்த கீர்த்தனையில் பாடப்படும் குழந்தை, ஸ்ரீகிருஷ்ணனே என்று நினைத்தால், ஸ்ரீபுரந்தரதாஸர் படைத்திருக்கும் வாத்ஸல்ய ப்ரபஞ்சத்திற்கு இது ஒரு துவக்கப் புள்ளியாக இருக்கிறது.

யாதவ நீ பா, யதுகுல நந்தன மாதவ மதுஸூதன பாரோ - என்று ஸ்ரீகிருஷ்ணனை அழைப்பதில், அந்த கிருஷ்ணன், தன் தாய் மாமனான கம்சனை மதுரையில் எப்படி கொன்றான் என்பதை

அனுபல்லவியில் கூறி, அதன் பின், அந்த கிருஷ்ணனின் மோஹன ரூபத்தை வர்ணித்திருக்கிறார். அனைத்து குழந்தைகளைப் போலவே, அவனுடைய 'கணகாலந்துகெ குலு குலு' என்கிறது. 'சிணிகோல் செண்டு புகுரியனாடுத, ஸண்ண ஸண்ண கோவளரொடகூடி' வா என்று அழைக்கிறார். மற்ற இரு நுடிகளில் ஸ்ரீகிருஷ்ணனுக்கு மட்டுமே பொருந்துமான லட்சணங்களை சொல்கிறார்.

ஷங்கசக்ரவு கையலி ஹொளெயுத
பிங்கத கோவள நீ பாரோ
அகளங்க சரிதனெ ஆதி நாராயண
பேகெம்ப பக்தரிகொலிது பாரோ

ககவாஹனனெ பகெபகெயிந்தலி
நகெமொகதரஸனெ நீ பாரோ
ஜகதொளு நின்னய மஹிமெய பொகளுவெ
புரந்தர விட்டலா நீ பாரோ

என்று தாம் அழைக்கும் குழந்தை, கிருஷ்ணன் அல்லாமல் வேறு யாரும் இல்லை என்று விளக்குகிறார். 'ஓடிபாரய்யா வைகுண்டபதி நின்ன நோடுவெ மனதணிய' என்று இன்னொரு கீர்த்தனையும் இதைப் போலவே இருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனின் பால லீலைகளை நிரூபிப்பதில், அவர் தம் வாழ்க்கையில் தம் குழந்தைகளை எடுத்துக் கொஞ்சி அனுபவித்த அனைத்தையும் இங்கு, சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பாடி, தாம் விளையாடிய குழந்தை ஸ்ரீகிருஷ்ணனே என்னும் சிந்தனை இங்கு வந்திருப்பதை பார்க்கலாம். லௌகிக மற்றும் அலௌகிகங்களை பொருத்தி படைத்த இந்த கலை மிகவும் மெச்சத்தக்கது. பால கோவிந்தனை தூக்கி கொஞ்சும் கோபியைக் கண்டு, ஸ்ரீதாஸரின் இதயம் தாமாகவே விம்முகிறது.

கோபிய பாக்யவிது ஸ்ரீபதி தா ஷிஷுரூபீனலிருவுது - என்று அவளுடைய பாக்கியத்தைக் கண்டு, அவள் தன் மகனை எப்படி விதம்விதமான வகைகளில் உபசரிக்கிறாள் என்பதை விவரிக்கிறார்.

கடுமுத்து ரங்கன தொடெய மேலெத்துத
ஜடெய ஹெணெது ஹுமுடிஸி பேக
பிடதெ முத்தின சிந்தரளெலெயனு
ஸடகரதிந்தலரிகரிஸிதளு

நித்ய நிர்மலனிகெ நீரனெரெது தந்
தெத்தி தொடெயொளிட்டு மொலெயூடி
முத்து கொட்டு பலு விததிந்தாடிஸி
அர்த்தியிந்தலி தா தூகிதளு

த்ருஷ்டி தாகீதெந்திஷ்டு விபூதிய
தட்டெயொளாரதிகள பௌகி
தட்டனெ உப்பு பேவு நிவாளிஸி
தொட்டிலொளிட்டு தா தூகிதளு

என்னய ரன்னனெ ஸும்மனிரோ தொட்ட
கும்மனு பருவனு அளபேட
ஸும்மனெ இரு நினகம்மி கொடுவெனெந்து
பொம்மன பிதன தா தூகிதளு

மாதவ ஜோ மதுஸூதன ஜோ ஜோ
யாதவராய ஸ்ரீரங்கனெ ஜோ
ஆதிமூருதி நம்ம புரந்தரவிட்டலன
ஆதரதிந்த தூகிதளு

இந்த முழு கீர்த்தனையில், ஒரு புறம், யசோதை, தான் தூக்கி கொஞ்சிக் கொண்டிருக்கும் குழந்தை பகவந்தனே என்னும் ஞானத்தை வைத்துக் கொண்டிருப்பதாகவும், இன்னொரு புறம், அவள் மற்ற அனைத்து தாய்களைப் போலவே, கிருஷ்ணனை எப்படி கொஞ்சுகிறாள் என்பதை விளக்குகிறார். அந்த அலௌகிக பாலகன், நித்ய நிர்மலனாக இருந்தாலும், யசோதை, அவனை குளிப்பாட்டி, உபசரிக்கிறார். அபூர்வமான அழகினால் ஒளிர்பவனான அந்த சிறுவனை, த்ருஷ்டி தாக்கிவிட்டது என்று, உப்பு மிளகாய் ஆகியவற்றால் த்ருஷ்டி சுற்றிப் போடுகிறாள். இது பொதுவாக அனைத்து தாய்மார்களும் செய்வதே. பிரம்மனின் தந்தையான இவனுக்கு, பேய் / பிசாசு ஆகியவை வந்துவிடும் என்று பயமுறுத்தி, சாப்பிட வைக்கும் யசோதையின் தாய்ப்பாசத்தைக் கண்டு ஸ்ரீதாஸர் ஆனந்தப்படுகிறார். இப்படியான இரு வகையான வர்ணனைகள் ஸ்ரீதாஸரின் கீர்த்தனைகளின் ஒரு சிறப்பம்சம் ஆகும்.

'ஜகதோத்தாரன ஆடிஸிதளெஷோதெ' என்னும் புகழ்பெற்ற கீர்த்தனையிலும், இதே மாதிரியான விஷயங்களை நாம் பார்க்கிறோம். ஸ்ரீபுரந்தரதாஸர் கூறுவதைப் போல, பகவந்தன் யசோதையின் குழந்தையாக ஆகி, உலகிற்கு தன்னுடைய லீலையினை வெளிப்படுத்துகிறான். இந்த மொத்த கீர்த்தனையின் ரசனையை பார்த்தால், இங்கு முன்னர் பார்த்ததைப் போல, ஒரு புறம் ஸ்வாமியின் மகிமைகள், இன்னொரு புறம் யசோதையின் தாய்ப்பாசம் என இந்த இரண்டும் அழகாக வந்திருக்கின்றன. இன்னொரு விதமாக சொல்ல வேண்டுமென்றால், ஸ்ரீபுரந்தரதாஸர், ஒரே நேரத்தில், ஸ்ரீகிருஷ்ணனின் தெய்வாம்சத்தையும், யசோதையின் மாத்ருத்வத்தையும் கண்டு மகிழ்ந்து இந்த இரண்டையும் புகழ்ந்திருக்கிறார்.

ஜகதோத்தாரன மகனெந்து திளியுவ
ஸுகுணாந்தரங்கன ஆடிஸிதளெஷோதெ

என்னும் நுடியில் பரமாத்மனான ஸ்ரீகிருஷ்ணனை, யசோதை தன் மகன் என்று நினைத்து எப்படி செயல்களை செய்கிறாள் என்னும் விஷயத்தை சொல்கிறார். ஆகமத்திற்கு சிக்காதவனும், சிறிய குழந்தையும் இவனே. அணோரணீயனும், மஹதோமஹீயனும், அப்ரமேயனும் ஆன பகவந்தன், யசோதையின் கையில் குழந்தையாக மாறி, அவளுக்கு மகிழ்ச்சியை கொடுக்கிறான். பரம புருஷனும், பரவாஸுதேவனும் ஆன, ஸ்ரீபுரந்தரவிட்டலன், யசோதையின் தோள்களில் ஏறி விளையாடுகிறான். இந்த கீர்த்தனை, எவ்வளவு எளிமையாக இருக்கிறதோ, அவ்வளவே ஆழமாக உள்ளது. ஒவ்வொரு நுடியின் முதல் பாகம், பகவந்தனின் சிறப்பினை எடுத்துக் காட்டினால், 'ஆடிஸிதளெஷோதெ' என்னும் சொல், அவன் யசோதையின் தாய்ப் பாசத்திற்கு எப்படி கட்டுப்பட்டிருக்கிறான் என்பதை சொல்லியிருப்பது மிகவும் அற்புதமாக நடையாக இருக்கிறது.

ஸ்ரீபுரந்தரதாஸர், யசோதையின் பாத்திரத்தை தாம் ஏற்றிருக்கிறாரோ என்று சொல்வதைப் போல, ஸ்ரீகிருஷ்ணனின் ஆட்டம், நோட்டம், குறும்புகள் அனைத்தையும் சிறிதும் விடாமல் அப்படியே வர்ணித்திருக்கிறார். சிறு குழந்தையின் வாழ்க்கையின் மொத்த செயல்களையும், பகவந்தனின் தெய்வாம்சத்திற்கு எவ்வித பிரச்னையும் வராமல் அப்படியே வர்ணித்திருக்கிறார். யசோதை, தன் மகனை குளிப்பாட்டும் விதத்தில், பகவந்தனின் சிறப்பு லட்சணங்களையும், ஆசிர்வாதம் செய்யும் சாக்கில் எப்படி புகழ்கிறாள் என்றும் சொல்லியிருப்பது சாலச் சிறந்தது.

பண்ணிஸி கோபி ஹரஸிதளு
எண்ணெயனொத்துதயதுகுல திலககெ

என்னும் வரிகளே இந்த கீர்த்தனையின் முன்னுரை. அதன் பின், அவள் சொல்லும் ஒவ்வொரு நுடியும் பகவந்தன், தன் வாழ்க்கையில் சாதித்த சம்பவங்களின் மாயையே ஆகும். பின்வரும் இந்த பாடலில் வரிகள் மிகவும் எளிமையாகவே இருப்பதால், அதிக விளக்கம் தேவைப்படாது.

ஆயுஷ்யவந்தனாகு அதி பல்லிதனாகு
மாயத களர மர்தனனாகு
ராயர பாலிஸு ரக்கஸர ஸோலிஸு
வாயுஸுதகெ நீனொடெயனாகெனுத

தீரனு நீனாகு தயாம்புதியாகு
ஆ ருக்மிணிகெ நீனரஸனாகு
மாரன பிதனாகு மதுஸூதனனாகு
த்வாராவதிகெ நீ தொரெயாகெனுத

ஆனந்த நீனாகு அச்யுத நீனாகு
தானவாந்தகனாகு தயவாகு
ஸ்ரீனிவாஸனாகு ஸ்ரீநிதி நீனாகு
ஞானி புரந்தரவிட்டலனாகெனுத

ஸ்ரீகிருஷ்ணன், தன்னுடைய அவதாரத்தில் என்னென்ன விஷயங்களை சாதித்தான் என்பதை, தாயின் ஆசிர்வாதத்தின் மூலம் வெளிப்படுத்தியிருப்பது மிகவும் அர்த்தபூர்வமாக இருக்கிறது. தெய்வத்திற்கு சமானளான தாயின் வாக்கு என்றும் பொய்க்காது என்ற ஒரு நம்பிக்கையை இங்கு ஸ்ரீபுரந்தரதாஸர் மிகவும் அழகாக சொல்லியிருக்கிறார். நித்யப்படியான வாழ்க்கையின் பத்ததியுடன் ஆத்யாத்மிகத்தின் சிறப்பினை சேர்க்கும், ஸ்ரீதாஸரின் இந்த முயற்சி மிகவும் புகழப்பட வேண்டியது.

பாலகிருஷ்ணன் அழுதாலே, யசோதையின் மனம் மிகவும் கலங்கிவிடும். தன் குழந்தை சாமான்யன் அல்ல என்னும் சிந்தனை யசோதைக்கு அவ்வப்போது தெரிவதுண்டு. இந்த பின்னணியில், அவள், ஸ்ரீகிருஷ்ணனின் பாலலீலைகளை நினைத்துக் கொண்டு, அந்த காரணத்தால் அவன் அழுகிறானோ என்னவோ என்று கவலைப்படுகிறாள். 'அளுவுத்யாதகோ ரங்க, அத்தரஞ்சிப கும்ம' என்று ஒரு சாதாரண தாயைப் போல, சிறுவன் கிருஷ்ணனுக்கு சமாதானம் சொல்கிறாள்.

புட்டிதேளு திவஸதலி துஷ்ட பூதனிய கொந்தெ
முட்டி விஷத மொலெயுண்ட காரண
த்ருஷ்டி தாகிதெ நினகெ ரங்கய்யா
என்று, கிருஷ்ணன், சிறு குழந்தையாக இருந்தபோதே, பூதனையை சம்ஹாரம் செய்ததை நினைத்துக் கொள்கிறாள். அடுத்து,

பாலகதனதி கோபாலகரொடகூடி
காளிங்க மடுவனு கலகித காரண
காலு உளுகிதெ நினகெ ரங்கய்யா?

என்று சிறுவனான நீ, காளிங்கனின் தலை மேல் நின்று குதித்து ஆடி, அந்த காளிங்கனுக்கு வேறொரு வழியை காட்டிய சம்பவத்தை நினைவுபடுத்துகிறார். அடுத்து, ஸ்ரீகிருஷ்ணன் கோவர்த்தன கிரியை தூக்கியதால் விரல் வலித்திருக்கும் என்றும், பல்வேறு அசுரர்களை கொன்றதால் கண் த்ருஷ்டி பட்டிருக்கும் என்றும் கவலைப்படுகிறார். ஸ்ரீபுரந்தரதாஸரின் இந்த

விளக்கங்களை கவனித்தால், பாலகிருஷ்ணனின் தெய்வத்வத்திற்கு என்றைக்கும் குறைவு வராமல், அவனின் நடவடிக்கைகளை புகழ்ந்திருப்பது, பாராட்டுக்குரியது ஆகும்.

யசோதை, கும்மனின் பெயரைச் சொல்லி பயமுறுத்தினால், குறும்புக்கார கிருஷ்ணன் பயந்தவாறு 'கும்மன கரெயதிரெ அம்மா நீனு' என்று நடிப்பது, நம் மனதை கொள்ளை கொள்கிறது. தான் இனி குறும்பு செய்வதில்லை என்று, அவன் மேல் மற்றவர்கள் கூறிய குற்றச்சாட்டுகளை மறுக்கிறான். இனிமேல் தான் எவ்வளவு நல்லவனாக இருப்பேன் என்று சொல்வதை 'தேவரந்தெ ஒந்து டாவிலி கூடுவெ' என்று கூறியிருப்பது மெய்சிலிர்க்க வைக்கிறது. அந்த பேச்சினை கேட்டவுடன், யசோதையானவள்,

முகுளு நகெய நகுத
ஜகதொடெய ஸ்ரீபுரந்தரவிட்டலன
பிகிதப்பி கொண்டளு மோஹதிந்தாக

என்று ஸ்ரீதாஸர், இந்த கீர்த்தனையை முடித்திருப்பதைக் கண்டால், அவருடைய பாரமார்த்திக ஞானம் எவ்வளவு அற்புதமாக இருக்கிறது என்பது தெளிவாகிறது. கிருஷ்ணனை எவ்வளவு பயமுறுத்தினாலும், அவன் வீட்டில் இருப்பதேயில்லை. ஏனெனில், கோகுலம் முழுக்க அவனது வீடே. கோப கோபியர்கள் அனைவரும் அவனுடைய உறவினர்களே. அந்த கிருஷ்ணன், தன் வீட்டிற்கு வராவிட்டால், யசோதைக்கு ஆகும் கஷ்டம் அபாரமானது. அவனுடைய நண்பர்களுக்கும் அவ்வளவே துன்பம் ஆகிறது. ஆகையால், அவர்கள் அனைவரும் ஒன்று கூடி 'அம்மா நிம்ம மனெகளல்லி நம்ம ரங்கன காணிரேனெ?' என்று சந்து பொந்துகளில் அலைந்தவாறு அவனை தேடத் துவங்குகின்றனர். அந்த ஸ்ரீகிருஷ்ணனை தேடும் சாக்கில், அந்த கோபியர், பாலகோபாலனின் குறும்பு நடவடிக்கைகளை பட்டியல் இடுகின்றனர். இது வெறும் ஒரு சிறுவனின் குறும்பின் பட்டியல் அல்ல. மூன்று உலகங்களின் தலைவனான முகுந்தனின் அற்புதமான மகிமைகளே ஆகும்.

காலை ஆனவுடனேயே, யசோதைக்கு கவலை வந்துவிடுகிறது. பாலகிருஷ்ணனின் குறும்பு எப்போது துவங்குமோ, இன்னும் தன் மகன் மேல் பிறர் கூறும் குற்றச்சாட்டுகளை எவ்வளவு நாள் கேட்க வேண்டியிருக்குமோ என்று அவள் கவலை கொள்கிறாள். 'போகாதிரெலோ ரங்கா பாகிலிந்தாசேகெ, பாகவதரு கண்டரெத்தி கொண்டொய்வரோ' என்று மகனை எச்சரிக்கிறாள். அவனை காணாமல் தேடிக் கொண்டிருக்கும் சுரமுனிகள், அகணித குணக்ஞனான அவனுக்காக காத்துக் கொண்டிருக்கும் உலகத்துப் பெண்கள், ஆகியோரைப் பற்றி சொல்லி, 'ஸ்ருஷ்டீஷ புரந்தர விட்டல ராயனெ, இஷ்டிஷ்டி பெண்ணெய' கொடுக்கிறேன் என்று ஆசை கூறி, அவனை வீட்டிலேயே இருக்குமாறு சொல்கிறாள்.

சின்னி கிருஷ்ணன், யசோதையிடம் வந்து, தன் நண்பர்கள் தன்னை எப்படி நடத்துகிறார்கள் என்பதை சொல்கிறான்.

ஆட ஹொதல்லெ மக்களு ஆடிகொம்புவரு நோடம்ம
நோடி நோடி என்ன முகவ நோடி கண்ணு மீடுவரம்ம

என்று நொந்து கொண்டு, தன் நண்பர்கள், தன்னை எப்படி கேலி செய்கிறார்கள் என்பதை மனம் உருகுமாறு சொல்லிக் கொள்கிறான்.

தேவகி ஹொத்தளந்தெ வஸுதேவனெம்புவ பிதனந்தெ
காவலல்லி ஹுட்டிதனந்தெ மாவகஞ்சியில்லி தந்தரந்தெ

என்று தன் பிறந்த ரகசியத்தை சொல்கிறார்கள் என்கிறான். தன் பிரதாபத்தை தானே சொல்லிக் கொள்வது இவ்வாறு. தேனு காயுவரில்லவெந்து ஸானுராகதி ஸலஹிதெயந்தெ - என்று

சொல்வது, நம் தினப்படி வாழ்க்கையில், நாம் மக்களை எப்படி நடத்துகிறோம் என்பதையும் சுட்டிக் காட்டுவதைப் போல இருக்கிறது.

ஸ்ரீகிருஷ்ணன் பெரியவன் ஆகையில், அவனுடைய லீலைகளும்கூட அவ்வளவே மகத்துவத்தை அடைகிறது. ஸ்ரீகிருஷ்ணன், காளிங்க சர்ப்பத்தின் தலை மேல் நின்று ஆடிய சம்பவம் அனைவருக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது. இந்த அருமையான காட்சியை ஸ்ரீபுரந்தரதாஸர், மிகவும் அற்புதமாக வர்ணிக்கிறார்.

ஆடிதனோ ரங்க அத்புததிந்தலி காளிங்கன பணியலி - என்னும் பல்லவியில் ஸ்ரீதாஸரே சொல்லியிருக்கும் 'அத்புத' என்னும் சொல் உண்மையிலேயே ஸார்த்தகமானது. அவனுடைய அந்த அற்புத நாட்டியத்தை, பார்த்துக் கொண்டிருந்த தேவானு தேவதைகள் அனைவரும் அதனை பார்ப்பதால் மட்டுமே திருப்தி அடைவதில்லை. ரம்பை, ஊர்வசி, ஆகிய அப்சரஸ் அனைவரும் தாங்களும் ஆடத் துவங்குகிறார்கள். நாரத, தும்புரு ஆகியோர் பாடுகின்றனர். நந்தி, மத்தளம் வாசிக்கத் துவங்குகிறார். நாக கன்னிகைகள் தம் நாதனுக்கு வந்த ஆபத்தினைக் கண்டு, ஸ்ரீகிருஷ்ணனிடம் முறையிடுகின்றனர். ராக்ஷஸர்கள், தமக்கு இறுதிக் காலம் நெருங்கிவிட்டது என்று அனைத்து திசைகளிலும் பறந்து சென்றனராம். வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த யசோதைக்கு, இந்த செய்தி தெரிந்த உடனேயே, அவர் ஓடி வந்து, தன் மகனை தூக்கி, கொஞ்சினார். ஸ்ரீகிருஷ்ணன், கோகுலத்தில் இருந்த காலத்தில் செய்த துஷ்ட சிக்ஷணைகளில், இது மிகச் சிறந்த சம்பவம் எனலாம்.

ஸ்ரீகிருஷ்ணனின் லீலா பரம்பரையில் அவனின் வேணுகானத்தின் வைபவமும் மிகச் சிறந்ததாகும். ஸ்ரீபுரந்தரதாஸரின் வாணி, இந்த சம்பவத்தை, மிகவும் அற்புதமாக விளக்கியிருப்பதை நாம் காணலாம்.

ரங்க கொளலனூதலாகி மங்களமயவாய்து தரெ
ஜகங்களு சைதன்ய மரெது அங்கபரவஷவாதுவு

என்னும் பல்லவியிலேயே, கிருஷ்ணனின் குழலின் பாடல், எவ்வளவு மெய்சிலிர்க்க வைக்கிறது என்பதை சொல்கிறார். அந்த நாதத்தினால் மொத்த பூமியே மங்களமய ஆவதுடன், உலகமே மெய்மறந்தது என்று சொல்வது அழகாக இருக்கிறது. ஸ்ரீபுரந்தரதாஸர் அடுத்து, முதல் இரண்டு நுடிகளில், அக்கம்பக்கத்து சூழ்நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களை நிரூபிக்கிறார். பலமாக வீசிய காற்று, மென்மையாக ஆனது. வாடிய பூக்கள் மறுபடி மலர்ந்தன. ரீங்காரம் செய்து கொண்டிருந்த தும்பிகள் அமைதியானது. வாடிய மாமரம் தளிர் விடத் துவங்கியது. கிளிகள், குயில்கள் ஆகியவை அமைதி ஆயின. மிருகங்கள் தங்கள் நடவடிக்கைகளை மறந்து அங்கங்கேயே நின்றன. யமுனா நதி, நிரம்பி வழிந்தது. மேலே கார் மேகங்கள் சூழ்ந்தன. கல் கூட கரையும் வண்ணம் ஆயிற்று. அனைத்தும், அந்த நீலமேகஷ்யாமனின் பாதங்களில் விழுந்து வணங்கின.

இதற்கு மேல், சேதன ப்ரபஞ்சத்தில் ஆன, மாற்றங்கள் சொல்லி முடியாதவை. ஸ்ரீகிருஷ்ணனின் மோஹன முரளியின் அற்புத கானம், காதுகளில் விழும்போதே, கோபியர்களின் புத்தி மயங்கி, அவர்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். பெண்களின் நிலை இவ்வாறு ஆனால், சமாதி நிலையில் இருந்த ரிஷிகள் அனைவரும் எழுந்து, ஒருவரையொருவர் கட்டித் தழுவி, மகிழ்ச்சியில் குதித்தாடி, ஸ்வாமியின் அருளுக்கு பாத்திரர் ஆனோம் என்றும், தம் வாழ்க்கை ஸார்த்தகம் ஆயிற்று என்றும் மகிழ்ந்தனர்.

பசுக்களோ, தம் மடியில் பால் நிரம்பியிருந்தாலும், கன்றுகளுக்கு பால் ஊட்டுவதை மறந்து, அப்படியே நின்றன. கன்றுகள் தம் வாயில் இருந்த புற்களை தின்பதைக் கூட மறந்து நின்றன. அது மட்டுமல்லாமல், பசுக்கள், தம் வால்களை தூக்கி, மகிழ்ச்சியுடன் பரமாத்மனையே மெய்மறந்து

பார்த்தன. தேவதைகளோ, தாம் என்றும் அடையாத மகிழ்ச்சியினை அடைந்தோம் என்று புஷ்பவ்ருஷ்டி செய்தனர்.

ஸ்ரீகிருஷ்ணனின் மூர்த்தியானது மனதை மயக்குவதாக இருந்தது. அந்த மதுகுஞ்ச வனத்தில் அவன் தங்கமயமான ஆடை உடுத்தி, சந்தன கஸ்தூரியை பூசிக் கொண்டு, நெற்றியில் திலகம் வைத்து, ஒளிரும் கிரீடத்தில் வெளிச்சத்தில், வனமாலை மற்றும் மயில் இறகுகளால் அலங்கரிக்கப்பட்டு, அங்கு சாம வேதமே நமோ நமோ என்று பாடியதாம். இந்த மொத்த கீர்த்தனையில் சொல்லப்பட்டிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனின் முரளி நாதத்தின் சக்தியை படிக்கும்போது, யாராக இருந்தாலும், அவர்கள் மெய் மறப்பது உறுதி.

ஸ்ரீஹரி, தன்னுடைய அலங்காரங்களுடன் தாஸரின் எதிரில் நர்த்தனம் ஆட, அவன் ஆடிய தாளத்திற்கேற்ப, அவருடைய வாக்குகளும் கடகடவென வருகின்றன. ஹரி குணித நம்ம ஹரி குணித - என்னும் பல்லவியிலேயே, அவருக்கு தம் இஷ்ட தேவதையில் இருக்கும் நட்பு தெரிகிறது. அந்த நாட்டியத்தின் அழகு எதற்கும் ஒப்பிடமுடியாததாகும்.

அகளங்கசரித மகர குண்டலதர
ஸகலர பாலிப ஹரி குணித
அரளெலெ மாகாயி கொரள முத்தின
ஸர, ஸகலர பாலிப ஹரி குணித
அந்துகெ பாடக பிந்தலி பாபுரி
சந்ததி நலிவுத்த ஹரி குணித
உட்ட பட்டிய தட்டி இட்ட காஞ்சியதாம
திட்ட மல்லர கண்ட ஹரி குணித
பரம பாகவதர புரதொலாடுவ
புரந்தரவிட்டல ஹரி குணித

இந்த சிறிய கீர்த்தனையில், பக்த மற்றும் பகவந்தனில் தெரியவரும் உற்சாகம் ஒப்பிடமுடியாதது. பாலகிருஷ்ணனின் 'அரளெலெ, மாகாயி, கொரள முத்தின ஸர' அலங்காரங்களைக் கண்டு மயங்க வேண்டுமா, காலில் இருக்கும் 'அந்துகெ பாடக பிந்துலி பாபுரி' களை கேட்டு ஆட வேண்டுமா என்று சொல்லி முடிவதில்லை. அதற்காகவே, ஸ்ரீபுரந்தரதாஸர் கடைசி நுடியில் 'பரம பாகவதர புரதொளாடுவ' பரமாத்மன், தம் எதிரிலும் அப்படியே ஆடுகிறான் என்றும், இது தம் பாக்கியம் என்றும் சொல்கிறார்.

ஸ்ரீகிருஷ்ணனின் பால லீலைகளை பாடுவதில், ஹரிதாஸர்களில் ஸ்ரீபுரந்தரதாஸரைப் போல இன்னொருவர் இல்லை என்று சொல்லலாம். ஒரு குழந்தையின் வாழ்க்கையில் எந்தெந்த அம்சங்களை நாம் கவனிக்கலாமோ, அவை அனைத்தையும் ஸ்ரீபுரந்தரதாஸர், தம் கண் எதிரில் கண்டிருக்கிறார். குழந்தையின் லௌகிக செயல்களை கவனிப்பது மட்டுமல்லாமல், அதனை பாலகிருஷ்ணனின் மகிமைகளுக்கு பொருத்தி, அவனுடைய அலௌகிக குணங்களுக்கு அவ்வளவே மகிமைகள் இருந்தன என்பதை நிரூபிப்பது விசேஷம். இத்தகைய ஸ்ரீபுரந்தரதாஸருக்கும் பகவந்தனின் லீலையை சொல்லி முடிப்பதற்கு ஆவதில்லை என்று தம்முடைய இயலாமையை இவ்வாறு வர்ணிக்கிறார்.

கால மேலெ மலகி ஸிம்பிலி ஹாலு குடிது பெளெதெ
மூரு லோகவு நின்னதரதல்லிரலு
ஈரேளு லோகவனீரடிமாடலு
மூரு லோகதொடெய ஸ்ரீபுரந்தரவிட்டல
நின்ன பாலகதனத லீலெகெ நமோ நமோ ||

ஸ்ரீகிருஷ்ணன், கோபாலகனாக இருந்த சந்தர்ப்பத்தை, ஸ்ரீபாதராஜர் ஒரு விதமாக நினைக்கிறார். ஸ்ரீவிஜயதாஸர் வேறொரு வகையில் விளக்குகிறார். 'காதனு வத்ஸவ ஹரி காதனா' என்று முதலில் துவக்கி, அனுபல்லவியில் 'வேத வேத்ய ஸாதுவினுத தாதிகாரமண கிருஷ்ண' என்று அவனுடைய மேன்மையை புகழ்ந்திருக்கிறார். இந்த நுடியில் சொல்லியிருக்கும் 'ராதிகா ரமண' என்னும் சொல், மிகவும் கவனிக்க வேண்டியது. பாகவதத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும் ராதையின் பெயரை ஸ்ரீவிஜயதாஸர் பயன்படுத்தியிருப்பதைக் கண்டால், அவர் ஸ்ரீகிருஷ்ணனின் வாழ்க்கையில் ராதையின் பாத்திரத்தை மிகவும் அழகாக விளக்கியிருக்கும் வட இந்தியாவின் பக்தி பரம்பரையின் சிறப்பினை கவனித்திருப்பார் எனலாம். (ஸ்ரீகனகதாஸரும் கூட தம் ஒரு கீர்த்தனையில் ராதையின் பெயரை சொல்லியிருக்கிறார். 'யாதவராய ப்ருந்தாவனதொளு வேணுநாதவ மாடுதிரெ, ராதெ முந்தாத கோபியரெல்ல மதுஸூதன நின்னனு ஸேவிஸுத்திரெ' என்று அவளின் பெயர் சொல்லியிருக்கிறார்).

ஸ்ரீகிருஷ்ணனின் இடையன் வேடத்தை வர்ணித்திருப்பது மிகவும் அற்புதமாகும். புற்களின் மேல் நின்று, குழலை ஊதியவாறு, பசுக்களின் காதுகளில் நாத ஸுதாரசத்தை ஊட்டுகிறான். தான் உடம்பு மேல் போர்த்தியிருந்த துணியிலாயே அவற்றின் உடம்பினை துடைத்து 'தின்னு தின்னு புல்லயெனுத' உபசரிக்கிறான். பசுக்கள், கன்றுகள் ஆகியவை சுற்றிலும் திருப்தியுடன் நின்றிருக்க, அவை நட்சத்திரங்களைப் போலவும், பாலகோபாலன் சந்திரனைப் போலவும் தெரிகிறதாம். சாட்சாத் ஸ்ரீகிருஷ்ணனே பசுக்களின் மேய்ச்சலை செய்தபின், அவற்றின் வளர்ச்சியைப் பற்றி வர்ணிக்க வேண்டுமா?.

ஒந்து திங்கள கருகளு இந்திரேஷனு மேயிஸலு
ஒந்து வருஷத கருகளந்தெ ஆனந்ததிந்த பெளெதுவு
அஜகளந்த கருகளு கஜகளந்தெ ஆதுவு
என்று ஸ்ரீவிஜயதாஸர் அழகாக பாடுகிறார்.

இதுவரை நம் ஹரிதாஸர்கள் பகவந்தனை குழந்தையாக நினைத்து எப்படி தம் வாத்ஸல்யத்தை காட்டினர் என்பதை பார்த்தோம். இந்த வர்ணனையில், ஸ்ரீதாஸர்கள், குழந்தைகளின் வார்த்தைகளான 'கும்ம, பூசி, அம்மி' போன்ற சொற்களை பயன்படுத்தியதையும் பார்த்தோம். ஸ்ரீப்ரஸன்ன வெங்கடதாஸரோ, இன்னும் ஒரு படி மேலே சென்று, முழுக்க குழந்தைகளின் மொழியிலேயே ஒரு பத்யத்தை இயற்றியிருக்கிறார். உதாரணத்திற்கு இந்த கீர்த்தனையை பார்க்கலாம்.

யத்தோதெய ம்மா நங்கன்னெத்திகோ அம்மா
எத்தி பலு அத்து பந்தீனெ, நா இத்தே அம்மி திந்தேனே ||ப

துந்தி பாயி வங்க்யாவெ பிசிவாவு வாகத்தி பத்தாவெ
அத்திவாவு பப்புகாயி அம்ம மம்மொல்லெ
உத்தத்தி பென்னெ திந்தேனெ

கல்ல கித்த எந்தாடே பங்கார்த புல்லி பெல்ல திந்தாடே
கல்ல கத்தி கத்தி உம்ம ஹல்லனெத்துதாடெ
கொல்லு பாலதே தொத்த கொல்லதேலன்னா

யகோபா யம்ப்யாரெ பிசினீலு புக்கச்சி மாப்யாலெ
தக்குலி தின்னி பாலு பத்தலு தும்பிகோலு
பெக்கு மலிகள கொடுண்டேனெ

லாலி மகச்சு பாலெ, கித்தன ம்யாலெ தோகுல பாலே

பால பவ்வு கண்டு யெனங்கஜிகெ பத்ததெ
தூல என்ன பித்து நீ வோகப்யாலெ

நச்சட்ல தந்துதொலெ சந்தமாமனித்தித்த கலெதாலெ
புத்தமில்லி தும்பவல்லெ முத்து கொத்தாலே தன்ன
புத்தி தும்ப ஹன்ன கொந்து திந்தேனெ

உக்கு கூகு பாயங்கெ, சப்பஸ்ஸி மக்கம்மி கூயங்கெ
ஜொக்கமீஸி ஜோகிகெ கோப்யாடெ பாகில்ல
ஹொக்க எல்ல தத்திங்கதானெ

கொசிகம்மி கோப்யாலே நங்கச்சதானெ அவனோலே
பாசன்ன வெந்தக கித்தப்ப கன்னடிலி
நசுனகி நகுதானெ கலெதாலே

ஸ்ரீகிருஷ்ணனின் பால லீலைகளில் இப்படியான விசேஷ சுவை இருப்பதாலேயே, ஸ்ரீப்ரஸன்ன வெங்கட தாஸர், பாகவதத்தின் 10ம் ஸ்கந்தத்தின் பூர்வார்த்தத்தை கன்னடத்தில் இயற்றியிருக்கிறார். சம்ஸ்க்ருத பாகவதம், ஸ்லோக ரூபத்தில் இருந்தால், ப்ரஸன்ன வெங்கட தாஸர், அதில் இருந்த விஷயங்களை கீர்த்தனைகளின் ரூபத்தில் இயற்றியிருக்கிறார். இதனை மூல பாகவதத்தின் மொழிபெயர்ப்பு என்று சொல்வதற்கில்லை. தாஸர் அங்கங்கு சிறிது வேறுபாடுகளை செய்துகொண்டு, ஒரு ஸ்வதந்த்ர க்ருதியைப் போலவே இதை இயற்றியிருக்கிறார்.

ஹரிதாஸர்கள் நிரூபித்திருக்கும் வாத்ஸல்ய ப்ரபஞ்சத்தில் ஸ்ரீகிருஷ்ணனை தொட்டிலில் வைத்து ஜோகுள பாடுவது ஒரு மிகப்பெரிய பாகமாக இருக்கிறது. ஸ்ரீபாதராஜர் 23 நுடிகளைக் கொண்ட ஒரு பெரிய கீர்த்தனையையே இயற்றியிருக்கிறார்.

லாலி கோவிந்த லாலி
கௌஸல்யபால ஸ்ரீராம லாலி
லாலி முனிவந்த்ய லாலி
ஜானகீரமண ஸ்ரீராம லாலி

கனக ரத்னகளல்லி கால்களெனெ ஹூடி
நால்கு வேதகளன்னு ஸரபணிய மாடி
அனேக பூமண்டலத ஹலகெயனு மாடி
ஸ்ரீகாந்தனுய்யாலெயனு விரசிஸிதரு

என்று பாடியிருப்பதைக் கண்டால், ஸ்வாமிக்காக கட்டப்பட்டிருக்கும் ஊஞ்சல் எவ்வளவு அழகானது என்று தோன்றுகிறது. அடுத்தடுத்த நுடிகளில் ஸ்வாமியின் தஷாவதாரங்களையும் விவரிக்கிறார். இந்த கீர்த்தனையின் கடைசி நுடிகள் இவ்வாறு உள்ளன.

நீல கனலீல ஜோஜோ கருணா
லவால ஸ்ரீகிருஷ்ன ஜோஜோ
லீலாவதார ஜோஜோ பரமாத்ம
பாலகோபால ஜோஜோ

இந்துதர மித்ர ஜோஜோ ஸ்ரீகிருஷ்ண
இந்துரவி நேத்ர ஜோஜோ
இந்துகுல புத்ர ஜோஜோ பரமாத்ம

இந்திரா ரமண ஜோஜோ

தும்ப பவபங்க ஜோஜோ பரமாத்ம
ரங்க க்ருபாங்க ஜோஜோ
மங்களாபாங்க ஜோஜோ மோஹனாங்க
ரங்கவிட்டலனெ ஜோஜோ

ஸ்ரீவாதிராஜர் இயற்றியிருக்கும் ஒரு லாலி, சிறியதாக இருந்தாலும் புதியதாக இருக்கிறது. 'லாலி ஸ்ரீஹயவதன லாலி ரங்கவிட்டல லாலி கோபீநாத லட்சுமி ஸமேத' என்னும் பல்லவியில் துவங்கும் இந்த கீர்த்தனையில் ஸ்ரீகிருஷ்ணனின் குறும்புகளை பொறுக்க முடியாமல், அவனை சமாதானம் செய்து படுக்க வைக்கும் வேலையை கோபி, நந்தகோபனிடம் ஒப்படைத்து விடுகிறாள். அவள், கிருஷ்ணனின் குறும்புகளையும், அவனுடைய மகிமைகளையும் விவரித்து பாடும் பாடல் இவ்வாறாக இருக்கிறது.

முத்து மாணிக பிகித தொட்டிலொளகொல்ல
எத்திதரு என்னய்ய கையொளகெ நில்ல
பக்தரிகெ வரகளனு கொடலு ஹொத்தில்ல
புத்ரன எத்திகோ நந்தகோபால

மனெயொளகெ இரனீத பஹு ரச்செவந்த
மனெவார்த்தெ யாரு மாடுவரு ஸ்ரீகாந்த
குணிகளொளகிப்ப பஹு குணவந்த
குணபத்தனாகிஹ ஸ்ரீலட்சுமிகாந்த

க்ஷீராம்பு நிதியொளகெ ஸெஜ்ஜெயொளகிருவ
ஸ்ரீரமண பக்தரிச்செகெ நலிது பருவ
காருண்ய ஹயவதன காய்வ துருகருவ
நீரெ கோபியரொளு மெரெவ கடுசெலுவ

இவ்வளவு அபூர்வமும், அர்த்தமுள்ளதாகவும் உள்ள லாலிபதங்கள் ஹரிதாஸ ஸாஹித்யத்தில் ஏராளமாக உள்ளன.

வாத்ஸ்யத்தை நிரூபிப்பதில், ஹரிதாஸர்கள் யசோதையை முக்கிய பாத்திரமாக வைத்துக் கொள்வதுண்டு. ஆனால், ஸ்ரீகிருஷ்ணனை பெற்ற தேவகியின் அன்பினை வெளிப்படுத்தும் கீர்த்தனைகள் குறைவாகவே இருக்கின்றன. ஸ்ரீவிஜயதாஸரின் ஸுளாதி ஒன்றில், இந்த விஷயமும் நன்றாக வெளிப்பட்டிருப்பது ஒரு சிறப்பம்சம் என்றே சொல்ல வேண்டும்.

ஸ்ரீவிஜயதாஸர், தீர்த்த க்ஷேத்ர காலத்தில் உடுப்பிக்கு வந்தபோது, அங்கு கடெகோலு கிருஷ்ணனைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தார். அப்போது அந்த மூர்த்தியின் திவ்ய கல்பனை மற்றும் ஸ்ருஷ்டிகள் எப்படி ஆயின என்பதைக் குறித்து அவர் சொல்லியிருக்கும் சங்கதி மிகவும் அற்புதமானது. பெற்ற தாயான தேவகி, தன் மகனான ஸ்ரீகிருஷ்ணனுடன் த்வாரகையில் இருந்தபோது, அவளுக்கு தனக்கு காணக்கிடைக்காத, ஸ்ரீகிருஷ்ணனின் பால மூர்த்தியை பார்க்க வேண்டும் என்று விரும்பினாள். அப்போது அவள் தன் மனதில் இந்த கோரிக்கையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தை ஸ்ரீவிஜயதாஸர் மிகவும் நன்றாக விளக்கியுள்ளார்.

அந்து தேவகி தேவி த்வாரகாபுரதல்லி
ஒந்து திவஸ நின்ன மாயா முஸுகெ,
கந்த நீனாகி கோகுலதல்லி கோபிய
முந்தெ பாலகனாகி தோரிதாடா

ஒந்தாதரூ நோடி தணியாலில்லவு மனஸு
எந்தெனெ, ஜனனிய மாது கேளி
நந்தனனாகி தோருவெனெந்து நெனெது கோ
விந்தனு கோபள்ளியலி நலிதத்து
ஒந்தொந்து தோருத்த பரலதரொளகிதெ
சந்தவாதா ரூப மனகெ பொளெயே
நிந்திர பேளி மகனா முத்தாடி நோடி
தந்தெ ஈ ரூபதலி பூமியொளகெ
குந்ததர்ச்சனெகொண்டு கீர்த்தி மெரெவுதெந்து
மந்தஹாஸதலி பேளலு கைகொண்டு
ஒந்து கையலி கடெகோலு பிடிது ம
த்தொந்து கையலி நேணு தரிஸி பாலா
நந்ததி இரலித்த பைஷ்மி விஷ்வகர்மா
நிந்த அதரந்தெ ரசிஸா பேளி
நந்தாதிந்ததி தன்ன மூகுதியனிட்டு
ஸுந்தர விக்ரஹதொடனாடுத
இந்திரெ இரெ இத்த கலியுக பரெ கோபி
சந்தனதொளு நின்ன அடகிஸலு
ஸிந்துவினொளகொப்ப கடகத வஷகெ
தந்திரெ தவகதிந்தலி அல்லிந்தா
நந்ததீர்த்தரிகொலித உடுபி ஸிரி கிருஷ்ண
கந்தர்ப்பபித நம்ம விஜயவிட்டலரேய

தேவகியின் தாய்ப்பாசத்தின் ஆசையை பரிகரிப்பதற்கு ஸ்ரீகிருஷ்ணன், கடகோலு கிருஷ்ணனாக தன் லீலையை காட்டி மகிழ்ச்சிப்படுத்தினான். அத்தோடு, அந்த அழகான பாலனின் மூர்த்தியைக் கண்டு, ருக்மிணிக்கும் அபாரமான மகிழ்ச்சி உண்டானது. அவள், உடனே விஷ்வகர்மனை வரவழைத்து, அவன் மூலமாக, கிருஷ்ணனின் அபூர்வமான மூர்த்தியை செய்விக்கிறாள். ஸ்ரீகிருஷ்ணன் தன் தாய்க்காக எடுத்த அந்த பாலகிருஷ்ண மூர்த்தியே, இன்று உடுப்பியில் நாம் அனைவரும் பார்க்கும் உடுப்பி கிருஷ்ணனின் சிலை என்று சொல்வதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஸ்ரீபுரந்தரதாஸரின் கீர்த்தனை ஒன்றில் பாலகோபாலன் யசோதையிடம் சென்று, தன் பிறப்பினைப் பற்றி, தன் நண்பர்கள் கூறுவதை சொல்லிக் கொண்டு வருத்தப்படுகிறான் என்று பார்க்கிறோம். தேவகியே, தன் மகனின் அந்த பால லீலையைக் கண்டு, கடைசியில் அந்த கடகோலு கிருஷ்ணனின் ரூபத்திற்கு மயங்குகிறாள் என்பதையும் பார்க்கிறோம்.

தேவகியின் பார்வையிலிருந்து வாத்ஸல்யத்தை விளக்குவதான கீர்த்தனைகளில், குலசேகர ஆழ்வாரின் 'பெருமாள் திருமொழியில்' ஏழாம் திருமொழியில் இருக்கும் விஷயங்கள் வந்திருக்கின்றன என்று சொல்லலாம். இந்த மொத்த 10 பாசுரங்களில், ஆழ்வார் தம்மை தேவகி என்று பாவித்து, தாயானவள், தன் குழந்தையை எப்படியெல்லாம் கொஞ்சி, குலாவி, காத்து மகிழ்கிறாளோ அதே ரீதியில் பாலகனான ஸ்ரீகிருஷ்ணனை கொண்டாடி பாடியிருக்கிறார். திரு.கே.ஸி. வரதாச்சாரி என்பவர் எழுதியிருக்கும் இந்த குறிப்பு இதனை குறிக்கிறது.

குலசேகரர், தாய் குழந்தையின் பாசத்தை, தேவகி மற்றும் ஸ்ரீகிருஷ்ணனுக்கு நடுவே இருந்த உறவின் மூலம் நமக்கு தெரியப்படுத்துகிறார். இதில் தாமே தேவகி என்னும் பாத்திரத்தை ஏற்றிருக்கிறார். இவ்வாறு இந்த 10 பாசுரங்கள் தொட்டில் லாலி பாடல்களாக இருக்கின்றன. யாரொருவன் தன் பிறவிக்காலத்தில் தன் அலௌகிக பராக்கிரமம் மற்றும் அடையாளத்தை

காட்டினானோ, அந்த கிருஷ்ணனை அவனின் தாயே இப்போது கொஞ்சுகிறாள். குலசேகரர் இந்த பாசத்தின் பாவத்தை படைத்திருக்கிறார். ஏனெனில், எந்த காலத்திலும், தேவகிக்கு, கிருஷ்ணனை தொட்டிலில் போட்டு பாராட்டி சீராட்டும் பாக்கியம் மகிழ்ச்சி கிடைக்கவில்லை. ஸ்ரீகிருஷ்ணனை அவளிடமிருந்து எடுத்துச் சென்று, யசோதைக்கு குழந்தையாக கொடுத்தாயிற்று. அவளுக்கு கிடைக்காத மகிழ்ச்சி யசோதைக்கு கிடைத்தது.

இந்த வாத்ஸல்ய பாவத்தை அற்புதமாக விளக்குவதில், வட இந்தியாவின் ஸூரதாஸ் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவருடைய கிருதிகளின்படி இவை அனைத்தும் கிராமத்தின் சூழ்நிலையில் நடைபெறுவதாகும். ஆகையால், நம் மக்களின் கலாசாரம், அவர்களுடைய விரத பண்டிகைகள், நடவடிக்கைகள், நம்பிக்கைகள் ஆகியவை மிகவும் அழகாக பாடப்பட்டுள்ளன. ஜென்மோத்ஸவ, நாமகரண, அன்னப்ராஸன, தொட்டில் விழா, குழந்தை வாசல் தாண்டுவது, காது குத்துவது என அனைத்து சம்பவங்களையும் கவி அற்புதமாக வர்ணித்திருக்கிறார். பாலலீலையின் சிறப்பு, ஸூரதாஸ் அவர்களின் வர்ணனையில் அழகாக வந்திருக்கிறது. மழலையிலிருந்து துவங்கி, வாலிப வயது வரையிலான பற்பல சம்பவங்கள் நம் மனதை கட்டிப் போடுமாறு வர்ணிக்கப்பட்டுள்ளது. அவை வெறும் புற வர்ணனைகள் அல்ல. கவிஞர் நம் அனைவரின் அனைத்து விதமான பாவனைகளையும் இழுத்துப் பிடித்து நிறுத்துவதாக உள்ளது.

ஸ்ரீமத் பாகவதத்தின் 10ம் ஸ்கந்தத்தின் பூர்வார்த்தம் - ஸ்ரீகிருஷ்ணனின் பால்ய வர்ணனை விளக்குகிறது. ஆனால், அங்கு சொல்லப்பட்டிருக்கும் பால்யத்தில் பகவந்தனின் அவதாரத்தின் நோக்கத்திற்கேற்பவே, அவன் தன் சிறிய வயதில் கொன்ற சில அசுரர்களின் தகவல்கள் சொல்லப்பட்டுள்ளன. 11ம் அத்தியாயத்தில் வரும் ஒரு சம்பவம், முத்து கிருஷ்ணனின் பாத்திரத்திற்கு ஏற்றாற்போலவே இருக்கிறது. ஒரு பழ வியாபாரியைக் கண்டு, ஸ்ரீகிருஷ்ணன் தன் வீட்டிலிருந்த தானியங்களை கொடுத்து, அவளிடமிருந்து பழம் வாங்குகிறான். அவள் முத்து கோபாலனின் இரு கைகளிலும் பழங்களை நிரப்ப, அவளின் பழக்கூடை முழுக்க ரத்னங்களால் நிரம்புகிறது.

பக்த கவிகள் விளக்கியிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனின் ஆட்டம், பாட்டங்களின் விவரங்களையும், அவற்றின் சிறப்புக்களையும் கண்டால், அவருடைய கற்பனையின் பாகம் மற்றும் உலக அனுபவங்கள் அதில் அதிக பங்கு வகிக்கின்றன என்பதை அறிகிறோம். இந்த சங்கதிகளை மேலும் விவரமாக வர்ணிக்க சந்தர்ப்பம் இருக்கிறது. நம் ஹரிதாஸர்களில், அதிலும் ஸ்ரீபுரந்தரதாஸரின் கீர்த்தனைகளில், தெய்வ-சிந்தனை எப்போதும் மேலோங்கியிருப்பதை பார்க்கிறோம். பஞ்ச பாவங்களில், வாத்ஸல்யத்தின் ஸ்தானம் மிகவும் சிறப்பானது. பக்தனானவன், பகவந்தனை ஆராதனை செய்வதில், தாம் கோபியாகவோ, யசோதையாகவோ நினைத்துக் கொண்டு, ஸ்ரீகிருஷ்ணனைக் குறித்து க்ருதிகளை இயற்றினார். சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப, தான் நேரடியாகவே அவனது லீலைகளைக் கண்டு கொண்டாடுவதாகவும் க்ருதிகள் உள்ளன.

பாகவதத்தை இயற்றிய காலத்தில், வாத்ஸல்ய பக்தி ரஸத்திற்கு ஸ்வதந்த்ரமான இடம் கிடைக்கவில்லையோ என்னவோ, அல்லது வேறு எந்த காரணத்தினாலோ, இதற்கு நவவித பக்தி மார்க்கத்தில் ஒரு இடம் கிடைக்கவில்லை. நாரதரின் பக்தி ஸூத்ரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏகாதஷ முறைகளில் மட்டும் இதனை 'வாத்ஸல்ய ஆஸக்தி' என்று ஒரு இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

பஞ்சவித பாவங்களில் மதுர பாவமே மிகச் சிறந்தது என்று சொல்லி, நம் ஹரிதாஸர்கள் பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கும் கோபியரின் அன்பினை ஒரு உதாரணமாக வைத்துக் கொண்டு, பற்பல கிருதிகளை இயற்றியிருக்கின்றனர்.

இந்த மதுர பாவத்தை வெளிப்படுத்தியதில், ஸ்ரீவாதிராஜர் மற்றும் ஸ்ரீவ்யாஸராஜர் இருவரும் முதல் இடத்தை வகிக்கின்றனர். ஸ்ரீபாதராஜர் பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கும் ப்ரமரகீதை, கோபிகீதை மற்றும் வேணு கீதைகள் ஆகியவற்றின் ஸாரங்களை தம் க்ருதிகளில் பயன்படுத்தியிருக்கிறார்.

கோபியர்கள், ஸ்ரீகிருஷ்ணனுடன் விளையாடி மகிழ்ந்த தருணங்களைவிட அவனுடைய பிரிவினால், விரகத்தினால் பரிதவிக்கும் காட்சிகளே இங்கு அதிகமாக காணக்கிடைக்கின்றன. ஒரு கோபி, ஸ்ரீகிருஷ்ணனின் பிரிவினை தாங்க முடியாமல், தன் தோழிகளிடம், தன் துக்கங்களை மூடி மறைக்க முடியாமல், இவ்வாறு சொல்லிக் கொள்கிறாள்.

ஒல்லெனவ்வா லகுமிய நல்ல பாரதித்தரெ ||ப
தனு ஹொரெயனொல்லெனவ்வா

ஹார கொரளிகெ பார ஹுவ்வின
பார ஸைரிஸலாரெனெ
மாரனய்யனு பாரதித்தரெ
மாரனம்பிகெ குரியாடி

கோபிக்கு தன்னுடைய சரீரமே பாரமாக இருக்க வேண்டுமெனில், அவளுடைய பரிதாபம் எவ்வளவு இருக்கக்கூடும் என்பதை தாஸர் நம் ஊகத்திற்கே விடுகிறார். அவள் கழுத்தில் சூடிக் கொண்ட பூமாலை பாரமாக இருக்கிறதாம். 'எல்ல தேவர வல்லபனெந்து பந்தெ மனனில்லதெ' என்று சொல்லிக்கொண்டு, அத்தகையவன் 'நில்லதெ ரங்க போத மதுரெகெ பில்ல ஹப்பத நெவன மாடி' என்று அவன் மேல் பழி சுமத்துகிறாள்.

மந்தாsனிலன ஸஹிஸலாகது
நொந்தெ ஷுகபிக ரவகளிந்த
சந்த்ர கிரணதி பெந்தெ இன்னீ
வ்ருந்தாவனவேகவனனகலி

என்று ஸ்ரீகிருஷ்ணனின் இன்மையினால் ஆன தன் நிலையை சொல்லி புலம்புகிறாள். ஸ்ரீகிருஷ்ணனுடன் தனக்கு கொடுத்த வாக்குகளை நினைத்து:

முன்ன ஆடித மாது மரெது
என்னனு வனதொளகீடாடி
வன்னஜாக்ஷனு பார புரவ
தன்னிதெயரன்னு மெச்சி போத

என்று தனக்கு ஆன நிராசையை தெளிவாக எடுத்துரைக்கிறாள்.

பொங்கொளல த்வனிகெ ஸிலுகி
பங்கபட்டெனங்கஜனிந்தலி
பெங்களிகுசிதவல்ல ரங்கவிட்டலன தோரதித்தொடெ

என்று தன் தோழிகளின் மேல் தன் துக்கத்தின் பாரத்தை இறக்கி வைக்கிறாள்.

இன்னொரு கோபி:
கொம்பு கொளலனுதுத்த
நம்பிஸி போதனெயவ்வா
அம்புஜனாபகெ மன

ஹம்பலிஸுத்திதெயவ்வா
என்று துவக்கி, தன் இயலாமையை சொல்லிக் கொள்கிறாள்.

நடெயலாரெனெயவ்வா அடியிடலொஷவில்ல
பிடகுகாரன கொடெ நுடி தெரளித்தெயவ்வா

மாது மனஸு பாரதவ்வா ஸோதெனவ்வா க்ருஷ்ணனாகி
ஆதன காணதெ மன காதரிஸுதிதெயவ்வா

அன்னோதக ஒல்லெனவ்வா கண்ணிகெ நித்ரெ பாரது
மன்னணெகாரன கொடெ ஹெண்ணு ஜன்ம ஸாகெயவ்வா

மனெமனெ மாருதெகெ மனவெளஸதெயவ்வா
மனஸிஜபிதனொடனெ மன தெரளிதெயவ்வா

என்று, இதன் மூலமாக, கோபியின் தவிப்பினை தெளிவுபடுத்துகிறார் ஸ்ரீபாதராஜர்.

இந்த கோபியரின் விரகதாபம் அதிகம் ஆகும்போதெல்லாம், அவர்களில் நடைபெறும் சம்பாஷணையின் விஷயங்களை, ஸ்ரீபாதராஜர் மிகவும் சகஜமாக விளக்குகிறார். ஒருத்தி தன் தோழியிடம்:

விதிகெ தயவில்லவக்க எம்ம ம்யாலெ
யதுபதி யனகலிஸித ஒமிந்தலொம்மெ

என்று தன் துக்கத்தை காட்டிக் கொண்டு,

ஹக்கிய ம்யாலுள்ள தய நம்ம ம்யாலெ
இக்கதேகெ ஹோத்யோ விதியே
ரெக்கெ எரடுள்ளரெ மதுரெகெ போகி
பக்கனெ ஸ்ரீஹரியொடனெ கொடுத்தித்தெவல்ல

என்று தெய்வத்தையே திட்டுவதைப் போல பேசுகிறாள்.

இவ்வாறாக, எப்போதும் பரிதவிக்கும் அந்த பெண்களின் கனவு நினைவுகளிலும் அந்த கோவிந்தனின் நினைவே நிறைந்திருக்க, ஒரு கோபி, 'இந்தினிருளின கனஸினலி பந்து முந்தெ நிந்துத கண்டெனெ கோவளன' என்று இன்னொருவளில் சொல்லிக் கொண்டு, அந்த கோபாலகனின் அற்புத அழகினை வர்ணித்து:
உங்குடதலி கங்கெயங்காலலவுங்கே
துங்க வக்ஷத லக்ஷ்மீ மங்கள மஹிம
புஜங்கஷயன ஸிரி ரங்கவிட்டல நெரெத கோவளன

என்று தான் கண்ட கனவின் அழகான தகவலையே விளக்குகிறாள். மயங்கியவளான இன்னொரு கோபி, கிருஷ்ணனுக்காக காத்தவாறு நொந்தவாறு, தன் தோழியிடம் 'இன்னிவனு ஈக பரலிதகெ பகெயேனு சென்னாகி பேளெ ரமணி' என்று தர்க்கம் செய்து, முன்னர் அவனுடன் விளையாடியதையெல்லாம் நினைத்துக் கொண்டு:

இந்தில்லதிரெ நாளெ பஹனெந்து இத்தரெ
கந்தர்ப்ப காடுதிஹனெ தந்து தோரிஸு தன்ன
தந்தெயனெந்து பூவிந்த பாணவ எஸெவனெ,
இந்துபிம்பவு மந்தமாருதவு ஸுமத

மளெயிந்த ஸெகெகானாரெனெ,
ஒந்து நிமிஷதலி ஸ்ரீரங்க விட்டலனன்னு
ஹொந்திஸென்னகலதந்தெ காந்தெ

என்று தோழியிடம் சொல்லிக் கொள்கிறாள்.

ஸ்ரீபாதராஜர், இத்தகைய கீர்த்தனைகளில், கோபியர்களின் விரகம், பாசம், காதல், தவிப்பு ஆகிய அனைத்தையும் வர்ணிப்பதோடு மட்டுமல்லாமல், பாகவதத்தில் வந்திருக்கும் ப்ரமர கீதை, வேணு கீதை, கோபிகீதை ஆகியவற்றை விளக்குவதாகவே இவற்றை இயற்றியிருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணன் மதுராவிற்கு செல்லும் பொருட்டு தயாராக நின்றிருக்கும் சந்தர்ப்பத்தை, கண்ணில் நீர் வருமாறு வர்ணித்திருக்கிறார். இந்த சந்தர்ப்பத்தின் பின்னணி மற்றும் சம்பவங்களை இங்கு சிறு தொகுப்பாக சொல்லலாம்.

கோபி ஒருத்தி, தன் தோழியிடம் 'கேளித்யா கௌதுகவன்னு கேளித்யா' என்று சொல்லியவுடன், அந்த தோழி 'நா கேளிதெ நினகிந்த முன்ன, கோளி கூகித முன்ன, நாளெ பயணவந்தெ' என்று உடனடியாக பதில் அளித்து, தன் காதில் விழுந்த அனைத்து தகவல்களையும் சொல்கிறாள். ஸ்ரீபாதராஜருக்கு இந்த சம்பவங்களை உடனடியாக முடிக்க இஷ்டமேயில்லை என்பது போல, கலக்கம் கொண்ட கோபியர், மதுரைக்குச் செல்ல புறப்பட்டு நின்றிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனை தடுத்து, தம் மனநிலையை அவனுக்கு விளக்கும் சந்தர்ப்பத்தை 'வ்ருத்தநாம' வடிவில் இயற்றியிருக்கின்றனர். இந்த கிருதி நீளமாக இருந்தாலும், அதன் ஸ்வரூபம், ஸ்வாரஸ்யங்களை புரிந்து கொள்வதற்காக இங்கு சிறிது சொல்லப்பட்டிருக்கிறது. 'மானநிதி ஸ்ரீகிருஷ்ண மதுரெகெய்துவனந்தெ ஏனு பதவம்ம நமகெ' என்று ஒரு கோபியர் குழு கேள்வி கேட்டால், இன்னொரு குழுவினர் 'மானவேனின்னிதகெ மானினியரெல்லரு ஆணெயனு கட்டிவனிகட்ட நில்லுவ பன்னிரி' என்று அதற்கு பதில் அளித்து, அனைவரும் ஸ்ரீகிருஷ்ணனிடம் வருகின்றனர். வெளிச்சம் பரவுவதற்கு முன்னரே 'ஹரிணாங்கவதனெயரு நெரெது பருதிரெ கண்டு, பரம ஹருஷதலி பந்து, ஸரி ராத்ரியொளு ஹரீகெ பருவுதேனு?' என்று ஸ்ரீகிருஷ்ணன் அவர்களிடம் குதூகலத்துடன் கேட்கிறான். அவன் இவ்வாறு கேள்வி கேட்டவுடனேயே, அந்த கோபியரின் மனோவேதனை அணை உடைந்ததைப் போல வெளியேறியது.

ஹலவு காலவு நின்ன ஸ்னேஹஸுகவ ஹாரயிஸிகொண்டிருதிஹ
லலனாவ்யூஹவ பிட்டு அக்ரூரனொடனெ நீ மதுரெகெ போதரெ
களெயலாபெவெ காந்த கேளு தினவ ஈ கந்துவின பாதெகெ
களிகொந்து யுகவாகி தோருதிஹுதோ ஜலஜாக்ஷ நீனில்லதெ

ப்யாட மதுரெகெ போகப்யாடெலவோ ஸ்ரீகிருஷ்ண
பேடிகொம்பெவோ தைன்யதி
நோடு நம்ம்யாலெ தயமாடு மதனங்கீடு
மாடுவுதேனுசிதவெலோ மாதவ கிருபாகரனெ

என்று தம் பேச்சுக்களை மிகவும் நயமாக பேசி, எடுத்துரைக்கின்றனர். சதுரனான ஸ்ரீகிருஷ்ணனோ:

பாலபாவதலிந்தலங்கஸுகவ பஹுபகெயிலிந்தலுளுஹிதெ
லோலலோசனெ நிம்ம பிட்டு புரத நாரேரிகானொலிதரெ
நீலகண்டனு மெச்ச நோடு நிஜவ நிமக்யாதகீ ஸம்ஷய
காலக்ஷேபவனல்லி மாடெ கிஞ்சித்காலதொளானைதுவே

பாலிஸிரெனகப்பணெய பாடல ஸுகந்தியரெ காலஹரணவ மாடதெ
நாளெ உதயகெ போகி நால்கெண்டு தினதொளு
வ்யாளெகில்லிகெ பருவெ காளாஹிவேணியரெ

என்று மிகவும் வினயத்துடன் கோபியர்களிடம் வேண்டிக் கொள்கிறான்.

அந்த கோபியர்களுக்கு, இந்த பேச்சுக்களால் சிறிதும் சமாதானம் ஆகவில்லை. அவர்களை பற்பல விதமான கவலைகள் சூழ்ந்திருக்கின்றன. ஆகையால், தம் பேச்சுக்களை தொடர்ந்து மேலும் பேசுகின்றனர்.

மாரனய்யனெ கேளு அல்லிருதிஹ நாரேரு பலு நிபுணரோ
நீரஜாம்பக நோடு நின்ன மனவ நிமிஷார்த்ததொளு ஸெளெவரோ
மாரகேளிய சாஸ்த்ரமர்மவரித ஆ நாரேரு நெரெயலு
காருபள்ளியலிப்ப கோபியர விசாரங்கள ஸ்மரிபெயா

பில்லு ஹப்பவெ ஸுள்ளு பிஸருஹாக்ஷியரிக்ஷு
பில்லினுத்ஸவக்கெ நின்ன
கல்லு அக்ரூரனனு களுஹி கரெஸிதரல்லி
வல்லபெயரனு நெரெவெ நம்மெல்லரனு மரெவெ

கோபியர்களின் இந்த பேச்சுக்களை கேட்டு, கிருஷ்ணனுக்கு சிரிப்பாக வருகிறது. அவன்:

மல்லயுத்தவ நோடபேகெனுத நம்மாவ
அல்லிகெ கரெஸலதகெ
இல்லதபவாத ஈ ஸுள்ளு ஸுத்திகள நீ
வெல்லி ஸ்ருஜிஸிதிரி ஸரியில்ல நிமகிளெயொளகெ
என்று மறுபடி பதில் அளிக்கிறான்.

கோபியர்களின் இதயத்தில் கவலைகள் நிரம்பி வழிவதை, ஸ்ரீபாதராஜர் இவ்வாறு அழகான வரிகளில் விவரித்திருக்கிறார். அவர்களின் கோரிக்கைகளை கேட்ட கிருஷ்ணன்:

பரிபரியல்லி நிம்ம பாடிஸி நோடெ முன்ன
கருணகெ கொரதில்ல காந்தெ கேளென்ன ஸொல்ல
த்வரிததி பாரதலெ தடெது நா நிந்தரல்லெ
ஸரஸிஜபவ மாரராணெ காணெ ப்ரவீணெ

என்று, தன் மக்களான ப்ரம்ஹ மற்றும் மன்மதன் மேல் ஆணையிட்டு சொல்கிறான். ஸ்ரீகிருஷ்ணனின் இந்த பேச்சுக்கு கோபியர்கள் தொடர்ந்து பின்வருமாறு சொல்கின்றனர்.

மாரனெம்புவனந்தெ மடிதனு ஷிவன மூரனெ கண்ணிலி
நாரேரில்லதெ நாபியிந்த படெத ஆ ப்ரம்ஹனெம்பாதன
நாரி ஈர்வ குமாரராணெ ஹரியு தானிட்டனேனெம்பெனெ
மாரி ஹொரகின ஹொரகெ ஹோயிதெம்போ தீராயிதெ பாவுகி

என்று சொல்லி, கிருஷ்ணனின் ஆணைக்கு அர்த்தம் இல்லை என்று தர்க்கம் செய்தனர். ஏனெனில், மன்மதன், சிவனின் நெற்றிக்கண்ணின் நெருப்பினால் என்றோ தகனம் ஆகியிருக்கிறான். அயோனிஜனான ப்ரம்ஹனின் மேல் உன் ஆணை நிற்காது, எவ்வித கஷ்டமும் இன்றி, பரமாத்மனின் நாபியிலிருந்து தோன்றிய அந்த மகனின் மேல் மரியாதை எவ்வளவு இருக்க முடியும்?. ஆகையால், 'ஊர ஹொரகின மாரிகெ அத்தரூ ஒந்தே, அளதித்தரூ

ஒந்தே' (ஊருக்கு வெளியே பெய்யும் மழைக்கு அழுதால் என்ன? அழாவிட்டாலும் என்ன?) என்னும் பழமொழியைப் போல, கிருஷ்ணனின் ஆணை என்பது வெறும் சமாதானமே தவிர, அதில் எவ்வித காரணமும் இல்லை என்று சொல்கின்றனர். அதன் பின், அனைவரும் ஒன்று சேர்ந்து,

ஹலவு மாதுகள்யாகெ ஜலஜாக்ஷ நின்ன பத
நளினகள நெரெ நம்பிஹ
ஒலுமெயல்லிருதிப்ப லலனெயரனெல்லரனு
ஸலஹோ, ஸலஹதெ மாணு ரங்கவிட்டலரேய

என்று முழுமையாக சரணாகதி அடைகின்றனர். பாகவதத்தில் மிகவும் சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கும் கோபியர்களின் விலாபத்தின் சம்பவத்தை, ஒரு சம்பாஷணை ரூபமாக இயற்றப்பட்டிருக்கும் இந்த கிருதியின் அழகு மிகவும் அற்புதமானது.

பாகவதத்தில் மிகவும் புகழ்பெற்றிருக்கும் 'ப்ரமர கீதை' சம்பவத்தைக்கூட ஸ்ரீபாதராஜர், சிறிது அங்கங்கு மாற்றம் செய்து, மிகவும் அழகான ஒரு சிறிய கிருதியை இயற்றியிருக்கிறார். மூலத்தில் உத்தவனின் வருகை, கோபியரின் ஆக்ஷேபணை, அங்கு பறந்து வந்த தேனீயை ஸ்ரீகிருஷ்ணனின் தூதன் என்று நினைத்து, கோபியர்கள் தம் விரக தாபத்தை விவரித்துக் கொள்வது ஆகியவை முறையாக வந்தால், ஸ்ரீபாதராஜர் உத்தவனின் வருகையையே தனியாக ஒரு ஸுளாதியில் சொல்லியிருக்கிறார். பிறகு, தேனீயைக் கண்டு கோபியர், தம் துக்கத்தை சொல்லிக் கொள்வதை, ஒரு கண்ட-காவியத்தைப் போல இயற்றியிருக்கிறார்.

கோபியர்களின் வனத்திற்கு வந்த உடனேயே, அவர்களுக்கு ஸ்ரீகிருஷ்ணனின் நினைவு வருகிறது. அவர்கள் ஒருவருக்கொருவர் இவ்வாறு பேசிக் கொள்கின்றனர்.

ஈ வனதெடெகளு ஈ லதெவனகளு
ஈ நதிபுளினகளீ ஷஷிஷிலெகளு
ஈ ஸுரதரு நெளலு ஷுக பிக ரவ
யாகெ மாதவன மரெயலீயதிவெ கௌதி

என்று விதம்விதமாக சொல்லிக் கொள்கின்றனர். உற்சாகம் குன்றி, பெருமூச்சு விட்டு, அவர்கள் இவ்வாறு நொந்து கொள்கின்றனர்.
இன்னு ரங்கனங்கஸங்கவு எத்தணது கோபியரிகெ
மதுரெய மானினியர பலெயலி ஸிலுகிதன
மதுரெய மானினியரு ரதிவிதக்தரா
வதுகளு ரஸிக நம்ம ரங்கவிட்டல

இந்த கவலை அவர்களை துன்புறுத்தியது. இப்போது அனுபவத்திற்கும் வந்தாயிற்று. மதுரெயின் பெண்கள் இவ்வாறு கஷ்டப்பட்டார்கள்.

பிடுவரு அதனர கணிகெயரு நெரெ
பிடுவுது விபல தருவ த்விஜகண
பிடுவுது ம்ருக தள்ளுரிகொண்டடவிய
பிடுவனு ஜார பரவதுவனு நெரெதின்னு
இவு திடவாயிது நம்ம வல்லபனொளு
அகடகடா ரங்கவிட்டலனு கருணியெ

ஸ்ரீபாதராஜர், தம் அபிப்ராயத்தை, ஸம்ஸ்க்ருதத்தின் மூலத்திலிருந்து அதிகம் மாற்றாமல் சொல்லியிருக்கிறார். மூல பங்க்திகள் இவ்வாறு இருக்கின்றன.

நிஸ்ஸ்வம் த்யஜந்தி கணிகா அகல்பம் ந்ருபதிம் ப்ரஜா:
.... ||7
ககா வீதபலம் வ்ருக்ஷம் புக்த்வா சாதிதயோ க்ருஹம்
தக்தம் ம்ருகாஸ்ததாரண்யம் ணாரோ புக்த்வாரதாம் ஸ்த்ரீயம் ||8
(பாகவத 10ம் ஸ்கந்தம் பூர்வார்த்த 47ம் அத்தியாயம்)

இவ்வாறாக, அங்கும் இங்குமாக பல பத்திகளை பாடியிருப்பது தெரிய வருகிறது. இவ்வாறாக, தத்தம்மிலேயே அவர்கள் நொந்து கொண்டிருந்தபோது, அந்த கோபியர்களுக்கு, தூரத்தில் உத்தவன் வருவது தெரிகிறது. (மூலத்தில் இது முதலிலேயே வருகிறது).

பொந்தேரதெல்லியதவ்வா பந்திதெ வ்ரஜதொளகெ
அந்தினக்ரூரனெம்ப க்ரூரனு மரளி பந்தனோ
நம்ம கரெதொய்யலிபேகெந்து
அந்தெம்ம கொந்த
இந்த்யார கொல்லலி பந்த
கொந்துகொள்ளலி தம்ம ஹிரியரனு ஹரலிக
அந்தென்னனகலிஸித ரங்கவிட்டலா

இதில் இருக்கும் சுவாரசியம் என்னவென்றால், தேரில் அமர்ந்து வந்த மனிதன் அக்ரூரன் என்று இந்த கோபியர்கள் தவறாக நினைத்து, அவரை பழிக்கின்றனர் (இந்த சிந்தனை ஸ்ரீபாதராஜரின் ஸ்ருஷ்டி). அதே தேர் அருகில் வந்தபின், அதில் இருப்பவர் உத்தவர் என்று தெரிய, அவர்களின் சிந்தனையே மாறிவிடுகிறது என்பதை பார்க்கிறோம்.

ஹெத்த தாயி தந்தெயர நோடலெந்து
இத்தலட்டிதனெ உத்தவ நின்ன கோவளா
மத்யாருண்டு வ்ரஜதல்லி நெனவரு
ஹத்திரகெ தன்னவரல்லி தா பிடுவனெ
அர்த்தக்ருத ஸ்னேஹ நம்மொடனெ மாடித கிருஷ்ண
மத்தளிகெ குஸுமத நேஹதந்தெ
ரக்தி எம்மொளுண்டு ரங்கவிட்டலகெ

இந்த கிருதியில் கேலி அதிகமாக இருக்கிறது. கிருஷ்ணனின் கபடத்தைக் குறித்து கோபமாக இருந்த அவர்கள், அவன் நம்மை நினைக்கிறானோ இல்லையோ என்னும் சந்தேகமே முக்கியமாக இருந்தது. இது மூலத்திலும் அப்படியே இருக்கிறது.

ஜானீமஸ்த்வாம் யதுபதே: பார்ஷதம் ஸமுபாகதம்
பர்த்ரேஹ ப்ரேஷித: பித்ரோர்பவான் ப்ரியசகீர்ஷயா || 4

அன்யதா கோவ்ரஜே தஸ்ய ஸ்மரணீயம் ந சக்ஷ்மஹே
ஸ்னேஹானுபந்தோ பந்தூனாம் முனேரபி ஸுதுஸ்த்யஜ: || 5

அன்யேஷ்வர்த்தக்ருதா மைத்ரீ யாவதர்த்தவிடம்பனம்
பும்பி: ஸ்த்ரீ ஷு க்ருதா யத்வத் ஸுமனஸ்விவ ஷட்பதை: || 6
(பாகவத 10ம் ஸ்கந்தம். பூர்வார்த்த. 47ம் அத்தியாயம்.)

கோபியர்கள், இந்த விரக தாபத்தை இவ்வாறே தொடர்ந்து சொல்லி, கடைசியில் தம் நிலையை இவ்வாறு தெளிவாக்குகின்றனர்.

எம்ம தனுமன தன்னதீனவல்லெ
அன்யவரியெவு தன்னரிதந்தெ மாடலி
எம்மஸுவு தன்னதீனவல்லெ
அன்யவரியெவு தன்னரிதந்தெ மாடலி
நம்ம ரங்கவிட்டலரேயகெ
இன்னு ஸலெ மாருவோதெவெ கௌதி

அவன ஹம்பலவெமகெ ஜீவனவவ்வா
புவன மோஹன ரங்கவிட்டலனு கருணியெ

கோபியரின் ஆத்ம அர்ப்பணைக்கு இதைவிட ஸாக்ஷி வேறு என்ன வேண்டும்?. ஸ்ரீபாதராஜர் அந்த கோபியரின் அந்தரங்கத்தை இந்த ஸுளாதியில் மிகவும் அற்புதமாக வர்ணித்திருக்கிறார். பாகவத கர்த்ருவின் நிலைக்கு எந்த ஹானியும் வராதவாறு, தம் கிருதி அப்படியே மொழிபெயர்ப்பாக இல்லாதவாறு, எங்கு சாத்தியமோ அங்கு ஸ்வாதந்த்ர்யத்தை பெற்று, இந்த சம்பவத்தை மிகவும் அற்புதமாக விவரித்திருக்கிறார். இந்த பகுதியின் பிற்பகுதியே, ப்ரமர கீதை.

சம்ஸ்க்ருதத்தில் 11 ஸ்லோகங்களை கொண்ட இந்த பாகத்தில், ஸ்ரீபாதராஜர், பல்லவியை விட்டு, 8 பாதங்களைக் கொண்ட 9 நுடிகளை இயற்றியிருக்கிறார். இந்த கிருதி துவங்குவது இவ்வாறு.

ப்ருங்கா, நின்னட்டிதனே ஸ்ரீரங்க மதுரெலி நிந்து
அங்கஜலுப்தக பொகோலங்கள தடெயனிக்கி
அங்கனேரெம்போ ஹுல்லெ ம்ருகங்களிகெ குரியெச்சு
ஹிங்கிஸுதைதானெ அஸுவ ஹே கிதவா || ப ||

சம்ஸ்க்ருதத்தில் துவக்கம் இவ்வாறு இருக்கிறது.

மதுப கிதவ பந்தோ மாஸ்ப்ருஷாங்க்ரிம் ஸபத்ன்யா:
குசவிலுலிதமாலா குங்குமஸ்மஷ்ருபிர்ன: |
வஹது மதுபதிஸ்தன்மானினீனாம் ப்ரஸாதம்
யதுஸதஸி விடம்பம் யஸ்ய தூதஸ்த்வ மீத்ருக் || 12
(பாகவத 10ம் ஸ்கந்த. பூர்வார்த்த. 47ம் அத்தியாயம்)

இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பறந்து வந்த தும்பியை ‘கிதவ’ என்று அழைத்திருப்பதைத் தவிர, வேறு எந்த ஒப்பீடும் கண்டுவருவதில்லை. மூலத்தின் ஸ்வாரஸ்யத்திற்கு பங்கம் வராதவாறு, ஸ்ரீபாதராஜர், தம் பார்வையில், கோபியரின் விரக தாபத்தை மிகவும் இதயம் தொடுமாறு கூறியிருக்கிறார். அந்த தும்பியை கண்ட உடனேயே சிறிது கோபம் கொண்டாலும், அடுத்த நொடியிலேயே அந்த நந்தநந்தனனுடன் தாம் அனுபவித்த ஆனந்தத்தை நினைத்துக் கொள்கிறார்.

நின்ன நோஒடெ நம்ம அச்யுதன்ன கண்டந்தாயிதய்யா
சன்னிகரரஸ குஷலோன்னதியொளிஹனெனோ
சிண்ணதன மொதலாகவன்ன கிதவ பல்லெவோ
கன்னகார சித்தசோரன்ன ஸ்ரீஹரியா
மன்னணெகெ மெச்சி தனுவன்னொப்பிஸித முகுதெ
வெண்ணுகள விரஹாப்தியன்னெ தாடிஸுவெனெந்து
தன்ன நேஹவெம்போ நாவெயன்னேரிஸி மோஸதி
நடுனீரொளு தொரெத்ஹோதனெ ஹே கிதவா ||1

மதுகுஞ்சவனதல்லி மதுவைரி கொளலுனுதலு
மதுர நிஸ்வன கேலி மதிராக்ஷியரெல்ல தா
மத த்யானவ பிட்டு ம்ருகமதகம்பவிடி
தைதி மதனனய்யன காணுத ஸ்ரீஹரிய
முதவேரி தலெவாகி மேதினி நிட்டிஸலாக
ம்ருதுவாக்யதொளெம்மப்பி அதராம்ருத போஜன
க்கொதகுவ ஸதத ஸன்னத்த நம்மனகலி க
ல்லெதெயாதனெந்தோ க்ருபாளு ஹே கிதவா ||3

என்று விதம்விதமாக தாம் சிரித்து விளையாடிய சந்தர்ப்பங்களை நினைத்துக் கொள்கிறார். அவனை பார்க்க வேண்டும் என்று தமக்கு இருக்கும் விருப்பத்தை காட்டிக் கொள்கிறார். பிறகு, தமக்கும் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் இருக்கும் வேறுபாடுகளை நினைத்துக் கொண்டு தமக்கு தாமே சமாதானம் செய்து கொள்ளும் விதம், பாகவதத்தில் கண்டு வருவதில்லை.

லக்ஷுமி ரமணவ ஸுக்ஷும கொல்லதேராவு
குக்ஷியொளு பொம்மொண்டவவகெ மக்ஷிகளந்திப்பெவு
மோக்ஷதரஸனு ஆவ கோக்ஷீரதி த்ருப்தராவு
லக்ஷிஸுவுதெந்தோ எம்மனு ஸ்ரீஹரியு
ரக்ஷிஸலுதிஸி ஜனரக்ஷணெகெ பால்பெண்ணெய
பக்ஷிஸி நிருத நம்ம அக்ஷிகெ ஹப்பவனுண்ணிஸி
ஈ க்ஷோணி சராசர தீக்ஷிகெ நரர ஸாம்ய
வக்ஷ மணராவெவோ மூர்க்கரோ ஹே கிதவா ||7

இந்த மன நிலைக்கு தக்கதாக அவர் தும்பியைக் குறித்து, முதலில் தம்மால் அவனுக்கு எதுவும் அஸமாதானம் ஆகியிருந்தால், அதனையும் மன்னித்து விடுமாறும், அவனின் சிந்தனை எப்போதும் தம்மில் எப்போதும் நிலைத்திருக்கட்டும் என்று வேண்டிக் கொள்கிறார்.

.... ஸ்ரீஹரியு
அந்தெம்மொளு ராஸக்ரீடெயிந்த பந்தபராதவ
நொந்தனெணிஸதெ ஸலஹெந்து பின்னயிஸி ஸாஷ்டாங்கதிந்த
வந்திபெவோ பக்தபந்துவிகெ நம்ம ஹ்ருதய
மந்திரதொளெந்தெந்திரெந்து ஹே கிதவா ||8
(ஸ்ரீபாதராஜரின் கிருதிகள் தொகுப்பிலிருந்து)

இந்த சூழ்நிலையை நினைக்கும் போதெல்லாம் ஸ்ரீபாதராஜருக்கு மனதில் குதூகலம் வந்ததைப் போல தெரிகிறது. இதே சந்தர்ப்பத்தை சொல்வதைப் போல 'வனஜனயனன மனவ மதுப நம்புவரெ, மனதெகெத மதனபித விட்டலரேயா' என்று தொடங்கும் இன்னொரு கீர்த்தனையை இயற்றியிருக்கிறார்.

ஸ்ரீவாதிராஜரோ, மூல பாகவதத்தின் ஸ்லோகங்களையே சில இடங்களில் அனுவாதம் செய்து, தம் சில அபிப்பிராயங்களையும் சேர்த்து தனியான ஒரு கிருதியை இயற்றியிருக்கிறார். அது இவ்வாறு தொடங்குகிறது.

பத்ய:
ஸ்ரீவனஜனாபனாக்ஞெயிந்த ஸுஜனர கார்யக்கெ
ஆவாவ விக்னகளு பரலு அதனு ஆ க்ஷண
ஈ வசுதெயொளகெ பரிஹரிஸி ஸலஹுவ
நம்ம ஹொட்டெ கணபா ஈயெமகெ ஷுபவ

ஸ்லோக:
ஸங்க்ருஹ்ய பத்யவனு ஸுதவரேண்ய கிருஷ்ண
ராமாவதார சரிதாபிதரத்னராஷிம்
தத்பக்த பூஸுரக்ருதேக்ருத வாதிராஜபிக்ஷு:
படத்கவிகதம்பக கண்டபூஷாம்

ஆவாக ஹயவதனனமல திவ்ய ஸ்ரீமூர்த்தியனெ
பாவஷுத்ததலி நெனெவந்தெ க்ருபெமாடு
ஸ்ரீபாகவத மஹாபுராணவனு
ஸ்ரீப்ரமர கீதெயனு ஷுபஜனரெல்ல தில்லியலு
ஸுவ்யாக்யானதிந்த விஸ்தரிஸி ஸுலலித
ஸுளாதிதாளகளிந்த விரசிஸிதனா முனிராஜ கண்டீரவா
ஸுசரித ஸுகுண வாதிராஜேந்த்ர அபினவ
நாடகசாரித்ரெயனு ஸாவதானதிந்த கேளி ஸஜ்ஜனரு ||

இவ்வாறு தொடங்கும் இந்த க்ருதியில் மொத்தம் 25 பாடல்கள் இருக்கின்றன. பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஸ்லோகங்களை அனுவாதம் செய்திருப்பது இதன் ஒரு விஸேஷ லக்ஷணம். சில அனுவாதங்களை உதாரணத்திற்காக இங்கே பார்க்கலாம்.

(ஸம்ஸ்) காசின்மதுகரம் த்ருஷ்ட்வா த்யாயந்தீ க்ரிஷ்ணஸங்கமம்
ப்ரியப்ரஸ்தாபிதம் தூதம் கல்பயித்வேதமப்ரவீத் || 11

(கன்னட) ப்ரமரவனெ குடிமாரி ஹரி களுஹிதுத்தவன
ஸம்முகதி கோகுலத ரமணிமாடிதளு

(ஸம்ஸ்) மதுப கிதவபந்தோ மா ஸ்ப்ருஷாங்க்ரி ஸம்பத்ன்யா:
குசவில்லுலிதமாலா குங்குமஷ்மஷ்ருபிர்ன:
வஹது மதுபதிஸ்தன்மானீனாம் ப்ரஸாதம்
யதுஸதஸி விடம்பம் யஸ்ய தூதஸ்த்வமீத்ருக் || 12

(கன்னட) எலெ ஹிதவ ப்ரியமதுப ஈ நம்ம ஸவதியர
மொலெய குங்குமத குருபின மீஸெயா
மலின முட்டிதிரெம்ம நிம்மச்யுதனு மெச்சித
லலனெயரு மாடித பொகள முடியலி

(ஸம்ஸ்) திவி புவி ச ரஸாயாம் கா: ஸ்த்ரியஸ்தத்துராபா:
கபடருசிரஹாஸபூமிஜ்ரும்பஸ்ய யா: ஸ்யு:
சரணரிஜ உபாஸ்தே யஸ்ய பூதிர்வயம் கா
அபி ச க்ருபண பக்ஷெஹ்யுத்தம ஸ்லோகஷப்த: ||15

(கன்னட) ஹரிய கபசத ஸோடகரகதங்கனெயரனு
சராசரரொளகாவு காணெவம்ம
ஸ்மரன பெத்த மஹலகுமி சஞ்சலதெயனு
தோரெதிவன சரணஸேவெய மாள்பளு

(ஸம்ஸ்) ம்ருகயுரிவ கபீந்த்ரம் விவ்யதே லுப்த தர்மா
ஸ்த்ரியமக்ருத விரூவாம் ஸ்த்ரீ ஜித: காமயானாம்
பலிமபி பிலவாஸம் வேதவித்வர்க்கவந்த்ய
ஸ்ததலமஸிதஸக்யைர்துஸ்த்யத்கதார்த்த: ||17

(கன்னட) பலிய பிலதொளகிட்ட கபிகெ பாணவ தொட்ட
ஒலிது பந்தவள மொக தரிதுபிட்ட
சலதங்கமல்ல வேதவித்வர்க்கவந்த்ய கட
அளி நமகெ பட்டனொளு ஸக்யனல்ல

(ஸம்ஸ்) யதனுசரிதலீலாகர்ண பீயூஷவிப்ருட்ஸ
க்ருததன விதூத த்வந்த்வ தர்மாவினஷ்டா:
ஸபதி க்ருஹகுடும்பம் தீனமுத்ஸ்ருஜ்ய தீன:
பஹவ இஹ விஹங்கா பிக்ஷு சர்யாம் சரந்தி ||18

(கன்னட) அவன சரிதாம்ருதத பிந்து கர்ணக்கெ பீளெ
பவன ஸுத வனிதாதிகளு பிஸுடு
அவனியொளு பிக்ஷுசர்யவனெ சரிஸுவரு கட
அவன கதெகள கேளதவனாவனோ

(ஸம்ஸ்) வயம்ருதமிவ ஜிஹ்ரவாவ்யாஹ்ருதம் ஷ்ரத்ததானா:
குலிகருதமிவாஜ்ஞ: க்ருஷ்ணவத்வோ ஹரிண்ய:
தத்ருஷுருஸக்ருத தேதத்தன்ன கஸ்பர்ஷதீவ்ர
ஸ்மனருஜபரமார்த்திம் பண்யதாமன்ய வார்த்தா ||19

(கன்னட) கண்டெயா பேடெகாரன குடில ஸ்வரகெ
அண்டெணிஸி பந்து பளலுவ ம்ருகங்களா
நெங்கராதெவு நாவு அவன நக நம்ம குசகெ
கண்டகாவாயிது பேளு நெரெ வார்த்தெயா

(ஸம்ஸ்) அபி பத மதுபுர்யாமார்யபுத்ரோsதுனாssஸ்தே
ஸ்மரதி ஸ பித்ருகேஹான் ஸௌம்ய பந்தூன்ஸ்ச கோபான்
க்வசிதபி ஸ கதா ந: கிங்கரீணாம் க்ருணீதெ
புஜமகுரு ஸுகந்தம் மூர்த்யா தாஸ்யக்கதானு ||21

(கன்னட) மதுரபுரியலி நம்ம நல்லனிஹனெ ஈ வ்ரஜத
ஸதனவனு தந்தெ தாயி பந்து பளகவு
ஒதகி பந்த கோபரனு கோவுகளொமெம்மெ | நம்ம வினோ
தத கதெகளனு துதிஸுவனெ ரஸிக
அகரு கந்தத கரவ ஸிரதல்லிட்டு ஸிரியரஸ த
ந்நகலி பளலுவ பாலெயர கொடனெ
ஸொகஸு நுடியிந்த நம்ம ஸோலிஸி முகுந்த தன்ன
முகுளுனகெயிந்த முத்திஸி மெரெயனெ ||

(பாகவத 10ம் ஸ்கந்தம். பூர்வார்த்த. 47ம் அத்தியாயம்).

உத்தவன் கோபியர்களை சந்தித்து, மதுரைக்கு வந்து ஸ்ரீகிருஷ்ணனுக்கு கோபியரின் விரக வேதனையை விவரித்தான். அப்போது கிருஷ்ணன் அவர்களின் மனதில் நிலையாக வந்து நிலைக்க, அனைவரும் மகிழ்ந்தனர்.

ஸ்ரீவாதிராஜர், கடைசியில்

ஸிரி ஹயக்ரீவ பதகஞ்சப்ருங்கா
பாவஜனமத பங்க முனிகுலோத்துங்க

பரவாதிகிரிவஜ்ரதண்ட பூமண்டலதி
வாதிராஜ ஆஸ்ரித ஜன ஸுரபோஜ --

என்று சொல்லி, இந்த கிருதியை முடிக்கிறார்.

ஸ்ரீபாதராஜரின் கிருதியானது, ஒரு ஸ்வதந்த்ரமான கிருதி என்று தெரிந்தால், ஸ்ரீவாதிராஜரின் இந்த கிருதி மூலத்தின் மொழிபெயர்ப்பாக மட்டுமல்லாமல், மேலும் அதிகமான சங்கதிகளை சேர்த்து, தம் விஸேஷ அனுபவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதை பார்க்கிறோம்.

ஸ்ரீபாதராஜரின் மதுர பாவத்தை வெளிப்படுத்துவதில், கோபிகீதை மற்றும் ப்ரமர கீதைகள் எப்படி புகழ்பெற்றிருக்கிறதோ, அப்படியே வேணுகீதையும் அதே போல இருக்கிறது. அதன் ஸ்வராஸ்யத்திற்காக, அதனை இங்கே கொடுக்கிறோம்.

துருகாய பந்த கோபிய கந்த ஆனந்ததிந்த - என்று வந்தவனான அவன், 'ஸுர, நர, தரு, ம்ருக, ஜலசர மோஹிஸெ தரளேர மனஸுரெயாகெ கொளலினிந்த' என்று ஸ்ரீபாதராஜர் அவன் எப்படி சுற்றிலும் மோஹத்தை பரப்பினான் என்று முதலில் சொல்கிறார். குழலின் நாதத்தை கேட்ட உடனேயே கோபியர்கள், தத்தம் காரியங்களை அப்படியே விட்டு வெளியே வருகின்றனர். அவனுடன் எப்படி பேசுகின்றனர் என்னும் சந்தர்ப்பத்தை இரு நுடிகளில் விவரிக்கிறார். அதில் ஒன்றை மட்டும் இங்கே பார்க்கலாம்.

முரளிய ஸ்வரக்கெ மோஹிதராகெ கருகளனு தந்து
கரதிந்தலெத்தி தொட்டிலொளகெ இரிஸுத்த, ஹால

பெரஸுத்த மஜ்ஜிகெ மொஸரினொளகெ பரமாத்மன நெனெது
ஹொரடரு பிஸிலு சளி மளெயொளகெ மனெமனெயொளகெ

தரளர பெதரிஸி மார்ஜாலகெ மொலெ
த்வரிததி உணிஸுத ஸரிஸரியெனுதலி
பரிபரி ப்ராந்தராகி நோடுத
புரமார்க்கக்கெ பருவனு நிருகிஸுத

இந்த விளக்கத்தில் கேலி இருப்பது உண்மை. ஆனால், அது நகைச்சுவைக்கு வழியாக இருப்பதால், ரசிக்கும்படியாக இருக்கிறது. கடைசி நுடியில் ஸ்ரீகிருஷ்ணன் கோபியர்களுடன் எப்படி நடக்கிறான் என்னும் அழகான விவரிப்பு இருக்கிறது.

மதன ஷதகோடி தேஜனு பந்த ஸ்த்ரீ ரெதுரலி நிந்த
அதராம்ருத பானமாடிரெந்த பாயாரிதிரெந்த

பதியல்லி பந்து குள்ளிரியெந்த அவரிவரனெ நோட்ட
சதுரேர மோஹகனெ நானெந்த வாத்யத ரவதிந்த

ஸதயனெதுர ரம்பெ ஊர்வஷி மேனகெ
ஒதகி நாட்யகள சதுரதனதலாடெ
மதுஸுதன பக்தர காய்துதகீ
விததொளகாடித ரங்கவிட்டல தா

இந்த கீர்த்தனையில் வேணு நாதத்தின் மகிமை மிகவும் அற்புதமாக விளக்கப்பட்டுள்ளது.

அடுத்து, ஸ்ரீவ்யாஸராஜரின் கிருதிகளை பார்த்தால், அதில் இருக்கும் மதுரபாவம் மிகச்சிறந்தது என்பதை அறியலாம். ஸ்ரீவ்யாஸராஜரின் ஆத்மஸமர்ப்பண பாவம் எவ்வளவு தூரம் செல்கிறது

என்றால், அவர் தம்மை பரமாத்மனின் தோழி என்று சிந்தித்து, ஒரு அபூர்வமான கீர்த்தனையை இயற்றியிருக்கிறார். அந்த கிருதியின் ஒவ்வொரு நுடியும்கூட நம் இதயத்தை கவர்கிறது.

எந்தெந்தென்ன மனதிந்த அகலதிரோ
நந்தனந்தனனெ ஆனந்த மூருதியெ || ப

பஹுகால நின்ன ஸ்ரவணவெம்ப ஹொன்னோலெய
பஹுமானதிந்தென்ன கிவியொளிட்டு
மஹித மங்கள ஸூத்ரவெம்போ தாஸ்யவன்னு
மஹதானந்ததி கொரளோள் கட்டிதெயாகி

ஸுலலித ஸைரணெயெம்ப பூஷணவித்து
ஸலஹிதெ பஹு ப்ரீதிஸகியெந்தென்ன
பெலெயில்லத ஸுஞ்ஜானநிதியனித்து
ஜலஜாக்ஷி என்னனு ஒலிது ஆளிதெயாகி

எல்லி நீ நிலிஸிதரெனகேனு பயவில்ல
பல்லெனோ விஷ்வவ்யாபகனெம்புத
ஸல்லதோ ஈ முனிஸென்னொளு ஸிரிகிருஷ்ண
ஒல்லதித்தரெ நின்ன ஸெரக பிடிதெளெவெ

இந்த கீர்த்தனையின் சாராம்ஸத்தை பார்த்தால், ஸ்ரீவ்யாஸராஜர் தாம் பரமாத்மனின் தோழி என்னும் சிந்தனையை எப்படி கொண்டு வந்திருக்கிறார் என்பது தெரிகிறது. இந்த ஸகி' த்வத்தின் முக்கிய லக்ஷணங்கள் மிகவும் சுவாரஸ்யமாக இருக்கின்றன. பரமாத்மனின் கீர்த்தி ஸ்ரவணமே பொன் தோடு. பகவந்தனில் தாம் கொண்டிருக்கும் தாஸ்யமே அவருடைய மங்களஸூத்ரம். தெய்வானுக்ரஹத்தினால் தம் யதி தர்மத்திற்கு தக்கவாறு அவரில் நிலைத்திருக்கும் பொறுமையே பூஷணம். தெய்வ தத்தமான அமூல்யமான ஸுஜ்ஞானமே அவருடைய அக்ஷயநிதி. இந்த அனைத்தையும் பெற்றிருக்கும் அவருடைய ஸகீத்வத்திற்கு வேறு எதுதான் சரிசமம் ஆகும்?. இவ்வாறாக தமக்கு அனைத்து வித சுக, செல்வங்களையும் அருளும் தம் தலைவன், தன்னை எங்கு கொண்டு நிறுத்தினாலும் அது பரவாயில்லை. அவன், விஷ்வவ்யாபகனாக இருப்பதால், அவருக்கு சிறிதும் கலக்கமில்லை. பரமாத்மன் தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கலாம் என்னும் கற்பனை அழகாக இருக்கிறது. தாஸத்வ ஜீவனத்தில் அன்யோன்ய-அனுராக எவ்வளவு மகிழ்ச்சியை தருகிறதோ, அவ்வப்போது வரும் அஸமாதானமும் அவ்வளவே மகிழ்வானது. எதுவரை பக்த, பகவந்தரின் சம்பந்தத்திற்கு பிரச்னை வருவதில்லையோ, அதுவரை இந்த தற்காலிக விரசமும்கூட ஒரு ரீதியில் நன்றாகவே இருக்கிறது. ஆகையாலேயே, ஸ்ரீவ்யாஸராஜர் கடைசி இரு சரணங்களில் 'ஸல்லதோ ஈ முனிஸென்னொளு ஸிரி கிருஷ்ண, ஒல்லதித்தரெ நின்ன ஸெரக பிடிதெளெவெ' என்று சொல்வது மிகவும் சரியாக இருக்கிறது.

ஸ்ரீவ்யாஸராஜரின் இந்த நெருக்கம், அவர் தம் பதங்களில் சொல்லியிருக்கும் ப்ருந்தாவனத்தின் அழகின் வர்ணனையில் மிகவும் அற்புதமாக வெளிவந்திருக்கிறது. 'அங்கஜய்யனு கோகுல போகுவாக, கங்கள்ஹப்பத உப்தனேன பண்ணிபெனா' என்று துவங்கும் ஒரு கீர்த்தனையில் ஸ்ரீவ்யாஸராஜர், அந்த கோகுலத்தின் சிறப்புகளை 17 நுடிகளில் வர்ணித்திருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணனின் ப்ரவேசத்தினால் அங்கு இருக்கும் சூழ்நிலையே விமரிசையாக மாறுகிறது. பசுக்கள் மகிழ்ச்சியடைகின்றன. கோபாலகர்களின் ஆனந்தமோ சொல்லித் தீராது.

கெலரு கோகிலெயந்தெ, கெலரு நவிலினந்தெ
கெலரு ஹம்ஸதந்தெ ஸாரஸதந்தெ

களரவதிந்த கோபரு கூகெ ருதுகளு
நளினாக்ஷன ஸேவெகெ கூடிதந்திரெ

இந்த கிருதியில், ஸ்ரீவ்யாஸராஜரின் கவி இதயத்தின் சிறப்பினை காணலாம். அந்த பவித்ரமான சூழ்நிலையின்பால் அவரது கவனம் எப்படி இருக்கிறது என்பதை பற்பல நுடிகளில் பார்க்கலாம். அவற்றில் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

நாரந்தன வீணெ, கோபன கின்னரி
கீர்வாண துந்துபி, கோபர முரஜ
ஆ ரம்பெயராஜ, கோபர தாண்டவ
க்ஷீரோதகதந்தெ கலெஸி பெரெஸிரெ

ரஸ தும்பி துளுகுவ கொளல ரவங்களு
ஹஸுகள கொரள கண்டெகள நினாத
எஸெவெளகந்திய அம்பாரவங்களு
பஸரிஸெ கோபளிஎயரு ஸடகரிஸி

ஹெங்களதியர முக கன்னடி, உரோ
ஜங்களெ மங்கள பூர்ணகும்பகளு
கங்களெ நீலோத்பலங்களு கரகளெ
துங்க பல்லவ தோரணதந்தெஸெயெ

செந்தத நோடவு மங்களாரதியாகெ
மந்தஹாஸவு பூமளெயாகெ ஆ
நந்த புளககளெ கோடியாகெ கோப
வ்ருந்தவிதிருகொளபந்தரொலவினலி

இந்த நான்கு நுடிகளில் கோகுலத்தின் பாவித்ர்யம் என்ன என்பது தெளிவாக தெரிகிறது. நாரதரின் வீணையின் மதுரத்வனி ஒரு புறம் கேட்கிறது என்றால், ரம்பை முதலானவர்களின் நர்த்தனம் இன்னொரு புறம். கோபாலகர்களின் கின்னரி வாத்தியம் மற்றும் நாட்டியக்காரர்களின் வைபவம் ஆகியவை ஒரே சமயத்தில் சேர்ந்து கேட்டால், அது பாலின் நதியே பாய்வதைப் போல இருந்தது என்பதில் ஆச்சரியம் இல்லை.

கோப கோபியரின் நடுவே கிருஷ்ணனின் இந்த லீலை இவ்வாறு இருக்க, இந்த மகிழ்ச்சியில் பங்கு பெற தேவானு தேவதைகளும்கூட அங்கு வந்தனராம்.

இத்த கோவளராடகெ தலெதூகுத
அத்த தேவதெகள ஸ்துதி கேளுத்த
இத்த கோவளெயர நகிஸுத்த நகுத்த
அத்தித்த முனிகள ஸ்துதி கேளுத்த

கஞ்ஜாஸன நமிஸலு கை ஹிடிதெத்தி, ம்ரு
த்யுஞ்ஜய வந்திஸெ பாயென்னுத்த
அஞ்ஜலிபுஞ்ஜத இந்த்ராதிகளன்னு
கஞ்ஜனேத்ரகள ஸன்னெயலி மன்னிஸுத

ஸிரிவனிதெகெ வனமாலெ உய்யாலெ
மொரெவளிகுலகள ரவ ஸங்கீத
வர முத்தின ஹார சாமர ஸ்ரீகிருஷ்ண

நுர மத்யவெ மண்டபவாகெஸெயெ

ஸ்ரீகிருஷ்ணனின் ஸான்னித்யத்தினால் மொத்த கோகுலமும் ஸ்வர்க்க ஸாத்ருஷ்யம் ஆயிற்று என்று கூறினால் அது தவறாகாது. அங்கிருந்த கோப, கோபியர்கள் மட்டுமல்லாமல் மற்ற மிருக பக்ஷிகளும், மரம் செடி கொடிகளும் அபூர்வமான சுகத்தை அனுபவித்தன. இந்த சம்ப்ரமத்தில் பங்கேற்க, ப்ரம்ம, ருத்ரர் ஆகியோர் அங்கு வந்து எப்படி ஸ்ரீஹரியின் ப்ரீதிக்கு பாத்திரர் ஆனார்கள் என்பதை ஸ்ரீவ்யாஸராஜர் மனதை தொடுமாறு வர்ணிக்கிறார். ப்ரம்ஹன் வந்து கிருஷ்ணனை வணங்க, அவரை கைபிடித்து கிருஷ்ணன் எழுப்பினானாம். ஈஸ்வரன் வந்து வணங்க, 'வா' என்று அருகில் அழைத்தானாம். இந்த்ராதி தேவதைகளை தன் கண்களாலேயே வரவேற்றானாம். (இந்த க்ரமத்தில் த்வைத ஸித்தாந்தமான தாரதம்ய தத்வத்தையும் கவனிக்க வேண்டும்).

இத்தகைய பிருந்தாவனத்தில் ஆடும் கோபியரின் பற்பல விவரங்களை ஸ்ரீவ்யாஸராஜர் கவனிக்காமல் இல்லை. ஒருவள் தன் தோழியை 'வ்ருந்தாவனதி நோடுவ பாரெ கோவிந்தனாடுவ ஸந்தணி ஸாலதெ ஸகி' என்று அழைக்கிறாள். அந்த வ்ருந்தாவனத்தின் ஒவ்வொரு வஸ்துவும் பரம பவித்ரமானது. அங்கு காணும் செடி, கொடி, பறவை, மிருகங்கள் ஆகியவை முனிவர்கள் என்றால், அங்கு காணும் பசுக்கள் ஆகியவை ஸனகாதிகள் என்றால், தேவதைகளே கோபாலகர்கள் என்கிறார். இதே வரிசையில் அங்கிருக்கும் ஒவ்வொரு பதார்த்தமும் தெய்வத்வத்தின் குறியீடுகள். ஸ்ரீகிருஷ்ணனை கொண்டாடுவதில், ஸ்ரீவ்யாஸராஜரின் கற்பனைக்கு எல்லையே இல்லை எனலாம்.

ரங்கன பதனக திங்கள பௌகிகெ
துங்க சந்த்ரகாந்த ஷிலெ ஒஸரி
ஹிங்கதெ ஹரிது காளிந்திய கொடலு
கங்கெ யமுனெயர ஸங்கமதந்திப்ப

ஸீர்யரஸன நகெமொகவெம்ப சந்த்ரனு
வர கௌஸ்துபவெம்ப பாலரவியு
எரடனு கண்டு சகோர சக்ரவாக
இருளு ஹகலு எந்து கோருதலிருதிப்ப

என்னும் நிரூபணையோ நவீனமாக இருக்கிறது. பகவந்தனின் முகத்தின் ஒளி சந்த்ரனைப் போல தண்மையாக இருந்தால், அவன் அணிந்த கௌஸ்துபத்தின் ஒளி சூரியனைப் போல இருந்ததாம். இந்த இரு ஒளிகளும் சகோரத்திற்கு நிலவின் ஒளியையும், சக்ரவாகத்திற்கு சூரிய ஒளியையும் கொடுக்க, அவை இரண்டும், பகலோ இருளோ என்று குழப்பம் கொண்டன என்று சொல்லியிருப்பது, படிப்பவர்களை வியப்படையச் செய்கிறது.

ஹரியின் குழலின் நாதத்தின் சிறப்போ இன்னும் மேலே இருக்கிறது.

ஹரிய கொளல ஸ்வரததி மோஹனக்கெ
தரு மொக்கெகளிம் புளகிதவாகெ
கிரியு ஜரியா நெவதிந்த கரகலு
தொரெயு ஸுளிய நெவதிந்த தா நில்லுவ

தன்னுடைய நாதத்தினால் மரம், செடி, கொடிகள் ஆகியவற்றை மகிழ்வித்தான் என்றால், கோவர்த்தன கிரியே கரைந்து நதியைப் போல பாயத் தொடங்கியதாம். எத்தகைய அற்புதமான அனுபவம் இது.

ஸ்ரீகிருஷ்ணனோ பார்ப்பவர்களின் கண்ணிற்கு மழைகாலத்து மேகம் போல கண்டு வந்தானாம்.

நளனளிஸுவ வனமாலெ இந்த்ர சாப
பொளெவ பொம்பட்டெ மிஞ்சு வேணுகான
எளெய கர்ஜனெ, ஷ்யாமமேக கிருஷ்ண
மளெய மேகவெந்து ஜாதக நலியுத

என கண்டு வந்தது.

இத்தகைய அபூர்வமான வ்ருந்தாவனத்திற்கு போவதற்கு அழைப்பு வந்தால், எந்த தோழிதான் வேண்டாம் என்று சொல்லுவாள்.

ஸ்ரீகிருஷ்ணனின் குழலின் கானம் கேட்ட உடனேயே, கோபியரின் கவனம் எல்லாம் அங்கேயே பாய்ந்தன. பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு அந்த திசையையே தொடர்ந்து சென்றனர்.

அங்கனெ நோடுவ பாரெ || ப

ஹிங்கிரலாரெ நின்னாணெ
கங்களு படெத பலவ
ரங்க கொளலனூதுவ கோ
பாங்கனெயரெல்ல நெரெது
ஸங்கட லோலாடுதலிப்புது || அப

என்று பாடுகின்றனர்.

குழலின் கானலஹரி வ்ருந்தாவனத்தை சுற்றி வந்த போதெல்லாம், அந்த கோபியரின் மகிழ்ச்சியும்கூட நிரம்பி வழிந்ததுடன் குழலின் புண்ணியத்தை நினைப்பது மனதை மயக்குவதாக இருக்கிறது.

ஏணலோசனெ கேளவ்வ - தானவாந்தகன கைய
வேணு மாடித ஸுக்ருத பலவ - ப்ராணதொல்லபயரெல்ல
மாணதெ ஸவிவ அதரபானவ - தா ஸுரெகொம்புவ

தானு நெலெஸித வ்ருக்ஷ மூலக
ளேனு ஸுக்ருதமாடிதுவோ, பூ லதா
வனத புண்யகளேனெம்பெ
நானு மாடித பூர்வ ஸஞ்சித
ஏனு ஒதகிதோ கிருஷ்ணராயன
வேணு கீதாம்ருதவ ஸவிவரெ

சோர்வினால், மனம் சிறிது கலங்கினாற்போல தெரிந்தாலும், அந்த குழல் கானத்தின் சுவையை சுவைத்து, மிருக பக்ஷிகளின் மகிழ்ச்சியுடன் தாமும் அதில் பங்கேற்றன. இந்த முரளி நாதத்தின் சுவையின் சந்தர்ப்பத்தை ஸ்ரீவ்யாஸராஜர் அப்படியே வர்ணிக்கிறார்.

கோபியரின் மகிழ்ச்சியின் நிலையானது நம் மனதை அபகரிப்பதாக இருந்தால், மதுரைக்கு சென்ற கிருஷ்ணனின் பிரிவினால் அவர்கள் அனுபவித்த வேதனம் நம் இதயத்தை இன்னொரு ரீதியில் கரைக்கிறது.

ஒரு கிருதியில் கோபியர்கள் எல்லாரும் சேர்ந்து தம் விரக வேதனையை இவ்வாறு வெளிப்படுத்துகின்றனர்.

எல்லி மாயவாதனெ ரங்கய்யனு
எல்லி மாயவாதனெ || ப

எல்லி மாயவாத புல்லனாப கிருஷ்ண
செல்லகங்களெயரு ஹுடுக ஹோகுவ பன்னி || அப

என்று நொந்து, வெந்து, அவனுடன் தாமும் அனுபவித்த அமிர்த காலங்களை நினைவுக்கு கொண்டு வருகின்றனர்.

ஒருத்தியோ தன் அன்பின் வெளிப்பாட்டினை குறித்தும், தன் துக்கத்தை குறித்தும் இவ்வாறு பாடுகிறாளாம்.

காணதெ நில்லலாரெ கமனீய மூருதிய
ப்ராணேஷன தோரெ கிணியெ || ப

மாணிக்ய பதகவ மன்னிஸி நினகீவெ
ஜாணெ கிருஷ்ணன தோரெ கிணியெ || அப

இதே வழியில் சென்று, அவள் ஸ்ரீகிருஷ்ணனின் குணங்களின் பட்டியலை சொல்லத் துவங்குகிறாள்.

ஒந்து நிமிஷவொந்து யுகவாகி தோரிதெ
ஸௌந்தர்யன தோரெ கிணியெ
மந்தமாருத ஸோகெ மருளுகொண்டெனெ
என்ன மந்திரகெ கரெதாரெ கிணியெ

என்னும் பேச்சுக்களை கேட்டால், அவளின் இதயத்தின் தாபம் நமக்கு புரிகிறது.

தும்பிது பௌதிங்களு - ஈ வனதொளு
தும்பிது பௌதிங்களு || ப

தும்பிது பௌதிங்களே வனதொளகெல்ல
அம்புஜனாபனு பார காணக்க || அப

என்று தன் தோழிகளிடம் சொல்லிக் கொண்டு வருத்தப்படுகிறாள். ஒவ்வொரு நுடியிலும் ப்ரக்ருதியில் ஆன மாற்றங்களைக் குறித்து சொல்லி, தன் அந்தரங்க ரங்கன், வராமல் இருந்ததற்கு மருகி கவலைப்படுகிறாள்.

கோவிந்தனின் பிரிவினால் வருந்தும் கோபியர்கள் இவ்வாறு விதம்விதமாக வாழ்ந்து கொண்டிருந்தபோது, அப்போது மதுரையிலிருந்து உத்தவன் வருகிறார். அவரை சந்திக்க வந்த கோபியர்கள், அவரிடம் கூறியது மிகவும் வியப்படையச் செய்கிறது.

யாகெ ப்ருந்தாவன யாகெ கோகுல நமகெ
யாகெ பந்தெயோ உத்தவ || ப

யாகெ ஸ்னேஹத மாது லோகமோஹக தானு
ஆ குப்ஜெயனு கூடித உத்தவ || அப

என்று அவனுடன் சென்ற வாஸுதேவனைக் குறித்து ஆக்ஷேபணை செய்கின்றனர். 'லோகமோஹகனாத ஸ்ரீகிருஷ்ண ஆ குப்ஜெயனு கூடித உத்தவ' என்னும் பேச்சுக்களில்

அடங்கியிருக்கும் செய்தியை யாரால்தான் அர்த்தம் செய்து கொள்ள முடியும்?. கோவிந்தனை நம்பி வாழ்ந்த தமக்கு எத்தகைய துர்ஸ்திதி வந்தது என்று, உத்தவனை சுற்றி நின்றிருந்த ஒவ்வொரு கோபியும் சொல்லத் துவங்கினர். கடைசியில் அவர்கள் அனைவரும் ஒன்றாக சொல்லும் பேச்சுக்களை மட்டும் இங்கு பார்க்கலாம்.

த்வரிததிந்தலி போகி, தருணேர கோள்ஹேளி
பரமாடபேகெம்பெவோ
நெரெ நம்பிதவரன்னு பொரெவ ஸ்ரீகிருஷ்ணகீ
பரியெல்ல பேளி பாரோ - உத்தவ

இதே சந்தர்ப்பத்தை ஸ்ரீபாதராஜர், பாகவதத்தில் இருப்பதைப் போல, ப்ரமர கீதையின் மூலம் நிரூபணை செய்தால், ஸ்ரீவ்யாஸராஜர் கோபியரின் தம் மனதின் பிரச்னைகளை நேராகவே உத்தவனிடம் முறையிடுவதைப் போல பாடியிருக்கிறார்.

ஸ்ரீவ்யாஸராஜருக்கு ப்ருந்தாவனத்தின் அழகு, புகழ் ஆகியவை எப்படி மனதுக்கு தெரிந்திருந்தனவோ, அப்படியே அங்கிருந்த கோபியரின் சுக துக்கங்களும் அவருக்கு தெரிந்திருந்தது. ஆகையால், ஒரு கீர்த்தனையில் தமக்கு புனர்ஜென்மம் என்று இருந்தால், அது வ்ருந்தாவனத்தில் எந்த ரூபத்திலாவது ஆகட்டும் என்று பரமாத்மனிடம் ப்ரார்த்தனை செய்துகொள்கிறார்.

எந்திகாதரு ஒம்மெ கொடு கண்ட்ய ஹரியெ || ப

ப்ருந்தாவனபதி தயதிந்தலெனகெ ||அப

பலபாரகளிந்த தலெவாகி ஷுக பிக
கலகலதொளு நின்ன துதிஸி தும்பிகள
களரவதிந்த பாடி அப்ஸரரந்தெ பூ
மளெயகரெவ தருலதெய ஜன்மவனு ||

கொளல ஸ்ருதிய கேளி ஸுகத ஸம்ப்ரமதலி
ஹொலபுதப்பி தாவு அரெகண்ணு முச்சி
நளினாஸனதி மௌனகொண்டு பரமஹம்ஸ
குலதந்தெ த்யானிப ஹம்ஸ ஜன்மவனு ||

நகளெம்ப ஸந்தத பூர்ணசந்த்ரன்ன
அகளங்க நவசந்த்ரிகெயன்னு ஸவிது
ஸுகத ஸுக்கிகளல்லி ஸொக்கி யோகிகளந்தெ
அகிளவ மரெவ சகோர ஜன்மவனு ||

பவஜனய்யன கண்டு செல்விகெயனு
பாவிஸி நிடுகங்களிந்த தணிதுண்டு
கோவளேரந்தெ மனெமக்கள ஹிங்கி நின்ன
ஆவாக ஈக்ஷிஸுவ கோவ்கள ஜன்மவனு ||

தோள தண்டிகெ மாடி ஹரீலிய சாமரவ
மேலே எத்தித டஹவரெகொடெயிந்த
ஓலயிஸி நின்னனு ஒலிஸி முகுதரந்தெ
ஸாலோக்ய ஸுகவும்ப கோபர ஜன்மவனு ||
கொளல த்வனிய கேளி எதுருகொள்ளுத நின்ன

நளினனாபா அவதாரெந்து பொகளே
தளிகெ ஆரதியெத்தி லக்ஷ்மியந்தெ நின்ன
செலுவ ஸவிவந்த கோபேர ஜன்மவனு ||

இந்திரெயரஸ ப்ரம்ஹேந்த்ராதி வந்தித
எந்து மொஸர கடெயுத்தலி நின்ன
அந்தின ஸ்ருதியோ (லு) உப்பவடிப வ்ரஜ
திந்துமுகியர ஜன்மவ ஸிரிகிருஷ்ண ||

ப்ருந்தாவனத்தின் அழகு, சூழ்நிலைகள், கோவிந்தனின் ஆட்டம் பாட்டம், கோபியரின் சரஸ-விரஸங்கள், முரளியின் ராக தாளங்களை வர்ணிப்பதில் ஸ்ரீவ்யாஸராஜர் பாகவதத்தின் ப்ரபாவத்திற்கு ஆளாகியிருக்கலாம். ஆனால், ப்ருந்தாவனத்தின் அனைத்து ஸௌந்தர்யத்தை முழுமையாக வர்ணித்து தாம் அங்கு சேதனாசேதன வஸ்துக்களில் ஏதாவது ஒரு ரூபத்தை எடுத்து பிறக்க வேண்டும் என்னும் இந்த வேண்டுகோள் ஸ்ரீவ்யாஸராயரின் இதயத்தின் ஆழத்திலிருந்தே வந்திருக்க வேண்டும் என தோன்றுகிறது.

ஸ்ரீஸ்ரீபாதராஜரைப் போலவே ஸ்ரீவ்யாஸராஜரும் ப்ருந்தாவனத்தின் சூழ்நிலையையே விரும்பி மதுர பாவத்தை எப்படி ஒவ்வொரு பதத்திலும் விளக்கியிருக்கிறார் என்பதை இதுவரை பார்த்தோம். இதில் கோவிந்தனின் பாத்திரமே முக்கியமாக இருந்து, அவனை சுற்றிலும் கோபியரின் நடவடிக்கைகள் இருப்பதால், இதில் இருக்கும் ஷ்ருங்காரத்திற்கும் ஒரு அலௌகிக அழகு வந்து சேர்ந்திருப்பதை கவனிக்கலாம்.

ஸ்ரீவாதிராஜரின் கீர்த்தனைகளின் சமூஹத்தில் மதுரபாவம் என்பது ஒரு முக்கியமான இடத்தை பிடித்திருக்கிறது. ஒரு கோபி, தன் ரங்கனை காணாமல், தன் தோழியிடம் தன் ஆதங்கத்தை வெளிப்படும் சூழ்நிலையை அவர் இவ்வாறு வர்ணித்திருக்கிறார்.

ஸ்ரீ ரங்க பாரனே || ப
கரெதரில்லி பாரனே காந்தெ முகவ தோரனே ம
துர புரத அரஸனெ கூடி என்ன ரமிஸனெ || அப

முனிஸு மனதல்லிட்டனெ மோஹவன்னு பிட்டனெ
மனதி பலவ தொட்டனெ மனெகெ பாரதெ பிட்டனெ ||

எந்து நம்பி இத்தேனெ எந்து குருது மரெதனெ
பந்தவ்யாதகெ கலிதனெ காந்தேர கூடி மெரெதனெ ||

ஸோள ஸாஸிர கோபிஸஹித ஜலதலாடி போதனெ
ஸெளெது ஒப்பள ஒய்யனெ செலுவ ஹயவதனனெ ||

ஸ்ரீகிருஷ்ணனுடன் ஆடி, பாடி, குதித்து, கொண்டாடிய கோபி ஒருவள் அவன் இன்னொருத்தியுடன் சேர்ந்து மாயமான இந்த சந்தர்ப்பம் ஸ்ரீமத்பாகவதத்தில் வரும் ஒரு சம்பவத்தையே விளக்குகிறது. ஸ்ரீகிருஷ்ணனின் வேணு கானத்தினால் ஈர்க்கப்பட்ட கோபியர்கள், வீடு, மடம், மக்கள் என அனைத்தையும் விட்டு அவனுடன் சென்றனர். அந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை என்றிருக்க ஸ்ரீகிருஷ்ணனே அவர்களைப் பார்த்து, அவரவர் வீட்டுக்கு திரும்பச் செல்லுங்கள் என்று விதம்விதமாக புத்திமதிகளை சொல்கிறான். அந்த கோபியர்கள் அவனுடைய பேச்சினை கேட்காதிருக்க, அப்போது கோவிந்தன் திடீரென்று அங்கிருந்து மாயமானான். அப்போது அவர்கள் அனைவரும் கவலைப்பட்டு தம் ஆராத்ய தேவனை தேடிக் கொண்டு, காடு மேடுகளை சுற்றி வந்தனர். அப்போது அவருடைய கண்ணிற்கு

பரமாத்மனின் காலடித் தடங்கள் தென்பட்டன. அனைவரும் அந்த காலடித் தடங்களை பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கையில், அந்த கோவிந்தனின் பாதங்களுடன் இன்னொரு கோபியரின் பாதச் சுவடுகள் இருந்ததை பார்க்கின்றனர். அந்த ஒரு கோபியின் புண்ணியத்தை நினைத்த மாத்திரத்திலேயே, அவர்களின் இதயம் மேலும் துக்கம் கொண்டது. இந்த சூழ்நிலையின் நிரூபணை இவ்வாறு இருக்கிறது.

ஏவம் கிருஷ்ணம் ப்ருச்சமானா வ்ருந்தாவனலதாஸ்தரூன்
வ்யசக்ஷத வனோத்தேஷே பதானி பரமாத்மன: ||24
பதானி வ்யக்தமேதானி நந்தஸூனோர்மஹாத்மன:
லக்ஷ்யந்தே ஹி த்வஜாம்போஜவஜ்ராங்குஷயவாதிபி: ||25
தைஸ்தை: பதைஸ்தத்பதவீமன்விச்சந்த்யோsக்ர தோsபலா:
வத்வா: பதை: ஸுப்ருக்தானி விரோக்யாதா: ஸமப்ருவன் ||26
கன்யா: பதானி ஜைதானி யாதாயா நந்தஸூனுனா
அம்ஸஸ்யஸ்தப்ரகோஷ்டயா: கரேணோ: கரிணா யதா ||27
அனயாssராதிதோ நூனம் பகவான் ஹரிரேஷ்வர:
யன்னோ விஹாய கோவிந்த: ப்ரீதோ யாமனயத் ரஹ: ||28
***
தஸ்யா அமூனி ந: க்ஷோபம் குர்வத்யுச்சை: பதானி யத்
யைகாபஹ்ருத்ய கோபீனாம் ரஹோ புங்க்தேsச்யுதாதரம் ||30
(பாகவத 10ம் ஸ்கந்த, பூர்வார்த்த, 30ம் அத்தியாயம்)

ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறாக அழைத்துச் சென்றது, அவனுக்கு மிகவும் பிடித்தமான ராதையாகவே இருக்க வேண்டும் என்று வித்வாம்சர்கள் அபிப்ராயப்படுகின்றனர்.

ஸ்ரீவாதிராஜர் இயற்றிய இன்னொரு கிருதியிலும் விரக அக்னியில் வெந்து, கோபி தன் தோழிகளுடன் தன் வேதனையை சொல்லிக் கொள்ளும் நிலை இவ்வாறு இருக்கிறது.

எலெ ஸகியே போகு விட்டலன பளிகெ
தேகவன தாரெ என்ன மனெகெ || ப

என்று இந்த கிருதி தொடங்குகிறது. பிறகு சுற்றும்முற்றும் இருக்கும் ஸ்ருஷ்டியின் ஸௌந்தர்யம் அவளுடைய ஹ்ருதயத்தை எப்படி மயக்குகிறது என்னும் வேதனையை இந்தப் பாடல் அப்படியே நமக்கு காட்டுகிறது.

சந்த்ர உதிஸுதலி பந்த ரஞ்ஜிஸுதர
விந்த பான நடெதந்த
மந்தமாருத முந்தெ நிந்த ஆவ குஸும
கந்ததிந்தலென்ன கொந்த ||

கீர நுடியுதிதெ தீர கோகிலெய
ஸ்வர கர்ணகடோர
மார, பேக ஹரிபாரதிரெ கௌதி
க்ரூர என்ன கொல்லதிர ||

ஜீய ஸுஜனர ஸஹாய நிகமகுல
கேய நிர்தூத ஹேய
ப்ரிய ஹயவதனராய ஸகி என்ன
காயலின்னேனு உபாய ||

யதித்ரயர்கள் பாகவதத்தையே பின்பற்றி, எவ்வளவு மிகச்சிறந்த ஷ்ருங்கார ரஸங்கள் நிறைந்த கிருதிகளை இயற்றியிருக்கிறார்கள் என்பதை பார்த்தோம். இனி அடுத்து, ஹரிதாஸர்களும்கூட இந்த மதுர பாவத்தை எப்படி வெளிப்படுத்தினர் என்பதை சிறிது பார்க்கலாம்.

புரந்தரதாஸர் தமது மூத்தவர்களின் வழியிலேயே சென்று, இந்த விஷயத்தைக் குறித்து சில கிருதிகளை இயற்றியிருக்கிறார். ஆனால், அவருடைய கிருதிகளில், இரு கீர்த்தனைகளை மட்டும் இங்கு பார்ப்போம். ஒரு கீர்த்தனையில் அனைத்து ஹரிதாஸனும் தான் பரமாத்மனின் ப்ரதிபிம்ப பாவனையுடன் அவனை ஆராதிக்க வேண்டும் என்னும் குறிப்பு இருக்கிறது. ஸ்ரீவ்யாஸராஜர் தாம் பரமாத்மனின் தோழி என்று நினைத்த நிலையையே இந்த கிருதியும் வர்ணிக்கிறது.

முத்தயிதாரகிரபேகு முததிந்தலி ||ப
ஹத்துனூரு நாமதொடெய ஹரி நம்ம பதியெந்து ||அப

குருமத்வ ஷாஸ்த்ரவனு ஓதுவுதெ மாங்கல்ய
வைராக்யவெம்ப ஒப்புவ மூகுதி
தாரதம்ய ஞான தாயித்து முத்துஸர
கருணரஸவெம்பந்த கட்டாணி கட்டிகொண்டு ||

ஹரிகதெய கேளுவுது கிவிகெ முத்தின ஓலெ
நிருத ஸத்கர்மவு நிஜகாந்தியு
பரம பக்தர பாதரஜ ஹெரளு பங்கார
குருபகுதியெம்பந்த கந்த குங்கும தரிஸி ||

பொடவியொளு பரஹித்த பட்டாவளியனுட்டு
கொடுவ தர்மவெம்ப குபுஸ தொட்டு
பிடதெ என்னொடெய ஸ்ரீபுரந்தரவிட்டலன
த்ருடபகுதி எம்பந்த கடக பளெ இட்டுகொண்டு ||

இந்த க்ருதியை மேலோட்டமாக பார்த்தால், ஒரு பெண்ணிற்கு பொருந்துவதாக தெரிந்தாலும், அந்த விவரங்களை கூர்ந்து கவனித்தால், இது ஹரிதாஸர்களை குறித்தானது என்று புரிகிறது. நம்மில் குருமத்வ சாஸ்த்ரத்தின் அத்யயனத்தின் அதிகாரம் என்பது பெண்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு ஏற்றதான எவ்வித விதிகளும் விஷயங்களும் இங்கு குறிப்பிடப்படவில்லை. அதற்கு பதிலாக, பெண்களின் பல்வேறு லக்ஷணங்களை இங்கு உபமானமாக சொல்லியிருப்பதை கவனிக்கலாம்.

புரந்தரதாஸர் இயற்றியிருக்கும் ஸுளாதியில் உம்மத்தூரின் சென்ன கேசவனைக் குறித்து கொண்டாடும் ஸ்துதியில் வெளிப்படும் மதுர பாவம் மிகவும் அற்புதமானது. ஹரிபக்தையான ஒருத்தி உம்மத்தூரின் சென்ன கேசவனின் ஸமாகம சுகத்தை மிகவும் வியந்து சொல்லிக் கொள்கிறாள். (இங்கு சொல்லப்பட்டிருக்கும் உம்மத்தூர் என்பது, குண்டக்கள் - ரேணிகுண்டா ரெயில் மார்க்கத்தில் இருக்கும் கொண்டாபுரம் ரெயில் நிலையிலிருந்து 12 மைல் தூரத்தில் இருக்கிறது).

அச்யுத ஸுளித என்ன கண்ணமுந்தெ அவ்வ
கஸ்தூரிம்ருகதந்தெ கமகமிஸுத
அனந்த ஸுளித என்ன கண்ணமுந்தெ
திவாகர கிரணதந்ததி பெளபெளகுத்த
மாதவ ஸுளித என்ன கண்ணமுந்தெ அவ்வ

நகுத நலிது மேலுவரிதென்னனப்புத
ஏனெம்பெ ஏனெம்பெ ஏனெம்பெ அவ்வ
என்ன ஸுரெகொண்ட ஸெரெகொண்ட

***

ஸுளிதரெ ஸுங்கவ கொம்ப ஜாணராய
ஹரியல்லதாரு ஹேளெலெ அவ்வ
யஷோதெ ரங்கனல்லதெ கோபம்ம
கிருஷ்ணனல்லதெ அதாரு பேளெ
கிருஷ்ணனல்லதெ அதாருபேளெ
உம்பத்தூர சென்னய்ய புரந்தரவிட்டலா

ஹரிபக்தரான புரந்தரதாஸர், கோபி ஒருவளின் அந்தரங்கத்தின் வேதனையை இந்த ஸுளாதியில் மிகவும் அருமையாக வர்ணித்திருக்கிறார். அவள் தன் ஹ்ருதய அனுபவத்தை தன் தோழியிடம் சொல்லிக் கொள்ளும் நிலை, மிகவும் அற்புதமாக வந்திருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனின் விளையாட்டில் அவள் அனுபவிக்கும் மகிழ்ச்சியோ, அவன் தன்னை 'ஸுரெகொண்டா ஸெரெகொண்டா' (மயக்கினான், சிறை பிடித்தான்) என்று சொல்லியிருக்கும் பேச்சுக்களின் சுவையோ, வர்ணிப்பதற்கு அஸாத்தியமானதாகும். ஸ்ரீகிருஷ்ணன் அவளின் இஷ்டார்த்தத்தை எப்படி நிறைவேற்றினான் என்னும் விஷயமும்கூட மனதை மயக்குவதாக இருக்கிறது. அவன் 'ஸுளிதரெ ஸுங்கவ கொம்ப ஜாணராய' (நடந்தாலே வரி கேட்பான் இந்த அறிவாளி (cute/intelligent)) என்னும் கற்பனையும் அபூர்வமாக இருக்கிறது.

ஸ்ரீபாதராஜர் இயற்றியிருக்கும் வ்ருத்த நாமத்தின் (ஷ்ருங்கார பாரிஜாத) விஷயத்தையே எடுத்துக் கொண்டிருப்பதைப் போல, புரந்தரதாஸர் இயற்றியிருக்கும் இன்னொரு கீர்த்தனையோ கோபியரின் விரக பாவத்தை விதம்விதமாக விவரிக்கிறது. 'வாஸக்கெ யோக்யவல்ல கோகுலவின்னு பேஸராயிதல்ல' (கோகுலமானது இனி வசிப்பதற்கு யோக்யம் இல்லை, திருப்தியே இலை) என்னும் பல்லவியை படித்த உடனேயே கோபியரின் நிலை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பது புரிகிறது. இந்த மொத்த கீர்த்தனையில் அவனின் பிரிவின் வேதனைகளை சொல்கின்றனர். எந்த நுடியை பார்த்தாலும், அது கோபியரின் மன வேதனையை படம் பிடித்துக் காட்டுகிறது.

ரங்க மதுரெகெந்து அக்ரூரன ஸங்கட போதனந்தெ
அங்கஜனய்யன ஸங்கவில்லத மேலெ
ஹெங்கள ஜன்மவின்னேதகெ ஸுடலி

(கிருஷ்ணன் அக்ரூரனுடன் மதுரைக்கு புறப்பட்டுச் சென்றபின்
அந்த மன்மதனின் தந்தையின் ஸங்கம் இல்லாத பின்
நம் பெண்களின் பிறப்பு இனி எதற்கு? இது சுடப்பட்டு போகட்டும்)

என்னும் வரிகளில் கண்டுவரும் கோபியரின் வாழ்க்கையின் மேல் உள்ள வெறுப்பினை ஊகிக்கவும் சாத்தியம் இல்லை.

அச்யுதானந்தனன்னு நம்மவனெந்து
நெச்சிகொண்டித்தெவம்ம
மெச்சின பாலெயரிக்ஹுச்சு ஹிடிஸி க்ரூர
ஹெச்சின மாதனு கொச்சி போத மேலே

(அச்யுதானந்தன் நம்மவன் என்று
நினைத்து விரும்பிக் கொண்டிருந்தோம்
அவனை நினைத்த பெண்களுக்கு பைத்தியன் பிடித்து, அக்ரூரர்
கூறிய பேச்சுக்களை கேட்டுச் சென்ற பின்)

என்று கூறியதிலும் அவர்களின் கோபம், அதிருப்தி ஆகியவை தெரிகின்றன. அவனின் முரளி நாதத்தின் ஈர்ப்பு, அவனுடன் தாம் அடைந்த சுகம் மகிழ்ச்சிகள், தத்தம் கணவர்களை நிராகரித்து, அவனுடன் சுற்றியவாறு, கற்று, செய்த விஷயங்கள் அவர்களின் மனதை கலங்கச் செய்கின்றன.

கடைசி நுடியோ மேலும் நம் மனதை மயக்குகிறது.

பெரவுதின்னெந்து நாவு ஸ்ரீஹரி ஸங்க தொரெவுதின்னெந்திரம்ம,
கருணாகர நம்ம புரந்தரவிட்டலனு கரெதுகொள்ளதெ
நம்ம தொரெது ஹோர மேலெ

என்னும் நுடியில் அவர்களின் பெருமூச்சும், காத்திருப்புமே முக்கியமாக இருந்தாலும், அங்கும், கோபியர்கள் தமக்குப் பிடித்தவனை 'கருணாகர' என்று அழைத்திருப்பதைக் கண்டு, யாருக்குமே அவர்களைக் கண்டால் பச்சாதாபம் வராமல் இருக்காது.

கனகதாஸரின் கீர்த்தனைகளில், மதுரபாவம் என்பது மிகவும் குறைவு என்று சொல்லலாம்.

'தொரெ பேகனெ ஸகி தோர முன்னினஹார பாரவாகிதெ எனகெ'
'ஈரேளு லோகவ பொரெவ தயாநிதி பாரனேதகெ மனெகெ ஹே ஸகியே'

என்று தொடங்கும் கீர்த்தனையில் தெரியும் மதுர பாவத்தில் புதியதான விஷயம் எதுவும் இல்லை. பிறகு வரும் நுடிகளில், ஸ்ரீகிருஷ்ணன் செய்த பல்வேறு செயல்களை புகழ்ந்திருக்கின்றனர். இன்னொரு கீர்த்தனையில், ஸகி ஒருவள் தன் தோழியிடம் 'ரங்கனெந்தவனெந்தவ நெலெ தங்கி' 'ரங்கனெந்தவ அவனங்க திளியது ப்ரம்ஹாதிகளிகெ' என்று தன் கவலையிலும் அவனின் மகிமைகளையே நினைத்து, அவன் தசாவதாரம் எடுத்த சந்தர்ப்பங்களை கொண்டாடி 'நம்ம பிட்டாதிகேஷவராய காணக்கெ' என்று புலம்புகிறாள்.

விஜயதாஸரும்கூட மதுரபாவ நிரூபணையை மறக்கவில்லை. மதுரைக்கு செல்வதற்காக புறப்பட்டு நின்றிருந்த கிருஷ்ணனை தடுத்த கோபியர்கள் தம் துக்கத்தை காட்டிக் கொள்ளும் சந்தர்ப்பத்தையே தாஸர் எடுத்துக் கொண்டிருக்கிறார்.

நின்னனகலி போகலாரெவோ நீரஜாக்ஷ நின்ன ஸேரி ஸுகிஸபந்தெவோ,
மன்னிஸதெ மமதெயிந்த பின்ன நுடிகளாடி நமகெ ஹண்ண தோரி காளகூடவன்னு கொடுவரேனு கிருஷ்ண

என்று கோபியர்கள் முறையிடுவதில், அவருடைய கவலை எவ்வளவு என்பதை ஊகிக்க முடியும். தாம் அவனில் சரணாகதி அடைந்து, உற்றார் உறவினர்களை விட்டு வந்திருப்பதால், தம்மை விட்டுச் செல்வது சரியல்ல என்று அவனிடம் வாதிக்கிறார்கள். வெறும் ஐந்து நுடிகள் உள்ள இந்த கீர்த்தனையில் கோபியர்களின் ஹ்ருதய வேதனையை ஒவ்வொரு நுடியிலும் நாம் காணலாம்.

ஸ்ரீகோபாலதாஸரின் கீர்த்தனை ஒன்றில், ப்ரமர கீதையின் சாராம்சமே தெரிகிறது. மதுரையிலிருந்து வந்த உத்தவனிடம் கோபியர்கள், தம் சங்கடங்களை, பிரச்னைகளை விதம்விதமாக சொல்லிக் கொள்கின்றனர்.

நாளெ பருவெனெந்து ஹேளி மதுரெகெ போத
பஹள தினவாயிதல்லோ உத்தவ

என்று தொடங்கும் பல்லவியின் வரிகளில் அடங்கியிருக்கும் அந்த பெண்களின் கவலைகளை நம்மால் ஊகிக்க முடியும்.

தம்மை தாமே திட்டிக் கொள்ளும் அந்தப் பெண்களின் பேச்சின் நடையை பார்த்தால், யாருக்கும் அவர்கள் மேல் ஒரு பரிதாபமே ஏற்படும்.

பள்ளிவாஸிகளு நாவு, பரிபரி அலங்கரிஸி
ஒலிஸிகொம்புதனரியெவோ
கொல்லஸதியரு ஸதா கோரக்ஷரு மய்யி
ஹொலெ தொளெயலரியவோ

பல்லிதன ஸஹவாஸ மாட்யவன மஹிமெய
நெல்ல துளிஹிஸிகொண்டெவோ
சல்லெகங்களு சபலெயரு மதுரெ நாரியர
ஒலவிகெ நாவெதுரெனோ

என்னும் நுடியில், இந்த கோபியரின் வாழ்க்கையின் பாவனை மெச்சுமாறு இருக்கிறது. மற்ற நுடிகளிலும் ஸ்ரீகிருஷ்ணன் தம் அருகில் இருந்தபோது, அவனை மிகவும் உரிமையுடன் எப்படி கேலி, கொண்டாட்டங்களுடன் பேசி நடந்து கொண்டோம் என்பதை நினைத்துக் கொள்கின்றனர். அத்தகைய பரமாத்மன் தமக்கு எப்போதும் கிடைக்காத காலத்தில், தாம் எப்படி மோசம் போனோம் என்று தம் தலைவிதிக்கு தாமே திட்டிக் கொள்ளும் விதமும் நம் மனதை தொடுகிறது.

நிதிய பதிலித்தரு விதிஸுவுதனரியதெ
மதடெயராதெவோ
மதனனாடகெ மனவிக்கெ அவனிந்தொந்து
தத்வ திளியலில்லோ
சதுரெயரு நம்ம பிட்டு கதலனிவனெந்தெம்ப
மததி மோஸ ஹோதேவோ

இத்தகைய வலிகளிலும் அவர்களின் ஹ்ருதயத்தில் இருந்த நம்பிக்கையை, பாடலில் கடைசி வரியில் நாம் பார்க்கலாம். 'மதுரெயிந்தெம்ம தம்ம ஹ்ருதயதொளிப்பனெந்து சதுர பேளிஹனந்தலோ' என்று உத்தவனை கேட்கின்றனர். உத்தவனின் பதிலுக்காக காத்திராமல், தாம் செய்ததற்கு தாமே மறுபடி மறுகுகின்றனர்.

மதி தப்பிதெவோ நாவு ஸதியரெல்லொந்தாகி
ரதவ நிலிஸதெ ஹோதேவோ
ஹிதராரு நமகெ ஸாரதி நின்ன ஸஹாய
தொரெதரெ யதனவ மாள்பெவோ

பதவ தோரிஸோ நமகெ முந்தெம்ம செல்வ
ஸ்ரீபதியு பந்தொதகுவந்தெ
கதி யாரோ அவன்ஹொரெது கோபாலவிட்டல
அச்யுதன மஹிமெ காணெவோ

இந்த கடைசி நுடியின் துவக்க வரிகள், ஸ்ரீபாதராஜரின் வ்ருத்த நாமாவின் நினைவை கொண்டு வந்தாலும், பிறகு இந்த பெண்கள், உத்தவனை முறையிட்டு, அவன் தமக்கு ஸ்வாமியை

கொடுக்கவில்லை எனில், ப்ரியனை கொண்டு வர தாமே முயல்வோம் என்று சொல்வதன் வரிகள் மிகவும் புதிதாக இருக்கின்றன. ஸ்ரீகிருஷ்ணனை விட்டுப் பிரிந்து தவிக்கும் இந்த கோபியர்களின் ஹ்ருதயத்தை கோபாலதாஸர் மிகவும் அற்புதமாக இயற்றியிருக்கிறார்.

ஹரிதாஸ ஸாஹித்ய ப்ரபஞ்சத்தில் மதுர பாவத்தின் மேன்மையை யதிகளான ஸ்ரீபாதராஜர் மற்றும் ஸ்ரீவ்யாஸராஜர் எப்படி நம் இதயம் தொடுமாறு இயற்றினார்களோ, அதே போல இன்னொரு யதிகளான ஸ்ரீவ்யாஸ தத்வஜ்ஞ தீர்த்தரும் தம் சில கீர்த்தனைகளில் இந்த நிலையின் அனுபவத்தை மனம் தொடுமாறு இயற்றியிருக்கிறார். கோவிந்தனின் பிரிவினை தாங்க முடியாமல், மன்மதனின் பாணத்தை பொறுத்துக் கொள்ள முடியாமல், தன் தோழியிடம் தன் வேதனையை ஒரு கோபிகை சொல்லிக் கொள்ளும் விதம் இவ்வாறாக இருக்கிறது.

தோரெலெ ப்ராணகாந்தன, மார என்ன ஸம்
ஹாரமாடலு தண்டு தந்தனெ || ப

மந்தமாருதகளு சந்த்ரகிரணகளு
முந்தாகி பந்தொதகிதுவு

அந்தரங்கதி மனோப்ராந்திபடிஸுவ
ஸந்தனீகலே பந்திருவனெ

ப்ருங்ககளே ரணரங்கதி கூகுவ
ஸங்கதிகெ பெதரிதெனெ

ஷுகவேரி தனுவெனோள் விகஸிதஸுமபாண
முகதொளு குரியன்னெ நோடுவ

ஆவாகலு வாஸுதேவவிட்டலன பா
தாவெ கதியெந்திருவெனெ

இந்த கீர்த்தனையில் வாஸுதேவவிட்டலர், தமக்கு ப்ரியமானவரின் பிரிவை வர்ணிப்பதில், மாரனின் அம்பின் நிலையை நிரூபிக்கும் வரிகள் நன்றாக உள்ளன. ஒரு புறம் சந்திரனின் கிரணங்கள், மற்றொரு புறம் மன்மதனின் அம்புகள் தாக்கினால், விரகத்தில் இருக்கும் பெண்கள் எப்படிதான் இவற்றை பொறுத்துக் கொள்வார்கள்?. இந்த சமயத்தில், தேனீயின் ரீங்காரம் அவளுக்கு, போர்க்களத்தில் ஒலிக்கும் வாத்திய கோஷங்களைப் போல பயங்கரமாக தெரிகிறதாம். மன்மதன், தன் தேரில் ஏறி, பஞ்சபாணங்களை விட்டு, தன்னைப் பார்த்து வில்லினை குறி பார்த்து விட்டபோது, அவள் கலங்குகிறாள். இந்த மன்மதனின் தாபத்தின் நிவாரணைக்காக, அவளுக்குத் தெரிந்திருந்த பரிஹாரம் ஒன்றே ஒன்றுதான். வாஸுதேவ விட்டலனின் பாதங்களை நம்பி அமர்ந்திருப்பது.

இன்னொரு இவ்விதமான பாடலில், வாஸுதேவ விட்டலர், பரமாத்மனின் வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பெண்களின் இதய விரகத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்.

பாரோ பாரோ பாரோ ஹரி,
தோரோ தோரோ முகவ தோ3ரி

என்று புலம்பும் கோபியின் ஹ்ருதயத்தின் துயரத்தை தாஸர் மிகவும் அற்புதமாக வர்ணித்திருக்கிறார்.

தீரனே பஹு கம்பீரனெ கோரஸ
சோரனெ கோபீஜாரனெ ப்யாகனெ
வீராதிவீரனெ என்ன வாரெனோட நோடுவரெ
காருமாடதலெ மன ஸேரி ஸுகபடிஸலு

என்னும் அனுபல்லவியில் தெரியும் அவர்களின் கவலையும் அப்படியே அருமையாக இருக்கிறது. வாஸுதேவ விட்டலருக்கு, ப்ரக்ருதிக்கும், காதலுக்கும் இருக்கும் சம்பந்தத்தை விவரிப்பதில் மிகவும் விருப்பம். இந்த நுடியே அதற்கு சாக்ஷி.

ப்ருங்ககள்யாதகெ கூகிதுவோ அங்கஜஷரகளு ஸேரிதுவோ
ரங்கனெ, கருட துரங்கனெ, வித்ருதரதாங்கனெ ஸஜ்ஜன ஸங்கனெ ப்யாகனெ
மங்கள ரூபனெ பெளுதிங்களொளு நீனு பி
ள்ளங்கொளவி ஊதலு அனங்க என்ன பீடிஸிதி

என்னும் கோபிகையின் தாபம், தாங்க முடியாததாக இருக்கிறது.

ஸ்வாமியையே நம்பி, 'தேவாதிதேவனே என்ன காவனு நீனல்லதெ இன்யாவனு பூமியொளகெ' என்று அவனையே சரணடைகிறாள். இந்த கீர்த்தனையின் கடைசி நுடி, ஷ்ருங்காரத்தின் ஸாரத்தையே சொல்லியிருக்கிறார்.

ஈ ஸமயதி பரிபாலிபர்யாரோ வாஸுதேவவிட்டல நீ தோரோ
ஸ்ரீஷனெ, ஸுந்தர ஹாஸனெ, முனிமன வாஸனெ, ஷதரவி பாஸனெ, ப்யாகனெ
ஹாஸு மஞ்சதொளு ஹுவ்வின ஹாஸுகெயொளு மலகி
ப்யாஸரகொண்டெனு பரி ஹாஸமாடதெ ப்யாக

பாரோ பாரோ பாரோ ஹரி - என்று முறையிடுகிறாள். ஒரு புறம், தனக்கு ப்ரியமானவனை தழுதழுத்த குரலில் புகழ்கிறாள். இன்னொரு புறம், அவனின் சம்பந்தத்திற்காக கவலைப்படுகிறாள். 'ஹாஸுமஞ்சதொளு ஹுவின ஹாஸிகெயொளு மலகி' என்று அவனின் வருகையை எதிர்பார்த்து 'பேஸர கொண்டெனெம்ப' அவளின் பேச்சும் வராமல் போக, தனக்கு ஆகும், இந்த சிரிப்பை வரவழைக்கும் நிலையும், இந்த கீர்த்தனையின் விரஹ பாவத்திற்கு விஸேஷ அர்த்தத்தை தருகிறது.

இதுவரையிலான நிரூபணையில், ஹரிதாஸர்கள், ஹரிபக்தியின் ஹ்ருதயத்தை எப்படி நுழைந்து பார்த்திருக்கின்றனர் என்பதை பார்த்தோம். ஹரிபக்தையரில் சிறந்தவரும், கோபாலதாஸர் மற்றும் மந்த்ராலய ஸ்வாமிகளின் அருளுக்கும் பாத்திரரான ஹொளவனகட்டெ கிரியம்மாவின் பாடல்களில் இந்த மதுர பாவத்தைக் குறித்து சொல்லும் ஒரு கீர்த்தனையின் பால் நாம் பார்வையை இடுவது முக்கியம். மூத்த ஹரிதாஸர்களின் வரிகளையே அனுசரித்து, கிரியம்மா அவர்கள் தம் தோழியை அழைத்து, ஸ்ரீகிருஷ்ணனை அழைத்து வா என்று சொல்லிக் கொள்ளும் ஒரு சம்பவமாக இது தெரிகிறது.

இந்து நீ கரெது தாரெ பேகனெ போகி,
சென்ன ஸன்னெ மாடி பாரெ

என்று முறையிட்டு தன் மனதின் ஸந்தாபத்தை விதம்விதமாக வெளிப்படுத்துகிறார்.

அங்கஜனய்யன காணதெ நானு ஹிங்கிரலாரெனம்ம [உ
த்துங்க] குஜத பாலெ, ரங்கன கரெதாரெ
ரங்குமாணிகத ஹரளுங்குர கொடுவெனு

காலிகெ எரகுவெனெ கோமலமுகி
ஆலஸ்ய மாடதெ, நீலகுந்தள நீரெ
லோலன கரெதாரெ, வாலி மூகுதி கண்டமாலெய கொடுவெனெ

மரெதிரலாரெனம்ம பேகனெ போகி நெரெவந்தெ மாடு நீனு
எரவுதன ப்யாட மரெயலாரனெ நம்ம
கரவ பிடி[வ] ஹொளவனகட்டெ ரங்கய்யன

கிரியம்மாவின் இந்த கோரிக்கை, எந்த கோபிகையின் விருப்பத்திற்கும் குறைவானதல்ல.

ரங்கனின் பிரிவின் துயரத்தைக் கூட அவர் இவ்வளவே அற்புதமாக வெளிப்படுத்துகிறார்.

ஹ்யாங்கிரலின்னு ரங்கன பிட்டன்னு ஹ்யாங்கிரலின்னு
மங்களாத்மஜ ஹொளவனகட்டெ ரங்கன பிட்டு ஹ்யாங்கிரலின்னு ||ப

ஸீரிமனோஹாரி, ஷரணரிகந்த:கரணவ தோரி
த்வரிததி திவ்யரதகளன்னு நீடி பரம ஸம்ப்ரமதிந்த
இருவோன மரெது நா ஹ்யாங்கிரலின்னு

கிரிமனி மாடி ஷரணரிகந்த:கரணவ நீடி
ஸரஸதி மனோரதகள தோரி, பரம ஸம்ப்ரமதிந்த
இருவோன மரெது நா ஹ்யாங்கிரலின்னு

ஷரணு பொக்கிருவ கிரியம்மகா
துரதி ஒலிதிருவ ஸர, கிரிகெஜ்ஜெ தரிஸி குணிதிருவ
ஸீர் நாரஸிம்ஹன சரணவ மரெது நா ஹ்யாங்கிரலின்னு

இந்த விரக வேதனை எவ்வளவு கஷ்டமானதென்றால், அதைப் போலவே, அவள் அக்கம்பக்கத்தில் உள்ள மக்களின் பேச்சினை சகிக்க முடியாமல், ஹொளவனகட்டெ ரங்கனிடம் சரணாகதி அடைவதும் மிகவும் உணர்ச்சிகரமாக இருக்கிறது.

நம்பிதெ நீரஜனயன நிம்ம
தம்பிஸோ என்ன மனத தாபவன்னு || ப

என்று ஸ்வாமியிடம் தன் அசலமான நம்பிக்கையை முதலில் சொல்லிக் கொள்கிறார். பிறகு, ஒவ்வொரு நுடியிலும், தன் தப்பு, தவறுகளை பகவந்தனிடம் சொல்லிக் கொள்கிறார்.

பாலிஸய்ய என்ன நீ பரமபுருஷ நிம்ம
பஹள நம்பிதெ பந்து, பஹு தயாஸிந்து
[ஏண] நயனெ என்னனு கரபடிஸோ
எனகெ பந்த துரிதவ நீ தடெயோ
என்ன அபகுணவொள்ளொடெ அத மரெயோ
எந்தெந்திகு ஈ பிருதனு பொரெயோ

கரிராஜ வரதானி கந்தர்ப்பஜனக
பரிஹரிஸை என்ன துரிததோஷகள
துரிததல்லணவனு தூரவிரிஸோ
துர்னடெதெ துஸ்ஸங்கவ பிடிஸோ
துர்புத்திய கெல்லுவ பரி {ஸலி}ஸோ

தோஷரஹித நின்ன தாஸ[ரொ]ளிரொஸோ

தந்தெ தாயி தம்ம தனுவினொளிட்டென்ன
பந்து (னந்து?) படெதரெ நீ அது படெதெயா(?)
குந்து குஹகளு கூடிதுதெல்ல
ஒந்திஷ்டு வான்சல்யவு எனகில்ல
இந்திரெபதி பிடிஸோ எதிஜல்ல
மந்தரகிரிதர மதன கோபாலகிருஷ்ண

பாபஸம்ஹார நீ பாண்டுபரிபால
கோபவ்யாதகெ என்னொளு, கூடி நீ
நினிது கருணிஸதிரலெனகின்னாரோ
ஸா[கலி]ப்பரன்ன நீ தோரோ
வ்யாகுல ப்யாடெந்தபயவ நீடோ
என்னவகுணவுள்ளடெ அத மரெயோ
(எந்தெந்திகு ஈ பிருதனு பொரெயோ)

துஷ்ட நிக்ரஹ ஸ்ருஷ்டி பரிபால
மல்லர மடுஹித்யோ ஸ்வாமி
கஷ்டகொட்டலி என்னவரு மரெதெ
ஹெத்தவர ஹம்பல நா தொரெதெ
சித்தவாகி நின்னொளு நா பெரெதெ
ஹெளவனகட்டெ வெங்கடபாத ஸேரிதெ

ஹெளவனகட்டெ கிரியம்மன பாடல்களை சரியாக தொகுத்து, வெளியிட்டிருப்பதால், இங்கு உதாரணம் கொடுத்திருக்கும் கீர்த்தனைகளில் சில பிழைகள் கண்டு வருகின்றன. ஆனால், அவள் தான் கைபிடித்த நந்தகோபனுக்கு லோகாபிராமனாக வாழாமல், கணவனின் தாம்பத்ய ஜீவனுக்கு எதுவும் பிரச்னை ஆகாமல், வேறொரு பெண்ணை திருமணம் செய்து வைத்து, பின்னர் தன் முழு வாழ்க்கையையும் ஹெளவனகட்டெ ரங்கனின் பாதாரவிந்தங்களில் கழித்தது, ஒரு அற்புதமே ஆகும். இவள் ஆண்டாளைப் போல பரமாத்மனையே கணவனாக நினைத்து ஸ்ரீரங்கநாதனை அடைந்தவள் அல்ல. மீராபாய், அக்க மஹாதேவி ஆகியோரைப் போல, திருமணம் செய்த கணவனை நிராகரித்து, புரட்சிகரமாக நடந்து கொண்ட பக்தை அல்ல. தானாக தான், தன் கணவனின் நலனை விரும்பி, தன் மனதின் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்ட பெண். இவளது மிகவும் ஸௌம்யமான வாழ்க்கை. ஆகையால், இவளின் பேச்சுக்களில் தன் இஷ்ட தேவதைக்காக தன்னையே அர்ப்பித்துக் கொண்ட ஸமர்ப்பண பாவம் இருக்கிறது. ஸம்ஸாரத்தை துறந்து, ஸ்வாமியை நம்பி வந்திருக்கும் அவளின் கோரிக்கையில் பக்தி பாவம் நிரம்பி வழிகிறது. இவரை யசோதையின் வம்சம் என்றும், ராதையின் அம்சம் என்றும் சொல்வதுண்டு. ஆனால், இவரின் கீர்த்தனைகளில் வாத்ஸல்யத்தின் பாவமோ, மதுர பாவமோ, ஆழமாக வருவதில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

இதுவரை நாம் பார்த்த, ஹரிதாஸரின் மதுரபாவத்தின் கீர்த்தனைகளில் கோபியரின் விரஹபாவனையே முக்கியமாக தெரிகிறது. பாகவதத்தில் நிரூபிதமாக இருக்கும் வேணுகான ப்ரஸங்கத்தை நம் ஹரிதாஸர்கள் பயன்படுத்தியிருந்தாலும், அங்கு தென்படும் ஆழம் இங்கு தென்படுவதில்லை. குழலின் கானத்தை கேட்ட உடனேயே கோபியரில் ஆகும் மாற்றங்களை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், ஸ்ரீகிருஷ்ணன், கோபியர்களை பரிட்சை செய்ய வேண்டும் என்றே அவர்கள் பார்வையிலிருந்து மறைந்துவிட, அப்போது கோபியர்களுக்கு ஆகும் தாபத்தையோ, அவர்கள் அக்கம்பக்கத்தில் இருக்கும் சேதன அசேதன வஸ்துக்களுடன் பேசியவாறு, வ்ருந்தாவனத்தில் அலைந்தாடும் காட்சிகளையோ, நம் ஹரிதாஸர்கள்

கைவிட்டிருப்பது ஒரு குறையே ஆகும். ஸ்ரீகிருஷ்ணனின் பிரிவிலேயே கவலைப்பட்டிருந்த அந்த பெண்கள், தாம் கிருஷ்ணாத்மகரே ஆகி, பரஸ்பரமாக பேசிக்கொள்ளும் வார்த்தைகளும், இந்த ரசனைகளில் எங்கும் காணப்படவைல்லை.

இத்யுன்மத்தவசோ கோப்ய: க்ருஷ்ணன்வேஷணகாதராஹ லீலா பகவத ஸ்தாஸ்தாஹ்யனுசக்ருஸ்ததாத்மிகா: ||
(பாகவத 10-30-14) என்று துவங்கி, 10 ஸ்லோகங்கள் வரை, சொல்லப்பட்டிருக்கும் வர்ணனை இதயத்தை தொடுவதாக இருக்கிறது. இந்த அத்யாயத்தின் கடைசியில் இன்னொரு முறை, கவி:

தன்மனஸ்காஸ்ததாலா பாஸ்தத்விசேஷ்டாஸ்ததாத்மிகா:
தத்குணானேவ காயந்த்யோ நாத்மாகாராணி ஸஸ்மரு:
புன: புலினமாகத்ய காலிந்த்யா: கிருஷ்ணபாவனா:
ஸமவேதா ஜகு: கிருஷ்ணம் ததாகமனகாங்க்ஷிதா: ||
(பாகவத 10-30-44)

என்று, அந்த கோபியரின் தாதத்ம்யத்தை (கிருஷ்ணன் மேல் இருந்ததான ஈர்ப்பு) வர்ணிப்பதில், நம் ஹரிதாஸர்களின் கவனம் ஏன் செல்லவில்லை என்று தெரியவில்லை. இதே சந்தர்ப்பத்தில் வரும் 'கோபிகாகீத' யை ப்ரஸன்ன வெங்கடதாஸர் இயற்றியிருக்கும் பாகவதத்தின் பூர்வார்த்தத்தில் விளக்கியிருப்பதை நாம் பார்க்கலாம். அதன் பிறகு, ஸ்ரீகிருஷ்ணன் அந்த கோபியருக்கு தரிசனம் அளிக்க, அவர்கள் அனைவரும் திருப்தி அடைந்து, மிகவும் உரிமையுடன் நடந்து கொண்ட விவரணை நம் மனதை தொடுவதாக இருக்கிறது. பிறகு, இந்த ஸ்கந்தத்தின் 33ம் அத்யாயத்தில் தீர்க்கமாக வர்ணிக்கப்பட்டிருக்கும் ராஸக்ரீடையானது, மதுர பாவத்திற்கு முகுடமாக இருக்கிறது. தேவானுதேவதைகளும் தம் மனைவியருடன் ஆகாயத்தில் வந்து நின்று பார்த்து ஆடும் இந்த ராஸக்ரீடை, பெயருக்கு ஏற்றாற்போல், மிகவும் ரஸமாக இருக்கிறது. இந்த பல்வேறு அம்சங்களை நம் ஹரிதாஸர்கள், அதில் ஷ்ருங்கார ரஸம் மிகவும் அதிகமாக இருப்பதைக் கண்டு அதனை பாடாமல் விட்டிருக்கலாம். ப்ரஸன்ன வெங்கடதாஸரின் பாகவதத்தில் இதன் ஒரு சுருக்கம் மட்டும் இருக்கிறது.
ஹரிதாஸ ஸாஹித்யம் இங்கு வளர்ந்து வந்த வேளையில், வட இந்தியாவில் வித்யாபதி, சைதன்ய ஆகியோர்களால் 'ராதா கிருஷ்ணரின் சரித்திரம்' பரப்பப்பட்டது. ஆனால், நம் ஹரிதாஸர்களின் கவனம் அந்தப் பக்கம் செல்லவில்லை. ஆனாலும், கனகதாஸர்,

யாதவராய ப்ருந்தாவனதொளு வேணுனாதவ மாடுதிரெ
ராதெ முந்தாத கோபியரெல்ல மதுஸூதன நிம்மனு ஸேவெஸுதிரெ

என்று துவங்கி, ஸ்ரீகிருஷ்ணனின் குழலின் கானத்தின் சிறப்பினை வர்ணிப்பதில் ராதையின் பெயரை தெளிவாக சொல்லியிருப்பதை, மேலும் விஜயதாஸரும் 'காதனு வத்ஸவ ஹரி காதனா வேதவேத்ய ஸாதுவினுத ராதிகாரமண கிருஷ்ண' என்று ஸ்ரீகிருஷ்ணன் பசுக்களை காக்கும் சந்தர்ப்பத்தை வர்ணிப்பதில் ராதையின் பெயரை சொல்லியிருப்பதையும் இப்போதே பார்த்தோம். பாகவதத்தில் இருக்கும் ஷ்ருங்கார ரஸபூர்ணமான சந்தர்ப்பங்களின் பக்கம் போகாத ஹரிதாஸர்கள், ராதா-கிருஷ்ணரின் காதல் / திருமணம் ஆகியவற்றின் பக்கமும் போகாதது சரியாகவே படுகிறது.

எப்படியிருந்தாலும், ஹரிதாஸர்கள், ஸ்ரீகிருஷ்ணனின் ஸரஸம் மற்றும் குறும்புகளை வர்ணிப்பதில் சில ஷ்ருங்கார ரஸங்களைக் கொண்ட சில கீர்த்தனைகள் கண்டு வருகின்றன. ரங்கவிட்டல அங்கிதத்தில் இருக்கும் (சில இடங்களில் இது புரந்தரவிட்டலா என்னும் அங்கிதத்திலும் காணப்படுகிறது) இந்த கீழ்க்கண்ட கீர்த்தனை கவனிக்கத்தக்கது.

ஸத்து மாடலு பேடவோ, நின்ன காலிகெ

பித்து நா பேடிகொம்பெ || ப

நித்தெகெய்யுவரெல்ல எத்தரெ நீனு பந்
தித்தத்து கண்டரேனெம்புவரோ ரங்கா || அப

பளெ குல்லுகென்னதேனோ - கைய பிடிது
எளெயதிரோ ஸும்மனெ
மொலெகள மேலின ஸெரகனெளெயலு கொ
ரள பதகங்களு த்வனிகெய்யுவவோ ரங்கா || 1

நிருகெய பிடியதிரோ - காஞ்சிய தாம
கிருகண்டெ த்வனிகெய்யதெ
கிருதுடிகள நீனு ஸவிது சப்பரிஸலு
தரவல்ல, கண்ட மத்ஸரவ தாளுவனல்ல || 2

நாட மாதுகளேதகோ - ஸங்கீதவ
பாடுவ ஸமயவேனோ
காடிகார ஸ்ரீரங்கவிட்டலனெ
பாடு பந்தகளொடகூடுவ ஸமயதி || 3

கோபிகை ஒருவள், ஸ்ரீகிருஷ்ணனுடன் தன்னுடைய மனதின் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளும் ஸந்தர்ப்பத்தை தாஸர், நம் மனதைத் தொடுமாறு இந்த கீர்த்தனையில் வர்ணித்துள்ளார்.

ஸ்ரீகிருஷ்ணன் ஒரு இடையர் பெண்ணை வைத்து, அவளுடன் ஆடிப்பாடும் சந்தர்ப்பத்தை குறித்தான, புரந்தரதாஸரின் கீர்த்தனைகளில் சில உள்ளன. அவற்றில் ஒன்றினை இங்கு பார்க்கலாம்.

ஹாலு உக்கிதோ ரங்க ஹாதிய பிடு || ப
ஹாலு பேகேனோ ரங்க ஸெரக பிடோ || அப

கரவ பிடிதரென்னனெளரஸ முத்தின
ஸரகளு ஹிரிதாவு முட்டுதிரோ ரங்க
பரதி முத்து கொடுவரேனோ அத்தத்த
ஸரியோ நம்மவரு கண்டாரு கிருஷ்ண ||1

புருஷனுள்ளவளு நா, புருஷரு கேள்யாரு
குருது கண்டரெ கொலெய கொந்தாரு
ஸரஸவாடலு பேட ஸடிலோவு முடி ஹுவ்வு
ஸுரத பேகாதரெ பருவெ வனதொளகெ ||2

தட்டனெ துடிய சும்பிஸுவரேனோ நீனு
ரட்டு மாடதிரு ராஜ்யதொளகெ
குட்டினிந்தலி தவகதி என்ன கொடோ
அட்டஹாஸதி மெரெவ புரந்தரவிட்டல ||3

இத்தகைய வகையான பாடல்களை நம்மில் 'ஜாவளி' என்று அழைப்பதுண்டு. இவற்றை விஸேஷமாக நர்த்தனத்திற்கு பயன்படுத்துபவர்கள் உண்டு. இத்தகைய கிருதிகளில் ப்ரதான நாயகம், பரமாத்மனே ஆகியிருப்பதால், இவை ரசிகர்களுக்கு மிகவும் பிடித்தமானதாக

இருக்கும். இந்த கோணத்தில் சிந்தித்தால், இந்த வகையான கீர்த்தனைகளை ஹரிதாஸர்கள் வெறும் இதில் வெளிப்படும் மதுரபாவத்தின் காரணத்தினாலேயே இயற்றியிருக்கலாம் என்று நினைக்க வேண்டும்.

ஹரிதாஸர்கள் வர்ணித்திருக்கும் மொத்த மதுரபாவத்தின் ப்ரபஞ்சத்தைப் பார்த்தால், அங்கு ஸ்ரீகிருஷ்ணன் மற்றும் கோபியரின் பாத்திரங்களே முக்கியமானவை. ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுடன் செய்து காட்டிய விளையாட்டுகள், குறும்புகள் ஆகியவற்றை நேரடியாக நிரூபிப்பதைவிட, அவன் மதுராவிற்கு சென்ற பிறகு, கோபியர்கள் தமக்கு உண்டான விரக பாவத்தை அனுபவித்த நிலையின் மேல் அவர்களின் கவனம் சென்றிருக்கிறது. இந்த ஷ்ருங்கார ப்ரஸங்கத்தை தங்கள் கீர்த்தனைகள் மூலமாக வெளிக் கொண்டு வந்ததில், அவர்கள் அபாரமான புகழினை பெற்றிருக்கிறார்கள்.

***

6. ஸதாசார ஸம்ஹிதெ

எந்த தத்வஞானமாக இருந்தாலும், தன்னுடைய ஆத்யாத்மிக நோக்கத்தை நிறுவுவதுடன், தன்னை பின்பற்றுபவர்கள் கடைபிடிக்க வேண்டிய விதி, விதிவிலக்குகளையும் நிறுவுகிறது. அதுமட்டும் அல்லாமல், அனைத்து மானவ சமுதாயமே நற்சாஸ்திரங்களால் வளர்ந்து, வாழ்வதற்கான ஒரு சில நியமங்களையும் சொல்கிறது. மத்வ மதத்தின் அங்கமான ஹரிதாஸ ஸாஹித்யமும் இந்த நியமங்களிலிருந்து தப்பவில்லை.

அந்த ஸாஹித்யத்தில், ஹரிதாஸர்கள் மத்வ மதத்தவர் பின்பற்றவேண்டிய பற்பல விதிகளை சொல்லியிருக்கின்றனர். அவற்றுடனேயே அனைத்து மானவர்களின் மேன்மைக்காகவும் வழிகாட்டியாக இருக்கக்கூடிய பல்வேறு நடைமுறைகளை, அவர்களுக்கு பிடித்தமான வழியில் போதிக்கின்றனர்.

ஸ்ரீமதாசார்யர் தமது 'ஸதாசாரஸ்ம்ருதி' என்னும் கிரந்தத்தில், அனைத்து த்வைதியும் தவறாமல் கடைபிடிக்க வேண்டிய அனேக சங்கதிகளை ஸ்தோத்திர வடிவில் சொல்லியிருக்கிறார். ஹரிதாஸர்களும் ஆசார்யரின் வாக்கினையே முன்னெடுத்திருக்கின்றனர். அது மட்டுமல்லாமல், தமது ஸ்வானுபாவத்திற்கு மதிப்பு கொடுத்த ஹரிதாஸர்கள், பற்பல விஷயங்களை தங்களின் வாழ்க்கையின் அனுபவத்திலிருந்தே அறிந்து சொல்லியிருக்கின்றனர். தமது மதத்தில் இருக்கும் ஆசார விசாரங்களை நன்கு பரிசீலித்து, அதன் பின் அனைவருக்குமான செய்தி என்ன என்பதை இங்கு சொல்ல முற்படுகிறோம்.

அனைத்து ஹரிதாஸர்களும் தங்கள் மத்வ மத நிஷ்டைகளை ஏதாவது ஒரு வழியில் சொல்லியே இருக்கின்றனர்.

மருதம்ஷர மத பிடியதெ இஹபரதல்லி ஸுகவில்லவந்தெ
ஸாரமத்வஷாஸ்த்ரவோததெ குரு தாரதம்யவக்ஞான புட்டதந்தெ
ஸ்ரீரங்க விட்டலன பஜிஸதெ முந்தெ பரமகதி தொரகொள்ளதந்தெ
என்று ஸ்ரீபாதராஜர் சிறிது ஆறுதலான வார்த்தைகளில் கூறினால், விஜயதாஸர்,

மத்வராயர கருண படெயதவ
தரெயொளகெ இத்தரேனு இல்லதித்தரேனு?
மத்வமதவே மதவு ஸகல ஸ்ருதி ஸம்மதவு
மத்வராயர த்யான அம்ருதபான

மத்வராயர லீலெ நவரதுனத மாலே
மத்வராயர ஸ்மரணெ குலகோடி உத்தார

என்று ஆணித்தரமாக சபதம் செய்து சொல்கிறார்.

அந்தந்த மதத்தவர்க்கு அவரவர்களின் மதத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை இருப்பது சகஜமானதே. ஶ்ரீவியாஸராயர், 'ஜனும ஜனுமதல்லி கொடு கண்ட்ய ஹரியே' என்று வேண்டுகோள் விடுத்து, பிறகு

மெரெவ ஊர்த்வ புண்ட்ர எரடாரு நாமவு
கொரதொளு துலஸிய வனமாலெயு
மெரெவ ஷங்கசக்ர புஜதொளொப்புத
நிம்ம ஸ்மரிஸுத்த ஹிக்குவ வைஷ்ணவ ஜன்மவ

என்று தம் மதத்தின் விதிகளைப் பற்றி தமக்கு இருக்கும் அபிமானத்தை வெளிப்படுத்துகிறார். இந்த யதிவரேண்யரின் மற்றும் ஹரிதாஸரின் பேச்சுக்களைக் கண்டால்,

ந மாதவ ஸமோ தேவோ ந ச மத்வ ஸமோ குரு: |
ந தத்வாக்ய ஸமம் ஷாஸ்த்ரம் ந ச தஸ்ய ஸம: புமான் ||

பிரம்மாந்தா குரவ: ஸாக்ஷாத் இஷ்டம் தெய்வம் ஸ்ரிய: பதி: |
ஆசார்யா: ஶ்ரீமதாசார்ய: ஸந்து மே ஜன்ம ஜன்மனி ||

என்னும் கில-வாயுஸ்துதியின் சம்ஸ்கிருத ஸ்லோகங்களின் நினைவு வராமல் இருக்காது.

ஒவ்வொரு மதத்தவர்களுக்கும் தமதேயான விதி விதிவிலக்குகள் இருக்கின்றன. வைஷ்ணவ மதத்தின் விதிகளை நன்கு அறிந்திருந்த ஶ்ரீபாதராயர், மிகுந்த வினயத்துடன், தம்மை தாமே சோதித்துக் கொள்ளும் விதத்தில், இந்த மதத்தின் லட்சணங்கள் அனைத்தையும் மிகவும் சுவாரஸ்யமாக வெளிப்படுத்தினார்.

'ஸும்மனே வைஷ்ணவனெம்பிரி பரபொம்ம சுக்ஞானவரியத மனுஜன' என்று மக்கள் தம்மைத் தாமே திட்டிக் கொள்வதைப்போல சொல்லத் துவங்கினார்.

முகவ தொளெது நாமவனிட்டினல்லவெ ஸுகதீர்த்த ஷாஸ்த்ரவனோதிதேனே?
ஸுகக்கெ ஸ்ருங்காரக்கெ மாலெ ஹாகிதேனல்லதெ பகுதிரஸதல்லி முளுகிதெனேனய்ய?
நரோத்தமரிகதிக கந்தர்வரிகதிக ஸுரேந்த்ரகதிக ஹரகதிக
விரிஞ்சிகதித, ஸிரிகதிக, ஹரிஸர்வோத்தமனெந்து தில்லிதேனேனய்ய?

என்று மத்வ மதத்தை பின்பற்றுபவர்களின் முக்கிய லட்சணங்களை அறிந்து சொல்கிறார். யதிவரேண்யரான ஶ்ரீபாதராயர், மிகவும் கடினமான அனுஸந்தான பூர்வகமான செயல்களை பின்பற்றியிருப்பதால், இவ்விதமான விஷயங்களில் நம் மனம் ஈர்க்கப்படுவதோடு மட்டுமல்லாமல், இவை எவ்வளவு கஷ்டமான விஷயங்கள் என்றும் நம்மை சிந்திக்கத் தூண்டுகிறது.

ஶ்ரீவாதிராஜரோ, இந்த விஷயத்தை விளக்குவதில் நேரடியாகவே ஈடுபட்டிருக்கிறார். 'தினகளனு களெவ ஜனரெ ஸுஜனரு, வனஜனாபன தாஸர ஸமாகமதிந்த' என்று பல்லவியைப் பாடி, பிறகு ஒன்பது நுடிகளில் மத்வ மதத்தை சேர்ந்தவன் ஒருவன், காலையிலிருந்து இரவு வரை எப்படி தன் செயல்களை செய்யவேண்டும் என்பதை சாஸ்திரோக்தமாக சொல்லியிருக்கிறார்.

அருணோதயலெத்து ஆசமன க்ருதியிந்த பரிசுத்தராகி

இஹபரகளிந்த எரடு வித ஸுகவீவ குருமத்வமுனிவரன
பரம மதவிடிது ஹரிகதாம்ருத ஸவிது

என்று ஸ்னானம் செய்து, சங்கல்பத்துடன் சந்தியா காயத்ரி குருமந்திர ஜபம் செய்து, பரமாத்மன் அங்க்ரிகளை தியானம் செய்து, அத்யயன பாடங்களால் தம் வாழ்க்கையை பயனுள்ளதாக்கிக் கொள்ளவேண்டும் என்று உபதேசிக்கிறார்.

ஶ்ரீமதாசார்யர் தன் தந்த்ரஸாரத்தில், சொல்லியிருக்கும் விதத்தில் பரமாத்மனை பூஜித்து, ஶ்ரீஹரிக்கு நைவேத்தியாதிகளை அர்ப்பித்து, வைஷ்வதேவ, பலிஹரண, அதிதி பூஜைகளை செய்து தன்யர்கள் ஆகவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

ஸாயான்ஹதல்லி ஸந்த்யான காயத்ரி ஜப
ஶ்ரீயரஸனங்க்ரி ஸேவெயனு மாடி
வாயுஸகனொளகாஹுதியனித்து
லக்ஷ்மி நாராயண குணகளனு பொகளுதலி

ஶ்ரீஹரி நமக்குக் கொடுத்ததை வைத்துக்கொண்டு திருப்திப்பட வேண்டும் என்கிறார். இறுதியில்:

ஈ விததி அனுதினவாசரிஸி ராத்ரியலொந்து ஜாவதலி
தோஷதிந்த நித்ரெகெய்து ஜாவ ஜாவகெ எத்து நெரெஹொரெயு
கேள்வந்தெ பாவனசரித்ரெ ஹயவதனன நெனெது

வாழவேண்டுமென்று போதிக்கிறார். ஶ்ரீவாதிராஜரின் இந்த கீர்த்தனையை மனனம் செய்தால், ஶ்ரீமத்வாசார்யரின் சதாசாரஸ்ம்ருதியில் எந்தெந்த நீதி நியமங்களை சொல்லியிருக்கிறாரோ அவை அனைத்தையும் இந்த கிருதியில் அடக்கியிருப்பதை கண்கூடாகப் பார்க்கலாம்.

ஸ்ம்ருத்வா விஷ்ணும் ஸமுத்தாய க்ருதஷௌசோ யதா விதி
தௌததந்த: ஸமாசம்ய ஸ்னானம் குர்யாத்விதானத: ||
(சதாசார ஸ்ம்ருதி #2)

இந்த ஸ்லோகத்தில் ஶ்ரீமத்வாசார்யர் சொல்லியிருப்பதை, அதே ரீதியிலேயே ஶ்ரீவாதிராஜர், காலையில் எழுந்து நிஷ்டாவந்தன் செய்யவேண்டிய கர்மங்களை சொல்லியிருக்கிறார். ஶ்ரீவாதிராஜர், ஆசார்யரின் பெயரை நினைக்க வேண்டும் என்றால், ஆசார்யர், ஶ்ரீஹரியின் பெயரை நினைக்க வேண்டும் என்கிறார்.

'அர்க்கமண்டலகம் விஷ்ணும் த்யாத்வைவ த்ரிப்ரதீம் ஜபேத்' என்னும் ஆசார்யரின் வாக்கிற்கும் 'பானுநாமகனாத பரமாத்ம னங்க்ரியனு த்யானவனு மாடி' என்னும் ஶ்ரீவாதிராஜரின் வாக்கிற்கும் இருக்கும் ஒற்றுமையை பார்க்கலாம்.

'ஸம்பூஜயேத்விஷ்ணும் வேத தந்த்ரோக்த மார்க்கத:' என்று ஆசார்யர் கூறினால், அதையே ஶ்ரீவாதிராஜர் தம் கீர்த்தனையில் 'ஸாவதானதி தந்த்ரஸாரோக்த விதியிந்த தேவபூஜெய மாடி' என்று அப்படியே மொழிபெயர்த்து சொல்லியிருக்கிறார்.

'வைஷ்வதேவம் பலிஞ்சைவ குர்யான்னித்யம் ததர்ப்பணம்' & 'புக்தசேஷம் பகவதோ ப்ருத்யதி புரஸ்ஸர:' என்னும் மூல வாக்கியங்களையே யதிவர்யர் 'வைஷ்வதேவ பலிஹரண அதிதிபூஜெகளிந்த' சுஜனர்கள் ஸதாசாரத்தில் ஈடுபட வேண்டும் என்கிறார்.

இந்த நித்ய கர்மானுஷ்டாங்களைக் குறித்து புரந்தரதாஸர் இயற்றியிருக்கும் சில உகாபோகங்கள் மிகத் தெளிவாக உள்ளன.

ஹரே கோவிந்த எந்தேளு ஹத்தவதாரவ பேளு
மூடலதெஸெகெ நடெ கோ விப்ர துளஸிகெரகு
பந்து நைருதியல்லி த்ருணவிட்டு ஷெளச மாடு
குரு பரம்பரதல்லி புரந்தரவிட்டலனென்னு

அபோஷனத்தை அவர் விளக்கும் விதம்:

அகள கிவிகெணெ அங்கய்ய ஹள்ளவிரபேகு
உத்து முணுகுவந்தெ இரபேகு நீரு
ஸாகாகதெ ஹெச்சு கடிமெ ஸாகெந்து குடிதரெ அவனு
ஸாகார புரந்தரவிட்டல மத்ய ஸம மாடுவ

தவறுகளை போக்கிக் கொள்வதற்கு ஒரு உகாபோகம்:

அபராத ஹத்தக்கெ அபிஷேக உதக, அபராத நூரக்கெ க்ஷீர ஹரிகெ
அபராத ஸஹஸ்ரக்கெ மொஸரு காணோ
அபராத லட்சக்கெ ஜேனு க்ருத, அபராத ஹத்து லட்சக்கெ பலு பரி க்ஷீர
அபராத க்ஷளகெ அச்ச தெங்கின ஹாலு அபராத கோடிகெ ஸ்வச்ச ஜல
உபமெரஹித நம்ம புரந்தரவிட்டலகெ ஷாந்தமனவய்ய ஷாந்தவாக்ய

மாத்வரில் ஏகாதசி உபவாசம் மிகவும் பிரபலமாக இருக்கிறது. ஸ்ரீமத்வாசார்யர் தம் 'கிருஷ்ணாம்ருத மஹார்ணவ' கிரந்தத்தில் பல ஸ்தோத்திரங்களில் ஏகாதசி விதியைப் பற்றி சொல்லியிருக்கிறார்.

ந காஷி ந கயா கங்கா ந வேணி ந ச கௌதமி
ந சாபி கௌரவம் க்ஷேத்ரம் துல்யம் பூப ஹரேர்தினாத் || 166

காசி, கயா, கங்கா, நர்மதா, கோதாவரி குருக்ஷேத்ர இவை அனைத்தும் ஏகாதசி விரதத்திற்கு சமானம் ஆவதில்லை -- என்றதில் இந்த விரதத்தின் மகிமையை நம்மால் ஊகிக்க முடிகிறது. இத்தகைய ஏகாதசி விரதம் மற்றும் அதன் ஆசரணைகளைப் பற்றி ஆசார்யர் எவ்வளவு ஸ்லோகங்களில் விளக்கியிருக்கிறாரோ, அவ்வளவே விரிவாக, அதனை பின்பற்றாவிடில் வரும் அபராதங்களைக் குறித்தும் தெளிவாக சொல்லியிருக்கிறார்.

ப்ருதிவ்யாம் யானி பாபானி ப்ரம்மஹத்யாதிகானி ச
அன்னமாஸ்ரித்ய திஷ்டந்தி ஸம்ப்ராப்தே ஹரிவாஸரே ||
(கிரு.மஹா. 176)

ஏகாதசியன்று, பிரம்ம ஹத்யாதி அனைத்து பாவங்களும் அன்னத்தில் இருக்கிறது என்ற ஒரே ஒரு ஸ்லோகம், இந்த ஹரிதினத்தில் அதனை மீறினால் நமக்கு வரும் பாவங்களை / தண்டனைகளைப் பற்றி சொல்கிறது.

இந்த ஹரிதினத்தின் மகிமைகளை, ஸ்ரீவியாஸராயர் தமது கீர்த்தனை ஒன்றில் நமது மனதை கவருமாறு பாடியிருக்கிறார். பக்தியுடன் ஏகாதசி உபவாசத்தை அனுசரித்தால் வரும் பலன்களை, புண்ணியங்களை உதாரணங்களுடன் விளக்கியிருக்கிறார்.

ஹரிதின பாதக பரிஹார
தனுஜாரி கருணக்கெ காரண மனுஜ

என்று துவங்கி, அடுத்த மூன்று நுடிகளில் அந்த புண்ணிய செயலை நமக்கு சொல்கிறார்.

கங்கெ மொதலாத தீர்த்தங்களெணெயெ ஸ்ரீ
ரங்க மொதலாத க்ஷேத்ரவு ஸ்ரியெ உ
த்துங்க ஜபதப ஹோமகளிதிரெ பு
ஜங்கஷாயி தினதொந்துபவாஸக்கெ

ஹிந்தெ மாடித பாதக நாஷவு
இந்து மாடுவ ஸுக்ருதக்கெ பெளஸு
முந்தண முகுதிகெ கல்பலதெயு
இந்திரேஷன தினதி உபவாஸவு

ருகுமாங்கத மொதலாத பகுதரெல்ல
ஸகலவு பிட்டு ஏகாதஷிய
பகுதியிந்தலெ மாடி ஸ்ரீகிருஷ்ணன மெச்சிஸி
முகுதிய ஸுரெகொண்டுதனரியா

ஏகாதசி தினத்தன்று உபவாசம் இருந்தால், அதன் மூலம்

* தீர்த்த ஸ்னான பலன்,
* க்ஷேத்திர யாத்திரை செய்த பலன்,
* ஜபதப ஆகியவை செய்த பலன்,
* பாவங்கள் தொலைகின்றன
* புண்யங்கள் சேர்கின்றன

இறுதியில் ருக்மாங்கதனுக்கு கிடைத்ததைப் போல முக்தி கிடைக்கிறது என்று ஸ்ரீவியாஸராயர் தெளிவாக எடுத்துரைக்கிறார். ஏகாதசியன்று உபவாச விரதம் எவ்வளவு முக்கியமோ, அன்றைய தினம் முழு இரவிலும் ஜாகரணை (விழித்திருந்து) செய்து, ஸ்ரீஹரி தியானத்தில் ஈடுபட்டு, அடுத்த நாள் உரிய நேரத்தில் பாரணை செய்ய வேண்டியது - இவையும் முக்கியமே. இந்த ஏகாதசியின் நியமம் மாத்வரில், இன்று வரைக்கும் மிகவும் பக்தியுடன் பின்பற்றப்படுகிறது.

நம் அனைத்து அவயவங்களையும் எப்படி ஸ்ரீஹரி தியானத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்பதை, ஸ்ரீஸ்ரீபாதராயர் 'பூஷணக்கெ பூஷண இது பூஷண, சேஷகிரிவாஸ ஸ்ரீவர வெங்கடேஷ' என்னும் கீர்த்தனையில் மிகவும் அற்புதமாக விளக்கியிருக்கிறார்.

நாலிகெக்கெ பூஷண நாராயண நாம
காலிகெ பூஷண ஹரியாத்ரெயு
ஆலயக்கெ பூஷண துளசி வ்ருந்தாவன
விஷால கர்ணக்கெ பூஷண விஷ்ணு கதெயு

என்று முதல் நுடியில் நாக்கு, கால்கள், காதுகள் மற்றும் ஆலயங்களைப் பற்றி சொல்கிறார். இரண்டாம் நுடியில்,

தானவே பூஷண இருவ ஹஸ்தங்களிகெ
மானவே பூஷண மானவரிகெ
ஞானவே முனியோகவரரிகெ
மானினிகெ பூஷண பதி பக்தியு

என்று கைகளின் சிறப்பினை சொல்லி, மனிதர்கள், யோகி வரேண்யர்கள், பதிவிரதைகள் ஆகியோரின் கடமைகளை சொல்கிறார்.

கங்களித்யாதகோ காவேரி ரங்கன நோடத -- என்று குரலெடுத்து மெய்மறந்து பாடிய ஸ்ரீபாதராயர், இந்த பாட்டில் மூன்றாம் அடியில் முதல் வரியில் - ரங்கனனு நோடுவுதே கங்களிகெ பூஷண - என்று மகிழ்ச்சியுடன் பாடுகிறார்.

மங்களாங்ககெ மணிவ ஷிர பூஷண
ஸ்ருங்கார துலஸிமணி கொரளிகெ பூஷண

என்று சரீரத்தின் சிறப்பினை சொல்லி, இறுதியில் மறுபடி

ரங்கவிட்டல நிம்ம நாம அதி பூஷண - என்று முடிக்கிறார்.

ஸாதனகெ பகெகாணெனென்னபஹுதெ - என்று சந்தேகம் கொள்ளும் மனதின் தாபத்தை தீர்த்து வைக்கும் விஜயதாஸரின் வாக்கு அனைவருக்கும் வழிகாட்டியாக இருக்கிறது. 'ஸாதரதி குரு கருண தா படெத பளிக' (குருவின் கருணையைப் பெற்ற பிறகு), பக்தன் எனப்படுபவன், தான் செய்யும் ஒவ்வொரு செயலும் பகவந்தனின் சேவை என்றே சிந்தித்து செய்கிறான் என்றார். ஐந்து நுடிகள் உள்ள இந்த கிரந்தத்தில், எப்படி நாம் பகவந்தனின் அருளுக்குப் பாத்திரர் ஆகமுடியும் என்பதை விளக்குகிறார். சில உதாரணங்களையும் சொல்லலாம்.

கண்டகண்டத்தெல்ல கமலனாபன மூர்த்தி - என்னும் பத்தியில் தெய்வ பக்தியை எப்படி நம்மை பலப்படுத்துகிறது என்று குறிப்பிடுகிறார். 'ரோகானுபவவெல்ல உக்ரதபவு' என்னும் வாக்கில் நம் சோர்வும் கூட எவ்வளவு உபாதேயமாக இருக்கிறது என்று சொல்கிறார்.

(ஒரு சாஸ்திரம் என்பது இந்த தர்மங்களை அனுஷ்டிப்பதனால், இவ்விதமான ஸ்வர்க்கம் அல்லது மோக்ஷம் கிடைக்கும் என்ற வகையிலான உபதேசங்களுடன் கூடியதாகவே இருக்க வேண்டும். அதாவது, உபாஸனா விதிகளும் அந்த உபாஸனையினால் கிடைக்கக்கூடிய அத்ருஷ்ட பலன்களையும் தெரிவிப்பதாக இருக்க வேண்டும். அதற்கு, அந்த சாஸ்திரத்திற்கு, அனுபந்த சதுஷ்டயங்கள் சரியாக பொருந்த வேண்டும். இவ்வாறு இருக்குமேயானால், அந்த சாஸ்திரம் ப்ரேக்ஷாவந்தர்களினால் (மோக்ஷத்தை விரும்பி அதற்கு இது செய்தால் இதுதான் பலன் என்ற நிச்சயமான அறிவைப் பெற்று, நித்யாநித்ய வஸ்து விவேகவந்தராக இருப்பவர்களை ப்ரேக்ஷாவந்தர்கள் என்று அழைக்கின்றனர்) நிஸ்சித பலனை கருதி ஸ்வீகரிக்கும் யோக்யதை உள்ளதாக ஆகிறது. இவ்வாறு ஸ்வீகரிக்கும் யோக்யதை பெற்ற சாஸ்திரத்தை உபாதேயம் என்று அழைக்கின்றனர். அவ்வாறு இல்லையேல், அந்த சாஸ்திரத்தை அனுபாதேயம் என்று அழைக்கின்றனர்).

'கைமீரிகோதத்தே கிருஷ்ணார்ப்பண' என்பது ஒரு இதிகாசத்தின் வாக்காகவே இருக்கிறது. 'படதனவு பரலதே பகவத் பஜனெயோக' என்னும் தாஸரின் வாக்கில் அவர் ஒரு காலத்தில் அனுபவித்த ஏழ்மை புலப்படுகிறது. இப்படியாக நம் வாழ்க்கையை திருத்திக் கொள்ளாவிடில், 'மத்வாந்தர்கத ஸ்ரீவிஜயவிட்டலரேய ஹ்ருத்கதார்த்தவ திளிது ஒப்பிஸிகொடனெ?' என்று விஜயதாஸர் நம்மையே கேட்டு சாதனையின் சுலபமான வழியை நமக்கு சொல்லிக் கொடுக்கிறார்.

ஹரிதாஸர்கள் அனைவரும் தமது ஆசார்யரிடம் இருக்கும் திடமான நம்பிக்கையையும், த்வைத ஸித்தாந்தத்தில் தமக்கு இருக்கும் சிரத்தையையும் திரும்பத்திரும்ப வெளிப்படுத்தி யுள்ளனர். ஆனால், அவர்களது பார்வை இத்துடன் நின்று விடாமல், மற்ற மானவ சமுதாயத்தின் சதாசாரம், சாத்விக ஜீவர்களின் பக்கமும் சென்றது. இத்தகைய மகத்தான செய்தி என்னவென்பதை இங்கு சுருக்கமாகப் பார்க்கலாம்.

மனிதனின் ஆன்மீக வாழ்க்கையில் அவனின் மனம், வாக்கு, மெய் ஆகியவை முக்கியமான பங்கு வகிக்கின்றன. இந்த மூன்றின் சுத்தியையும் குறித்து அனைத்து ஹரிதாஸர்களும், ஏதோ

ஒரு வகையில், சாதாரண மக்களுக்கும் புரியுமாறு தகுந்த வழிமுறைகளை சொல்லியிருக்கின்றனர். ஷரீர சுத்தி என்றால் மேலோட்டமாக ஸ்னானம் செய்து சுத்தம் செய்வது என்பது மட்டுமே என்று நமக்கு தோன்றுகிறது. ஆனால், புரந்தரதாஸர் இந்த பொதுப் பார்வையை கேள்வி கேட்கிறார்.

தனுவ நீரொளகத்தி பலவேனு
தன்ன மனதல்லி த்ருடபக்தியில்லத மனுஜனு

என்னும் அவரின் கேள்வி கர்மங்களை செய்யாதவர்களை பழிப்பது போல் இருக்கிறது. அதற்கு அவரே மறுபடி சரியான விடைகளையும் கொடுத்திருக்கிறார்.

தானதர்மகளன்னு மாடுவுதே ஸ்னான
ஞானதத்வங்கள திளிவுதே ஸ்னான
ஹீன பாஷங்கள ஹரிவுதே ஸ்னான
த்யானதி மாதவன நோடுவுதே ஸ்னான

குருகள ஸ்ரீபாததீர்த்தாவே ஸ்னான
ஹிரியர தர்ஷன மாடுவுதே ஸ்னான
ஹரெது அதிதிகெ அன்ன இடுவுதே ஸ்னான
நரஹரி சரணவ நம்புவுதே ஸ்னான

துஷ்டர சங்க பிடுவுதே ஸ்னான
சிஷ்டர ஸஹவாஸ மாடுவுதே ஸ்னான
ஸ்ருஷ்டியொளகெ ஸிரி புரந்தரவிட்டலன
முட்டி பஜிஸுவ புண்ய படெவுதே ஸ்னான

புரந்தரதாஸர் கொடுத்திருக்கும் இந்த ஸ்னானத்தின் வியாக்யானம் யாருக்குதான் பிடிக்காது? இதே புரந்தரதாஸர் தமது உகாபோகம் ஒன்றில் :

மனஷுத்தியில்லதவகெ மந்த்ரத பலவேனு?
தனுஷுத்தியில்லதவகெ தீர்த்தத பலவேனு?
மிந்தல்லி பலவேனு மீனு மொஸளெயந்தெ?
நிந்தல்லி பலவேனு ஸ்ரீஷைலத காகெயந்தெ?
ஹொரகெ மிந்து ஒளகெ மீயதவர கண்டு
பெரகாகி நகுத்தித்த புரந்தர விட்டலா

என்று இன்னும் ஆழமான கருத்துக்களை சொல்கிறார்.

மனதின் சுத்தி என்றால் என்ன என்று சாதாரண மக்களுக்கும் புரியுமாறு விளக்குவது சிறிது கஷ்டமான செயலே. ஆனால், புரந்தரதாஸர் இந்த விஷயத்தில் அபூர்வமான வெற்றியைப் பெற்றிருக்கிறார். 'ஆசாரவில்லத நாலிகெ, நின்ன நீச புத்திய பிடு நாலிகெ' என்னும் அவரது கீர்த்தனை புகழ் பெற்றதேயாகும். இந்த கீர்த்தனையில் நாக்கின் கெட்ட செயல்கள் அனைத்தையும் பட்டியலிட்டு சொல்லியிருப்பதோடு மட்டுமல்லாமல், அதனை எப்படி திருத்திக் கொள்வது என்பதையும் போதித்திருக்கிறார்.

நாக்கின் மீது கட்டுப்பாடு இல்லாதவன் கெட்டுப் போகிறான் என்று சொல்வதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

மாது ஆடிதரெ ஹோயிது

முத்து ஒடெதரெ ஹோயிது

என்னும் பழமொழியே இதற்கு சாட்சி. இது அனைத்தையும் அறிந்தவரான புரந்தரதாஸர்,

விசாரவில்லதெ பரர தூஷிஸுவுதக்கெ
சாசிகொண்டிருவந்த நாலிகெ

என்று நாக்கினை நன்றாக திட்டுகிறார். நாக்கு முன்னால் நீண்டிருப்பதே அதன் ஸ்வபாவத்திற்கு காரணமோ என்று சொல்லும் அவரது கற்பனை மிகவும் சுவாரசியமானது. இந்த நாக்கின் குண அவகுணங்கள் இந்த இரண்டும் எப்படி ஒரு மனிதனை கட்டுப்படுத்துகிறது என்பதை நன்கு விளக்கியிருக்கிறார்.

ப்ராத:காலதொளெத்து நாலிகெ
ஸிரிபதியென்ன பாரதே நாலிகெ
பதித பாவன நம்ம ரதிபதி ஜனகன

ஸததவு நுடி கண்ட்ய நாலிகெ

என்று அதனை நல்ல வழியில் பயன்படுத்த வேண்டும் என்று நம் மனதை இழுக்கிறார். இரண்டாம் நுடியில்:

ஜாடி ஹோளலி பேட நாலிகெ
நின்ன பேடிகொம்புவேனு நாலிகெ
கூடிகொடெய ஸ்ரீராமன நாமவ
பாடுதலிரு கண்ட்ய நாலிகெ

என்று ஸ்ரீஹரியின் நாமஸ்மரணை செய்வதே அதன் கடமை என்று சொல்லி நம் கவனத்தை ஈர்க்கிறார். மூன்றாம் பத்தியில் மேலும் இதே விஷயத்தையே திடமாக சாதிக்கிறார்.

மேற்சொன்ன மூன்று கரணங்களில் மனஸ் மேலானது. அந்த மனதின் செயல்களை புரந்தரதாஸர் தமதேயான விதத்தில் அற்புதமாக விளக்கியிருக்கிறார்.

மனவ ஷோதிஸபேகு நிச்ச
தினதின மாடுவ பாபபுண்யத வெச்ச

என்னும் பல்லவி வரிகளே ஆராயப்பட வேண்டியவை. அவரின் வணிக மனோநிலை இந்த வரிகளில் வெளிப்படுகிறது.

தர்ம அதர்மவ விங்கடிஸி
அதர்மத நரகள பேக கத்தரிஸி
நிர்மலாசாரதி சரிஸி பரபொம்ம
மூருதிய பாத கமலவ பஜிஸி

என்று இறுதியில் பரபிரம்ம மூர்த்தியின் பாத கமலங்களை பஜிக்க வேண்டும் என்கிறார். அடுத்து,

தனுவ தண்டிஸி ஒம்மே மாணோ
நின்ன மனவ தண்டிஸி பரமாத்மனு காணோ
கொனெகெ நின்னொளு நீ ஜாணோ
முக்தி நினகெ தூரில்லவு ஒந்தே கேணோ

என்று திட மனதினால் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம் என்கிறார்.

புரந்தரதாஸரின் இந்த மூன்று கீர்த்தனைகளையும் கேட்பவர்களுக்கு, இதே மனஸ், வாக்கு மற்றும் சரீரத்தைப் பற்றி பகவத்கீதையில் சொல்லப்பட்டிருக்கும் இந்த ஸ்லோகங்கள் நினைவுக்கு வரலாம்.

தேவ த்விஜ குரு ப்ராக்ஞ பூஜனம் ஷௌசமார்ஜ்ஜவம்
பிரம்மசர்யமஹிம்ஸா ச ஷாரீரம்தப உச்சதே
அனுத்வேகதரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத்
ஸ்வாத்யாயாப்யஸனம் சைவ வாங்மய தப உச்யதே
மன: ப்ரஸாத: ஸௌம்யத்வம் மௌனமாத்மவினிக்ரஹ:
பாவ ஸம்ஸித்தி ரித்யேதத்த போ மானஸமுச்யதே
(கீதை 17, 14-16)

சரீர தவத்தில் சொல்லப்பட்டிருக்கும் தேவ, த்விஜ, குரு, ப்ராக்ஞ, பூஜனம் ஆகியவை, புரந்தரதாஸர் தேக சுத்தியைக் குறித்து சொல்லப்பட்டிருக்கும் கிருதியில் இரண்டாம் நுடியில் வந்திருக்கின்றன. வாக்கின் தவம் குறித்தான சொற்கள் அனைத்தும் தாஸர் நாக்கினை எப்படி நல்லவிதத்தில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சொல்லும் இடத்தில் வருகின்றன. மானஸ தவத்தின் ஸ்வரூபத்தைக் குறித்த விஷயத்தையே, புரந்தரதாஸர் சொல்லியிருக்கும் ஆத்ம சோதனையில் பார்க்கலாம். பகவத்கீதையானது சாஸ்திரத்தின் விஷயங்களை பேசுகிறது என்று சொன்னால், ஹரிதாஸர்களின் கீர்த்தனைகள், ஹ்ருதயானுபவங்களிலிருந்து வந்திருக்கின்றன எனலாம்.

ஆத்ம-உன்னதியையே முக்கிய நோக்கமாகக் கொண்ட ஹரிதாஸர்கள் மனிதப்பிறவியைக் குறித்து மிகவும் ஆழமாக அலசி ஆராய்ந்திருக்கிறார்கள். 'மானவ ஜென்ம தொட்டது, இத ஹானி மாடலுபேடி ஹுச்சப்பகளிரா' என்னும் புரந்தரதாஸரின் பேச்சு அனைவருக்கும் பொருந்தும். விஜயதாஸரோ, தமது ஒரு ஸுளாதியில் 'உத்தம ஜனுமக்கெ பந்தெனோ எலெ தேவ... கிரியா ஷிகரத துதிகெ ஏரிதெனோ' என்று இன்னும் திடமாக சொல்கிறார்.

இந்த உலகத்தில் மனிதனின் படைப்பே அனைத்தையும்விட சிறந்தது என்னும் நவீன கண்டுபிடிப்பினை இது சொல்கிறது. ஆனால் இந்த வாழ்க்கை எவ்வளவு விலையுள்ளதோ அவ்வளவே தற்காலிகமும் ஆகும் என்னும் விஷயம் நமக்கு தெரிவதில்லை. அதற்காகவே நம் ஹரிதாஸர்கள், பிற ஸந்தர்களைப் போலவே, வாழ்க்கையின் மற்றொரு பக்கத்தை மிகவும் அற்புதமாக வெளிக்காட்டி உள்ளனர். புரந்தரதாஸர் நித்ய ஜீவனத்தை நன்கு ஆராய்ந்து அதிலிருந்து பல ஒப்பீடுகளைக் கொடுத்து, இந்த தற்காலிகத்தை நமக்கு தெரியப்படுத்துமாறும், மனதிற்கு புரியுமாறும், பின்வருமாறு வர்ணிக்கிறார்.

ஹோகெ பரெதீது ப்ராசீனதல்லி, ஹாகெ இரபேகு சம்சாரதல்லி
பக்ஷி கூதிது பந்து அங்களதல்லி, ஹாரிஹோயிது ஆ க்ஷணதல்லி
ஆடுவ மக்களு மனெ கட்டிதரு ஆட ஸாகெந்து முந்து ஓடிதரு
ஸந்தெ நெரெதீது நானாபரி திருகி ஹோயிது தம்ம தம்ம தாரி
வஸ்திகாரனு வஸ்திகெ பந்த, ஹொத்தாரெ எத்து ஊரிகெ ஹோத
ஈ சம்ஸார மாயா பிடிஸி காயோ புரந்தரவிட்டலா

இங்கு சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொரு உதாரணங்களும், உபதேச ரூபமாக இருப்பது மட்டுமல்லாமல், தாஸரின் வாழ்க்கை அனுபவத்திற்கு தக்க சாட்சியாகவும் இருக்கின்றன. 'ஸம்ஸாரவெம்பந்த பாக்யவிரலு, கம்ஸாரி நெனெவெம்ப ஸௌபாக்யவிரலி' என்று

புரந்தரதாஸர், சம்சாரத்தில் மயங்கிவிடாமல், பரமாத்மனின் ஸ்மரணையால் எப்படி சத்கதியை அடையமுடியும் என்பதை சொல்கிறார்.

ஈஸபேகு இத்து ஜெயிஸபேகு என்னும் சொல்வதில் அவருக்கும் இருக்கும் ஆசை புலப்படுகிறதே தவிர, பலன்களை எதிர்பார்ப்பது போல இல்லை. ஸம்சாரத்தின் நன்மை தீமைகள் என இரண்டையுமே ஹரிதாஸர்கள் தங்களின் கிருதிகளில் வெளிப்படுத்தியிருக்கின்றனர். சாதன ஷரீரத்தினால் அனைத்தையும் அடையமுடியும் என்பது விஜயதாஸரின் கருத்து. 'மனவே ஈ ஜனும தப்பித மேலே, யாவ சாதனவு நிஸ்சயவில்ல, விஜயவிட்டல பல்ல' என்று சொல்லி, நம் மனக்கதவை தட்டுகிறார்.

ஹரிதாஸர்கள், இஹ பரங்களைக் குறித்து சொல்லியிருக்கும் சில விஷயங்களோ மிகவும் அருமையாக இருக்கிறது. ஸ்ரீவ்யாஸராஜர் 'பல்லவகில்லிதெ வைகுண்ட, பல்லவகெல்லூ ஹரிபூஜெ' என்று துவங்கி, ஐஹிக ஜீவனத்திலேயே ஆமுஷ்மிக ஜீவனத்தின் அம்சங்கள் எப்படி அடங்கியிருக்கின்றன என்பதை விளக்கியிருக்கிறார்.

ஷரீர ஹரியு பட்டண, ஹ்ருதயஸரோஜ ஆதன அரமனெ,
ஸூர்யாதி தேவரு சக்ஷுராதிகளல்லி
த்வாரபாலகராகி இப்பரு

என்று ஒரு நுடியில், ஜீவனின் சரீரத்தின் சிறப்பினை விவரித்திருக்கிறார். 'மனுஜ சரீரவிதேனு ஸுக' , 'நித்யவல்ல நித்யவல்ல அனித்யதேஹவிது' என்னும் பெருமூச்சு விடும் நுடிகளும் அவ்வப்போது கேட்டு வந்தாலும், சரீரத்தைப் பற்றி இருக்கும் இந்த கௌரவ பாவத்தை நாம் விடுவதிற்கில்லை. விஷால மதி கொண்ட விஜயதாஸரின் ஒரு கீர்த்தனையில் , ஸ்ரீவ்யாஸராஜரின் அபிப்ராயமே மறுபடி வந்திருப்பதை பார்க்கலாம். 'வைகுண்டவெம்புது அல்லெ பரிதெ, லௌகிக தொரெதரெ இப்போது இல்லெ' என்று நம் உத்தாரத்தின் வழியை காட்டிக் கொடுக்கிறார். பஞ்சபூதாத்மகமான இந்த சரீரத்தை ஒரு த்ருண (புல்) என்று புறக்கணிக்காமல், அந்தந்த பூதங்களின் குணங்களை தொகுத்து எப்படி நம் வாழ்க்கையை ஸாதித்துக் கொள்ளலாம் என்பதை ஒரு ஸுளாதியில் இவ்வாறு சொல்கிறார்.

தரணியந்தெ தாளூ, மருதனந்தெ ஸஞ்
சரிஸு, பாவகனந்தெ ஹொரகெ தோரதலிரு
மரளி உதகதந்தெ ஹரிது போகுதலிரு
இரு ஆகாஷதந்தெ ஸரிஸுதல்லி தூர
பரரபேக்ஷெய பிடு, பரலோகவ பேடு

இந்த சிந்தனையில் வாழ்க்கையின் ரகசியமே அடங்கியிருக்கிறது.

ருணத்தைப் பற்றி நம் ஹரிதாஸர்கள் கூறியிருக்கும் பேச்சுக்கள், வாழ்க்கையின் ஆதர்ஷத்தையே திறந்து காட்டுவதாக இருக்கிறது. விஜயதாஸர் ருணத்தைக் குறித்து, அதிகமாகவே வ்யாக்யானம் செய்திருக்கிறார். பூமியின் மேல் பிறந்தபின், அனைவரும் ருணத்தின் சக்ரத்தில் சிக்கிக் கொண்டவர்களாகவே இருக்கிறோம். நம் முன்னோர்கள் இந்த ருணத்தை முக்கியமாக ரிஷி ருண, தேவ ருண, பித்ரு ருண என்று மூன்று விதமாக பிரித்திருக்கின்றனர். விஜயதாஸர் இந்த ருணங்களைப் பற்றி சொல்லி, கடன் பட்டவனின் அந்த ருணங்கள் அபரிஹாரக (பரிகாரம் செய்யப்பட முடியாதவை) என்று எச்சரிக்கிறார். அவருடைய தர்க்கம் செய்யும் விதம் மிகவும் அற்புதமாக இருக்கிறது.

ரிஷிகள ருண பூர்வாஸ்ரமதிந்த பரிஹார, த்ரி
தஷர ருண மேதாதிகளு மாடெ,

அஸுஸம்பந்திகள ருண க்ருஹஸ்தாஸ்ரமதலி
புஸியல்ல தித்தி ஹோகுவுது ஸித்த
வசுதெயொளகெ ஒந்து காஸு கொட்டவன ருண
வஸுதெயெல்லா திருகெ போகதய்ய
பஷுபால அவ்யயாத்ம விஜயவிட்டலரங்க
பஸுரொள பொகலிட்டு பெஸஸதெ பிடதய்யா

கோத்ர உச்சாரணம் செய்யும்போது, நாம் ரிஷிகளின் பெயர்களை சொல்வது வழக்கம். அந்த ரிஷிகளை ப்ரவரத்தின் மூலமாக நினைப்பதால், அவர்களைப் பற்றிய ஞானத்தைப் பெறுவதால், அவர்களுடைய ருணம் பரிஹாரம் ஆகலாம். யக்ஞ, யாகாதிகளை செய்வதால், தேவ ருணத்திலிருந்தும், விடுதலை பெறலாம். க்ருஹஸ்தாஸ்ரமத்தின் முக்கிய நோக்கம் வம்ஸ அபிவ்ருத்தி. ஸந்தானத்தை பெறுவதின் மூலம், அந்த ருணத்தை நிவாரணை செய்து கொள்ளலாம். ஆனால், நாம் யாரிடமிருந்தும், ஒரு காசு கடன் செய்து கொண்டாலும்கூட, அந்த ருணம் மட்டும், நாம் மொத்த பூமண்டலத்தை சுற்றி வந்தாலும் போவதில்லை என்று சொல்வது மிகவும் சுவாரசியமாக இருக்கிறது. பிறந்ததிலிருந்து விஜயதாஸர், மிகவும் ஏழ்மையில் இருந்தவர். அப்போது அவர் கடன்களில் சிக்கி எவ்வளவு கஷ்டப்பட்டாரோ என்னவோ!. அடுத்து, தெய்வானுக்ரஹத்தினால் அவருடைய நிலை முன்னேறியது. ஆகையால், அடுத்தவரிடம் கடன் செய்யாததே மிகவும் உத்தமமான செயல் என்று இங்கு சொல்வதைப் போல இருக்கிறது.

வைதிக ஸம்ஸ்க்ருதியின் ஸாரத்தை சொல்லி, புனிதமான தத்வங்களைப் பற்றி சொல்லிய ஹரிதாஸர்களின் பார்வை மிகவும் விசாலமானது. அவர்களுடைய கீர்த்தனைகளில், எல்லா காலங்களுக்கும் பயன்படுத்தத்தக்க செய்திகள் பல இருப்பதை காணலாம். கனகதாஸரின் குலத்தைப் பற்றி எத்தகைய அருமையான செய்தியை சொல்லியிருக்கிறார்கள் என்பதை பார்த்தோம். அதைப் போலவே, ஸ்ரீவாதிராஜர் 'தாளுவிகெகிந்த தபவு இல்ல' என்பதை எப்படி சொல்லியிருக்கிறார் என்பதையும் பார்த்தோம். விஜயதாஸரோ, கல்லிலேயே மோக்ஷத்தைக் கண்ட மஹானுபாவர். ஹரிதாஸர்கள் அனைவரும் புரந்தரதாஸரின் பங்க்திக்கு சேர்ந்தவர்கள் என்று ஸ்ரீவ்யாஸராஜர், புரந்தரதாஸரின் ரீதி-நீதிகளை, ஆசார-விசாரங்களை பார்த்து அவரை கொண்டாடியிருக்கிறார். அவருடைய ஸாஹித்யங்களை படித்தவர்களுக்கு அவருடைய லோக அனுபவத்தைக் கண்டு, அதே அனுபவமே ஆகியிருக்கிரது. 'கல்லாகி இரபேகு கடின பவ தொரெயொளகெ, பில்லாகி இரபேகு தன்னவரொளகெ' என்னும் பேச்சினை எவ்வளவு முறை படித்து சிந்தித்தாலும் போதாது. 'ஸத்யம் வத தர்மம் சர' என்னும் உபநிஷத் வாக்கியத்தை (தைத்திரிய 1-121) நாம் எவ்வளவு முறை உபதேசம் பெற்றாலும் / செய்தாலும், என்ன பலன்?. இதையே தமது கீர்த்தனைகளில் விளக்கி எழுதியிருக்கிறார். அவர் செய்திருக்கும் ஸத்யத்தின் வ்யாக்யானம் இவ்வாறு இருக்கிறது.

ஸத்யவம்புதெ ஸ்னான, உபவாஸ, ஜப, நேம - ஆ
ஸத்யதலி மாடுவ கர்ம வ்யர்த்த

ஆடம்பரமான உபவாஸத்தை அவர் வர்ணிக்கும் விதானம், எத்தகையவரையும் திருத்துவதாக இருக்கிறது.

அப்பளிஸி பரர, ஒடவெகள தந்துண்டு தா
ஒப்பதிந்துபவாஸ வ்ரதவ மாடி
தப்பதலெ ஸ்வர்க்கவனு ஸுரெகொம்புவெனெம்பெ
ஸர்வகளு மாடித அபராதவேனய்ய ?

இப்படியே, டம்பாசார ஜபத்தைப் பற்றியும் கோபமாக கண்டிக்கிறார்.

பிடதெ மதமத்ஸராஹங்காரதலி முளுகி
ஒடனெ பெரளுகளெணிஸி மௌனதிந்த
தடெயிதலெ பரலோக ஸுரெகொம்புவெனெம்பெ
படபகனு மாடித அபராதவேனய்யா

மக்களை கவர்வதற்காக செய்யப்படும் ஏமாற்று வேலைகளை தாஸர் இங்கு சொல்லியிருக்கிறார். மேலும், நேமத்தின் விஷயத்தை சொல்வதில் அவர் கொடுத்திருக்கும் உதாரணங்கள் நம் கண்களை திறக்கின்றன.

பரஸதியு, பரதனவு, பரனிந்தெ, பரஹிம்ஸெ
பரம பாதகத காரணவெந்து திளிது
தரெகதிக புரந்தரவிட்டலன சரணவனு
நெரெபஜிஸி ஸுகியாகி பாளெலவோ மனுஜ

முன்னர் ஸ்னானத்தின் வ்யாக்யானம் செய்தபோது, எப்படி அருமையாக இருந்ததோ, அதைப் போலவே இங்கும் ஸத்யத்தைப் பற்றி பாடும்போதும் நமக்கு இருக்கிறது. ஸத்ய என்பது ஆசரணையை, அனுசரித்து இருக்கிறதே தவிர, அதை அனைவரிடமும் சொல்வதில் இல்லை என்பது இந்த நுடிகளிலிருந்து தெரிகிறது.

இன்னும் தர்மத்தைக் குறித்து பல்வேறு வ்யாக்யானங்கள் இருந்தாலும், அதன் உள் அர்த்தங்களை உதாரணங்களுடன் புரந்தரதாஸர் விளக்குவதைப் போல வேறு யாரும் சொல்லவே முடியாது. மொத்த ஹரிதாஸ ஸாஹித்யத்திலேயே இதற்கு சரிசமமான வேறொரு கீர்த்தனை இல்லை எனலாம். இதில் வெளிப்பட்டிருக்கும், அனைத்து காலங்களுக்கும், இடங்களுக்கும் ஏற்றதான லக்ஷணங்கள் மிகவும் போற்றத்தக்கவை. 'தர்மவே ஜயவெம்ப திவ்ய மந்த்ர, மர்மவன்னரிது மாடலிபேகு தந்த்ர' என்னும் பல்லவியிலேயே மிகவும் அற்புதமான கருத்து இருக்கிறது. 'யதோ தர்ம: ததோ ஜய:' என்னும் வாக்கியமே இங்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகு வரும் அனுபல்லவி, பல்லவியின் அர்த்தத்தை மிகவும் அற்புதமாக விரிவாக்குகிறது. இங்கு ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கும் 'மந்த்ர' மற்றும் 'தந்த்ர' என்னும் பதங்கள், தங்கள் அர்த்தத்தை நமக்கு தாமே விளக்குகின்றன. மந்த்ரத்திற்கு தக்க ஆசரணையே தந்த்ர ஆகையால், புரந்தரதாஸர் மந்த்ரத்தின் இங்கிதத்தை அறிந்து, அதற்கு தக்கவாறு ஆசரணை செய்ய வேண்டும் என்று போதிக்கிறார்.

இந்த கீர்த்தனையின் எந்த நுடியை எடுத்துக் கொண்டாலும், அதில் புரந்தரதாஸரின் பரிபக்குவமான ஹ்ருதயத்தை, விசாலமான கருத்துக்களை காணலாம். 'விஷவிக்கிதவகெ ஷட்ரஸவ னுணிஸலிபேகு' என்று சொல்வதில், விரோதியை எப்படி அன்பினால் வெல்ல வேண்டும் என்னும் தத்வம் இருக்கிறது. இது மஹாத்மரின் லக்ஷணம். 'த்வேஷமாடிதவன போஷிஸலி பேகு' என்பதும் அப்படியான வாதமே. வென்றாலும், அவர்களை நண்பர்களைப் போலவே கண்ட உதாரணங்கள் பல உண்டு. 'புஸி மாடி கெடிஸுவன ஹாடி ஹரஸலிபேகு; மோஸ மாடுவன ஹெஸரு மகனிகிடபேகு' என்னும் த்ருஷ்டி மிகவும் அபூர்வமானது. 'ஹிந்தெ நிந்திபரன்னு வந்திஸுதலிரபேகு' என்னும் பாவனை புரந்தரதாஸரின் ரசனைகளில் அடிக்கடி தென்படுகிறது. 'ஹங்கிஸி ஹங்கிஸி எனகெ ஹரிநாம நிலிஸிதரு; பங்கிஸி பங்கிஸி எனகெ பயலாஸெ கெடிஸிதரு' , 'ஹிந்தெ நிந்திஸிதவரென்ன பந்து பளக, பாயி படிகரிந்த நானு பதுகிதெனோ ஹரியெ' என்னும் அவருடைய பேச்சுக்களே இங்கு எதிரொலிக்கிறது எனலாம். 'பந்தனதொளிட்டவர பெரெயபேகு' மற்றும் 'கொந்த வைரிய மனெகெ நடெது ஹோகலி பேகு' என்னும் வாக்கியங்களுக்கும் பல உதாரணங்களை சொல்ல முடியும். அதன்படியே, 'குந்தெணிஸுவவர கெளெதன மாடபேகு' , 'கொண்டொய்து படியுவவர கொண்டாடுதிரபேகு' , 'கண்டு ஸஹிஸதவர கரெயபேகு' என்னும் வரிகள் அனைத்தும் மனிதனின் இரக்க குணம் எது வரை செல்ல முடியும் என்பதன் கற்பனையை நமக்கு சொல்லிக் கொடுக்கிறது. 'உதார

சரிதானாம் து வஸுதெய்வ குடும்பகம்' என்று சொல்வதில் எந்த நோக்கம் இருக்கிறதோ, அதையே இங்கும் புரந்தரதாஸர் நமக்கு காட்டிக் கொடுக்கிறார். புரந்தரதாஸரின் பாரமார்த்திக த்ருஷ்டியின் சிறப்பினை வெளிப்படுத்தும் இந்த கீர்த்தனை, கன்னட ஆத்யாத்மிக ஸாஹித்யத்திற்கு எப்படி ஒரு விலைமதிப்பற்ற பரிசோ அப்படியே பாரத ஸம்ஸ்க்ருதியின் சிறப்பு, சகிப்புத்தன்மை ஆகியவற்றை சொல்லும் செய்திக்கும் இது ஒரு தக்க உதாரணமே ஆகிறது எனலாம்.

உபதேசம் செய்வது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவே அதனை சொல்லும் விதமும் முக்கியம். அதிலும் பாமரர்களுக்கு பாரமார்த்திக விஷயங்களை சுலபமாக சொல்லிக் கொடுப்பது மிகவும் கஷ்டமானது. இதை வாதிராஜர், 'பாதேய கட்டிரோ வைகுண்டக்கெ பயண ஸம்மதவாதரே' என்று துவங்கி, அந்த கட்டுச்சாதத்தின் ஸ்வரூபத்தை தனதேயான ரீதியில் விளக்குகிறார். 'மாதாபிதருயெம்போ பக்திசித்ரான்னவ, பார்த்த ஸுதன பாதபத்மபத்ரவ ஹாஸ' என்று பாடுகிறார். இந்த சித்ரான்னத்தின் சிறப்பினைப் போலவே, இங்கு பயன்படுத்தும் இலையின் ஸ்வரூபமும் சிறப்பானது. இன்னும் விரஜா நதியை தாண்டுவதற்கு தக்க தோணி என்றால், ஹரிபக்தியைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஆகையால், 'ஹரிபக்தி ஹரிகோலிந்த மெல்லனெ நீவு விரஜா நதிய தாடிரோ' என்கிறார். இதே கட்டுச்சாதத்தின் மகிமையை புரந்தரதாஸரின் பாடல் ஒன்றும் இவ்வாறு விளக்குகிறது. 'புத்திய கட்டோ மனுஜ புத்திய கட்டோ, புத்தியன்னு கட்டிதெ, எத்தலாதரு உண்ணபஹுது' என்னும் வாக்கின் நுட்பம், இந்த கீர்த்தனையின் சிறப்பினை விளக்குகிறது. மொத்த கீர்த்தனையில் இந்த கட்டுச்சாதத்தின் ஒவ்வொரு அம்சமும் வெளிப்படுகிறது. 'தர்மவெம்ப மடிகெயல்லி, நிர்மல மன கங்கே தும்பி, ஸும்மனதுரிய ஹச்சி, ஒம்மானக்யன்ன பாகி' என்று ஒரு நுடியில் கட்டுச்சாதம் கட்டும் விதத்தை கூறினால், 'அரிவு எம்ப அரிவெ ஹாஸி, ஹரவி ஹால மொஸர களிது, பரம வைராக்யதிந்ததெ ஸ்ரீஹரிகெ அர்ப்பிதவெந்து' என்று இந்த அபூர்வ கட்டுச்சாதத்தின் சிறப்பினை சொல்லி, அது பரமாத்மனுக்கு எப்படி மிகவும் பிடித்தமானது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கடைசி நுடியில் 'கர்து புரந்தரவிட்டலன தத்வவெம்ப புத்தியன்னு ஹத்திர தந்திட்டுகொண்டு, நித்ய உண்டு த்ருப்திபடிரோ' என்று சொல்வதில், இந்த கட்டுச்சாதத்தின் சிறப்பு எவ்வளவு என்பது நமக்கு புரிகிறது.

புரந்தரதாஸர் 'அனுபவதடுகெய மாடி, அதக்கனுபவிகளு பந்து நீவெல்ல கூடி' என்று அனைவரும் அறிந்த சமையல் விதங்களைப் பற்றி பாடியவாறு, தத்வஞானத்தை எப்படி பாடினாரோ, அதைப் போலவே கனகதாஸரும் 'அடிகெயனு மாடபேகண்ணா, நானீக ஞானதடிகெயனு மாடபேகண்ணா' என்று ஞான ஸாதனயை, சமையில் பற்பல விதானங்களுடன் ஒப்பிட்டு ஒரு கீர்த்தனையை இயற்றினார். அந்த சமையலில் சில லக்ஷணம் இவ்வாறு இருக்கிறது.

'மடிஸபேகு மதகளன்னு'
'தனு பாவவெம்ப பின்ன கஷ்மலவளியபேகண்ண'
'ஒனகெயிந்த குட்டி கேரி
தனகெ தானெ ஆத கெச்சனனுவரிது இக்கபேகு
அரிவர்கவெம்ப துண்டரளஸி'
'தத்வபாண்டவ தொளெயபேகண்ண, ஸத்யாத்மனாகி
அர்த்தி அக்கிய மதிஸபேகண்ண'

என்பதில் ஸ்வாமியில் ப்ரீதி என்னும் அரிசியை எப்படி நன்றாக களைந்து, ஞானம் என்னும் பாத்திரத்தில் சமைக்க வேண்டும் என்று சொல்கிறார். இன்னும் உலையின் சிறப்பினைப் பற்றி சொல்லும் பாகமே மிகவும் ஆழமானது.

கத்தரிமனவெம்ப ஹொட்டன்னு எத்தி ஓலெகெ ஹாகி இன்னு

ஹொத்துகொண்டிஹ மனதெயன்னு
எத்தி ஹெஸர ஹிங்கிஸுதலி
-- என்று இந்த சமையல் செயலில் நாம் ஈடுபட வேண்டும் என்கிறார்.

இந்த கீர்த்தனையின் கடைசி நுடியோ, கனகதாஸரின் சிந்தனைக்கு மணிமகுடமாக இருக்கிறது.

ஜனன ஸண்டிகெ ஹுரிய பேகண்ண
நிஜவாகி நிந்து தனுவு துப்பவ காஸபேகண்ண
என்கிறார்.

பிறப்பு இறப்பு என்பதை வெல்லும் விதத்தையும், சரீரம் என்னும் நெய்யையே கலந்து, அதில் பிறப்பு என்னும் ஸண்டிகையை பொரித்து, சமைக்க வேண்டும் என்னும் கற்பனை மெச்சத்தக்கது. சமையில் ஒப்புமையை புரந்தரதாஸர் பாடும் விதமும், கனகதாஸர் பாடும் விதமும் மிகவும் வேறுபாடு கொண்டவை. இருவரும் தத்தம் இலக்கினை மிகவும் அற்புதமாக பாடி முடிக்கின்றனர்.

புரந்தரதாஸரைப் போல மனிதரின் மனோதர்மத்தை க்ரகிக்கும் இன்னொரு ஹரிதாஸரே இல்லை எனலாம். தாம் கண்ட அனைத்து சந்தர்ப்பங்களையும், அதனை தன் ஆத்யாத்மிகத்துடன் சம்பந்தப்படுத்தி பாட அவர் தயங்கியதேயில்லை. எங்கிருந்தோ ஒரு கண்டா நாதம் கேட்க, அதைக் கேட்ட புரந்தரதாஸரின் பாரமார்த்திக ஞானம் உடனே பாடத் துவங்கியது.

தாஸு பாரிஸுதிதெ கேளி ஹரிதாஸரெல்ல
ஸ்ரீஷன பஜனெய மாடத மனுஜன ஆயுஷ்ய வ்யர்த்தவு ஹோயிது

என்று அவர் பாடத் துவங்கினார்.

காலம் எப்படி வீணாக போய்க் கொண்டிருக்கிறது என்பதை புரந்தரதாஸர் பற்பல பாடல்களில் பாடியிருக்கிறார்.

‘வார்தக்ய பால்ய கெலவு ஸமீபவாயிது எந்து’
‘புண்டரீகாக்ஷன புராண புருஷன புரந்தரவிட்டலன பஜிஸி பதுகி’
என்று காலத்தை வீணாக்காமல் இருக்கவும் என்கிறார்.

இவ்வாறாக மிகவும் பரிவுடன் நீதியை போதிப்பவரான ஸ்ரீபுரந்தரதாஸரின் கீர்த்தி நமக்கு அற்புதமாக தெரிய வருகிறது. டங்குர (முரசு) அடிப்பவரை பார்த்த உடனேயே ‘டங்குரவ ஸாரிரய்யா டிங்கரிகரெல்லரு பூமண்டலக்கெ பாண்டுரங்க விட்டலா பரதெய்வவெந்து’ என்று மெய்மறந்து பாடுகிறார். அப்படியே வீதியில் நகாரி வாசிப்பவனை எங்கோ பார்க்கையில், புரந்தரதாஸர் ‘ஹொடி நகாரிமேலெ கையா கட கட ஹொடி நகாரி மேலே கையா’ என்று பாடியவாறு, அதே நுடியில் ‘ஹரி ஸர்வோத்தமத்வத்தை’ போற்றுகிறார். கடைசியில், தபால்காரரை பார்க்கும்போதும் அவருடைய உபதேச வாணி உடனடியாக ப்ரேரணை கொள்கிறது. ‘காகத பந்திதெ நம்ம கமலனாபனது, ஈ காகதவன்னு ஓதிகொண்டு காலவ களெயிரோ’ என்று தாஸர் தாமும் கடிதத்தை கொடுக்க புறப்படுகிறார்.

காம க்ரோதவ பிடியிரெம்போ காகத பந்திதெ
நேம நிஷ்டெயொளயிளிரீயெம்போ காகத பந்திதெ
தாமஸ ஜனர கூடதிரெம்போ காகத பந்திதெ
நம்ம காமனய்யனு தானே பரெத காகத பந்திதெ

காம க்ரோதங்களை விட வேண்டும் என்றும், நேம நிஷ்டைகளை பிடிக்க வேண்டும் என்றும் அந்த விஷயங்களைப் பற்றி உபன்யாஸம் செய்வதைவிட, இவ்வாறாக அதே விஷயத்தை, பரமாத்மன் தானே கடிதத்தை எழுதியிருக்கிறான் என்று சொல்வதில் எவ்வளவு சிறப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம். இரண்டாம் நுடியில்,

ஹெண்ணினாஸெ பிடியிரெம்போ காகத பந்திதெ
ஹொன்னினாஸெ பிடியிரெம்போ காகத பந்திதெ
மண்ணினாஸெ பிடியிரெம்போ காகத பந்திதெ
கமலனாபனு தானே பரெத காகத பந்திதெ

என்று மனிதர்கள் தங்களின் மோஹ நிவாரணங்களைக் குறித்து பாடுகிறார். பகவானின் பக்தன் ஆவதைவிட அதிகமான பாக்கியம் வேறெதுவும் இல்லை என்று நம்பிய புரந்தரதாஸர், இந்த கீர்த்தனையை இவ்வாறு முடிக்கிறார்.

கெஜ்ஜெ கால்கட்டிரெம்போ காகத பந்திதெ
ஹெஜ்ஜெ ஹெஜ்ஜெகெ ஹரியென்னிரெம்போ காகத பந்திதெ
லஜ்ஜெபிட்டு குணியிரெம்போ காகத பந்திதெ
புரந்தரவிட்டலனு தானே பரெத காகத பந்திதெ

என்று அனைவருக்கும் ஹரிதாஸ தீக்ஷையை கொடுப்பதற்கு தாஸர் அழைக்கிறார்.

விதி, நிஷேதங்களை ஒரு தொடர்ச்சியான உபதேசங்களின் மூலமாக நிரூபிப்பதைவிட இவ்வாறான இசையுடன் கூடிய ஹரிதாஸ ஸாஹித்யத்தின் மூலமாக அவற்றை ப்ரசாரம் செய்தால், அது மக்களிடையே உடனடியாக, நன்றாக போய்ச் சேரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகவே, ஹரிதாஸர்கள் இத்தகைய சிறப்பான வழியைக் கையாண்டு ஆன்மிக பணிகளை செய்தனர் என்பதை நாம் முடிவு செய்து கொள்ளலாம்.

***

ஶ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

***